


# *கிறிஸ்தவ வேதாகம வழிகாட்டிக்கு படிநிலைகள்*

பதிப்புரிமை (C) 1998
மெர்லின் பீர்மன் மற்றும் வெளிப்படுத்தல் வெளியீடுகள்
உலகம் முழுவதும் அனைத்து உரிமையும் கொண்டது.

## *பகிர்ந்து கொள்வதில் உள்ள விதிகள்*

நீங்கள் இதை மற்றவர்க்கு தெரியப்படுத்தாவிடில், நீங்கள் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், கீழே உள்ள விதிமுறைப்படி, எந்த ஆதாயமும் இல்லாமல் நீங்கள் பகிர்ந்து கொள்ள உங்களை உற்சாகப்படுத்தி அனுமதிக்கிறோம்.இதை PDF வடிவத்தில் சேமித்து அல்லது ஜெராக்ஸ் வடிவத்தில் அச்சிட்டு பயன்படுத்தலாம். இதை விற்கவோ அல்லது எந்த விதத்திலும், மாற்றவோ முடியாது மற்றும் ஒவ்வொரு பதிப்பிலும் இந்த பதிப்புரிமை பக்கம் இருக்கவேண்டும்.

RevelationPublications.com
PublisherForGod@gmail.com

E.G. ஒயிட் அவர்களின் கிறிஸ்துவை சேரும் படிகள் என்பதிலிருந்து வாக்கியங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டது.
மெர்லின் பீர்மன் அவர்களின் வேதாகம விளக்கத்திற்கு எடுக்கப்பட்டது.
விளக்கங்கள் - பதிப்புரிமை (C) ஜஸ்டினன் கிரியேட்டிவ் குரூப் நம்பா ID  www.goodsalt.com

***வேதாகமத்தில் உள்ள கேள்விகளுக்கான பதில்கள் பைபிள் சொசைட்டி வெர்சன் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.***

**பொருளடக்கம்**

**தேவன் மனுஷரிடத்தில் வைத்திருக்கிற அன்பு --1**
**பாவிக்கு கிறிஸ்து தேவை--2**
**நம் நிலையை உணர்தல்--3**
**மனந்திரும்புதல்--4**
**பாவ அறிக்கை--5**
**தற்பிரதிஷ்டை--6**
**விசுவாசமும் அங்கிகாரமும்--7**
**சீஷத்துவப் பரிட்சை--8**
**கிறிஸ்துவுக்குள் வளர்தல்--9**
**ஊழியமும் ஜீவியமும்--10**
**தேவனை பற்றிய அறிவு--11**
**ஜெபத்தின் சிலாக்கியம்--12**
**ஜெபத்தின் வல்லமை--13**
**சந்தேகத்தை நீக்குவது எவ்வாறு--14**
**கர்த்தருக்குள் களிகூருதல்--15**
**இப்பொழுதின் மகிழ்ச்சி மற்றும் நித்தியம்--16**



**பாடம் 1**
**தேவன் மனுஷரிடத்தில் வைத்திருக்கிற அன்பு**

**(1) எப்படி தேவன் தன் அனைத்து சிருஷ்டிகள் மேல் தன் அன்பை காண்பிக்கிறார்?**

***"எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது: ஏற்ற வேளையிleeeலே நீர் அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கிறீர் - நீர் உமது கையைத்திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்." சங். (145: 15, 16 என்பதே.)***

இயற்கைப் பிரமாணம், வேதப்பிரமாணாமாகிய இரண்டும் ஒன்றுபோல் தேவன்பைக் காட்டுகின்றன. பரலோகத்திலிருக்கிற நமது பிதாவானவரே ஜீவன், ஞானம், சந்தோஷமாகிய இவைகளுக்கு மூலகர்த்தா. பிரகிருதியைச் சேர்ந்த வியப்பும் சிறப்பு மிகுந்த பொருட்களைப் பாருங்கள் மனிதருக்கு மாத்திரமல்ல, ஜீவப்பிராணிகளின் அவசியத்திற்கும்,

சௌக்கியத்திற்கும், இன்பத்திற்கும் ஏற்றபடி அவைகள் அமைந்திருப்பதைச் சற்றுக் கவனியுங்கள். பூமியை உயிர்ப்பித்துச் செழிப்பாக்குகிற சூரியவொளியும் மழையும், குன்றுகளும் மலைகளும், கடல்களும் சமுத்திரங்களும், வெளிகளும் மைதானங்களும், இவைகளிலுள்ள யாவும் தேவன்பை நமக்குத் தெரிவிக்கின்றன. தமது சிருஷ்டிகளனைத்திற்கும் வேண்டியவைகளை நாடோறும் அளிப்பதும் அவரே.

**(2) வேதாகமம் எந்த வகையில் தேவனை பற்றி விவரிக்கிறது?**

***தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவான் 4:16).***

தேவன் மனிதனைப் பூரணபரிசுத்தமும், நிறைந்த பாக்கியமுமுள்ள நிலைமையிலே சிருஷ்டித்தார். அழகுவாய்ந்த பூமியும் சிருஷ்டிகருடைய கரத்திலிருந்து வந்தபடியே, பழுதும் கேடும், சாபத்தின் நிழலுங் கடுகளவேனுமில்லாதிருந்தது. அன்பின் பிரமாணமகிய தேவனுடைய கற்பனையை மனிதன் மீறினதினாலே பூமியில் துக்கமும் மரணமுமுண்டாயிற்று. பாவத்தின் பலனாகவந்த பாடுகளிலேயும் தேவன்பு விளங்குகிறது. மனிதன் நிமித்தம் தேவன் பூமியைச் சபித்தார். ஆதி. 3: 17 என்று வேதத்தில் வாசிக்கிறோம். மனிதனுடைய வாழ்நாட்களை பிரயாசமும் கவலையுமுள்ளதாக்குகிற முள்ளும் குருக்கும், சஷ்டங்களும் நஷ்டங்களும், பாவத்தினால் விளைந்தகேட்டிலிருந்தும்

நாசத்திலிருந்தும் அவனைத் தூக்கிவிடுவதற்கேற்றவைகளாயிருக்கின்றன. ஆகவே, அவைகள் தேவனுடைய முறைப்படி அவனைப் பயிற்றுவிக்கவேண்டிய ஓர் பாகமாய், அவனது நன்மைக்கென்றே நியமிக்கப்பட்டிருக்கின்றன. உலகம் விழுந்துபோயிருந்தாலும், முழுவதும் துக்கமும் நிர்ப்பந்தமுமாயில்லை, பிரகிருதியிலே நம்பிக்கையும் ஆறுதலு முள்ள விஷயங்களுமுண்டு. குருக்குச்செடிகளிலே அழகிய மலர்களும், முட்செடிகளிலே நேர்த்தியான ரோஜாப்புஷ்பங்களும் நிறைந்திருகிறதைப் பார்க்கிறோமல்லவா?
"தேவன் அன்பாயிருக்கிறார்" என்கிற சத்தியத்தை ஒவ்வோரு பூமொட்டிலும், ஓங்கிவளரும் ஒவ்வொரு புல்தாளிலும் காணலாம். அழகுபொருந்திய அருமையான குருவிகள் தங்கள் இன்பக்கீதங்களைப் பாட ஆகாயம் இனிய தொனியால் நிறைகிறது. கண்ணுக்கினிய மெல்லிய புட்பங்கள் விரிந்து மலர ஆகாயம் எங்கும் பரிமளிக்கிறது. காட்டிலுமுள்ள உயர் மரங்கள் துளிர் விட்டு செழித்தோங்கி வளர்ந்து நம்முடைய தேவன் நம்மேல் பிதாவடைவான கவலையும், இரக்க உருக்கமுமுள்ள வராயிருக்கிறார் என்று வெளியிடுகின்றன. இவ்விதமாய் தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பிரியப்படுத்தப் பார்க்கிறார் என்று அறிகிறோம்.

**(3) என்னென்ன பண்புக்கூறுகள் தேவனுடைய குணாதிசயங்களில் உள்ளன?**

***தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன்***

***யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார். (மீகா.7:18-19).***

தேவனுடைய வார்த்தையாகிய வேதமும் அவருடைய திவ்ய இலக்ஷணத்தை வெளியிடுகின்றது. அவர் தாமே தமது அளவற்ற அன்பையும் இரக்கதையும் அறிவித்திருக்கிறார். மோசே கர்த்தரை நோக்கி "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்," யாத். 33: 18 என்று விண்ணப்பம் பண்ணினான். "அதற்கு அவர்: என்னுடைய தயையையெல்லாம் நான் உனக்கு முன்பாக்க் கடந்து போகப்பண்ணுவேன்" யாத். 33: 19 என்றார். அவருடைய மகிமை இதுதான். கர்த்தர் மோசேக்கு முன்னே கடந்து போகிறபோது, "கர்த்தர், கர்த்தர், இரக்கமும் கிருபையும் நீடியசாந்தமும் மகாதயையும் சத்தியமுமுள்ள தேவன். ஆயிரந்தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர். அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர் என்று கூறினார்" யாத். 34: 6, 7. "அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால்" மீகா. 7: 18 "மிகுந்த கிருபையுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமானவர்" யோனா. 4: 2. வானத்திலும் பூமியிலுமுள்ள கணக்கற்ற அடையாளங்களினால் நம்முடைய இருதயத்தை தேவன் தம்மோடு கூட இணைத்திருக்கிறார். இயற்கைப் பொருள்களின் மூலமாயும், மனித இருதயமறியக்கூடிய இரக்க வுருக்கமான லெளகீக பாசத்தாலும், தம்மை நமக்கு

வெளிப்படுத்த முயற்சிக்கிறார். ஆயினும் இவைகள் அவரது அன்பை நிறைவாய் நமக்குக் காட்டுகிறதில்லை.

**(4) நாம் தேவனை அறியாவிடில், நாம் எப்படி தேவனை பார்க்க முடியும், மற்றும் அதற்கு பதிலாக தேவனின் குணாதிசயங்களுக்கு எதிரான சாத்தானின் குற்றசாட்டுகளை நம்ப ஆரம்பிப்போம்?**

***பாம்பைப்போல மண்ணை நக்குவார்கள்; பூமியின் ஊர்வனவற்றைப்போலத் தங்கள் மறைவிடங்களிலிருந்து நடுநடுங்கிப் புறப்படுவார்கள்; நமது தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திகிலோடே சேர்ந்து, உனக்குப் பயப்படுவார்கள். (மீகா 7:17)***

இந்த அத்தாக்ஷி கள் யாவும் நமக்கருளப்பட்டிருந்தாலும், அவர் கொடியவர் என்றும், மன்னிப்பருளாதவர் என்றும் எண்ணி திகிலோடே அவரை நோக்கிப்பார்க்கும்படி, நன்மைக்குச் சத்துருவாகிய பிசாசானவன் மனிதருடைய மனதை குருடாக்கிப்போடுகிறான். தேவன் பிடிவாதகுணமுள்ள நீதியதிபர், கடூரமான நியாயாதிபதி, பக்ஷாதாபமில்லாத விடாக்கடன்காரன், என்னும் லக்ஷணங்களையே மனிதர் எண்ணும்படி செய்துவிடுகிறான். மேலும் சிருஷ்டிகர்த்தாவானவர் மனிதனுடைய குற்றங்களையும் தப்பிதங்களையும் பார்த்து, அவர்கள் மேல் ஆக்கினையை யனுப்பும்படி அவர் கண்கள் மகாவிழிப்பாக யாவரையும் நோக்கிக்கொண்டிருக்கிறதென்று படங்காட்டுவதுபோல சாத்தான் மனிதருடைய மனதுக்கு காட்டிவிடுகிறான். தேவனுடைய மட்டற்ற அன்பை உலகத்துக்கு வெளிப்படுத்தவும், இந்த

பயங்கர அந்தகார நோக்கத்தை நீக்கவுமே, இயேசு மனிதருக்குள்ளே வந்து மனிதனாக வாசம் பண்ணினார்.

**(5) மனிதகுலம் பாவத்தை தெரிந்தெடுத்த பிறகு எவ்வித சிறப்பை இழக்கிறது?**

***"தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோ.1: 18).***

**(6) எப்படி தேவன் விரும்புவதை நாம் அறிய முடியும்?**

***"என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்" (யோ.14: 7).***

"பிதாவை எங்களுக்குக் காண்பியும்" யோ. 14: 8 என்று சீஷர்களில் ஒருவன் கிறிஸ்துவை வேண்டிக்கொண்டபோது, அவர் "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக்காண்பியும் என்று நீ எப்படிச்சொல்லுகிறாய்," யோ 14: 9 என்றார்.

**(7) இயேசு பூமிக்கு வந்ததன் மற்ற காரணங்கள் என்ன?**

***"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,***

*சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (லூக்.4:18-19).*

அவர் நன்மை செய்கிறவராகவும், சாத்தானால் நொறுங்குண்டவர்களைச் சொஸ்தமாக்குகிறவராகவும் எங்குஞ் சுற்றித் திரிந்தார். அவர் நுழைந்த வீடுகளிலெல்லாம் பிணியால் வருந்திக்கொண்டிருந்த வியாதியஸ்தரைச் சுகப்படுத்தினபடியால் கிராமங்களிலுள்ள வீடுகளில் நோய் என்கிற பேர் கிடையாது. அவர் நடப்பித்த பரிசுத்த கிரியைகள் அவர் பெற்றிருந்த திவ்விய அபிஷேகத்துக்குப் போந்த அத்தாட்சிகளாயின. அவருடைய ஜீவியகாலத்தில் செய்த ஒவ் வொரு செய்கையிலும் அன்பு, இரக்கம், தயவு, பரிதாபமுதலிய நற்குணங்கள் வெளியாயின. தேவனுடைய பிள்ளைகளாகிய மனிதர்பேரிலுள்ள பட்சத்தினாலும் அநுதாபத்தினாலும் அவருடைய உள்ளம் உருகினது. மனிதருக்கு அவசியமானவைகளை அருளுவதற்காகவே மனுஷீக சுபாவத்தைத் தரித்துக்கொண்டார். வறுமையும் சிறுமையும் மிகுந்தவர்களுங்கூட அவரைக் கிட்டிச் சேர அஞ்சினதில்லை. சிறு பிள்ளைகளையும் அவர் கவர்ந்துகொண்டார். அவர்கள் அவருடைய பட்சம் மிகுந்த மடியிலேறி யுட்கார்ந்துகொண்டு, அன்பு நிறைந்த அவரது காருண்ணிய முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

## (8) எப்படி கிறிஸ்து தன்னையும் நற்செய்தியையும் வெளிப்படுத்தினார்?

*"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோ.1:14)*

இயேசு சத்திய வார்த்தைகளில் ஒற்றையாகிலும் மனிதருக்கு மறைத்து வைக்காமல், எப்போதும் அன்போடே மொழிந்தார். அவர் ஜனங்களோடு பேசிப் பழகினபோது மிகுந்த சாமர்த்தியமும், உன்னத ஞானமும், ஒப்பற்ற பக்ஷமும் நிறைந்த சிந்தனையுமுடையவராயிருந்தார். அவர் ஒருபோதும் ஒருவரிடத்திலும் மூர்க்கமாய் இருந்தில்லை; அவசரமில்லாமல் கடூரமான வார்த்தைகளை ஒருக்காலும் பேசினதில்லை; அனாவசியமாய் ஒருவரையும் மனமடிவாக்கினதில்லை. மனுஷ பலவீனங்களைக்கண்டு குற்றஞ்சாட்டினதில்லை. எப்போதும் அன்பு நிறைந்தவராய்ச் சத்தியத்தையே பேசினார். மாய்மாலத்தையும், அவநம்பிக்கையும் அக்கிரமத்தையும் கண்டித்து வந்தார். மனவருத்தமுள்ள கண்டனங்களைச் சொல்லோடே சொல்லுவார். வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற தன்மை ஏற்றுக்கொள்ளாததும் தாம் நேசித்த பட்டணமுமாகிய எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்தார். மீட்பராகிய அவரையோ, அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தார்கள். அவரோ, இரக்கமும் உருக்கமும் தயவுமுள்ளவராய் அவர்களை மதித்து

வந்தார். அவருடைய ஜீவியம் முழுவதும் சுயவெறுப்பும், மற்றவர்களுக்காக அக்கரையெடுக்கிறதாகவுமிருந்தது. அவருடைய பார்வையில் ஒவ்வொரு ஆத்துமாவும் விலையேறப்பெற்றதாகவேயிருந்தது. தமது உன்னத திவ்ய மகத்துவத்தினுலும், மேன்மையினுலும் நிறைந்தவராயினும், தேவனுடைய குடும்பத்தாரான மனிதரினிமித்தம் வணக்கமான நட்த்தையை அணிந்துகொண்டார். மனுக்குலத்தார் யாவரும் வழுவிப்போன ஆத்து மாவையுடையவர்களா யிருக்கிறார்களென்றறிந்து, அவர்களை இரட்சிக்கவே தீர்மானம்பண்ணி, அவர்களிருக்குமிடத்திற்குத் தேடிவந்தார். இவ்வருமையான குணாதிசயங்களே கிறிஸ்துவின் ஜீவியத்தில் ஜொலித்தன. இவைகள் பிதாவாகிய தேவனுடைய லட்சணங்களேயொழிய வேறல்ல. பிதாவின் பரிசுத்த உள்ளத்திலிருந்து சுரந்து ஓடும் தெய்வீக அநுதாபமுள்ள ஊற்றுகள் கிறிஸ்துவில் வெளிப்பட்டு மனிதராகிய பிள்ளைகளுக்குப் பாய்கிறது. இரக்கமும், உருக்கமும், அநுதாபமும், பரிதாபமும், தயவும் நிறைந்த இரக்ஷண்ய நாதராகிய இயேசு "தேவனே மாம்சத்தில் வெளிப்பட்டார்." 1 தீமோ. 3 : 16.

**(9) நமது நிமித்தம் இயேசு எவ்வாறு பூமியில் நடத்தப்பட்டார்?**

***"அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை***

*ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசா.53:3-5)*

மனுக்குலத்தராகிய நன்மை ஈடேற்றுவதற்காகவே இயேசு இப்புவியில் உயிரோடிருந்து பாடனுபவித்து மரணமடைந்தார். நாம் நித்திய சந்தோஷத்தில் பங்காளிகளாவதற்காக அவர் துக்கம் நிறைந்த மனிதனானார். கிருபையும் சத்தியமும் நிறைந்த தமது அருமைக்குமாரனை தேவன் சொல்லுதற்கரிய மகிமை நிறைந்துள்ள ஜோதி லோகத்திலிருந்து பாவத்தினால் கறைப்பட்டுக் கெட்டுப்போயிருக்கிறதும், சாபம், மரணம் முதலிய அனர்த்தங்களின் நிழலினுல் அந்தகாரமானதுமான பாழுலகத்திற்கு வரும்படி இடங்கொடுத்தார். தமது அன்பு நிறைந்த பாக்கிய மடியையும், பரிசுத்த தூதருடைய கனத்தையும் விட்டு விட்டு, வெட்கம், நிந்தை, இழிவு, பகை, பாடு, மரணம் முதலியனவைகளை அடையும்படி அவருக்கு அநுமதியருளினார். "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ஏசா. 53 : 5. வனாந்தரத்திலேயும் கெத்செமனேயிலேயும், சிலுவை மரத்திலேயும், அவரை நோக்கிப்பார்ப்போமாக.

பாவக்கறையில்லாத தேவகுமாரன் பாவபாரத்தைத் தாமே சுமந்து தீர்த்தார். தேவனோடு கூட ஒன்றாயிருந்த அவர், பாவத்தினால் தேவனுக்கும் மனிதனுக்குமுண்டான பயங்கர பிரிவினையத் தமதுள்ளத்திலே உணர்ந்தவராய் "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கை விட்டீர்" மத். 27 : 46 என்று வேதனையோடே மொழிந்தார்.

**(10) இயேசு பிதாவிடம் வேதனையோடு அழுகையில் கூறிய வார்த்தை என்ன?**

***"ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்"*** *(மத்.27:46)*

பாவபாரமும் அதின் அகோரத்தின் உணர்வும், அதினால் தேவனிடத்திலிருந்து பிரிந்த பிரிவினையும் அருள் நாதருடைய இரத்தாசயம் உடைவதற்குக் காரணமாயிருந்தன.

**(11) தேவன் குமாரனை இந்த பூமிக்கு அனுப்பினதன் இரண்டு அடிப்படை காரணங்கள் என்ன?**

***"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"*** *(யோ.3:16)"*

***".......... அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள்***

*அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்" (2 கொரி.5:19).*

பிதாவாகிய தேவனுடைய உள்ளத்திலே, மனிதர் பேரில் வைக்கும் ஓர் அன்பையாவது அவனை இரட்சிப்பதற்கு வேண்டிய ஒரு விருப்பத்தையாவது உண்டாக்கும்படி இரக்ஷணிய நாதர் இப்பெரிய பலியைச் செலுத்தினதில்லை. வாஸ்தவத்தில் இல்லை. "தேவன் தம்முடைய ஒரே பேறன குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார்" யோ. 3 : 16. ஓர் பெரிய பாவ நிவர்த்தியை உண்டுபண்ணினதினால் பிதாவானவர் நம்மிடத்தில் அன்பு கூருகிறார் என்றல்ல, நம்மிடத்தில் அவர் அன்புகூர்ந்த்தினாலேயே ஒரு பாவநிவாரணத்தையுண்டாக்கினார் என்று விசுவாசிக்கவேண்டும். பிதாவானவர் தம்முடைய மட்டற்ற அன்பை விழுந்துபோன உலகத்தாரிடத்தில் பாராட்டுவதற்காக தமது ஒரே பேறன குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மத்தியஸ்தராக்கியிருக்கிறர். "தேவன் கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கியிருக்கிறார்" 2 கொரி. 5 : 19. அவரும் தமது குமாரனோடு பாடனுபவிthத்தார். அளவற்ற அன்பு மிகுந்த தேவன், கெத்சமனேயின் மனவேதனை இரத்த வேர்வையின் மூலமாயும், சிலுவைப் பாடுகளின் மூலமாயும், கல்வாரியின் அருமையான மாணத்தின் மூலமாயும், நம்முடைய மீட்புக்காக ஒரு பெரிய கிரயத்தைச் செலுத்தியிருக்கிறர்.

(12) **இழந்து போன மனித குலத்தை மீட்பதில் இயேசு தனக்கிருந்த பங்கை**

**எப்படி விவரித்தார் மற்றும் அதற்கு பிதாவின் பதில் என்ன?**

***"...அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்"*** *(2 கொரி.5:19).*

"நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்" யோ. 10 : 17 என்று இயேசு திரு வாய்மலர்ந்தருளினார். அதாவது, "நான் உங்களை மீட்கும்படி என் ஜீவனைக்கொடுத்ததற்காக், என் பிதா என்னில் அதிகமாய் அன்பு கூருகிறதுபோல உங்களுக்குப் பிணையாளியாய், உங்கள் கடன்களையும், மீறுதல்களையும் என்பேரில் போட்டுக்கொண்டு, நானே சுமந்து தீர்த்தமையால், என் பிதாவுக்கு மகா அருமையாக விருக்கிறேன். நான் செலுத்திய என் பலியினாலே தேவ நீதிக்குத் திருப்தியாயிற்று. ஆயினும் இயேசுவில் விசுவாசம் வைக்கிறவனும் அவருக்கும் நீதி செய்கிறவனாயிருக்கிறான்" என்பதே. {SC 12.1}

தேவகுமாரனைத்தவிர, வேறெவரும் நம்முடைய மீட்பை நிறைவேற்ற இயலாது. ஏனெனில் பிதாவின் மடியிலிருந்தே அவரை அறிவிக்கக்கூடும். தேவ அன்பின் ஆழத்தையும் உயரத்தையும் அறிந்தவர் மாத்திரம் அதை வெளிப்படுத்த முடியும். தவறிப்போன மனிதனுக்காக கிறிஸ்து செலுத்தின மேலான பலியைத்தவிர வேறெதுவும் தேவன் மனிதர்மீது வைத்திருக்கும் அன்பை விவரிக்க முடியாது.

“தேவன், தம்முடைய ஒரே பேறன குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” யோ. 3 : 16. மனிதரோடு வாசஞ்செய்வதற்காக மாத்திரமல்ல. அவர்களுடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கவும்; அவர்களுக்குப் பலியாய் மரிக்கவுமே அவரை அனுப்பினார். சோரம்போன ஜாதி யாருக்கே அவரைத்தந்தருளினார். கிறிஸ்துவும் மனிதருடைய குறைகளை நிவர்த்திசெய்து, தாம் அவர்களுக்கு உடந்தையாய் இருக்கிறதை தாமே விளங்கச்செய்தார்.

(13) **நம்மை எப்படி அழைக்க இயேசு வெட்கப்படவில்லை?**

***"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்" (எபி.2:11)***

தேவனாகிய பிதாவோடு ஒன்றாயிருந்த அவர் ஒருபோதும் அறுந்துபோகாத கட்டுகளினால் மனிதாஜாதியாரோடு தம்மைப் பிணைத்துக்கொண்டார். இயேசு “அவர்களைச் சகோதரரென்று சொல்ல வெட்கப்படவில்லை” எபி. 2 : 11. கிறிஸ்து நம்முடைய பலியாகவும், நமக்காக பரிந்துபெசுகிற வக்கீலாகவும், நம்முடைய சகோதரனாகவும், மனித சாயலைத் தரித்துக்கொண்டவராய் பிதாவின் சிம்மாசனத்திற்கு முன்னே நித்தியகாலமாய், மனிதகுமாரனாகவும் தாம் மீட்டுக்கொண்ட ஜாதியாரில் ஒருவராகவும் வீற்றிருக்கிறர். கேடும், ஈனமுமான பாவத்திலிருந்து

மனுக்குலத்தார்
உயர்த் தப்படுவதற்க்காகவும், தேவ அன்பை அவர்கள் பிரதிபிம்ப்பதற்காகவும், பரிசுத்த நித்திய சந்தோஷத்தில் பங்காளிகளாவதற்காகவுமே இவைகளையெல்லாம் செய்து முடித்திருக்கிறர்.

(14) **அவருடைய அற்புத அன்பில், பிதா நம் மீது வைத்த சிறந்த கணம் என்ன?**

***"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1யோ .3:1)***

அப்போஸ்தலனாகிய யோவான் பரிசுத்தாவியால் ஏவப்பட்டு, அழிந்துபோகிற ஜாதியாரிடத்தில் பிதாவானவர் வைத்திருக்கிற அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் அகலத்தையும் பார்த்தபோது அவர் உள்ளத்தில் வணக்கமும் பக்தி விநயமும் உண்டானது. இந்த அன்பின் மேன்மையையும், அருமை பெருமையையும், இரக்க உருக்கத்தையும், விஸ்தரிப்பதற்குத் தகுந்த வார்த்தைகள் கிடையாமல், பூலோகத்தாரை அதை நோக்கிப்பார்க்கும்படி அழைக்கிறார். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானார் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" 1. யோ. 3 : 1. இது எவ்வளவு மேலானகனத்தையும் மதிப்பையும் மனி தன்பேரில் வைத்திருக்கிறதென்று பாருங்கள். மனுப்புத்திரர் தங்கள் மீறுதல்களினாலே சாத்தானுக்கடிமைகளாகிறார்கள். ஆனாலும் ஆதாமின் புத்திரர் கிறிஸ்துவின்

பாவநிவாரண பலியின்பேரில் விசுவாசம் வைப்பதினாலே தேவ புத்திரராகலாம். கிறிஸ்துவானவர் மனித தன்மையைத் தரித்துக்கொண்டதால், மனுஷீகத்தை மேன்மைப்படுத்தினார். விழுந்துபோன மனிதர் கிறிஸ்துவோடுகூட இணைக்கப்படும்போது, "தேவபுத்திரர்" என்றழைக்கப்படுகிறதற்குப்பாத்தியமுள்ள வர்களாகிறார்கள்.

(15) **நாம் தேவனுடைய பிள்ளையாக மாறுவது எப்படி?**

***அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (யோ.1:12)***

இந்த அன்புக்கு நிகரானது வேறொன்று மில்லையே. இதோ! பரம இராஜனுடைய பிள்ளைகள். இதோ! மேலான வாக்குத்தத்தம். இதோ! உள்ளான தியானத்திற்கேற்ற மேலான விஷயம். இதோ, தம்மை நேசியாத உலகத்தாருக்கு, தேவாதிதேவன் பாராட்டியிருக்கிற ஒப்புயர்வற்ற அன்பு. இப்பேரன்பை தியானிப்பது ஆத்துமாவைப் பரவசப்படுத்தும்; அது நம்முடைய மனதை தேவச்சித்தத்துக்கு இணங்கிப்போகும்படி செய்துவிடுகிறது. சிலுவையின் ஒளியிலே தெய்வ லட்சணத்தை எவ்வளவு அதிகமாய் விசாரித்தறியக் கூடியவர்களாயிருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாய், அவரது இரக்க உருக்கத்தையும், நீதியோடுகூடிய பாவமன்னிப்பையும் பகுத்தறியலாம். மேலும் அவ்வன்பு வழிதப்பிப்போன

பிள்ளையின் பேரிலுள்ள தாயின் இரக்க உருக்கமான ஏக்கம் நிறைந்த அநுதாபத்தைப் பார்க்கி லும் மேலானதாயிருக்கிற தென்று எண்ணிறந்த அத்தாக்ஷிகளினால் அறிந்து கொள்ளலாம்.
மனுஷகட்டு ஒவ்வொன்று மழியும்; சிநேகிதனுக்குசிநேகிதன் உண்மைத்தாழ்ச்சியுண்டு; தாய்மார் தங்கள் சிசுக்களை கைவிடுவார்கள்; வானமும் பூமியும் இறுதியில் ஒழிந்துபோம் எகோவாவின் அன்பிலோ மாறுதல் கிடையாது.

***இயற்கை அழகினிமித்தம், என் தேவைகள் மற்றும் உயிருள்ள சிருஷ்டிகளின் தேவைகளை சந்திப்பதற்கு நான் நம் பரலோக பிதாவாகிய தேவனுக்கு மிக நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.***

**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**

**அவருடைய குமாரனின் ஈவாக அவர் என்மேல் காண்பித்த இரக்கம், அதிக பாடுகள், தயவு இவற்றை அறிந்த போது நான் அன்பால் நிரப்பப்பட்டேன்.**

**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**

**இயேசு இந்த பூமிக்கு வந்து தன் அன்பை வியாதியஸ்தரை சுகமாக்கி, குருடரை பார்வையடைய செய்து, உள்ளம் உடைந்தோரை தேற்றி, பாவம் செய்த ஜனங்களை தன் ஜீவனை கொடுத்து மீட்டு காண்பித்தார், இதை நினைத்து நான் அதிசயப்படுகிறேன்.**

**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**

---

**நான் தேவனுடைய வார்த்தையில் அதிக நேரம் செலவழித்து இதினிமித்தம் அவருடைய அன்பை அதிகமாக புரிந்துகொண்டு மற்றும் அவருடைய பிள்ளையாக மாறுவது எப்படி என்று அறிய விரும்புவது என் விருப்பம்.**

**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**

---



பாடம் 2

**பாவிக்கு கிறிஸ்து தேவை**

**(1) நாம் தேவனை கணம் பண்ணி அவருக்கு கீழ்ப்படியும்போது நமக்கு கிடைப்பவை யாவை?**

***"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்" (சங்.111:10)***

ஆதியிலே, தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த போது, அவன் சிறந்த சத்துவமும் திடச்சித்தமும்

வாய்ந்தவனாயிருந்தான். தன்னுடைய தன்மையில் பூரணமும், தேவனோடு ஐக்கியமான நிலைமையிலுமிருந்தான். அவன் எண்ணங்கள் சுத்தமும், அவன் நோக்கங்கள் பரிசுத்தமுமாக விருந்தன. ஆயிலும், அவனுடைய கீழ்ப்படியாமையினாலே, அவன் சத்துவங்கள் தாறுமாறாயின அன்பின் சுபாவமற்றுப்போய் சுயநயம் அவனை ஆட்கொண்டது. மீறுதல்களினாலே அவனுடைய தத்துவங்கள் பலவீனமாகி, தன் சுயபலத்தைக் கொண்டு தீமைக்கு எதிர்த்து நிற்க அவனால் கூடாமற்போயிற்று. அதனால் சாத்தான் அவனைத் தனக்குச் சிறையாக்கிக்கொண்டான். விசேஷித்த பிரகரமாய் தேவன் இக்காரியத்தில் தலையிட்டிராவிட்டால், என்றென்றைக்கும் இந்த நிர்ப்பந்த நிலைமையிலே அவன் இருக்க நேரிட்டிருக்கும். மானிட சிருஷ்டிப்பையடுத்த தேவ ஒழுங்கைக் குலைத்துப் போட்டு, துக்கத்தினாலும் கேட்டினாலும் பூமியை நிரப்பவேண்டும் என்பதே சோதனைக்காரனுடைய முழுக்கருத்து. தேவன் மனிதனை உண்டாக்கினதின் பலனாக இந்தத் தீமையெல்லாம் வந்தன வென்று காட்டவுந் துணிவுகொள்வான்.

**(2) ஏன் ஆதாம் மற்றும் ஏவாள் தேவனிடமிருந்து மறைந்து கொண்டனர்?**

*"அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்" (ஆதி.3:10)*

பாவமில்லாத இந்த நிலைமையில், மனிதன் தேவனுடைய ஐக்கியத்தினாலுண்டான சந்தோஷத்தை அனுபவித்தான். "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கலெல்லாம் அடங்கியிருக்கிறது" கொலோ. 2 : 3. அவன் பாவத்தில் விழுந்தபோதோ, பரிசுத்தத்தின் சந்தோஷத்தைக் கண்டுபிடுக்கக்கூடாமற்போயிற்று. ஆகவே, தேவனுடைய சமூகத்திலிருந்து மறைந்துகொள்ளும் வழியைத்தேடினான். இன்னும் புதுப்பிக்கப்படாத இருதயத்தின் நிலைமையும் இப்படியே யிருக்கிறது. அது தேவனோடே ஐக்கியப்படவுமில்லை, அவ்வைக்கியத்தினாலுண்டாகுஞ் சந்தோஷத்தைக் கண்டுகொள்ளவுமில்லை.

(3) **கிறிஸ்து மீண்டும் வரும்போது மீட்கப்படாத ஜனங்களின் நிலை எப்படி இருக்கும்?**

***"பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்" (வெளி.6:16).***

பாவியானவன் தேவசமுகத்திலே சந்தோஷமாய் இருக்க முடியாது. ஏனென்றால், பரிசுத்தருடைய ஐக்கியத்தினின்று நீங்கிக்கொள்ளவேண்டுமேன்கிற ஆசை அவனுக்குள் பலமாயிருக்கிறது.

பரலோகத்துக்குள் பிரவேசிக்க அவனுக்கு அநுமதி கிடைத்தாலும், அங்கே அவனுக்குச் சந்தோஷம்

கடுகளவேனுமிராது. பரலோகத்தில் ஆளுகிற சுய நேசமில்லாத அன்பின் ஆவியும், ஒவ்வொரு ஆத்துமாவும் அளவற்ற அன்பு நிறைந்த இருதயமுள்ளவரோடு பொருந்தியிருப்பதும் அவனுடைய ஆத்து மாவுக்கு இசைவாயிராது. அவன் நினைவுகள், அவன் ஊக்கங்கள், அவன் நோக்கங்கள் யாவும் அவ்விடத்தில் தங்கள் பாவம் நீங்கி வாசம்பண்ணுகிறவர்களை நடத்துகிறவைகளுக்கு முற்றும் விகர்ப்பமாக விருக்கும். அவர்கள் வீண் கீதங்களைப் பாடுகிறபோது அவன் அவர்களோடு இசைந்துபாட ஏலாது, பரலோகம் அவனுக்கு வேதனையும் இம்ஸையுமுள்ளவிடமாகக்காணும். ஆதலால், அதன் வெளிச்சமாயும் சந்தோஷத்திற்குக் காரணருமாயிமிருக்கிறவருடைய சமுகத்தினின்று மறைந்துகொள்ளும்படி விரும்புவான். துன்மார்க்கரை பரலோகத்திலிருந்து தள்ளிவைப்பது தேவனுடைய கொடுமையான தீர்மானமல்ல. அவர்கள் அக்கூட்டத்தில் சேரக்கூடாத அபாத்திரத்தை தாங்களேயறிந்துகொண்டு விலகிப்போக விரும்புகிறார்கள். தேவனுடைய மகிமை அவர்களை எரித்துப்போடும், அக்கினியாக அவர்களுக்குத்தோன்றும். ஆகையால், அவர்கள் தங்கள் அழிவை வாஞ்சித்து, தங்களை இரட்சிக்கும்படி மரித்தவரான கிறிஸ்துவினுடைய திருமுகத்தினின்று மறைந்துகொள்ளப் பார்க்கிறர்கள்.

**(4) ஏன் ஒரு பாவிக்கு தன் சொந்த இருதயத்தை சுத்திகரித்து கொள்ளும் திறமை இல்லை?**

*"அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை" (யோபு 14:4)*

நாம் அமிழ்ந்து கிடக்கிற பாவக்குழியினின்று நம்மை நாமே தப்பித்துக்கொள்வது கூடாதகாரியம். நம்முடைய இருதயம் தீமை நிறைந்தது. அவைகளை மாற்றுவதோ நமக்கரிது. "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை" யோபு. 14 : 4. "எப்படிய்யென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்படியக்கூடாமலும் இருக்கிறது" ரோ. 8 : 7. கல்வி, மனோவிர்த்தி, சித்தப்பிரயோகம், மனுஷீக முயற்சி இவைகளெல்லாவற்றிற்கும் அதனதன் ஸ்தானமுண்டு. இவ்விடத்தில் அவைகளுக்கு வல்லமையில்லை. இவைகள் யாவும் வெளியாச்சாரமாகிய நல்லொழுக்கத்தைப் பிறப்பித்தாலும், இருதயத்தையோ மாற்றுகிறதில்லை. ஜீவியத்தின் ஊற்றுக் கண்களையும் சுத்தமாக்காது. மனுஷர் பாவமான ஜீவியத்திலிருந்து பரிசுத்த ஜீவியத்துக்கு மாற்றப்படுவதற்கு முன்னே, உன்னதத்திலிருந்து வந்த ஓர் புதிய ஜீவியத்திற்கேற்ற வல்லமை அவர்கள் உள்ளத்திலிருந்துகொண்டு வல்லமையாய்க் கிரியை செய்யவேண்டும். அந்த வல்லமை இயேசுகிறிஸ்துதான். அவரது கிருபைமாத்திரம் ஆத்துமாவிலுள்ள ஜீவனில்லாத அந்தக்கரணங்களை உயிர்ப்பித்து, தேவனிடத்திலுள்ள பரிசுத்தத்திற்கு இழுக்கக்கூடும்.

**(5) தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க நாம் ஆயத்தமாவதற்கு நம் வாழ்வில் என்ன நடக்க வேண்டும்?**

***இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோ.3:3)***

"ஒருவன் உயரதிலிருந்து பிறந்தாலொழிய," அதாவது, புது ஜீவியத்துக்கு நடத்தும் புது இருதயத்தையும், புது ஆசையையும், புது எண்ணத்தையும், புது நோக்கத்தையும் அடைந்தாலன்றி, "தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்." யோ. 3 : 3 என்று இயேசு ஒரு காலத்தில் சொல்லியிருக்கிறார். மனிதனிடத்திலிருக்கிற நன்மையை விருந்தி செய்வது அவனிடத்திலிருந்து இயல்பான சுபாவம்தான் என்னும் எண்ணம் முற்றும் மோசகரமான கிருத்திரமமேயொழிய வேறல்ல.

**(6) எப்படி ஆவிக்குரிய காரியங்களை புரிந்துகொள்ள முடியும்?**

***நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். (1 கொரி.2:10)***

"ஜென்ம சுபாவமான மனுஷனே தேவனுடைய ஆவிக்குரியவைகளை யேற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத்தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து

நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்" 1 கொரி. 2 : 14. "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்படவேண்டாம்" யோ. 3 : 7. "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" என்றும், "நாம் இரட்சிக்கப்படும்படிக்குவானத்தின் கீழெங்கும், மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை" அப். 4:12 என்றும், இயேசுகிறிஸ்துவைப்பற்றி வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

**(7) நாம் நீதியின் அர்த்தம் அறிந்த பிறகும் ஏன் தொடர்ந்து பாவத்தோடு போராடுகிறோம்?**

***மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன். (ரோ.7:14)***

தேவனுடைய அன்பின் நேசத்தையும், கருணையையும், அவருடைய இலட்சணங்களிலொன்றாகிய தகப்பனடைவான இரக்க உருக்கத்தையும் கிரகித்துக்கொள்வதாவது, அவருடைய நியாயப்பிரமாணத்தின் ஞானத்தையும் நீதியையுமறிந்து கொள்வதாவது, அது நித்திய அன்பின் ஆதாரத்தின்பேரில் நாட்டப்ப்ட்டிருக்கிறதென்று அறிந்து கொள்வதாவது போதாது. "நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேன்" ரோ. 7 : 16

என்றும், "நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான்; கற்பனையும் பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும் இருக்கிறது" ரோ. 7 : 12 என்றும், பவுல் அப்போஸ்தலன் சொன்னபோது, இவைகள் எல்லாவற்றையும் துலாம்பரமாய்க் கண்டுகொண்டிருந்தான். மேலும், அவன் "நானே பாவத்துக்குக் கீழாகவிற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்" ரோ. 7 :14 என்று மன வேதனையினால் கசந்து, நம்பிக்கையற்றவனாயிலிருந்து திகைக்கிறபோது சொல்லுகிறான். பரிசுத்தத்தையும் நீதியையும் அடைய வேண்டுமென்கிற வாஞ்சையும், சக்தியும் தன்னிடத்திலில்லையே என்று உணர்ந்து ஏங்கி, "நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்" ரோ. 7 : 24 என்று அங்கலாய்க்கிறான். பாவபாரஞ்சுமந்து, இளைத்துக்களைத்துப்போன இருதயங்களினின்று இவ்வித துக்க புலம்பல் சகல தேசங்களிலும் எக்காலங்களிலும் எழும்பியிருக்கின்றன. இவை யாவற்றிற்கும் தகுந்த உத்தரவு ஒன்றுண்டு. அதாவது, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" யோ.1 : 29 என்பதே.

**(8) பாவி மற்றும் தேவனை தொடர்புகொள்ள வைக்கும் ஒரே ஒரு மத்தியஸ்தர் யார்?**

***தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1 தீமோ.2:5)***

இந்தச் சத்தியத்தை திருஷ்டாந்தப்படுத்துவதற்கென்றும், பாவபாரத்தினின்று விடுதலையடைய

வாஞ்சிக்கிற ஆத்துமாக்களுக்குத் தெளிவாகக் காட்டுவதற்கென்றும், தேவாவியானவர் தேடிவைத்திருக்கிற அத்தாக்ஷிகள் பலவுண்டு. யாக்கோபு என்னும் எத்தன் ஏசாவை வஞ்சித்தபின், தன் தகப்பன் வீட்டிலிருந்து ஓடிபோகிறபோது, அவனுடைய பாவப் பாரம் அவனைக் கீழே அமுக்கினது. தன் ஜீவியத்தைச் சம்பிரமமாக்கின எல்லாவற்றையும் விட்டுப் பிரிந்து, ஒண்டியாய் அவாந்தா வெளியிலே தள்ளப்பட்டிருக்கையில், எல்லாவற்றிற்கும் மேலாக அவன் ஆத்துமாவை பளுவாக்கின ஒரே ஒரு யோசனை என்னவென்றால், தன் பாவம் தன்னைத் தேவனினின்று தறித்துப்போட்டது; வானவரும் தன்னை முழுவதுங் கைவிட்டுவிட்டார் என்கிற பயந்தான் அவனை ஆட்கொண்டது. வெறுந்தரையிலே படுத்துக் கிடக்கிறான். அவனைச் சூழ தனித்து நின்ற குன்றுகளும், மேலே வானத்தில் ஜோதியாய்ப் பிரகாசித்த நக்ஷத்திரங்களுமாத்திர மிருந்தன. அவன் நித்திரை போகையில், ஒரு விநோத வெளிச்சத்தை சொப்பனத்தில் காண்கிறான். இதோ அவன் படுத்துக் கொண்டிருந்த மைதானத்திலிருந்து நிழலடர்ந்த ஏராளமான படிகளுள்ள ஒரு ஏணி வானத்தின் வாசல் வரை எட்டியிருந்த்தாகவும், அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்ததாகவுங் கண்டான். அத்தருணத்தில், அதற்குமேலே நின்றுகொண்டிருந்த கர்த்திரிடத்திலிருந்து ஆறுதலும் நம்பிக்கையும் நிறைந்த ஓர் திவ்விய சத்தம் அவன் காதில் தொனித்தது. இவ்விதமாக, அவன் ஆத்துமா வாஞ்சித்ததும், அதற்கு இன்றியமையாத்துமான ஓர் இரட்சகன் யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டார். பாவியாகிய அவன் அதின் மூலமாய்த்

தேவனோடு ஐக்கியமாகும் ஒரு வழி வெளிப்படுத்தப்பட்டதைச் அந்தோஷத்தோடும் நன்றியறிதலோடுங் கண்டுகொண்டான். அவன் சொப்பனத்தில் கண்ட இந்த ஆச்சரியமான ஏணி தேவனுக்கும் மனிதனுக்கும் சம் பந்தமாயும், ஒரே மத்தியஸ்தமாயுமிருக்கிற இயேசுவையே குறித்து காட்டிற்று. கிறிஸ்து நாத்தான்வேலோடு செய்த சம்பாஷணையில் "வானந்திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையுங் காண்பீர்கள்" யோ. 1 : 51 என்று சொன்னபோது காட்டிய ஒப்பனை இதுதான்.

(9) **எப்படி நாம் பிதாவிடம் வரமுடியும்?**

***அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோ.14:6)***

சமயநிலை தவறினபோது அதாவது, பாவம் உற்பத்தியான காலத்தில் மனிதன் தேவனுக்குத்தன்னை அந்நியnaaனாக்கிக்கொண்டான். பூமியும் வானத்தினின்று வெட்டுண்டு போயிற்று. இந்த அகன்ற பெரும் பிளப்பைக் கடக்கக்கூடிய எத்தனங்களுமிருந்ததில்லை. ஆனால் கிறிஸ்துவின் மூலமாய்த் திரும்பவும் இப்பூமி வானத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பணிவிடையாட்களாகிய தூதர்கள் மனிதரிடத்தில் வந்து, கலந்து பேசத்தக்கதாக பாவத்தினுலுண்டான பிளப்பாகிய குடாக்கடலிலே, கிறிஸ்து

தமது சொந்தப் புண்ணியத்தினால் ஒரு வாராவதியைக்கட்டி முடித்திருக்கிறார். அவர் பலவீனனும் திக்கற்றவனுமான விழுந்துபோன மனிதனை மட்டற்ற சர்வ வல்லபம் பொருந்திய கர்த்தாவோடு கூட்டிச்சேர்க்கிறார்.

(10) **நாம் நம்மை பாவிகளின் கூட்டத்திலிருந்து ரட்சிக்க எடுக்கும் முயற்சிகள் ஏன் வீணாக முடிகிறது?**

***கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; (எபே.2:8-9).***

விழுந்துபோன ஜாதியாருக்கு நம்பிக்கையும், ஆதரவுமாயிருக்கிற ஒரே நாதனை அசட்டை செய்தால், மனித தன்மையை உயர்த்துவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் அபத்தமாய்ப்போகும். அவைகளின் தேர்ச்சியைக் குறித்து மனிதர் காணும் கனாக்களும் வீணாக முடியும். ஏனென்றால், "நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகிறது." யாக். 1 : 17. ஆதலால் அவரையன்றி நமக்கு மேன்மை பொருந்திய குணம் அமையாது. தேவனிடத்தில் சேருவதற்கிருக்கும் ஒரே வழி கிறிஸ்துதான். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்: என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில்வரான்" (யோ. 14. 6) என்று வசனத்திருக்கிறார்.

(11) **நம்மை மீட்க பரலோகத்திலிருந்து எடுக்கப்பட்ட சிறப்பான முயற்சி என்ன?**

*அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். (எபி.9:26)*

மரணத்தைப்பார்க்கிலும் வலுவாயிருக்கிற அன்பினாலே தம்முடைய பூலோக மக்கள் பேரில் பரிதாபச் சிந்தையும் ஆவலுமுடையவராயிருக்கிறார். அவர் தமது குமாரனை பூலோகத்தாருக்குக் கொடுத்ததினால் வானலோகம் முழுவதையும் ஒரே ஈவாக அருளிச் செய்திருக்கிறார். மனிதனுடைய மீட்பின் பொருட்டு மீட்பரின் ஜீவியம், மரணம், மத்தியஸ்தம், தேவதூதருடைய பணிவிடை, ஆவியானவருடைய பரிந்துபேசுதல், எல்லாவற்றிற்குமேலாய்ப் பிதாவானவருடைய ஊழியம், வானோர்கலுடைய குன்று முயற்சிகளுமாகிய இவை யாவும் தீர்க்கமாய்ப் பதிவாயிருக்கிறதைப் பார்க்கிறோம்.

இதோ, நமக்காகச் செலுத்தப்பட்டிருக்கிற அதிசய பலியைத் தியானிப்போமாக. காணுமற்போனவைகளைத் தேடவும், பிதாவின் வீட்டில் மறுபடியும் அவைகளை கொண்டுவந்து சேர்க்கவும், தேவாதி தேவன் செய்திருக்கிற கிரியையையும், முயற்சியையும் நன்குமதிப்போமாக. பலமிகுந்த நோக்கங்க்ளையும், வல்லமையுள்ள கர்த்தத்துவங்களையும் ஒன்றுய் விசாரித்தறிவது கூடாமை: நியாயமானவைகளைச் செய்வதாலுண்டாகு மிகுந்த பலன்,

பரலோக பாக்கியத்தை யனுபவத்தல்,
தேவதூதர்களுடைய கூட்டுறவு,
தேவகுமாரனுடைய அன்பு,
அந்நியோன்னிய ஐக்கியம்,
என்றென்றைக்குமுள்ள நம்முடைய
சத்துவங்களின் உயர்வும்
விஸ்தீரணமுமாகிய இந்த எல்லா
வல்லமையுள்ள தூண்டுதல்கள் நம்முடைய
சிருஷ்டிகரையும் மீட்பரையும் முழு
இருதயத்தோடே சேவிக்கும்படி நம்மை
ஏவிவிடுகிறவைகளாயிருக்கின்றனவல்ல
வா?

மேலும், இன்னோர் பக்கத்தில் பாவத்துக்கு
விரோதமாய் நிற்கும் தேவனுடைய
நியாயத்தீர்ப்பு, விலக்கவொண்ணா
பிரதிபலன், நம்முடைய
குணாதிசயங்களின் பங்கம், கடைசி அழிவு
இவையாவும் சாத்தானைச்
சேவிப்பதினால் வந்து லபிக்கும் என்று
கர்த்தருடைய வசனம் எச்சரிக்கின்றது.

தேவ இரக்கத்தை
அவமதியாதிருப்போமாக. அவர் இன்னும்
நமக்கு என்னதான் செய்யக்கூடும்.
இவ்வளவு ஆச்சரிய அன்பினாலே
நம்மிடத்தில் நேசம் வைத்த
அவருக்குகந்தவர்களாய்
நடந்துகொள்வோமாக. நாம் அவருடைய
திவ்ய சாயலை அணிந்து கொள்வதற்கும்,
பணிவிடைசெய்யும் தூதருடைய
அந்நியோந்நியத்தை
அடைந்துகொள்வதற்கும், பிதாவோடும்
குமரானோடும் ஐக்கியப்பட்டு
இசைந்திருப்பதற்கும், நமக்காக
ஏற்படுத்தப்பட்டிருக்கிறவைகளை
நமக்கென்று
பயன்படுத்திக்கொள்வோமாக.
தேவன் மனிதர்பேரில் வைத்திருக்கிற
அன்பைக் காட்டுகிற வேத வசனங்கள்.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோ. 3: 16.

அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்தகாலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நகக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். ரோ. 5: 6, 8.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். ஏசா. 53: 5. 6.

அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது. லூக். 22: 44.

ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். மத். 27: 46.

மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா. 3: 13.

***தேவன் மனிதனை அவருடைய சாயலில் சரியாக வினோதமான ஆற்றலுடன் உண்டாக்கினார் என்பதை புரிந்துகொண்டேன். மேலும், கீழ்ப்படியாமையினால், இயற்கையில் பெலவீனப்பட்டு தேவ தலையீடு இன்றி சாத்தானால் பிடிபட்டு தீமையை எதிர்க்க முடியாமல் இருக்கிறோம்.***

**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**

**இந்த விசுவாச துரோகத்தால் மனிதன் தன்னை தேவனிடமிருந்து பிரித்துக்கொண்டான் மற்றும் மீண்டும் தேவனிடம் செல்ல ஒரே வழி இயேசு கிறிஸ்துவே என்று புரிந்து கொண்டேன்.**
**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**
**நான் என் உதவியற்ற தன்மையையும் இயேசு கிறிஸ்து என் ரட்சகராக இருக்க வேண்டிய தேவையையும் அறிந்து கொண்டேன்.**

**வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை**

**நான் தேவனின் அன்பிற்கும் அவருடைய மீட்பின் திட்டத்திற்கும் நன்றி கூறுகிறேன். அவர் உதாரத்துவமாக கொடுக்கும் இந்த ஈவை பெற்றுக்கொள்வது என் விருப்பமாகும்.**

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________





## பாடம் 3

## நம் நிலையை உணர்தல்

(1) **நாம் பாவியாக இருக்க பாவத்திலிருந்து நம்மை சுத்திகரித்து கொள்வது எப்படி?**

***பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்.2:38)***

மனுஷன் தேவனேடு சரியாவதெப்படி? பாவியானவன் எவ்வாறு நீதிமானாகக்கூடும்? கிறிஸ்து வின் மூலமாய் மாத்திரம் தேவனோடும், அவர் பரிசுத்தத்தோடும் ஜக்கியப்படலாம்: அப்படியானால் கிறிஸ்துவண்டை சேர்வதெப்படி? பெந்தெகொஸ்தே நாளில் திரளாய்க்கூடியிருநத ஜனங்கள "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டபிரகாரமே, இக்காலத்திலும் பலர் பாவவுணர்ச்சியடைநது இருதயத்திலே குத்தப்படுகிறபொமுது கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு மாறுத்தரம், அந்நாளிலே பேதுரு அப்போஸ்தலன் கொடுத்தபிரதியுத்தரத்தின் முதல் வார்த்தையாகிய "மனந்திரும்புங்கள்" (அப். 2: 38) என்பது தகுதியானதே. இன்னேர் சமயத்தில், அவர் "உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" (அப். 3: 50) என்று சொல்லுகிறார்.

மனந்திரும்புதலாவது, தான் செய்த பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு அதினின்று திரும்பிவிடு வதைக் குறிக்கும். நாம் பாவத்தன்மையை உணராதபட்சத்தில், அதை விட்டு விடமாட்டோம். நம்முடைய இருதயம்

பாவத்தினின்று திரும்புகிறவரையில், நமது ஜீவியத்தில் மெய்யான மாறுதல் இருக்கவே இராது.

மனந்திரும்புதலின் சரியான வழியை யறியாம லிருக்கிற ஜனங்கள் பலருண்டு. எண்ணிறந்தபேர் தங்கள் தீவினைகளினாலே தங்களுக்குக் கேடுவருமென்றஞ்சி, தாங்கள் செய்த குற்றங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, வெளியரங்கமாய்த் தங்களைச் சீர்ப்படுத்திக்கொள்ளுகிறார்கள். வேதாகமம் போதிக்கிறபடி பார்த்தால், இது மனந்திரும்புதலல்ல. தாங்கள் செய்த பாவத்துக்காகத் துக்கப்படுவதை விட்டு, அதினால் வரும் பாடுகளுக்காகவே புலம்புகிறார்கள். திருஷ்டாந்தமாக, ஏசா தன் ஜேஷ்ட சுதந்தரத்தைத்தான் (என்றென்றைக்கும் அனுபவிக்கக் கூடாதபடி இழந்து) போனதைக் கண்டுதுக்கசாகரத்திலமிழ்ந்தான். பிலேயாம் இஸ்ரவேலரைச் சபிக்கும்படியாகப்போகிறபோது, வழியிலே உருவினபட்டயத்தைக் கையிலேந்தி நிற்கிற தேவ தூதனைக் கண்டு பயந்துநடுங்கினான். தன் ஜீவனை இழந்துபோகாதபடிக்கே தன் குற்றத்தை யொத்துக்கொண்டான். தன் பாவத்தைப்பற்றிய மெய்யான மனந்திரும்புதல் அவனிடத்திலிருந்ததில்லை. தான் முன் கொண்டிந்த எண்ணத்தையும் அவன் மாற்றவில்லை. பாவத்தின் பேரில் அருவருப்பும் அவனுக்கிருக்கவில்லை. யூதாஸ்காரியோத்து தன்னுடைய கர்த்தரைக் காட்டிக் கொடுத்த கொஞ்சநேரத்துக்குப்பின், "குற்றமில்லாத இரத்த்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்" (மத்.27:4) என்று அங்கலாய்த்தான்.

பயங்கரமான நியாயத் தீர்ப்பையும் கொடிய ஆக்கினையையுமடையவேண்டுமே என்று அவனுடைய குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தபடியாலும், தண்டனையின் அகோரம் பலமாய்க் காணப்பட்டபடியாலுந்தான் தன் பாவத்தை அறிக்கையிட்டான். அவன் பாவத்தினால் அவனுக்கு வந்த பலன் நடுக்கமும் பயமுந்தானே யொழிய வேறல்ல. அவனுடைய உள்ளான இருதயத்திலே இஸ்ரவேலின் பரிசுத்தரை மறுதலித்து, குற்றமற்ற தேவனுடைய குமாரனைக்காட்டிக் கொடுத்தேனே என்கிற மனவேதனையும் நருங்குண்ட இருதயமும் அவனுக்கிருந்ததேயில்லை. பார்வோன் தேவனால் வாதிக்கப்படுகையில் தண்டனையின்மேல் தண்டனையடையாதபடி தப்பித்துக் கொள்வதற்காகவே தன் பாவத்தை ஒத்துக்கொண்டான்; வாதைகள் நின்றபோதோ வானவரோடு எதிர்த்து நின்றான். மேலே கூறிய பாவ அறிக்கை யாவும் பாவத்தின் பலனாகிய தண்டனைக்குப் பயந்ததே யொழிய பாவத்துக்காக வுண்டான சரியான துக்கமல்ல.

**(2) இந்த வசனம் கிறிஸ்துவை பற்றி என்ன கூறுகிறது, யார், பரிசுத்த ஆவியால், இருளை நீக்குதல் மற்றும் ஆத்துமாவின் ரகசிய இடங்களை கூறுதல்?**

***உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.(யோ.1:9)***

பாவியின் இருதயமானது தேவாவியின் வல்லமைக்குக் கீழ்ப்படியும் போதுதான்,

அவனுடைய மனச்சாட்சி தெளிவடைந்து, வானலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள தேவனுடைய அரசாட்சியின் அஸ்திபாரமான அவருடைய பரிசுத்த நியாயப்பிரமாணத்தின் ஆழத்தையும் பரிசுத் தத்தையுங்குறித்துக் கொஞ்சமறிந்து கொள்ளுகிறான், "உலகத்திலே வந்து ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே" (யோ. 1: 9). ஆத்துமாவிலுள்ள உள்ளான அறைகளைப் பிரகாசிப்பித்து, அந்தரங்கத்திலே மறைந்து கிடக்கிற காரியங்களை வெளிப்படுத்துகிறது. பாவ உணர்ச்சி மனதையும் இருதயத்தையும் பற்றிக்கொள்ளுகிறதுண்டு. பாவியானவன் ஏகோவாவின் நீதியைக்குறித்த அறிவையுடையவனாய், இருதயங்களை ஆராய்ந்தறிகிறவருக்கு முன்னிலையில், தன் சொந்த பாவத்தையும் அசுத்தத்தையுங்கண்டு பயந்து நடுங்குகிறான். தேவனுடைய அன்பையும், பரிசுதத்தின் மாட்சிமையையும், சித்தசுத்தத்தின் சந்தோஷத்தையும் பார்த்து, தானும் சுத்தமாகவேண்டுமென்று வாஞ்சித்து, வானவரோடு ஐக்கியமாகத்தன்னை முழுவதுமாய் ஒப்படைக்கிறான்.

(3) **தாவீது ராஜாவை போல, நாம் பாவத்திற்கு மனம் வருந்தும்போது, நம் ஜெபம் எப்படியிருக்கும்?**

***தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.  என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.***

*தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன். (சங்.51:1-4).*

*தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். (சங்.51:10)*

தாவீது பாவத்தில் விழுந்தபின் செய்த ஜெபமே பாவத்துக்காகவுண்டான மெய்யான துக்கத்தின் தன்மையைக் காட்டுந் திருஷ்டாந்தம். இவனுடைய மனந்திரும்புதல் உண்மையும் ஆழமுமாயிருந்த்து. போக்குச்சொல்லித் தன் பாவத்தை மறைத்துக் கொள்வதற்கு யாதொரு முயர்ச்சியுஞ் செய்ததில்லை. பயங்கரமான நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள விருப்பமில்லாமலிருக்கும்படி தன் ஜெபத்திலே ஏவப்பட்டான். தாவீது தன் மீறுதலின் பெருக்கத்தையும், தன் ஆத்துமா தீட்டானதையுங் கண்டான். தன் பாவத்தை அருவருத்தான், பாவ மன்னிப்புக் காக மாத்திரம் ஜெபிக்காமல், இருதய சுத்திகரிப்புக்காகவும் வேண்டிக்கொண்டான், பரிசுத்தத்தின் சந்தோஷத்தையடையவும், தேவனேடு ஐக்கியப்படவும், அவரோடு இசைந்திருக்கவும் வாஞ்சித்தான்.

இதைப் போன்ற ஓர் மனந்திரும்புதலை நாம் நாமே செய்து முடிக்கக் கூடாதவர்களாயிருக்கிறோம். உன்னதத்துக்கேறி, மனுஷருக்கு வரங்களை யளிக்கிற கிறிஸ்துவிடத்திலே

மாத்திரம், இது கிடைக்குமேயொழிய வேறெருவரிடத்திலுங் கிடையாது.

**(4) மெய்யான மனந்திரும்புதலை தொடர்ந்த அறிக்கையிடுதலின் பலன் என்ன?**

***எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். (சங்.32:1)***

**(5) அறிக்கையிடுதலுக்கு முன்னான படிநிலைகள் என்ன?**

***வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். (மத்.11:28-29)***

அநேகர் பிசகிப்போகிற ஓர் விஷயமிங்கேயுண்டு; ஆயினும், கிறிஸ்து அவர்களுக்குப் புரிய விரும்புகிற உதவியைப் பெற்றுக்கெள்ள தவறிப்போகிறார்கள். தாங்கள் முதலில் மனந்திரும்பினாலன்றி கிறிஸ்துவண்டை சேரலாகாதென்றும், மனந்திரும்புதல் தங்கள் பாவமன்னிப்புக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறதென்றும் பலர் நினைத்துக்கொள்ளுகிறார்கள்: பாவமன்னிப்புக்கு முன் மனந்திரும்புதல் உண்டாகவேண்டுமென்பது வாஸ்தவந்தான்; ஏனெனில், நருங்குண்டதும் நொறுங்குண்டதுமான

இருதயமே ஓர் மீட்பர் அவசியம் என்று உணர்ந்துகொள்ளும். அப்படியிருக்க, பாவியானவன் கர்த்தராகிய இயேசுவண்டை வருவதற்குமுன்னே மனந்திரும்புதலுக்கென்று காத்திருக்க்வேண்டுமா? பாவிக்கும் மீட்பருக்குமிடையில் மன்ந்திரும்புதல் ஓர் இடையூருக இருக்க்வேண்டுமோ?

கிறிஸ்துவின் அழைப்பைக் கவனிக்குமுன் பாவியானவன் மனந்திரும்பவேண்டும் என்று சத்தியவேதம் போதிக்கிறதில்லை. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." மத் 11: 28.

**(6) பாவத்தை பற்றிய மெய்யன வருத்தம் எங்கேயிருந்து வருகிறது?**

***நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்.*** *(அப்.5:30,31)*

உண்மையான மனந்திரும்புதலுக்கு நட்த்துவது, கிறிஸ்துவிலிருநது புறப்படுகிற வல்லமைதான். " இஸ்ரவேலுக்கு மனந்திரும்புத லையும் பாவ மன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்." அப்.5: 31 என்று அப்போஸ்தலனாகிய பேதுரு இஸ்ரவேலருக்குச் சாஷியாகக் கொடுத்த வாக்குமூலத்தில் தெளிவாய் இக்காரியத்தை விளங்கப்

பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவின் ஆவியின்றி நமக்கு மனந்திரும்புதல் கிடையாது. கிறிஸ்துவையல்லாமல் நமக்குப் பாவமன்னிப்பில்லாததுபோல், அவரே ஒவ்வோர் சரியான ஏதுவுக்குங் காரணகர்த்தாவாயிருக்கிருர். அவர் ஒருவரே பாவத்தை வெறுக்கும் வெறுப்பை நமது இருதயத்தில் நாட்டக் கூடிபவர். சத்திபத்தையும் சுத்தத்தையும் நாடுகிற நாட்டமும், நமது பாவசுபாவத்தை உணருகிற உணர்ச்சியும் நமக்குள்ளே உண்டாகையில், அது நமது இருதயத்தில் நடக்கும் அவருடைய ஆவியின் கிரியை என்பதற்கு ஏற்ற ஓர் அத்தாஷியாகும்.

**(7) யாரை தேவன் தன்னிடத்தில் இழுத்துக்கொண்டு மனந்திரும்புதலின் வரத்தையும் ரட்சிப்பையும் கொடுக்கிறார்?**

***நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். (யோ.12:32)***

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்படும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்," (யோவா. 12:32) என்று இயேசு திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். உலகத்தின் பாவங்களுக்காக மீட்பர் மரிக்கிறதாய் பாவிக்குக் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட வேண்டும். தேவனுடைய குமாரனை கல்வாரிச் சிலுவையில் நோக்கும்போது, இரட்சிப்பின் இரகசியம் நம்முடைய மனதுக்குப் புலப்படத் தொடங்குகிறது தேவதயவும் நம்மை குணப்படும்படி ஏவுகிறது, பாவிகளுக் காக அவர் அடைந்த மரணத்தில் நாம் கிரகிக்கக் கூடாத ஓர் அதிசயமான அன்பை கிறிஸ்து விளங்கச்

செய்திருக்கிறார். ஒருவன் தன்னைப் பாவியாகப் பாவித்து, இந்த அன்பைப் பற்றிக்கொள்ளுகையில் அது இருதயத்தை இளகச்செய்து, மனதை உறுத்தி, ஆத்துமாவிலே அநுதாபத்தை எழுப்பி விடுகிறது.

கிறிஸ்துவண்டை இழுக்கப் பட்டிருக்கிறோம் என்று தங்கள் மனச்சாட்சி அறியுமுன்னே மனிதர் தங்கள் பாவ வழிகளைக் குறித்துச் சிலவேளை வெட்கமடைந்து, தங்கள் கேடான வழக்கங்களை விட்டு விடுவது மெய்தான். ஆயினும், நன்மைக் கடைபிடிக்க வேண்டுமென்கிற பூரணவாஞ்சையினால், தங்களைச் சீர்படுத்திக்கொள்ள முயற்சிக்கும் போதெல்லாம், கிறிஸ்துவின் வல்லமையே அவர்களை வலுவாய் அவரண்டை இழுக்கிறது. தங்கள் ஆத்துமாவில் நடக்கிறவேலையின் இரகசியத்தை அறியாதிருக்கிறபோதே, அவர்கள் மனச்சாட்சி உயிர்ப்பிக்கப்பட்டு, அவர்களுடைய வெளியரங்க ஜீவியம் சீரடைகிறது. தங்கள் பாவங்கள் பீறின கிறிஸ்துவைச் சிலுவையிலே அவர்கள் நோக்கிப்பார்க்கத்தக்கதாக, அவர் அவர்களண்டையில் கிட்டிச்சேர்கிறார்; அப்போதுதான் நியாயப் பிரமாணத்தை மீறுகிறது பாவம் என்று அறிந்து கொள்ளுகிறார்கள். தங்கள் ஜீவியத்தில் நடத்தின துன்மார்க்கமும், ஆத்துமாவிலே ஆழமாய்ப் பதிந்து கிடக்கிற பாவமும், அவர்களுக்கு வெளியாக்கப்படுகிறது. கிறிஸ்துவின் நீதியில் சில பாவங்களை உணரத் தொடங்கி, அதின் அகோரக் கொடுமையினின்று, மீட்கப்படுவதற்காக இவ்வித பலி வேண்டியதற்கு பாவமா காரணம்? என்றும், இந்த அன்பும், பாடும், தாழ்வும், நாம் அழிந்துபோகாமல் நித்திய

ஜீவனை அடைவதற்கு வேண்டியதாக விருந்ததா? என்றும் பிரலாபிக்கிறார்கள். பாவியானவன் இந்த அன்பை அல்லத்தட்டி, வெறுத்து கிறிஸ்துவண்டை நெருங்க மறுக்கலாம். அவன் விரோதித்து மறுக்காவிட்டால் கிறிஸ்துவினிடத்தில் இழுக்கப்படுவான். தேவனுடைய அருமைக் குமாரனின் பாடுகளுக்குக் காரணமாயிருந்த தன் பாவங்களுக்காக மன்ந்திரும்புவதனுல் இரட்சிப்பின் வழியைக் காட்டுமறிவு சிலுவையின் தாளண்டையில் நடத்தும்.

**(8) இந்த உலகம் கொடுப்பதை விட அதிக தாக்கமுள்ளவர்களுக்கு தேவன் கொடுக்கும் அருமையான அழைப்பு என்ன?**

***ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன். (வெளி.22:17)***

இயற்கைப் பொருளை நடத்துகிற அதே திருவுளம் மனிதருடைய இருதயத்திலே இல்லாத ஏதோ ஓர் காரியத்தை வாஞ்சிக்கச் சொல்லவொண்ணாவண்ணம் ஏவிவிடுகிறது. இந்த ஏக்கத்தை பூலோகத்திலுள்ள காரியங்கள் தீர்க்கவே தீர்க்காது. தேவாவியானவர் சமாதானமும் இளைப்பாறுதலுமாகிய கிறிஸ்துவின் கிருபையையும், பரிசுத்தத்தின் சந்தோஷத்தையுங் கொடுக்கக்கூடிய அந்தக் காரியங்களை மாத்திரம் வாஞ்சிக்கும்படி அவர்களோடு பரிந்து பேசுகிறார். மனிதருடைய மனதைத் திருப்தி செய்யாத பாவச்சந்தோஷத்தினின்று அவர்களை

விடுவித்து தம்மால் அவர்க்ளுக்குக் கிடைக்கக்கூடிய அளவற்ற ஆசீர்வா தத்தை நோக்கும்படி நம்முடைய இரட்சகர் காணப்படுகிறதும் காணப்படாததுமான சத்துவங்களின் மூலமாய், அவர்களைத்திருப்புவதற்காக இடைவிடாது வேலை செய்துகொண்டேயிருக்கிறார். இவ்வுலகத்திலே ஒட்டைத் தொட்டியிலிருந்து தாகந்தீரத் தண்ணீர் குடிப்பதற்கு வீணாய்த் தேடியலைகிற இந்த எல்லா ஆத்துமாக்களுக்கும், திவ்விய வாசகனாகியயோவான் மூலமாய் அவர் அருளிச்செய்திருக்கிற ஆறுதலான வாசகமாவது:- " தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி 22: 17) என்பதே.
இவ்வுலகங்கொடுக்கக்கூடாததைப் பார்க்கிலும் மேலான காரியத்தை வாஞ்சிக்கிற இருதயத்தையுடைய நீ, உனக்குள்ளிருக்கிற வாஞ்சையானது உன் ஆத்துமாவோடு பேசுகிற தேவனுடைய சத்தம் என்று அறிந்து கொள்வாயாக. தேவன் தம்முடைய அளவற்று அன்பினாலும், பூரண பரிசுத்தத்தினாலும், கிறிஸ்துவை உனக்கு வெளிப்பத்துவதற்காகவும், உனக்கு மனந்திரும்புதலை அருளுவதற்காவும் அவரை வேண்டிக்கொள்வாயாக.

**(9) பாவிகளாகிய நாம் கிறிஸ்துவின் குணாதிசயங்களை பார்த்து எதை உணரவேண்டும்?**

***நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள்***

*அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது. (ஏசா.64:6)*

இரட்சகருடைய ஜீவியத்தில் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஆதாரமாகிய தேவனிடத்திலும், மனிதரிடத்திலும் அன்பு கூருவது, திட்டமாய்த் திருஷ்டாந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. பரோபகாரம், தன்னயமற்ற அன்பு இவைகளே அவருடைய ஆத்மீக ஜீவியமாயிருந்தது. நாம் அவரை நோக்கிப் பார்க்கையில் இரட்சகருடைய திவ்விய ஒளி நம்மேல் வீசுவதைக் காண்கிறது போல் நம்முடைய இருதயத்திலுள்ள பாவக்குணத்தையுங் காணலாம்.

நம்முடைய வெளியரங்க ஜீவியம் சீராயிருப்பதினால், நமது ஜீவியமுழுவதும் துப்புரவானதென்று நிக்கொதேமைப்போல நம்மை நாமே மெச்சிக் கொண்டு, சாதாரண பாவி தேவசமுகத்தில் தன் இருதயத்தை தாழ்த்தவேண்டுமேயொழிய, நாம் அப்படிச் செய்ய அவசியமில்லையென்று நினைத்துக்கொள்ளலாம். ஆனால் கிறிஸ்துவின் ஜோதி நம்முடைய ஆத்துமாவிலே காந்தியாய்ப் பிரகாசிக்கும்போது, நாம் எவ்வளவு அசுசியாயிருக்கிறோம் என்று அறிந்து கொள்வோம். தன் நேசம் தேவனுக்கு அருவருப்பானது என்றும், நம்முடைய ஜீவியத்தையடுத்த ஒவ்வொரு கிரியையையும் அது தீட்டுப்படுத்துகிறதென்றும் உணர்ந்துகொள்வோம். அப்போதுதான் நம்முடைய நீதி அழுக்கான கநதையென்றும், கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரம் நமது பாவத்தீட்டைக்

கழுவக்கூடுமென்றும், நம்முடைய இருதயத்தை அவர் தமது திருச்சாயலுக்கொப்பாய் புதிதாக்குவார் என்றும் அறிந்துகொள்வோம். தேவ மகிமையின் ஓரே கதிரும், கிறிஸ்துவின் பரிசுத்த ஜோதியும் ஆத்துமாவுக்கூடே சென்று, அதிலுள்ள தீட்டின் ஒவ்வொரு கறையையுந் தெளிவாகக் காட்டி, மனநோவை அதிகரிக்கச்செய்கிறது. மனுஷீக சுபாவத்திலுள்ள ஒவ்வொரு குறைவையும், ஊனத்தையும் வெளியாக்குகிறது. துராசைகளையும், இருதயத்திலுள்ள அவநம்பிக்கையையும், உதடுகளின் அசங்கியத்தையும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கும்படி செய்கிறது. அவபக்தியாய் நடக்கிற பாவியினுடைய கிரியைகள் தேவனுடைய கற்பனைகளை மீறுகிறதாக. அவனுக்குக்காட்டுகின்றன. தேவாவியானவர் அவனை ஆராய்ந்தறியுங் காலத்தில், ஐயையோ, நான் தெய்வ துரோகியானேனே, என்று மாரடித்துப் புலம்பி, துன்புற்று வருந்துவான். கிறிஸ்துவணிந்திருக்கும் தூய்மையையும், அவரிடத்தில் இலங்கும் களங்கமற்றசுபாவ லட்சணத்தையுங் கண்ணுற்றுத் தன்னைத்தான் வெறுத்துக்கொள்வான்.

**(10) தானியேல் தன் குணாதிசயத்தில் குறைபாட்டை உணர்ந்தபோது, அதற்கு கிடைத்த பலன் என்ன?**

***நான் தனித்துவிடப்பட்டு அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன்; என் பெலனெல்லாம் போயிற்று; என் உருவம் மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனேன். (தானி.10:8)***

தீர்க்கதரிசியாகிய தானியேல் தன்னண்டை வந்திருந்த தேவதூதனைச் சுற்றி மகிமை

சூழ்ந்திருந்ததைக் கண்ட தரிசனத்தில், தான் பெலனற்றுத் திடனற்றுப் போனதை யறிந்து பயந்து நடுங்கினான். இந்த ஆச்சரியக் காட்சியினால் தன்க்கு நேரிட்டதைப்பற்றி, “என் பெலனெல்லாம் போயிற்று; என் உருவம்மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனேன்” (தானி. 10.8) என்று சொல்லுகிறான். இவ்வாறு உணர்த்தப்பட்ட ஆத்துமா தன் சுயநயத்தை வெறுத்துத் தள்ளும், சுயநேயத்தை அருவருக்கும்; இயேசுகிறிஸ்துவின் புண்ணியமாகிய நீதியின் மூலமாய்த்தேவகட்டளைக்கும். கிறிஸ்துவின் லட்சணத்துக்கும் பொருந்தியிருக்கிறசுத்த இருதயத்தையே நாடித்தேடும்.

**(11) பவுலை போல, கிறிஸ்துவின் பரிசுத்தத்தை நாம் பார்க்கும்போது, மற்றும் தேவகட்டளையின் பரிசுத்த பிரமாணங்களின் அர்த்தம் உணரும்போது நான் என்ன கூறுவோம்?**

***முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்த போது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். (ரோ.7:9)***

பவுல் தன் வெளியரங்ககிரியைகளை ஆராய்ந்து பார்த்தபோது, “நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்” (பிலி.3:6) என்று சொல்லுகிறார். நியாயப்பிரமாணத்திற்குரிய ஆவியின் லட்சணம் அவனிடத்தில் வெளியானபோதோ, தான் பாவியென்றுகண்டார்.

மனிதர்வெளியரங்க ஜீவியத்தைப் பார்க்கிறபடி நியாப்பிரமாணத்தின் அட்சரத்தினாலே நியாயந் தீர்க்கப்பட்டு, பாவத்துக்கு விலகியிருந்தார். பரிசுத்த கற்பனைகளின் ஆழத்தை எட்டிப்பார்த்தபோதோ, தேவன் பார்க்கிறபடியே தன்னைப்பார்த்து, மனத்தாழ்மையாய்க் குனிந்து பணிந்து, தன் பாவதோஷத்தை அறிக்கையிட்டார். "முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனா யிருந்த போது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்" (ரோயர் 7:9) என்று புலம்புகிறான். நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மையைக் கண்டபோது, பாவமானது அதின் தற்சொரூபமாகிய பயங்கரகோலத்தில் காணப்பட்டது. தன்னைப்பற்றிக்கொண்டிருந்த ஆங்காரமான எண்ணமுந் தொலைந்தது.

*நான் இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவரை அறிய வருகிறேன், அதினால் என் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும், இதற்கு நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.*

*வட்டமிடுக:  ஆம் முடிவெடுக்கவில்லை*

*அவர் என்னை இழுத்துக்கொண்டதால் நான் அதிக நேரம் அவருடைய வார்த்தையில் நேரம் செலவழிக்கிறேன், நான் அவருடைய நீதியை பார்க்கும்போது அசுத்தமாக  பாவியாக உணர்கிறேன்.*

*வட்டமிடுக:  ஆம் முடிவெடுக்கவில்லை*

*நான் அவரை போல இருக்கவேண்டும் என்ற உணர்வை இப்போது என் இருதயத்தில் வைக்கிறார் ஆனால் நான்*

என்னை மாற்றிக்கொள்ள ஆற்றலற்றவன் என்று உணர்கிறேன்.

வட்டமிடுக:  ஆம் முடிவெடுக்கவில்லை

நான் பாவியாக, உதவியற்றவனாக, சார்ந்திருப்பவனாக இருக்குபோது அவரிடத்தில் வருவதற்கு நான் நன்றி கூறுகிறேன், என் வாழ்வில் மாற்றங்களை கொண்டுவரும் அவருடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்து அதினால் அவரின் நாமம் மகிமையடைகிறது.

வட்டமிடுக:  ஆம் முடிவெடுக்கவில்லை

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

___________________________________________



பாடம் 4
**மனந்திரும்புதல்**

**(1) இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள குறிப்பாக தேவனுக்கு விரோதமான பாவம் என்ன?**

***தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன். (நீதி.8:13)***

தேவன் பாவங்களெல்லாவற்றையும் ஓரேயளவாய் மதிக்கிறதில்லை. மனிதனை எவ்வாறு எடை போட்டு வைத்திருக்கிறாரோ அவ்வாறே அவருடைய பார்வையில் பாவத்தின்

அளவையும் நிறுத்து வைத்திருக்கிறார். மனிதருடைய பார்வையில் எந்தக்கெட்ட நடத்தையும் வெகு அற்பமாய்த் தோன்றினாலும், ஒரு பாவமாவது தேவனுடைய பார்வையில் சின்னதாகக்காணப்படுகிறதில்லை. மனிதருடைய தீர்ப்பு பக்ஷபாதமும்குறைவுமுள்ளது, தேவனோ எல்லாக்காரியத்தையும் இருக்கிறபடியே சீர்தூக்கிப் பார்க்கிறார். பெருமை, தற்சிநேகம், மாம்ச இச்சை முதலிய அந்த ரங்க பாவமுள்ளவர்களைக் கண்டிக்கிறவர்கள் வெகு சொற்பம். வெளியரங்கமாய்க்குடித்து வெறிக்கிறவனை பூலோகத்தார் அவமதித்து, அவனுடைய கொடியபாவத்தினிமித்தம் பரலோகத்திலும் அவனுக்கு இடங்கிடையாமல் தள்ளிவிடப்படுவான் என்று சொல்லிக் கொள்வார் பலர். தேவனுடைய பரோபகார லட்சணத்துக்கும், பரிசுத்தவான்களுடைய வெறுப்பின் ஜீவியத்துக்கும், இந்தப் பாவக்குணங்கள் முற்றும் விரோதமாயிருக்கின்றபடியால், அவருக்கு அதிக வருத்தத்தை யுண்டாக்குகிறவைகளாயிருக்கின்றன. கொடிய பாவங்களில் ஒன்றில் சிக்கி, அதிலே விழுந்து கிடக்கிற ஒருவன், வெட்கத்தையும் நஷ்டத்தையும் வறுமையுமடைந்து, துன்புறும் நேரத்திலும், கிறிஸ்துவின் உன்னத கிருபையின் அவசியத்தை உணரக்கூடும். பெருமையானது ஒருவனுடைய குறைவைக் காணவொட்டாமல், கிறிஸ்துவுக்கும்

அவர் அருளவிருக்கும் ஆசீர்வாதங்களுக்கும் அவன் இருதயத்தை முழுவதும் அடைத்துப்போடுகிறது.

**(2) பாவம் செய்து மனந்திரும்பும்போது நம் உண்மையான ஜெபம் எப்படி இருக்கவேண்டும்?**

***ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். (லூக்.18:13)***

" தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" லூக். 18 : 13 என்று ஜெபித்த அந்த ஏழை ஆயக்காரன் தன்னை மகா துன்மார்க்கன் என்றும், மற்றவர்களும் தன்னை அப்படியே தீர்த்திருக்கிறார்கள் என்றும் உணர்ந்தான். ஆயினும், அவன்தன் குறைவைக் கண்டு, பாவபாரத்தையும் வெட்கத்தையும் சுமந்தவனாய், தேவசமுகத்திலே வந்து அவருடைய இரக்கத்துக்காகக்கெஞ்சுகிறான். தேவாவியி னுடைய கிருபைநிறைந்த கிரியையை அவனுக்குள் நடப்பிப்பதற்கும், பாவத்தின் வல்லமையினின்று அவனை விடுவிப்பதற்கும், அவனுடைய இருதயம் திறந்திருந்தது. பரிசேயனுடைய பெருமையும் சுயநீதியும் நிறைந்த ஜெபமானது பரிசுத்தாவியினுடைய கிரியையை நடப்பிக்கக்கூடாதபடி அவருக்கு விரோதமாய் அவனுடைய இருதயம் அடைபட்டிருந்ததெனக் காட்டினது. தேவனைவிட்டுத் தூரமாய் விலகியிருந்ததினாலேதான், அவருடைய பூரண பரிசுத்தத்திற்கும் தன்

இருதயத்திலுள்ள தீட்டான பாவங்களுக்கும் பெரிய வித்தியாசமிருக்கிறதென்றுணரவில்லை. தனக்கு அவசியமானது இன்னதென்று இவன் கண்டுகொள்ளாததினாலே, ஒரு நன்மையையும் பெற்றுக் கொள்ளவில்லை.

**(3) நாம் பாவங்களை ஒப்புக்கொண்டபின்னும் நம் சொந்த முயற்சியால் நம் வாழ்வில் பரிசுத்த கனிகளை கொடுக்க முடியாதது ஏன்?**

***நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோ.15:5)***

ஆதலால் நீ உன் பாவக்குணத்தைப் பார்ப்பாயாகில், உடனே அதினின்று விலகிக்கொள்ளதாமதஞ் செய்யாதிருப்பாயாக. பரிசுத்தமுள்ள கிறிஸ்துவண்டை சேருவதற்கு நாங்கள் யோக்கியரல்லவென்றெண்ணி, சோரம்போகிறவர்கள் எத்தனை எராளம். உன் சுய முயற்சியினாலும், நற்கிரியைகளினாலும் யோக்கியனாகலாம் என்றெண்ணுகிறாயோ? "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிGங்கித் தன் புள்ளியையும் மாற்றக் கூடுமோ? கூடுமானால், தீமை செய்யப்பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்;" எரே. 13:23. நமக்குச் சகாயம் தேவனிடத்தில் மாத்திரமுண்டு. நமது மனதில் ஓர் விசேஷித்த உணர்ச்சியுண்டாகவேண்டுமென்றும், நல்லசமயம்வரட்டுமென்றும், நடக்கை இன்னும் பரிசுத்தமாகட்டும் என்றும் காத்திருக்கக்கூடாது. ஏனென்றால், இந்த

விஷயத்தில் நாமாக ஒன்றுஞ் செய்ய முடியாது. நாம் எப்படி இருக்கிறோமோ அப்படியே கிறிஸ்துவண்டை வரவேண்டும்.

**(4) மனந்திரும்புதலின் மூலம் நீதியை கண்ட நீதிமானிடத்தில் பாவத்தின் விளைவு என்ன ஆனால் பின்னர் தேவனிடமிருந்து திரும்புகிறார்?**

***நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான். (எசே.18:24)***

ஆனால், தேவன் அன்பும், இரக்கமும், சாந்தமும், நீடிய பொறுமையும் மிகுந்தவரானபடியால் தம்முடைய கிருபையை அடையாதபடி தள்ளுண்டு போனவர்களை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார் என்றெண்ணி ஒருவனும் தன்னைத் தான் வஞ்சித்துக் கொள்ளாதிருப்பானாக. பாவத்தின் மேல் பாவத்தைச் செய்ததினாலுண்டாயிருக்கிற பாவப் பெருக்கம் சிலுவையின் வெளிச்சத்திலே மாத்திரம் அளவிடக்கூடும். தேவன் நன்மை மிகுந்தவராதலால் பாவியைத் தள்ளார் என்கிற எண்ண்ம் அவன் உள்ளத்தில் எழும்பும்போது கல்வாரியையே நோக்குவானாக. ஏனெனில், மனிதர் இரட்சிப்படைவதற்கு வேறூ வழியில்லாமையாலும், தீட்டுப்படுத்தும் பாவ வல்லமையினின்று மனுக்குலத்தைத் தப்புவிக்கவும், பரிசுத்தரோடு மறுபடியும் அவர்களை

ஐக்கியப்படுத் தவும், இந்தப் பலியைத்தவிர வேறு புகலில்லாமையாலும், ஆவிக்குரிய ஜீவியத்தில் திரும்பவும் அவர்கள் பங்கடையக் கூடாமையாலும், கீழ்ப்படியாதவர்களின் அக்கிரமத்தை கிறிஸ்து தம்மேல் சுமந்து கொண்டதினாலும், பாவிகளுக்குப் பதிலாக அவர் பாடனுபவித்துத் தீர்த்தார். தேவ குமாரனுடைய இந்த அரிய அன்பும், வேதனை நிறைந்தபாடும், நிந்தையான மரணமுமாகிய இவையும், பயங்கரமான பாவத்தின் அகோரத்தையும் மிகுதியையுமே காட்டிகின்றன. இன்னும் அவைகள் நம்முடைய ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்கு இப்படைப்பதினாலேயல்லாமல், பாவத்தின் வல்லமையினின்று தப்பித்துக்கொள்ள வழியில்லையென்றும், உத்தம ஜீவியஞ் செய்ய நம்பிகையில்லையென்றும் தெரிவிக்கின்றன.

(5) **யாருடைய மாதிரியை பின்பற்ற நாம் கூறவேண்டும்?**

***இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.*** *(1பேது.2:21)*

தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அதை தள்ளிவிடாதவர்கள், சில சமயங்களில் "அவர்களைப்போல நானும் யோக்கியனாயிருக்கிறேன்" என்று பேர்க் கிறிஸ்தவர்களைச் சுட்டிக்காட்டி, தாங்களே போக்குச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். என்னுடைய

ஜீவியத்திலிருக்கிறதைவிட அவர்களுடைய நடத்தையில், சுயவெறுப்பும், தெளிந்த புத்தியும், விழிப்பும் விசேஷமாயில்லை. என்னிடத்திலிருக்கிறபடியே ஆசாபாசங்களும், சிற்றின்ப அபேட்சையும், தற்புகழ்ச்சியும், அவர்களிடத்திலுமுண்டு. இவ்வாறு அவர்கள் பிறருடைய பாவக்குற்றங்களையே தங்களுக்கு ஒரு போக்காகப் பேசி, தங்களுடைய கடமையை நிறைவேற்றக் கவலையற்றுப் போகிறார்கள். மற்றவர்களுடைய பாவங்களும் குறைகளும் வேறெவருக்கும் போக்காகமாட்டாது; ஏனென்றால் கர்த்தராகிய ஆண்டவர் மனுக்குலத்தாராகிய நமக்கு மனிதருடைய குற்றங்களையும் பாவங்களையும் மாதிரியாகக் கொடாமல், கரை திரையற்ற தமது திருக்குமாரனையே நமக்கு உத்தம மாதிரியாக அருளிச் செய்திருக்கிறார். பேர்க்கிறிஸ்தவர்களுடைய ஒழிங்கீனமான நடத்தையைச் குறித்து ஆவலாதி சொல்லுகிறவர்கள் தாங்களே பரிசுத்த ஜீவியஞ்செய்து உத்தமமாதிரியைக் காட்டவேண்டியவர்களாயிருக்கிறாகள். கிறிஸ்தவன் இருக்கவேண்டிய நிலைமையைக்குறித்து அவர்கள் மேலான எண்ணமுடையவர்களாயிருப்பார்களேயானால், அவர்களுடைய பாவம் அவ்வளவு பெரிதாயிராதல்லவா? சரியானது இன்னதென்று அவர்கள் அறிந்திருந்தாலும் அதைச் செய்வதற்கு உடன்படுகிறதில்லை.

**(6) நம் பாவத்தை தடுக்கவைக்கும் பரிசுத்த ஆவியின் சத்தத்தை நாம் புறக்கணிப்பதன் அபாய விளைவு என்ன?**

*செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்; துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப் பாழாக்கும். உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்; துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால் விழுவான்.(நீதி.11:3,5)*

காலதாமதஞ்செய்வதைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்பது நன்மை. பாவங்களைத் தொலைத்துவிட்டு, கிறிஸ்துவின் மூலமாய்ச் சுத்த இருதயத்தைத்தேடும் வேலையைக் கடத்திவைப்பது நன்றன்று. இவ்விஷயத்தில் ஆயிரம் ஆயிரமானவர்கள் தவரிப்போய், நித்திய நஷ்டத்துகுள்ளாகிறார்கள். நம்முடைய ஜீவியத்தின் சுருக்கத்தையும், அநிச்சயத்தையும்பற்றி இப்போது சொல்லப்புகாமல், தேவாவிபரிந்து பேசும் சத்தத்துக்கு இணங்கிப்போக தாமதிப்பதினாலும், பாவத்திலே ஜிவிக்க விரும்புவதினாலும், மிகப்பயங்கரமான அபாயம் நேரிடும் என்பதை உணர்த்துகிறோம். இந்த மோசத்தை அநேகர் சரியாய் உணருகிறதில்லை. அப்படிப்பட்டவர்கள் இப்படித் தாமதஞ் செய்வது இயல்பு. பாவத்தை நாம் மிக அற்பமென்றெண்ணி வந்திருந்தாலும், நித்திய நஷ்டத்தையடையவிருக்குங் காலத்தில் மாத்திரம், ஐயையோ, மோசம் போனோமே என்று பரிதபிக்க நேரிடும். நாம் மேற்கொள்ளாதவைகள் எவைகளோ அவைகளே நம்மை மேற்கொண்டு, அதமாக்கிவிட வழிதேடும்.
ஆதாம் ஏவாள் இருவரும் தேவன் விலக்கின மரத்தின் கனியைப் புசிக்கும் இந்த அற்பக்காரியத்தினால், அவர் சொல்லியபடி, காரியம் நடக்கப்போகிறதோ வென்றும், என்ன பிரமாதமிது: நடக்கிறது நடக்கட்டும்

என்றும், துணிந்து, அதைப்பிடுங்கிச் சாப்பிடத் தலைப்பட்டார்கள். இவர்கள் அற்பமென்றெண்ணின இந்தச் சின்னக்காரியமே அவர்கள் தேவனுடை மாறாத பரிசுத்த கற்பனையை மீறுகிறதற்குக் காரணமாயிருந்தது. ஆம்! அது தேவனுக்கும் மனிதனுக்கும் ஊடே பெரிய பிளப்பையும் பிரிவினையுமுண்டாக்கிற்று மனுக்குலத்தாருக்கு மரணவாசல்களைத் திறந்துவிட்டது. இவ்வுலகத்தின் சர்வ சிருஷ்டிகளின் மீதும் சாபத்தையும், துர்க்கதியையும், சொல்லவொண்ணா நிர்ப்பந்தத்தையும் வருவித்தது. தலைமுறை தலைமுறை யாய் மண்ணுலகினின்று பெருமூச்சும், புலம்பலும் தொடர்ந்தேர்ச்சியாக விண்ணுலகுக்கு ஏறிக்கொண்டேயிருக்கிறது. மனிதனுடைய கீழ்ப்படியாமையால் விளைந்த உபாதையினாலேதான் சிருஷ்டிப்பனைத்தும் பெருமூச்செறிந்து, ஒருமிக்க பிரசவவேதனை யடைந்துகொண்டே யிருக்கின்றன. தேவனுக்கு விரோதமாய் எதிர்த்ததினாலுண்டான தோஷத்தை வானலோகமும் உணர்ந்தது. தேவனுடைய கட்டளையை மீறினதினால், இழ்ந்துபோனதை மீட்கும்படியாய்ச் செலுத்தப்பட்ட ஆச்சரிய பலிக்குக் கல்வாரிமேடு சிறந்த சின்னமாக என்றும் நிலை நிற்கிறதே. ஆகையால் பாவம் ஒரற்பக்காரியந்தானென்றெண்ணி, ஏனோதானோவென்று அசதியாயிராதிருப்போமாக.

**(7) நம் வாழ்வில் செழிப்பாக இருக்க அறிந்த பாவத்தை தெரிந்தெடுப்பதன் விளைவு என்ன?**

*துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும்; தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான். (நீதி.5:22)*

கற்பனையை மீறிச் செய்கிற ஒவ்வொரு கிரியையும், கிறிஸ்துவின் கிருபையை நிராகரிக்கிற ஒவ்வொரு அசட்டையும், அதைச் செய்வதன் எவனோ அவனையே எதிர்த்துத்தாக்குகிறது. அது இருதயத்தைக் கடினப்படுத்தி, தேவாவியினுடைய உருக்கமான பரிந்து பேசுதலுக்குச் சம்மதிக்க இடங்கொடாதது மாத்திரமல்ல, இணங்கக் கூடாமலுமாக்கிவிடும்.

தாங்கள் விரும்புகிறபோது தங்களுடைய தீமையான வழியை மாற்றிக்கொள்ளலாம் என்னும் எண்ணத்தோடு அல்லகல்லோலமாய்க் குழம்பியிருக்கிற மனசாட்சியை அநேகர் சாந்தப்படுத்திக் கொள்வதுமுண்டு. இரக்கமான அழைப்பையும் அற்பமாயெண்ணி அவமதித்துச் செவியை அடைத்துக் கொள்ளவுங் கூடும். ஆயினும், மனச்சாட்சியோ அவர்களைத் திரும்பத்திரும்ப உறுத்திக்கொண்டேயிருக்கும். அப்பேர்க்கொத்தவர்கள் கிருபை நிறைந்த ஆவியை அவமதித்து, சாத்தான் பட்சத்தில் தங்கள் செல்வாக்கைப் பிரயோகித்தபின், பயங்கரமான கடைசி வேளையில் தங்கள் நடத்தையை மாற்றிக் கொள்ளலாமென்று நினைக்கிறார்கள். இது லேசான காரியமல்ல; எப்படியென்றால், பாவத்தையொட்டிய அநுபவமும், அதைப்பற்றிய போந்த அறியும் அவர்கள் ஜீவியத்தில் முழுவதும் உருப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், கிறிஸ்துவின் சாயலையடையவேண்டுமென்கிற

விருப்பம் கிஞ்சிற்றேனும் இருக்கவே இராது.
நல்லொழுக்கத்திலிருந்து விழும் ஒரு தவறுதலும், பாவமான ஒரு ஆசையுங்கூட இருதயத்தை நன்றாய்ப்பற்றிக்கொண்டு கடினப்படுத்தி விடுகிறபடியால், சுவிசேஷவல்லமை அங்கே கிரியை செய்யாதபடி, அதின் சத்துவத்தைக் கெடுத்துப் போடுகிறது. நம்முடைய இருதயத்திலே பாவத்துக்கு இளக்காரங் கொடுத்து அதைப் பரிபாலித்துவருவோமானால், தேவனுக்கு அவ்வித ஆத்துமாவின் பேரிலிருக்கிற வெறுப்புமிகுதியாய் மிஞ்சிவிடும். அவ்விசுவாசத்தை வீரியத்தோடு பேசுகிறவனும், சத்திய வசனங்களைக் கவனியாதவனும் தாங்கள் விதைத்ததையே பலனாக அறுப்பார்களேயல்லாம், வேறெந்த நன்மையையுமடையார்கள். "துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும், தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்" (நீதி. 5:22) என்னும் ஞானியின் வார்த்தைகளைப்பார்க்கிலும், தீமையை வெறுத்து அரோசிக்கவேண்டுமென்பதற்கு இதைவிட வேறே பயங்கர எச்சரிப்பு வேதாகமம் முழுவதிலுமில்லை.

**(8) ரட்சிப்பை பற்றிய கிறிஸ்துவின் அழைப்பிற்கு நான் எப்போது கீழ்ப்படியவேண்டும்?**

***அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள். (2கொரி.6:2)***

கிறிஸ்து பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்க ஆயத்தமாயிருக்கிறார். நம்முடைய சித்தத்தையோ அவர் கட்டாயம் பண்ணுகிறபடியால் சித்தமானது தீமையின்பேரில் பிரியங்கொண்டு, விடுதலையடையவேண்டுமென்கிற விருப்பம் இல்லாமற்போய்விடுகிறது. அப்போது அவருடைய கிருபையை அங்கீகரிக்க மாட்டோம் என்று மறுத்தால், அவர் என்னதான் செய்யக்கூடும்? நாம் அவருடைய அன்பை தீர்மானமாயத் தள்ளிவிட்டபடியால் நம்மை நாமே நாசமாக்கியிருக்கிறோம். "இதோ, இப்போழுதே அநுக்கிரக காலம், இப்போழுதே இரட்சண்ணிய நாள்." 2 கொரி. 6: 2. "ஆகையால், பரிசுத்தாவி சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்ததைக் கேட்பிர்களாகில், வனாந்தரதிலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல,உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்." எபி. 3: 7, 8.

**(9) வஞ்சக இருதயத்திலிருந்து வரும் சிந்தனை, நோக்கம் மற்றும் எண்ணங்களிலிருந்து விடுதலையடைய செய்யும் ஒரே ஒரு பாதுகாப்பான ஜெபம் என்ன?**

***தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும். (சங்.139:23-24)***

“மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ, இருதயத்தைப் பார்க்கிறார்.” 1 சாமு. 16: 7. ஏனென்றால், அவர் மனிதருடைய இருதயம் ஒன்றுக்கொன்று ஒவ்வாத சந்தோஷமும் துக்கமும் மிகுந்தது என்றும், அசுத்தம், வஞ்சனை முதலிய துர்க்கிருத்தியங்களுக்கு உறைவிடமாயும், மனம் போனபோக்கெல்லாம் திரிந்து அலைந்து, தீட்டாக்கிக்கொள்ளுகிறதென்றும் பார்க்கிறார். தேவனுக்கு மனிதருடைய இருதயத்தின் யோசனைகளும், அந்தரங்கங்களும் நன்றாய்த் தெரியும். ஆகையால் சங்கீதக்காரன் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கிற தேவனுக்கு நேரே தன் இருதய அறைகளை திறந்துவிட்டு, “தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச்சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்: வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்” (சங். 139: 23, 24) என்று அங்கலாய்த்து மன்றாடினதுபோல கறைப்பட்டு தீட்டாயிருக்கிற உன் ஆத்துமாவோடுகூட அவரண்டை சேர்வாயாக.

அநேகர் இருதயம் சுத்திகரிக்கப்படாமல், தெய்வபக்தியின் வேஷமாகிய மார்க்கத்தையே அநுசரித்து வருகிறார்கள். ஆனால் “சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்” (சங். 51: 10) என்பதே உன்னுடைய ஜெபமாயிருக்கவேண்டும். உன் இரு தயத்தை நீயே ஆராய்ச்சிசெய்து, அதின் நிலைமையை அறிந்துகொள்வாயாக. சாவுக்கேதுவான உன் ஜீவன் ஊனப்படுமானால், எவ்வளவு

அக்கரையோடே அதைக் காப்பாற்ற முயற்சி யெடுத்துக்கொள்வாயோ, அவ்வளவு ஊக்கத்தோடே உன் இருதயமும் கறைப்படாதபடி பார்த்துக்கொள். ஏனென்றால், இது தேவனும் உன் ஆத்துமாவுமே சதாகாலத்துக்கென்று தீர்மானிக்கவேண்டிய காரியமாயிருக்கிறது. சந்தேகமுள்ள நம்பிக்கையும், இனி வேறொன்றும் நடப்பதில்லை என்கிற வீண் எண்ணமுமே உன் அனர்த்தத்துக்கு ஆதாரமாகும்.

(10) **மனந்திரும்புதலுக்கு நேராக நடத்தும் தேவனுடைய வார்த்தையை ஜெபத்தோடு படிப்பதினால் வரும் குறிப்பான ஐந்து நன்மைகள் என்ன?**

*கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோ.3:15-17)*

தேவனுடைய வசனத்தை ஜெபத்தோடே வாசிப்பாயாக. என்னத்திற்காகவென்றால், அவ்வசனம் தேவனுடைய நியாயப்பிரமாணத்திலும்,

கிறிஸ்துவானவருடைய ஜீவியத்திலுமடங்கிய பரிசுத்தத்தின சிறந்த நோக்கத்தையும, "பரிசுத்த மில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை," (எபி. 12: 14) என்பதையும் உனக்குப் பரிஷ்காரமாய்க் காட்டும் இன்னும் அது பாவத்தை நன்றாய் உணர்த்தி இரட்சிப்பின் மார்க்கத்தைத்தெளிவாய்ப் போதிக்கும். தேவனுடைய சத்தம் உன் ஆத்துமாவிடத்தில் பேசுகிறதாக எண்ணி, அதற்கு உன் செவியைக் கவனமாய்ச் சாய்ப்பாயாக.

**(11) மனந்திரும்புதலின் வரத்தின் மூலம் கிறிஸ்துவை கொண்டு தேவன் நம்மிடத்தில் செய்து கொண்டிருப்பது என்ன?**

***அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். (2 கொரி.5:19)***

உன் பாவத்தின் மிகுதியையும், தற்காலம் நீ இருக்கிற நிர்ப்பந்த நிலைமையையும் பார்க்கும்போது, நம்பிக்கையற்று துயரடையாதே. இவ்விதப் பாவி களை இரட்சிக்கவே இயேசு கிறிஸ்து உலகத்தில் எழுந்தருளினார். நாம் தேவனை நமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவேண்டியதில்லை. அதற்கு பிரதியாக தம்முடைய அற்புத அன்பினாலேயே தேவன், "கிறிஸ்துவுக்குள் உலகத்தை தமக்கு ஒப்புர வாக்கிக்கொண்டிருக்கிறார்" 2 கொரி, 5: 19, வழுவிப்போன தமது பிள்ளைகளை இரட்சிக்கும்படி, இவ்வுலக பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் பொறுமையாயிருப்பதை விட அதிகமாய்,

தேவன் அவர்களுடைய இருதயங்களிடத்தில் பரிந்து பேசுகிறார். அவர்களுடைய குற்றங்களையும் தப்பு தோஷங்களையும் அதிகமாய் மன்னித்து பொறுமையாயிருக்கிறார். குற்றவாளிகளோடு பட்சமாய்பேசி நியாயஞ்சொல்லி, அவ்வளவு தயவாய் வழக்காடுகிறவர்கள் அவரைவிடச் சிறந்தவர்கள் இவ்வுலகில் வேறெவருமில்லை. இவ்வுலக ஆசாபாசங்களிலே உழன்று திரிந்தலைகிற பரதேசியிடத்தில், இரக்க உருக்கமாய்ப் பேசுகிற உதடு அவருக்குகேயன்றி வேறெவருக்குண்டு? அவருடைய வாக்குத்தத்தங்கள், எச்சிரிப்புகள் யாவும் அவரது அளவற்ற அன்பின் பெருமூச்சேயொழிய வேறல்ல.

(12) **யாரை ரட்சிக்க இயேசு வந்தார்?**

***பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். (1தீமோ.1:15)***

சாத்தான் உன்னிடத்தில்வந்து "நீ பெரிய பாவியாயிருக்கிறாய்" என்று உன் காதுக்குள் குசுகுசென்று ஒதும்போது, அவன் வார்த்தைகளுக்கு உன் செவியைச் சாய்க்காமல், உன் மீட்ப்பராகிய இயேசுவை நோக்கிப் பார்த்து, அவர் உனக்குச் செய்திருக்கிற புண்ணியச் செய்கையை எடுத்துப்பேசு. அவரு டைய திவ்விய ஒளியை நீ நோக்கிப் பார்ப்பதே உனக்கு உற்ற உதவியாகும். உன் பாவங்களை அவருக்கு முன் ஒத்துக்கொள். அவரது அளவற்ற அன்பினால் நான் இரட்சிக்கப்படும்படியாகவே, "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில்

வந்தார்” 1 தீமோ. 1: 15 என்று உன் சத்துருவாகிய சாத்தானிடத்தில் சொல்லுவாயாக.

(13) **யார் தேவனை மிக அதிகமாக நேசிப்பவர்?**

கடன்பட்ட இருவரைப்பற்றி இயேசு ஒரு கேள்வியை சீமோனிடத்தில் கொஞ்சத் தொகையும், மற்றவன் அதிகத்தொகையும் கடன் வாங்கியிருந்தார்கள்; கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான்; இப்படியிருக்க அவர்களில் எவன் எஜமானிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதை எனக்கு சொல், என்பதே. அதற்கு “சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டனோ அவனே அதிக அன்பாயிருப்பான்” லூக். 7: 43 என்றார். அந்தப்படியே நாம் பெரிய பாவிகளாகவேயிருக்கிறோம். அந்தப்பாவங்களை மன்னிக்கவும், தேவனோடு ஒப்புரவாகும் சிலாக்கியத்தை நமக்குக் அளிக்கவும், கிறிஸ்து நமக்காக மரித்தார். நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் அதிகாரம் அவருடைய புண்ணியமாகிய நீதியால் மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. எவர்களுக்கு மிகுதியாய்ப் பாவங்களை மன்னித்திருக்கிறாரோ, அவர்களே அவரிடத்தில் அதிக மாய் அன்புகூர்ந்து, அவருடைய பேரன்பையும் அவர் செலுத்தியிருக்கிற அளவற்ற பலியையும் எண்ணி, ஸ்தோத்திரகீதங்களை பாடுவதற்கு அவர் சிம்மாசனத்தினருகே நிற்பார்கள்.

நாம் தேவனுடைய அன்பை கிரகித்துக்கொள்ளுகிறபடியே பாவத்தின் கேடான தன்மையையும்

அறிந்துகொள்கிறோம். நமக்குள் நேரே விடப்பட்டிருக்கிற அன்பின் நீண்ட சங்கிலியைப் பார்க்கிறபோதும், கிறிஸ்து நமக்காகச் செலுத்தியிருக்கிற ஒப்பற்ற பலியைப்பற்றிச் சற்று அறிவடைகிற போதும், நம்முடைய இருதயம் பச்சாதாபத்தினால் நிறைந்து நெருப்பைக்கண்ட மெழுகு இளகிவிடுவது போல் உருகிப்போகிறது. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின் அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" 1 யோவா. 3: 1.

***நான் என் ரட்சகருக்கு அருகில் வரும்போது அவருடைய நீதியை உணர்கிறேன். என் வாழ்வு மற்றும் என் குணங்கள் அசுத்தமாக இருப்பதை பார்க்கிறேன். அவரை போல மாறுவதே என் உண்மையான விருப்பமாக இருக்கிறது.***

*வட்டமிடுக:  ஆம்  முடிவெடுக்கவில்லை*

***பாவத்திற்கு வரும் தண்டனையை பார்த்து பயப்படுவதை விட பாவத்திற்கு வருத்தப்படுவது தான் மனந்திரும்புதல் என்று புரிந்துகொண்டேன்.***

*வட்டமிடுக:  ஆம்  முடிவெடுக்கவில்லை*

***என் இருதயத்தில் இயேசு வைத்த மனந்திரும்புதலுக்காகவும் அதை நான் அடையும்படி வைத்ததற்காகவும் பாபி அவருக்கு நன்றி கூறுகிறேன்.***

*வட்டமிடுக:  ஆம்  முடிவெடுக்கவில்லை*

____________________________________

____________________________________

____________________________________

____________________________________

____________________________________



## பாடம் 5

## பாவ அறிக்கை

(1) பாவியாக நாம் இரக்கத்தை பெற உள்ள விதிகள் என்ன?

*தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி.28:13)*

நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கிருக்கிற நிபந்தனைகள் அறிந்துகொள்வதற்கு வெகு சுலபமும், நீதியும் நியாயமுமானவைகளாயிருக்கின்றன. பாவமன்னிப்பையடைந்து கொள்ளும் பொருட்டு நாம் கஷ்டமுள்ள கொடூரமான ஆண்டவர் விரும்புகிறதில்லை. நம்முடைய ஆத்துமாவை கர்த்தரிடத்தில் ஒப்படைப்பதற்கும், நம்முடைய மீறுதல்களை நிவிர்த்தி செய்துகொள்வதற்கும் நீண்ட அலுப்பான யாத்திரை செய்யவாவது, கொடிய தவங்களை பண்ணவாவது அவசியமில்லை. ஆனால் பாவங்களை அறிக்கைசெய்துவிட்டு விடுகிறவனே இரக்கம் பெறுவான்.

**(2) நாம் யாரிடத்தில் நம் பாவங்களை அறிக்கையிடவேண்டும்?**

**"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒரு வருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்" (யாக்.** 5: 16)

**நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சேலா.) (சங்.32:5).**

உங்கள் பாவங்களை மன்னிக்கக்கூடியவராகிய தேவனுக்கும், உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவருக்கும் அறிக்கையிடுங்கள். உங்கள் சிநேகிதருக்காவது அயலாருக்காவது விசனமுண்டாக்கி யிருப்பீர்களாகில்,

உங்கள் குற்றங்களை நீங்கள் ஒத்துக்கொள்ளும்போது உங்களுக்கு மனதார மன்னிப்புக் கொடுப்பது அவர்கள் கடமை. நீங்கள் மனவருத்தப்படுத்தின உங்கள் சகோதரன் தேவனுடைய ஆஸ்தியாயிருப்பதினாலும், அவனுக்கு வருத்தத்தையுண்டாக்கினதினால் அவனுடைய சிருஷ்டிகளும் மீட்பருமாகிய தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்திருக்கிறதினாலும், தேவனிடத்தில் பாவமன்னிப்பைத் தேடவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். "எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறவரும், நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடியவரும்," எபி. 4: 15 நம்முடைய பாவக்கறை ஒவ்வொன்றையும் கழுவக் கூடியவருமாயிரிக்கிற மகா பிரதான ஆசாரியராகிய ஒரேமத்தியஸ்தர் முன்னிலையிலே இந்தக்குற்றம் நிறுத்தப்படுகிறது.

(3) **எந்த தருணத்தில் நம் இருதயம் மற்றும் ஆவி மெய்யான சமாதானம் மற்றும் தேவனோடுள்ள நெருக்கத்தை பெறுகிறது?**

***நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். (சங்.*** *34:18)*

தங்கள் பாவங்களை உணர்ந்து தேவ சமுகத்திலே தங்கள் ஆத்துமாக்களைச் தாழ்த்தாமலிருக்கிறவர்கள், இன்னும் தேவ இரக்கத்தைப் பெறுவதற்கிருக்கிற முதல் நிபந்தனையை நிறைவேற்றாமலிருக்கிறார்கள். நம்முடைய இருதயம் மனந்திரும்பி குணப்படாமலும் ஆத்துமா தன் நிந்தையை

மெய்யாய் உணராமலும், நொருங்குண்ட ஆவியினாலே நம்முடைய பாவங்களை அறிக்கையிடாமலும், நம்முடைய அக்கிரங்களை அருவருக்காமலுமிருப்போமானால், பாவமன்னிப்பை இன்னும் உண்மையாய்த் தேடாதவர்களாயிருப்போம். இப்படி நாம் தேடாதவர்களாயிருந்தால் தேவசமாதானத்தை இன்னும் கண்டடையவில்லையே. கடந்த காலத்தில் நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்பையடையாமல் இருப்பதற்கு ஒரே ஒரு காரணமுண்டு. அதாவது நாம் நம்முடைய இருதயத்தைத் தாழ்த்தவும் கீழ்ப்படுத்தவும் சத்திய வசனத்திலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவும் மனமற்றவர்களாயிருப்பதுதான்.

**(4) நம் பாவ அறிக்கையிடுதல் எவ்வளவு குறிப்பாக இருக்கவேண்டும்?**

***இப்படிப்பட்டவைகள் ஒன்றில், ஒருவன் குற்றமுள்ளவனாகும்போது, அவன் தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட்டு, (லேவி.5:5)***

இவ்விஷயத்தைபற்றி தெளிவான போதனை நமக்கு அருளப்பட்டிருக்கிறது. பாவ அறிக்கை அந்தரங்கத்திலோ வெளியரங்கthhத்திலோ எங்கே செய்தாலும் நொறுங்குண்ட இருதயத்தோடும், முழு மனதோடும் அறிக்கையிடவேண்டும்; பாவியானவன் கட்டாயத்தினால் தன் பாவங்களை அறிக்கையிடுவதுதகாது. அவபக்தியாயும் அஜாக்கிரதையாயும் செய்யக்கூடாது. அல்லது, பாவ சுபாவத்தை வெறுக் கிற வெறுப்பில்லாதவர்கள் வில்லங்க்மாய்ச் சொல்லிச் செய்வதும் ஒவ்வாது. பாவ அறிக்கையாவது அளவற்ற இரக்கமுள்ள

தேவனுக்கு நேராய் உள்ளான இருதயம் கொட்டுண்டு போவதேயாம். "நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" சங். 34: 18 என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான்.
உண்மையான அறிக்கை எப்போதும் சிறந்த லட்சண முடையதாய், இன்னின்ன பாவங்களைச் செய்த்தாக ஒத்துக்கொள்வதேயாம். அவைகள் தேவ திருச்சந்நிதியில் மாத்திரம் கொண்டுவரத்தக்கதன்மையுடைவைகளா யிருக்கலாம்; யாருக்கு விரோதமாக ஒரு பாவம் செய்யப்பட்டதோ அவர்களிடத்திலே அதை அறிக்கை செய்ய வேண்டியதாகவுமிருக்கலாம். அல்லது பகிரங்கத்திலே அறிக்கையிடவேண்டிய தன்மையுடையதாக விருந்தால், அது பகிரங்கத்திலேதான் அறிக்கைசெய்யப்படவேண்டும். ஆனால் அறிக்கைகளெல்லாம் திட்டாமாகவும் குறிப்பாகவுமிருக்கவேண்டியதுமன்றி, எந்தப் பாவத்தினால் குற்றவாளியாகத் தீர்க்கப்படுகிறோமோ அந்தப்பாவத்தையே அறிக்கையிடவும் வேண்டும்.

**(5) எந்த குறிப்பிட்ட பாவத்தை இஸ்ரவேல் புத்திரர் அறிக்கையிட்டனர்?**

***சாமுவேலைப் பார்த்து: நாங்கள் சாகாதபடிக்கு உம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் உம்முடைய அடியாருக்காக விண்ணப்பம் செய்யும்; நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம் என்று ஜனங்கள் எல்லாரும் சொன்னார்கள்.*** *(1சாமு.12:19)*

சாமுவேலின் நாட்களில் இஸ்ரவேலர் கர்த்தரைவிட்டு வழிவிலகி, தங்கள் மனம்போனபடி திரிந்தலைந்தார்கள். தங்கள் பாவத்தின் பலனை பட்டனுபவித்தார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனிடத்தில் விசுவாசமற்றுப் போனார்கள். தங்களை ஆளும் ஆண்டவருடைய வல்லமையையும் ஞானத்தையும் அறிகிற அறிவுமில்லாமற்போனார்கள். தம்முடைய ஜனத்தை ஆதரிக்கவும் பரிபாலிக்கவும் கூடிய அவருடைய சக்தியின் பேரில் நம்பிக்கையற்றும்போனார்கள். ஜெகத்தையாளும் ராஜாதிராஜனை அவர்கள் கைவிட்டு, தங்களைச் சூழவிருந்த ஜாதியாரால் ஆளப்படும்படி விரும்பினார்கள். அவர்கள் சமாதானத்தைக் கண்ட டைவதற்குமுன்னே, "நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு இராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம்" 1 சாமு. 12: 19 என்ற இந்தத் திட்டமான அறிக்கையைச் செய்தார்கள். எந்தப் பாவம் அவர்களை குற்றவாளிகள் என்று உணர்த்தினதோ அந்தப் பாவத்தையே. அவர்கள் அறிக்கையிட வேண்டியதாயிருந்தது. அவர்கள் நன்றிகேடு அவர்களுடைய ஆத்துமாவை நெருக்கி வருத்தி தேவனிடத்திலிருந்து அவர்களை அகற்றிப்போட்டது.

**(6) தேவன் நம் பாவ அறிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு மன்னிப்பதற்கு, நாம் எந்த பகுதியை உண்மையாக காண்பிக்கவேண்டும்?**

***உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு,***

*தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்; (ஏசா.1:16)*

உத்தம மனஸ்தாபமும், உண்மையான மனந்திரும்புதலும், சரியான சீர்திருத்தமு மில்லாத பாவ அறிக்கை தேவனுக்குகந்ததல்ல. நம்முடைய ஜீவியத்திலே திட்டமும் தீர்மானமுமான மாறுதல் இருக்கவேண்டும். தேவனுக்கு ஆகாதவைகளெவைகளோ அவைகள் ஒவ்வொன்றையும் அகற்றிவிடவேண்டும். இதுவே பாவத்துக்காக உண்டாகும் உண்மையான துக்கத்தின் பலன். ஆகவே, நாம் செய்து கொள்ளவேண்டிய வேலையின் அவசியம் நமக்குமுன் தெளிவாய் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது “உங்களைக் கழுவிச்சுத்திகரியுங்கள்: உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஒயுங்கள்; நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்” ஏசா. 1: 16, 17. “துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக் கொடுத்துவிட்டு, அநியாயஞ் செய்யாதபடி ஜீவப் பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான்” எசே. 33: 15 என்பதே.

மனந்திரும்புவதாலுண்டாகும் கிரியைகளைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதாவது, “பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்க மடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ் சொல்லுதலையும்,

எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லா விதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்" 2 கொரி. 7: 11 என்பதே.

**(7) சமயம் வாய்க்கும்போது நம்மால் புண்பட்டவர்களுக்கு, தீங்கு அனுபவித்தவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்?**

***துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். (எசே.33:15)***

**(8) ஆதாம் மற்றும் ஏவாள் அறிக்கையிட்டதை தேவன் ஏற்றுக்கொள்ளாததற்கு அவர்கள் யாரை குற்றப்படுத்தினர்?**

***அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். (ஆதி.3:12)***

***அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். (ஆதி.3:13)***

பாவமானது ஞானவுணர்ச்சியை ஸ்மரணையற்ற தாக்குகிறபோது பாவி தன் சுபாவத்திலுண்டாகிற குறைவையறிந்துகொள்ளுகிறதுமில்லை; தான் செய்த பொல்லாங்கின் ஏராளத்தையும் உற்றறிகிறதுமில்லை. பரிசுத்தாவி உணர்த்துகிறவல்லமைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தாலொழிய மற்றப்படி தன் பாவத்தைப் பார்க்கக்கூடாத ஒரு கண் குருடனாய்த்தான் இருப்பான். அவனுடைய அறிக்கைகளில் ஊக்கத்தையும் உண்மையையும் காண்பதரிது. தான் சொய்த குற்றத்தை உணருகிறபோதெல்லாம் ஒரு போக்குச்சொல்லி தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான். எப்படியென்றல், இன்னின்ன காரணங்களையிட்டு இன்னின்ன குற்றங்களைச் செய்யவேண்டியதிருந்தது, மற்றப்படி இவைகளைச் செய்திருக்கமாட்டேன் என்பதாய்த் தான் அவைகளுக்காக்க் கண்டிக்கப்படும் போதெல்லாம் தன்னைத் தைரியப்படுத்திக்கொள்ளுகிறான். ஆதாம் ஏவாள் ஆகிய இருவரும் விலக்கப்பட்ட கனியைப் புசித்திவுடனே, வெட்கமும் நடுக்கமும் அவர்களை மூடிக்கொண்டது. தங்கள் பாவத்துக்குப் போக்குச் சொல்வதெப்படி யென்றும், பயங்கரமான தண்டனையினின்றி தப்பித்துக் கொள்வதெவ்வித மென்பதுமே அவர்கள் கொண்ட முதல்யோசனை. கர்த்தராகிய ஆண்டவர் அவர்கள் பாவத்தைக் குறித்து விசாரித்துபோது, ஆதாம் தான் செய்தகுற்றத்தின் பழியில் கொஞ்சத்தை தனக்குத் துணையாயிருந்தஸ்திரீயின் பேரிலும் கொஞ்சத்தை தேவன் பேரிலும் சுமத்தினான். அதாவது, "என்னுடனே

இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விரிக்ஷத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்". ஆதி. 3: 12. ஸ்திரீயானவளும் அந்தக் குற்றத்தை சர்ப்பத்தின் பேரில் போட்டாள். அதாவது, "சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் ஆதி, 3;13. இதிலே நீர் ஏன் சர்ப்பத்தை உண்டாக்கினீர்? ஏதேன் தோட்டத்துக்குள்ளே அவன் வருகிறதற்கு நீர் ஏன் இடங்கொடுத்தீர்? என்கிற அந்தக் கேள்விகளே அவள் தன் பாவத்துக்காகச் சொன்ன போக்கின் அர்த்தம். இவ்விதமாக தாங்கள் பாவத்தில் விழுந்து போனதற்குக் காரணம் தேவன் என்றே குற்றஞ் சாட்டினார்கள். தானாகவே நீதிமானாகிக்கொள்ளும் ஆவி முதலாவது பொய்க்குப்பிதாவாயிருந்தவனிலே உண்டாகி, பிறகு ஆதாமின் குமாரர் குமாரத்திகள் யாவராலும் காண்பிக்கப்பட்டது. இந்த விதமான அறிக்கை பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டதல்ல, தேவனும் அதை அங்கிகரிக்கமாட்டார்.

(9) **ஆயக்காரன் தன்னை எப்படி பார்த்தான்?**

***ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.*** *(லூக்.18:13)*

பாவத்தை போக்குச் சொல்லியாவது சுய நீதியைக்கொண்டாவது மறைத்துகொள்ள விரும்பாத உண்மையான மனந்திரும்புதலையும் மனத்தாழ்மையையும் வெளிப்படுத்துகிற அறிக்கைகளுள்ள

திருஷ்டாந்தங்கள் வேதாகமத்திலே உண்டு. மெய்யான மனந்திரும்புதல் தன்னுடைய குற்றத்தை தானே சுமத்திக்கொள்ளவும், மாய்மாலமும் வஞ்சனையுமில்லாமல் அதை ஒத்துக்கொள்ளவும் பாவியைத் தூண்டிவிடும். வானத்தை ஏறெடுத்துப் பார்க்கக் கூடாமல் அந்த ஏழை ஆயக்காரன் செய்ததுபோலவே மெய்யாய் மனந்திரும்புகிற பாவியும் "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று அலறுவான். இவ்விதம் தங்கள் பாவங்களை ஒத்துக்கொண்டு அறிக்கையிடுகிறவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள். எப்படியென்றல் மனந்திரும்புகிற பாவியினிமித்தம் இயேசு தம்முடைய இரத்தத்தைக் கொண்டு பரிந்து பேசுவார்.

(10) **பாவத்திற்கு மெய்யக வருந்தியதற்கு பவுல் மற்றும் தாவீது பயன்படுத்திய குறிப்பிட்ட வார்த்தை என்ன?**

***அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்கவெறிகொண்டவனாய் அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்.*** *(அப்.26:10-11)*

*என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன். (சங்.51:3-4)*

**மெய்யான அறிக்கையிடுதலின் எடுத்துக்காட்டுகள் :** லூக்கா 18:13, 14; 15:18-21; சங்கீதம் 51:3, 4; 2 சாமுவேல் 12:13; தானியேல் 9:3-12, 18; எரேமியா 3:25
**பொய்யான அறிக்கையிடுதலின் எடுத்துக்காட்டுகள்:** ஆதியாகமம் 3:12, 13; 1 சாமுவேல் 15:22-26; யோசுவா 7:19-21

பவுல் தன்னை மறைத்துக்கொள்ள வழி தேடினதல்லை. பாவக் குற்றத்தைக் குறைக்கும்படி எத்தினிக்காமல், அதின் பயங்கரமான அந்தகார நிலைமையை வர்ணிக்க முயற்சிக்கிறார். "நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதிருந்தேன்; சகல ஜெப ஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்க வெறிகொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்." அப். 26:10,11 என்பதாய் அறிக்கையிடுகிறார். மேலும் அவர் "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார், அவர்களில்

பிரதான பாவி நான்" என்று சொல்லவும் பின்வாங்கினதில்லை.

**(11) நாம் உண்மையாய் பாவத்திற்கு மனம்வருந்தி தேவனிடத்தில் அறிக்கையிடும்போது, நாம் எந்த அருமையான வாக்குத்தத்தத்தை கேட்க முடியும்?**

***நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1யோ.1:9)***

உண்மையான மனந்திரும்புதலினாலே நறுங்குண்டு நொறுங்குண்டிருக்கிற இருதயம் மாத்திரம் தேவனுடைய அளவற்ற அன்பையும், கல்வாரியில் செலுத்தியிருக்கிற கிரயத்தையும் கொஞ்சம் நன்கு மதிக்கும். அன்புள்ள தகப்பனிடத்தில் மகன் தன் குற்றத்தை ஒத்துக்கொள்வதுபோல், மெய்யாய் மனஸ்தாபப்படுகிற பாவியும் தேவ சமூகத்தில் தன் பாவங்களையெல்லாம் கொண்டுவந்து மறைக்காமல் அறிக்கையிடுவான். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறர்." 1 யோ. 1:9 என்று எழுதுயிருக்கிறது.

***எனக்கு மனந்திரும்புதலின் வரத்தை கொடுத்ததற்கும் அவருடைய வழிநடத்தலை பின்பற்ற தெரிந்தெடுத்ததற்கும் பாவங்களை***

அறிக்கையிட வைத்ததற்கும் நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

இரக்கத்தை பெறவும் நான் ஏங்கிக்கொண்டிருக்கும் மெய்யன சமாதானத்தை என் இருதயத்தில் பெறவும் என் குறிப்பிட்ட பாவத்தை தேவனிடத்தில் மற்றும் சமயம் வாய்க்கும்போது அதினால் பாதிக்கப்பட்டவர்களிடத்திலும் அறிக்கையிடவேண்டும் என்பதை புரிந்துகொண்டேன்.

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

நான் படித்து தேவனுக்கு அருகில் செல்லும்போது கடந்த காலத்தில் நான் மற்றவர்களை துன்பப்படுத்தி, தீங்கு செய்துள்ளதை உணர்கிறேன் மற்றும் தேவ கிருபையால் அதை சரிசெய்கிறேன்.
வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை
நான் அவருக்கு எதிராக செய்த அநேக குற்றங்களை மூட அவருடைய ரத்தத்தையும் எனக்காக அவர் வந்ததையும் கேட்கிறேன்

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

நான் அவருடைய பாதையிலிருந்து விலகும்போது தொடர்ந்து மனந்திரும்புதலின் வரத்தை கொடுக்கவும் அவருடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்தவும் நான் பாவத்தை அறிக்கையிடவும் அவர் உதவிசெய்ய ஜெபிக்கிறேன்

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

______________________________

______________________________



பாடம் 6

## தற்பிரதிஷ்டை

(1) நாம் தேவனை தேடவும் அவரை தரித்துக்கொள்ளவும் எப்படி தேட வேண்டும்?

*உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத்*

*தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். (எரே.29:13)*

நம்முடைய இருதயம் முழுவதும் தேவனுக்கு இணங்கிப்போகவேண்டும், மற்றப்படி அவருடைய திவ்ய மறுபடியும் அடைந்து கொள்வதற்கேற்ற மாறுதல் ஒருக்காலுமுண்டாகாது.

**(2) தேவனுடைய தலையீடு இல்லாமல் நம் நிலை என்ன?**

***அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். (எபே.2:1)***

சுபாவத்தின்படி நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்கள். நம்முடைய நிர்ப்பந்தமான நிலைமையை பரிசுத்தாவியானவர் எவ்விதமான வார்த்தைகளால் விவரிக்கிறர் என்று பாருங்கள். "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்த சாத்தானின் வலைகளில் அகப்பட்டது.
வர்கள்." எபே. 2: 1. "தலையெல்லாம் வியாதியும் இருதயமெல்லாம் பலட்சயமுமாயிருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லே." ஏசா 1:5, 6. " பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டிருக்கிறோம்." 2 தீமோ 2: 26. என்பதே. ஆயினும், தேவன் நம்மைக் குணமாக்கவும் விடுதலையாக்கவும் விரும்புகிறர். இதற்காக நாம் முழுவதும் மறுரூபமாக்கப்படவும், நம்முடைய முழு சுபாவமும் புதிதாக்கப்படவும் வேண்டியதாயிருப்பதினாலே, அவருக்கே நம்மை முற்றிலுங் கையளிக்கவேண்டும்.

**(3) தேவனின் எந்த அழைப்பு நமக்கு தெரிந்தெடுக்கும் உரிமை இருப்பதை காட்டுகிறது?**

***வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். (ஏசா.1:18)***

நான் என்னும் இராட்சதனுக்கு விரோதமாய் நடக்கிற பெரிய யுத்தத்தைப்போல வேறெந்த யுத்தமும் எக்காலத்திலும் நடந்ததில்லை. தான் என்னும் அகங்காரமானது அடங்கி, முற்றிலும் தேவனுடைய சித்தத்திற்கு இணங்கிப்போவதற்கு ஒர் போராட்டம் வேண்டியதுதான். ஏனெனில், ஆத்துமா பரிசுத்தமாய்ப் புதிதாக்கப்படுவதற்குமுன் அது தேவனுக்கு முழுவதுமாய் கீழமையவேண்டும்.

தேவனுடைய ஆளுகையானது சாத்தான் வெளிக்குத்தோன்றச் செய்கிறதுபோல் குருட்டாட்டமான வணக்கத்தின்பேரிலும் விசாரணையில்லாத அதிகாரத்தின்பேரிலும் ஸ்தாபிக்கப்பட்டதில்லை. அது மனச்சாட்சிக்கும் உணர்ச்சிக்குமுரியது. சிருஷ்டி கர்த்த வாகிய தேவன், தமது கையின் சிருஷ்டிகளாகிய மனிதரை "வழக்காடுவோம் வாருங்கள்" ஏசா. 1:18 என்று அழைக்கிறர். அவர் தமது சிருஷ்டிகளாகிய மனிதருடைய சித்தத்தைப் பலவந்தஞ் செய்கிறதுமில்லை; முழு மனதோடும் உணர்வோடும் செலுத்தப்படாத வணக்கத்தை அவர் ஏற்றுக்கொள்ளுகிறதுமில்லை.

கட்டாயத்தினாலுண்டாகும் வெறும் கீழ்ப்படிதாலனது சரியான குணம் அல்லது மனோ விருத்தியாவற்றிற்கும் இடையூறாய் நிற்கும். இன்னம் அது தன்னில் தானே இயங்கும் எந்திரத்துக் கொப்பாக மனிதனை ஆக்கிவிடும் ஆதலால், இவ்விதமான நோக்கம் சிருஷ்டிகருக்குக் கிஞ்சிற்றேனுமில்லை. தமது சிருஷ்டிப்பின் சத்துவத்தினாலுண்டான சிறந்தகையின் கிரியையாகிய மனிதன் மேலான தோற்றமும், சிறந்த தேர்ச்சியுமடைய வேண்டுமென்பதே அவருடைய கோரிக்கை. தமது கிருபையால் நமக்கு அவர் அருளவிருக்கிற உன்னத ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் நமக்கு எதிரே வைத்திருக்கிறார். தம்முடைய சித்தத்தை நமக்குள்ளே நிறை வேற்றுவதற்காக நம்மை தமக்கு ஒப்புக்கொடுக்கும்படி வருந்திக் கேட்கிறர். பாவக்கட்டினின்று விடுதலையடையவும், தேவ புத்திரருடைய மகிமையான சுயாதீனத்தில் பங்கடையவும், நம்மை ஒப்புக்கொடுக்கும் சிலாக்கியத்தை தெரிந்துகொள்வது நமக்குரியதாயிருக்கிறது.

**(4) நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவின் சீஷராகும்போது நாமாகவே செய்ய வேண்டியவை யாவை?**

***அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்.14:33)***

நம்மை தேவனிடத்தினின்று பிரிப்பவைகள் எவைகளோ அவைகளை முற்றுமாய் விட்டுவிடுவதே நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதாம். "உங்க ளில் எவனாகிலும் தனக்கு

உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனுயிருக்கமாட்டான்." லூக். 14:33 என்று இரட்சகரும் வசனித்திருக்கிறார். நம்முடைய இருதயத்தை தேவனிடத்திலிருந்து இழுத்துக்கொண்டு போகிறவைகளெவைகளோ அவைகளேயே நாம் அகற்றித் தள்ளிவிடவேண்டும் மம்மோன் அநேகருக்கு விக்கிரகமாயிருக்கிறது. பண வாசையும், ஆஸ்தியை சேர்க்க வேண்டும் என்கிற இச்சையுந்தான் அவர்களை சாத்தானேடு இருக்கி கட்டிவிடுகிற இருப்புசங்கிலி. பேர் பிரஸ்தாபத்தையும் உலக மேன்மையையும் கனத்தையும் நாடி அவைகளை வணங்கி வருகிற இன்னேர் வகுப்பாருமுண்டு. தன்னயம் நிறைந்த ஜீவியத்தை வாஞ்சித்து உத்தர வாதமில்லாத சுயாதீன வாழ்வைவிரும்பி காலந்தள்ளு வோரும் ஒர்வித விக்கிரகாராதனைக்காரர்தான், என்றாலும் அடிமைத்தனத்துக்குள்ளாகும் இச்சங்கிலியோ உடைக்கப்படவேண்டும். கொஞ்சம் உலகத்துக்கும் கொஞ்சம் சுவாமிக்கும் நம்மைக் கொடுக்கக்கூடாது. நாம் முழுவதுமாய் அவருடையவர்களாகாவிட்டால் தேவனுடைய பிள்ளைகள் என்கிறபேர் நமக்குக் கிடையாது.

**(5) நம் ரட்சிப்பை நாம் ஏன் சம்பாதிக்க முடியவில்லை?**

***கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (எபே.2:8)***

சிலர் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதற்கும், உத்தம

குணத்தையடைவதற்கும், இரட்சிப்புப் பெறுவதற்கும் தங்களுடைய சொந்த முயற்சிகளின் பேரிலும் எத்தனங்களின் பேரிலும் நம்பிக்கை வைத்திருக்கையில் தேவனையே சேவிக்கிறேம். என்பதாய்ச் சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. மோட்சகதியை யடைந்துகொள்வதற்கு ஆண்டவர் நியமித்திருக்கிற கிறிஸ்தவ ஜீவியத்தின் கடமைகளை நிறைவேற்ற நாடுகிறார்களேயொழிய கிறிஸ்துவின் அரிய அன்பை உணர்ந்து அவர்கள் இருதயம் உருகுகிறதில்லை. இப்பேர்க்கொத்த மார்க்கம் ஒன்றுக்கும் உதவாது. இயேசு இருதயத்தில் வாசம்பண்ணுவாரானால் அந்த ஆத்துமா அவரோடு ஒட்டிக்கொள்ளத்தக்கதாக அவருடைய அன்பினிலும், அந்நியோந்நியத்தினாலும் அதிகமாய் நிறைந்திருக்கும். மேலும் அந்த ஆத்துமா அவரைப்பற்றிய தியானத்தினால் தன் சித்தத்தை மறைந்துடும். கிறிஸ்துவிடத்தில் அன்புகூர்வதே கிரியைக்கு ஊற்றம். நெருக்கி ஏவுகிற தேவ அன்பை ருசிக்கிறவர்கள் அவருடைய ஊழியத்துக்கு எவ்வளவு கொஞ்சமாய்க் கொடுக்கலாம் என்று விசாரிக்கிறதில்லை. இழிவான காரியங்களில் தங்கள் எண்ணத்தை நாட்டாமல், தங்கள் மீட்பருடைய சித்தத்துக்குப் பூரணமாய் இணங்கிப்போகவே நோக்கமுடையவர்களாகியாவற்றையும் ஒப்புக்கொடுத்து, தாங்கள் தேடும் பொருளின் மதிப்புக்குத்தக்க பிரியத்தைக் காட்டுகிறர்கள். இவ்வித கம்பீரமான பேரன்பு இல்லாத கிறிஸ்தவ ஊழியம் வெறும் பேச்சும், போலி வெளியாச்சாரமும் பெரும்பாடுமாயிருக்கிறது.

**(6) கிறிஸ்து நம்மை விடுதலையாக்க அடைந்த அவமானம் மற்றும்**

**வேதனையை இந்த வசனம் எப்படி விளக்குகிறது?**

***இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்; உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தமும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடிவரும்; அவர் உன்னை மேன்மைபடுத்தியிருக்கிறார். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். (ஏசா.55:5,7)***

உன்னை முழுவதுமாய் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பது மகா பெரிய பலியென்று நினைக்கிறாயாக்கும்? கிறிஸ்து எனக்குக் கொடுத்திருக்கிறதென்ன? என்னும் கேள்வியை நீயே கேள். தேவனுடைய குமாரன் நம்முடைய மீட்புக்காக தம்முடைய உயிர் அன்பு பாடுகளாகிய எல்வாவற்றையும் தானஞ் செய்திருக்கிறாரே. அப்படியானால் அவ்வளவு பெரிய அன்புக்கு அபாத்திரராகிய நாம் நம்முடைய இருதயத்தை அவருக்குக் கொடாமல் வைத்துக்கொள்ளலாமா? நமது ஜீவிய காலத்தின் ஒவ்வொரு நிமிஷமும் அவருடைய கிருபையின் ஆசிர்வாதங்க்ளையனுபவிக்கிறேம். ஆகையால் நாம் எவ்வளவு பெரிய நிர்ப்பந்தத்திலிருந்தும் அறியாமையிலிருந்தும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமென்பதைப் பூரணமாய் உணராதவர்களாயிருக்கிறேம்.

அவர் காட்டிய அன்பையும் அவர் செலுத்திய பலியையும் அவமதிக்க விரும்பி, நம்முடைய பாவங்கள் பீறின அவரை நோக்கத்தகுமா? மகத்துவம் பொருந்திய கர்த்தாவின் அளவற்ற தாழ்மையை நோக்கும்போது ஜெபத்தினல் அவரோடு மல்லுக்கட்டுவதினாலும் நம்மையே தாழ்த்துவதினாலும் மாத்திரம் ஜீவனுக்குள் பிரவேசிக்கவேண்டியதாகையால் நாம் முறுமுறுக்கலாமா?

**(7) நம் பாவத்திற்கு நாம் வருந்தவேண்டும் என்பதை உணர்த்தும்பொருட்டு நமக்கு பதிலாக கிறிஸ்து ஏற்றுக்கொண்ட பெரிய துக்கம் என்ன?**

***அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.*** *(ஏசா.53:12)*

"தேவன் என்னை அங்கிகரித்திருக்கிறர் என்கிற நிச்சயத்தை அடைவதற்குமுன் நான் ஏன் மனஸ்தாபத்தோடும் நொறுங்குண்ட இருதயத்தோடும் போக வேண்டும்" என்பதாய் அகங்காரிகளில் பலர் எண்ணுகிறார்கள். உனக்குக் கிறஸ்துவைக்காட்டுகிறேன். அவர் பாவமற்றவராயிருந்த்து மாத்திரமல்ல, அதற்கு மேலானவராய் அதாவது, வானலோக பிரபுவுமாயிருந்தார். ஆயினும், அவர் மனிதன் நிமித்தமே பாவியானர். "அவர் அக்கிரமக்காரரில் ஒருவாராக

எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டார்." ஏசா. 53:12.
நாம் நம்மை முழுவதும் அவருக்கு ஒப்புகொடுத்தாலும் நாம் என்னத்தை அவருக்குக்கொடுக்கிறோம்? பாவத்தினல் தீட்டான நமது இருதயத்தைத்தான். அவர் சுத்திகரிக்கிறதற்கும் தமது சொந்த இரத்தத்தினால் கழுவி தமது இப்பற்ற அன்பினால் இரட்சிப்பதற்கும் கொடுக்கிறோம். அப்படியிருந்தும் எல்லாவற்றையும் சமூலமாய் விட்டு விடுவது லேசான காரியமாவென்று மனிதர் எண்ணுகிறார்கள்! இவ்வித வார்த்தைகளைக் கேட்கிறதற்கு என் காது கூசுகிறது, அவைகளை எழுதவும் அஞ்சுகிறேன்.

**(8) எதை செய்தாலும் நம் நோக்கம் எப்படி இருக்கவேண்டும், அதை செய்யும்போது எந்த வசனத்தை கேட்கவேண்டும்?**

***முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத்.6:33)***

நமக்கு மிகவும் நன்மையாகவுருக்கிற எந்தக்காரியத்தையும் விட்டுவிடவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்லவே. அவர் செய்கிற எல்லாக்காரியத்தையும் கவனிக்கும்போது, தமது பிள்ளைகளின் நல்வாழ்வையே கோருகிறார்.
கிறிஸ்துவைத் தெரிந்து கொள்ளாதவர்கள் யாவரும் தாங்களே அடைந்து கொள்ளும்படி தேடுகிற காரியத்தைப்பார்க்கிலும் அதிக மேலான ஆசீர்வாதத்தை யருளுவதற்காக அவைகளை வைத்திருக்கிறர் என்பதை

அறியமாட்டார்களா? மனிதன் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாக நினைக்கிறபோதும் நடக்கிறபோதும் தன் சொந்த ஆத்துமாவுக்கே பெருந்தீங்கையும் அநியாயத்தையும் வருவித்துக்கொள்ளுகிறான். தமது சிருஷ்டிகளுக்கு நன்மையானவைகள் எவைகளென்று அறிகிறவராலும், அவைகளுக்கு நலமான காரியங்களை ஒழுங்கு செய்கிறவராலும் விலக்கப்பட்ட பாதையில் நடப்போர் யாதொரு சந்தோஷத்தையும் கண்டறியார். மீறிநடக்கிற பாதை நிர்ப்பந்தமும் அழிவும் மிகுத்தது என்பதற்கு யாதொரு சந்தேகமுமுண்டோ?

**(9) நாம் தேவ ராஜ்ஜியத்தை தேடும்போது அவருடைய பிள்ளைகளாக எந்த வாக்குத்தத்தத்தை கேட்கமுடியும்?**

***கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். (சங்.37:4)***

தேவன் தமது பிள்ளைகள் படுகிற பாடுகளைப் பார்த்துச் சந்தோஷங்கொள்ளுகிறார் என்கிற எண்ணம் அபத்தமானது. மனிதன் சுகத்தையும் வாழ்வையும் அநுபவிக்கும்போது, வானலோக முழுவதும் பூரித்து மகிழ்கிறது. நம்முடைய பரமபிதா தமது சிருஷ்டிகளிலெதற்கும் அது சந்தோஷமடையும் மார்க்கத்தை அடைக்கிறதில்லை. மோட்சவாசலையும் சந்தோஷக் கதவையும் அடைத்து, நம்மைப் பாடுகளுக்கும் தொல்லைகளுக்கும் உட்படுத்துவதற்குக் காரணமாயிருக்கிற

அஜாக்கிரதையானவைகளை நாம் அகற்றிவிட வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். லோக இரட்சகர் மனிதரை அவர்கள் இருக்கிற பிரகாரமாகவே குறை, அறிவீனம், பலவீனம் முதலிய குற்றங்களோடு ஏற்றுக்கொள்ளுகிறர். அவர்களுடைய பாவத்தைச் சுத்தி கரிப்பதுமல்லாமல், தமது திரு உதிரத்தினலே இரட்சிப்பைக் கட்டளையிட்டு, தம்முடைய சுமையைச் சுமக்கவும் தமது நுகத்தை அணிந்துகொள்ளவும் சம்மதிக்கிற யாவருடைய ஆத்ம வாஞ்சையையும் திருப்தியாக்குவார். ஜீவ அப்பத்துக்காக அவரண்டை வருகிற யாருக்கும் சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் அளிக்கவேண்டுமென்பதே அவருடைய நோக்கம். கீழ்ப்படியாமை அடையக்கூடாதிருக்கிற பாக்கியத்தின் உன்னதத்திற்கு நம்மை நட்த்தும்படியான கடமைகளை மாத்திரம் நாம் நிறைவேற்ற வேண்டுமென்பது அவருடைய ஏற்பாடு. ஆத்துமாவின் சந்தோஷமுள்ள சரியான ஜீவியமாவது, மகிமைக்கு நம்பிக்கையாயிருக்கிற கிறிஸ்துவை உள்ளத்தில் நாட்டிக் கொள்வதேயாம். {SC 79.2}

**(10) நான் என்னை தேவனுக்கு முழுமையாக சமர்ப்பிப்பது எப்படி?**

***கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என்***

*வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். (யோசு.24:15)*

நான் என்னை தேவனுக்கு ஒப்பக்கொடுப்பது எப்படி? என்று பலர் கேட்பதுண்டு. நீ அவருக்கு உன்னை கையளிக்க விரும்புகிறாயாக்கும். ஆனால் உன் சன்மார்க்க பலங்குன்றி, சந்தேகத்துக்கு அடிமையாகி பாவ ஜீவியஞ் செய்யும் வழக்கத்துக்கு ஆளாய்விட்டாய். உன் வாக்குகளும் தீர்மானங்களும் மணலினால் திரிக்கப்பட்ட கயிறுக்கொப்பானவைகள். உன் நினைவுகளையும், உன் ஊக்கத்தையும், உன் பாசத்தையும் ஆளமுடியாமலிருக்கிறய். நீ மீறின வார்த்தையைப்பற்றிய அறிவும், நீ இழந்து போன பிரதிக்கினையுந்தான் நீ யதார்த்தமாய் நடக்கிறபோது உன். நம்பிக்கையைப் பலவீனப்படுத்திற்று. மேலும், தேவன் உன்னை அங்கிகரிக்கமாட்டார் என்னும் எண்ணத்தையும் உண்டாக்கிற்று. ஆயினும் நீ இளக்கரித்துப் போகவேண்டியதில்லை. மனுஷ சித்தத்துக்கு இருக்கிற மெய்யான சத்துவம் எதுவென்றறிந்து கொள்வதே போதுமானது. தீர்மானிக்கும் அல்லது தெரிந்துகொள்ளும் சக்தியை மனுஷீக சுபாவத்துக்குரிய ஆளுந்திறமையாயிருக்கிறது. ஒவ்வொரு காரியமும் சித்தம் சரியாய் நடந்தேறுவதில்தான் இருக்கிறது. தெரிந்துகொள்ளும் சக்தியை தேவன் மனிதருக்கு அநுக்கிரகித்திருக்கிறார். அதை ஏற்றபடி பிரயோகிப்பதே அவர்களுடைய கடமை. நீ உன் இருதயத்தை மாற்றவும், நீயே அவருக்கு உன் பாசத்தை காட்டவு முடியாது. ஆனல் நீ அவரைச் சேவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளலாம். உன் சித்தத்தையும் அவருக்குக் கொடுக்கலாம்.

அப்போது அவர் தமது பிரியத்தின்படி செய்யவும் நினைக்கவும் உன்னில்தான் கிரியையை நடப்பிப்பார். இவ்விதமாக உன் முழு சுபாவமும் கிறிஸ்துவானவருடைய ஆளுகைக்குள்ளாகும். உன் நேசம் அவரைப் பற்றியிருக்கும். உன் நினைவுகளும் அவரையடுத்ததாயிருக்கும்.

**(11) நமது சித்தம் முழுவதையும் நமது வாழ்வையும் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதன் விளைவு என்ன?**

***நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசா.41:10)***

சித்தத்தைச் சரியாய் அப்பியாசப் படுத்துவதினால்தான் உன் ஜீவியத்தில் முழு மாறுதல் உண்டாகும். உன் சித்தத்தை கிறிஸ்துவுக்குக் கொடுப்பதினால் எல்லாவற்றிற்கும் மேலான கர்த்தத்துவத்திற்கும் வல்லமைக்கும் மேலாயிருக்கிறா வல்லவரோடு இணங்கி ஐக்கியப்பட்டுப்போகிறய். உறுதியாய் நிற்கிறதற்கு உனக்கு மேலேயிருந்து பலம் வரும். இப்படி நீ அடிக்கடி தேவனுக்கு அடங்கிப் போவதினால் புதிய ஜீவியத்தையும் விசுவாச ஜீவியத்தையும்கூட நட்த்தக்கூடியவனவாய்.

***தேவனுடைய அரசாட்சி சாத்தான் காட்டுவது போல அல்ல, முழுமையான அர்ப்பணிப்பு அல்லது கேள்விகேட்காத நிலையில் உள்ளது என்பதை நான் உணர்ந்துகொண்டேன்.***

வட்டமிடுக: ஆம்

முடிவெடுக்கவில்லை
என் சிருஷ்டிகர் தன் முழு வாழ்வு, அன்பு மற்றும் உபத்திரவங்களை என் மீட்பிற்காக கொடுத்தார், என் வாழ்வில் இந்த பாவத்தை மேற்கொண்டு கீழ்ப்படிய வைத்தார் என்று நினைத்து ஆச்சர்யப்படுகிறேன்.

வட்டமிடுக: ஆம்

முடிவெடுக்கவில்லை
என் சித்தம் சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்போது, என் நினைவுகள், உணர்வுகள், விருப்பங்களை நான் கட்டுப்படுத்த முடியாது; மற்றும் என் வாக்குகள் முடிவுகள் மண் கயிறு போல இருக்கும்.


வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

தேவன் தன் சிருஷ்டிகளை பலவந்தப்படுத்தவில்லை என்பதால் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். நம் சித்தத்தை நாம் அவருக்கு கொடுக்க நம்மை அழைத்து சிந்தை, சரீரம் மற்றும் குணங்களில் நாம் அதிகபட்ச உச்சத்தை அடைய செய்வதால் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

இப்போது எனக்கு தேவ சித்தம் செய்வதில் தெளிவான புரிதல் உள்ளது, தெரிந்தெடுத்தலின் ஆற்றல் என்னுடையது என்பதை உணர்கிறேன், என் ஆவியை கிறிஸ்துவின் ஆவியானவர் நடத்துவதை தெரிந்தெடுக்கிறேன்.

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*



## பாடம் 7
## விசுவாசமும் அங்கிகாரமும்

**(1) சமாதானம் மற்றும் தேவனோடுள்ள நல்லிணக்கம் வளருவது நம் விருப்பமாயிருந்தால், நம் பாவத்திற்கு தீங்கிற்கு தேவசெயல் என்னவாக இருக்கும்?**

***அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங்களினிமித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள். (எசே.36:31)***

உன்னுடைய உள்ளிந்திரியமானது பரிசுத்த ஆவியால் உயிரடைந்திருக்கையில் பாவத்தின் ஆபாசம், அதின் வல்லமை, கேடு, சாபம் முதலியவை எப்படிப்பட்டதென்பதைப்பற்றி நீ பார்த்திருக்கிறாய். பார்த்து அதின்மேல் வெறுப்புக்கொண்டிருக்கிறாய். பாவமானது உன்னைத் தேவனிடத்திலிருந்து பிரித்திவிட்டதென்றும், கேட்டின் வல்லமைக்கு நீ அடிமையானயென்றும் உணறுகிறாய். எவ்வளவாகத் தப்பித்துக்கொள்ளப் பிரயாசப்படுகிறயோ அவ்வளவாக நீ சக்தியற்றவன் என்பதை உன் அனுபவத்தில் காண்கிறாய். உன்னுடைய நோக்கங்கள் பரிசுத்தமில்லாத்தும் உன்னுடைய இருதயம் அழுக்கடைந்ததுமாக இருக்கிறது. உன் ஜீவியமானது தன்னயத்தினாலும் பாவத்தினாலும் நிறைந்திருக்கிறதாகக் காண்கிறாய். பாவமன்னிப்படைய வேண்டும்,

பரிசுத்தமாகவேண்டும், சுயாதீனமாக வேண்டுமென்றும் விரும்புகிறாய். தேவனோடு ஐக்கியமாவது அவரைப்போலிருப்பதுமாகிய இவற்றை நீ அடையும்படி என்ன செய்யக்கூடும்?

**(2) யாரிடத்தில் தேவன் மன்னிப்பு மற்றும் சமாதானத்தின் ஜீவத்தண்ணீரை கொடுத்தார்?**

***ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.*** *(ஏசா.55:1)*

உனக்குத் தேவையானது சமாதானந்தான்: அதாவது ஆத்துமாவில் தேவன் அளிக்கும் மன்னிப்பு, சமாதானம், அன்பு ஆகிய இவை உனக்கு அவசியமானது. பணத்தால் அதை வாங்கமுடியாது, புத்தியினால் அதைச் சம்பாதிக்க மாளாது, ஞானத்தால் அதை அடையவும் ஏலாது; உன்னுடைய சுயமுயற்சியால் அதைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்று நீ நம்புவதும் விருதா ஏசா 55:1-ல் கண்டிருக்கிறபடி "பணமுமின்றி விலையுமின்றி" ஒரு ஈவாகத் தேவன் அதை உனக்குக் கொடுக்கிறார். கரத்தைநீட்டி அதைப்பற்றிக்கொண்டால் அது உன்னுடையதாகும். "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" ஏசா. 1:18 என்றும், "உங்களுக்கு நவமான இருதயத்தைக்கொடுத்து; உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக்

கட்டளையிடுவேன்" எசேக. 36:26 என்றும் கர்த்தர் திருவுளம் பற்றுகிறார்.

**(3) நம் சமாதான தேடலுக்கு தேவன் கொடுத்துள்ள அருமையான வாக்குத்தத்தம் என்ன?**

***உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். (எசே.36:26)***

நீ உன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டாயிற்று. ஆகையால் அவற்றை உன் இருதயத்திலிருந்து நீக்கிவிடுவாயாக. உன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறாயே. இப்பொழுதே அவரண்டைபோய் உன் பாவங்களைக் கழுவி, உனக்கு நவமான இருதயத்தைக் கொடுக்கும்படி அவரைக் கேள். இப்படி நீ அவரைக் கேட்கும் பொழுது, அவர் முன்னமே வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடியால், அதை நிறைவேற்றுகிறர் என்று நம்பு. இயேசுவானவர் பூலோகத்தில் இருந்த காலத்தில் கற்பித்த பாடம் என்னவெனில், தேவன் நமக்கு வாக்களித்திருக்கிற ஈவை நாம் பெற்றுக்கொள்ளுகிறேம் என்றும், அந்த ஈவு நம்முடைய தாகிவிட்டதென்றும் நாம் நம்பவேண்டும் என்பதேயாம்.

**(4) ஏன் கிறிஸ்துவின் அற்புத அடையாளங்கள் வேதாகமத்தில் பதிவிடப்பட்டுள்ளது?**

***இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள்***

*விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோ.20:31)*

நீ உன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டாயிற்று. ஆகையால் அவற்றை உன் இருதயத்திலிருந்து நீக்கிவிடுவாயாக. உன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறாயே. இப்பொழுதே அவரண்டைபோய் உன் பாவங்களைக் கழுவி, உனக்கு நவமான இருதயத்தைக் கொடுக்கும்படி அவரைக் கேள். இப்படி நீ அவரைக் கேட்கும் பொழுது, அவர் முன்னமே வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடியால், அதை நிறைவேற்றுகிறர் என்று நம்பு. இயேசுவானவர் பூலோகத்தில் இருந்த காலத்தில் கற்பித்த பாடம் என்னவெனில், தேவன் நமக்கு வாக்களித்திருக்கிற ஈவை நாம் பெற்றுக்கொள்ளுகிறேம் என்றும், அந்த ஈவு நம்முடைய தாகிவிட்டதென்றும் நாம் நம்பவேண்டும் என்பதேயாம். வியாதிகளைச் சௌக்கியப்படுத்தக்கூடிய வல்லமை இயேசுவினிடத்தில் இருந்தது என்பதாக ஜனங்கள் விசுவாசித்தபொழுது மாத்திரம் அவர் அவர்களது பிணிகளை சொஸ்தப்படுத்தினார். நாளடைவிலே அவர்கள் காணக்கூடிய விஷயங்களில் அவர்களுக்கு அவர் சகாயஞ்செய்து, அவர்கள் காணக்கூடாத விஷயங்களைப்பற்றித் தம் மேல் பூரணநிச்சயம் கொள்ளத்தக்கதாக உற்சாகப்படுத்தினார். அதாவது பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்று அவர்கள் விசுவாசிக்கத்தக்கதாக வழி காட்டினார்.

(5) **பாவத்திற்கு மன்னிப்பை பெறுவதில் நம் பங்கு என்ன?**

***ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுகொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். (மாற்.11:24)***

திமிர்வாதக்காரன் ஒருவனை அவர் குணமாக்கினபொழுது, "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்றார்" மத். 9:6-ம் வசனத்தில், தான் பாவத்தை மன்னிக்கக் கூடும் என்பதாக வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். யோவான் சுவிசேஷகன் கிறிஸ்துவினுடைய அற்புதங்களைப்பற்றிப் பேசும் பொழுது "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து அன்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" யோவா. 20:31 என்று சொல்லுகிறார்.

இயேசுவானவர் பிணியாளிகளைச் சுகப்படுத்தின விதத்தை நாம் வேதத்திலே சுலபமான நடையில் படிக்கும் பொழுதெல்லாம், பாவ மன்னிப்படைவதற்காக் அவரை நாம் நம்பி விசுவாசிப்பது அவ்விதம் என்று கற்றுக்கொள்ளலாம். பெதஸ்தாவில் குணமான வியாதியஸ்தன் சரித்திரத்தைக் கவனிப்போம். அந்த ஏழைநோயாளி

உதவியற்றவனாயிருந்தான். முப்பத்தெட்டு வருஷங்களாகத் தன் கால்களை உபயோகிக்க இயலாதவனாயிருந்தான். ஆயினும் இயேசு அவனை நோக்கி, "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" யோவா. 5:8 என்று கட்டளை கொடுத்தபொழுது, அவன், ஆண்டவரே, என்னைக் குணமாக்க உம்மால் ஆகுமானால் உம்முடைய வார்த்தைக்குக் கீழ்படிவேன் என்று சொல்லியிருக்கலாமே. ஆனலோ, கிறிஸ்துவின் வார்த்தையை நம்பி, தான் சொஸ்தமாகிவிட்டதாக அவன் விசுவாசித்து, உடனே நடக்கும்படி எத்தனித்தான். நடக்கச்சித்தங்கொண்டதும், உடனே நடந்தான். கிறிஸ்து வின் வார்த்தையை நம்பி முயற்சித்ததினால், தேவன் பலம் அளித்தார்; அவன் சொஸ்தமானான்.

**(6) ஏன் நம் சொந்த முயற்சியில் நமது இருதயத்திற்கு நம்மால் பரிசுத்தத்தை கொண்டுவரமுடியவில்லை?**

***எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (எரே.17:9)***

அவ்வாறே நீ ஒருபாவி. முன்னேசெய்த பாவங்களுக்காகப் பிராயச்சித்தம்பண்ண உன்னால் முடியாது. உனது இருதயத்தைமாற்றி, உன்னை நீயே பரிசுத்தப படுத்திக்கொள்ளவும் உன்னாலாகாது. கிறிஸ்துவின் மூலமாய் உனக்கு எல்லாவற்றையும் செய்வதாக தேவன் வாக்களிக்கிறார். நீ அந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிறாய். உன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு, உன்னைத் தேவனுக்கு ஒப்புவித்து விடுகிறய். அவருக்கு

ஊழியஞ்செய்யவும் சித்தங்கொள்ளுகிறாய் இவற்றை யெல்லாம் எவ்வளவு நிச்சயமாக நீ செய்கிறாயோ அவ்வளவு நிச்சயமாகத் தேவன் உனக்களித்திருக்கிற வாக்கை நிறைவேற்றுவார். நீ பாவமன்னிப்படைந்து, கழுவப்பட்டிருக்கிறாயென்ற வாக்கை நீ நம்புவாயானல், இதர காரியங்கள் தேவனைப் பொறுத்ததாகும். தான் குணமானதாக அந்த வியாதியஸ்தன் நம்பினபொழுது நடந்து போகும்படி கிறிஸ்துவானவர் அவனுக்கு அவ்வாறே அவர் உன்னையும் குணமாக்குவார். நீ விசுவாசித்தால் அப்படியே ஆகும்.

சுகம் உனக்குக் கிடைத்திருக்கிறதென்று உணரும் வரைக்கும் காத்திராதே. நம்புகிறேன், சொஸ்தமானதாக நான் அறிகிறதினாலல்ல, தேவன் வாக்களித்திருப்பதால் எனக்குச் சுகம் கிடைத்திருக்கிறது என்று சொல்.

**(7) நாம் விசுவாசத்தில் தேவனிடமிருந்து மன்னிப்பை தேடினால், அதை பெற்றுக்கொண்டதில் ஏன் நம்பிக்கை இருக்கக்கூடாது?**

***ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்.7:11)***

"நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று

விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" மாற்கு 11:24 என்று இயேசு சொல்லுகிறார். இந்த வாக்குத் தத்தத்திற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. அது என்ன வென்றால், தேவனுடைய சித்தத்திற்கேற்ப நாம் ஜெபிக்கவேண்டுமென்பதே. நம்மை பாவத்தினின்று சுத்திகரித்து, நம்மை அவருடைய பிள்ளைகளாக்கி, நாம் பரிசுத்த ஜீவியம் செய்யும்படி நமக்கு வல்லமை கொடுப்பதற்காகத் தேவன் விருப்பம்முள்ளவராயிருக்கிறார். ஆகையால் இந்த ஆசீர்வாதங்களுக்காக அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதுடன், அதே ஆசீர்வாதங்களை நாம் அடைகிறோம் என்று
நம்பி, அவற்றை அடைந்தாயிற்று என்று தேவனுக்கு நன்றி செலுத்தலாம். நாம் இயேசுவண்டை சென்று சுத்தமாவதும், நியாயப்பிரமாணத்தோடு நம்முடைய ஜீவியத்தை ஒத்துப் பார்க்கும்பொழுது, வெட்கம் துக்கமில்லாமல் நிற்கத்திராணியுள்ளவர்களாவதும் நமது சிலாக்கியம். "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பிள்ளை." ரோமர் 8:1.

**(8) தேவனோடு உள்ள உறவில் எப்படி நிலைத்திருப்பது?**

***ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, (கொலோ.2:6)***

இதுமுதல் நீ உனக்குச் சொந்தமானவனல்ல: கிரயத்துக்கு வாங்கப்பட்டிருக்கிறாய். "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்" என்று 1 பேதுரு 1:18, 19-ல் கண்டிருக்கிறது. நீ தேவனை ஒரேயடியாக நம்பும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் உன் இருதயத்தில் புது ஜீவியத்தைப் பிறப்பிக்கிறார். இப்பொழுது நீ தேவனுடைய குடும்பத்தில் பிறந்த பிள்ளையாயிருக்கிறதினால், அவர் தமது குமாரனை நேசிக்கிறதுபோல உன்னையும் நேசிக்கிறார்.

உன்னை இயேசுவுக்கு ஒப்புவித்திருக்கிறபடியால் பின் வாங்காதே. உன்னை அவரிடத்திலிருந்து பிரித்துவிடாதே. நான் கிறிஸ்துவுக்குரியவன், அவருக்கே என்னை ஒப்புக் கொடுத்துருக்கிறேன் என்று ஒவ்வொருநாளும் சொல்லு. அவர் தமது ஆவியை உனக்குத்தந்து, தமது கிருபையால் உன்னைக் காத்துக்கொள்ளும்படியாக அவரைக்கேள். தேவனுக்கே உன்னை ஒப்புவித்து அவரை விசுவாசிப்பதினால் நீ அவருடைய பிள்ளையாகிறதுபோலவே, அவரிலே ஜீவிக்கவும் வேண்டும். "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் ...... நடந்துகொள்ளுங்கள்" கொலோ. 2:6 என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

**(9) தன்னிடத்தில் வருகிறவர்களுக்கு கிறிஸ்து அருளும் ஈவு என்ன?**

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்.11:28)*

சிலர் தாங்கள் முதலாவது பரிட்சை வகுப்பில் இருக்கவேண்டுமென்றும், அவருடைய ஆசிர்வாதங்களைத் தங்களுடையதாக உரிமை பாராட்டுமுன்னே தாங்கள் சீரடைந்திருக்கிறதாகக் கர்த்தருக்குக் காட்டவேண்டுமென்றும், நினைக்கிறார்கள். ஆனால் இப்பொழுதும் அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைத் தங்களுடையதென்று சொல்லலாம். அவர்களுடைய பலவீனங்களில் சகாயஞ்செய்வதற்காகக் கிறிஸ்துவின் கிருபையும் ஆவியும் அவசியம், இல்லாவிட்டால் அவர்கள் பாவத்தை எதிர்க்கமுடியாது. நாம் இருக்கிறபடியே, அதாவது பாவமுள்ளவர்களாகவும், இயேசுவின்பேரில் சார்ந்தவர்களாகவும் தம்மிடத்தில் வரவேண் டுமென்று அவர் விரும்புகிறார். நாம் நம்முடைய பலவீனம், பேதமை, பாவமாகிய இவையெல்லாவற்றோடும்போய், அவருடைய பாதத்தில் பச்சாதாபத்துடனே விழலாம். அவர் தமது அன்பின் கரங்களால் நம்மை அணைத்து, நமது காயங்களைக் கட்டி, எல்லா அசுத்தத்தினின்றும் நம்மைச் சுத்திகரிப்பது அவருக்கு மகிமையான காரியமாம்.

(10) **மனந்திரும்பின ஒவ்வொரு பாவிக்கும் கர்த்தர் கொடுத்துள்ள உத்தரவாதம் என்ன?**

*உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன். (ஏசா.44:22)*

இதிலே ஆயிரக்கணக்கானவர்கள் தவறிப்போகிறார்கள். இயேசுவானவர் அவர்களைப் பேர்பேராகவும் தனித்தனியாகவும் மன்னிக்கிறார் என்று அவர்கள் நம்புகிறதில்லை; தேவனுடைய வாக்குத் தத்தத்தின் பூரணத்தை கிரகிக்கிறதுமில்லை. ஆண்டவருடைய கற்பனைகளுக்குக் கீழ்படிகிறவர்கள் யார் யாரோ அவர்களெல்லாம் தங்களுடைய ஒவ்வொரு பாவத்துக்கும் தாராளமான மன்னிப்புண்டென்று வெகு எளிதாக அறிந்து கொள்ளக்கூடிய சிலாக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்கள் உனக்குரியதல்ல என்ற அவநம்பிக்கையை அகற்று. அவை மனந்திரும்புகிற ஒவ்வொரு பாவிக்கும் சொந்தம். கிறிஸ்துவானவர் நமக்காகப் பலனையும் கிருபையையும் சேகரித்து வைத்திருக்கிறார் ஊழியஞ் செய்கிற தேவதூதர்கள் விசுவாசிக்கிற ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் இவற்றைக்கொண்டுவந்து கொடுக்கிறார்கள். தங்களுக்காக மரித்த இயேசுவிடத்தில் பலம், பரிசுத்தம், நீதி ஆகிய இவற்றைக் கண்டு கொள்ளக்கூடாத அளவு பாவமுள்ளவர்கள் இவ்வுலகில் ஒருவரும் இல்லை. பாவக்கறையும் தீட்டுமுள்ள அங்கிகளை அவர்களினின்று கழற்றி, நீதியென்னும் வெண்வஸ்திரத்தை அவர்களுக்கு உடுத்தும்படி அவர் காத்துக்கொண்டிருக்கிறார். அவர்கள்

மரிக்கும்படியல்ல, பிழைக்கும்படிக்கே கற்பிக்கிறார்.

**(11) நாம் தேவன் கொடுக்கும் மனந்திரும்புதலை பின்பற்றும்போது நம் பாவ பிரச்னையை எப்படி கையாள்கிறார்?**

***அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். (சங்.103:10-12)***

அநித்தியமான மனுஷர் ஒருவரோடொருவர் நடந்து கொள்ளுகிறது போல தேவன் நம்மோடு நடந்து கொள்ளுகிறதில்லை. அவருடைய எண்ணங்களெல்லாம் இரக்கமும் அன்பும் மிகுந்த உருக்கமும் பொருந்தியவைகள். "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்." எ.சா. 55 : 7 என்றும் "உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன்பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன்." எ.சா. 44 : 22 என்றும் தேவன் சொல்லுகிறார்.

"மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை

நான் விரும்புகிறதில்லையென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

எசேக். 18:32 சாத்தானானவன் நம்முடைய மனதைத்திருப்பி, தேவனுடைய சிறந்த வாக்குகளை நாம் மறந்துபோகும்படியாக என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்யச் சித்தமாயிருந்து, ஆத்துமாவிலிருந்து, நம்பிக்கையையும் ஒளியையும் எடுத்தெறிய விரும்புகிறான். ஆதலால் அவனை அவ்வாறு செய்யவிடாதே. சோதனைக்காரனுக்குச் செவிகொடாமல், பின்வருமாறு சொல்லு :- நான் பிழைக்கும்படி இயேசு மரித்தார். அவர் என்னை நேசித்து, நான் அழிந்துபோகாதபடி பார்க்கிறார்.

(12) **தன்னிடத்தில் வரும் தன் பிள்ளைகளை பரலோக பிதா எப்படி நடத்துகிறார்?**

***எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். (லூக்.15:20)***

உருக்கம் நிறைந்த பரமபிதா எனக்குண்டு; அவருடைய அன்பை நான் பழித்தபோதிலும், அவர் எனக்கு அளித்திருக்கிற நன்மைகளை வீணாக்கினபோதிலும், "நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப்போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்."

“அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக்கொண்டு மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.” லூக்கா 15:18-20. இந்த உவமையில் கெட்டுப்போன ஒருவன் எவ்விதமாகத் திரும்ப ஏற்றுக்கொள்ளப்படுவான் என்று சொல்லியிருக்கிறதல்லவா?

இந்த உவமைதானும் மனதை இளகச்செய்யக்கூடியதாகத் தோன்றினபோதிலும், பரம பிதாவின் மட்டற்ற உருக்கத்தை விவரித்துச்சொல்ல இயலாமற்போயிற்று. “அநாதி சினேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்” எரே. 31:3 என்று கர்த்தர் தமது தீர்க்கதரிசியின் மூலமாமய் உரைக்கிறார்.

(13) **தேவனை தேடும் அனைவருக்கும் உள்ள வாக்குத்தத்தம் என்ன?**

***பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. (யோ.6:37)***

பாவியானவன் பிதாவின் வீட்டைவிட்டுத் தூரமான அன்னிய நாட்டிலே தனது பொருளையெல்லாம் வீணே செலவ்அழித்துக் கொண்டிருக்கும்பொழுது, பிதா வுடைய இருதயம் அவனை வாஞ்சிக்கிறது. தேவனுடைய ஆவி அவனை உருக்கமாக ஏவ ஏவ, அவனுடைய ஆத்துமாவிலே அவரண்டை சேரவெண்டுமென்ற ஆசை எழும்புகிறது. இந்த ஆவியானவர் அவன் அன்பு நிறைந்த

தன் தந்தையிடம் திரும்பும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

வேதத்தில் வரையப்பட்டிருக்கிற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் உனக்கு முன்னே இருக்கும்பொழுது நீ சந்தேகத்துக்கு இடங்கொடுக்கலாமா? ஏழைப் பாவியானவன் தன் பாவங்களைக் களைந்து, பிதாவண்டை திரும்பும்படி விரும்பும்பொழுதும், மனந்திரும்பினவனாகத் தமது பாதத்தருகே வரும்பொழுதும், கர்த்தர் இரக்கமில்லாமல் அவனைத் தடுக்கிறார் என்று நீ நம்பலாமா? அப்படிப்பட்ட எண்ணங்களை அகற்றிவிடு! நமது பரம பிதாவைப்பற்றி இப்படிப்பட்ட எண்ணங்கொள்ளுவதைப் பார்க்கிலும் உன் ஆத்துமாவுக்குக் கேடு விளைவிப்பது வேறொன்றுமில்லை. அவர் பாவத்தை வெறுத்துப் பாவியை நேசிக்கிறார். யார் யார் விரும்புகிறார்களோ அவர்களெல்லோரும் இரட்சிப்படைந்து மகிமையான இராச்சியத்தில் நித் தியபாக்கியத்தை அடையும் பொருட்டு, அவர் கிறிஸ்துவிலே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். தேவன் நமதுபேரில் வைத்த அன்பைத் தெரிவிக்கும்படி அவர் தெரிந்தெடுத்திருக்கிற வார்த்தைகளைக் கவனித்துப்பார். இதைவிடச் சாரமுள்ளதும் உருக்கமானதுமான பாஷைநடை வேறெதற்காவது உபயோகப்பட்டிருக்கிறதா? "ஸ்திரீயானவள் தன்கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை." ஏ சா 49:15.

சந்தேகப்பட்டு நடுங்குகிறவனே, நோக்கிப்பார். இயேசு நமக்காகத் தந்தருளினதற்காக அவருக்கு நன்றி செலுத்து. அவர் உனக்காக மரித்தது விருதாவாகப்போகாதபடி மன்றாடு.

அவையானவர் இன்று உன்னை அழைக்கிறார். முழு இருதயத்தோடு இயேசுவண்டை வா, அவருடைய ஆசிர்வாதங்களெல்லாம் உனக்குச் சொந்தமானவைகளென்று நீ உரிமை பாராட்டலாம்.

அந்த வாக்குத்தத்தங்களை வாசிக்கும்பொழுது அவையெல்லாம் வரையறுத்துச் சொல்ல முடியாத அன்பையும் இரக்கத்தையும் காட்டுகிறதென்பதை நினைத்துக்கொள். ஆதியந்தமில்லாத அன்பின் சொருபமாகிய தேவன் மட்டற்ற இரக்கத்தையும் காட்டுகிறதென்பதை நினைத்துக்கொள். ஆதியந்தமில்லாத அன்பின் சொருபமாகிய தேவன் மட்டற்ற இரக்கத்தோடே பாவியின் பக்கமாக நெருங்குகிறார். "இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண் டாயிருக்கிறது." எபேசி 1:7. ஆம், மெய்யாகவே தேவன் உன்னுடைய சகாயர் என்று நம்பு. தேவன் தமது பரிசுத்த சாயலை மனுஷரில் புதுப்பிக்க விரும்புகிறார். பாவ அறிக்கையோடும் மனந்திரும்புதலோடும் நீ அவரண்டை போவாயானால், அவர் இரக்கத்தோடும் பாவமன்னிப்போடும் உன்னண்டை வருவார்.

**(14) தேவபிள்ளைகள் அனைவரும் கேட்க முடிகிற ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் என்ன?**

***ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. (ஏசா.49:15)***

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. (எபி.13:5)

நான் வேத வசனத்தை படித்தபோது, அவருடைய ஆவியானவர் என் இருதயத்தின் கதவை தட்டுவதை உணர்கிறேன். (வெளி.3:20)

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

பாவியாகிய எனக்கு ரட்சகர் தேவை என்பதை உணர்கிறேன். (ரோ.3:23)

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

அழிவிலிருந்து  என்னை மீட்க தேவன் மிகுந்த அன்பினால் தன் குமாரனை அனுப்பியதை நினைத்து ஆச்சர்யப்படுகிறேன். (யோ.3:16,17) மற்றும் ரட்சிப்பிற்கு அவர் ஒருவரே வழி என்பதை நான் அறிவேன் (யோ.10:9)

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

நான் உண்மையான இருதயத்துடன், பாவங்களை அறிக்கையிட்டால், இயேசுவின் விலையேறப்பெற்ற ரத்தம் என் சகல பாவங்களையும் நீக்கும் என்பதை புரிந்து கொண்டேன் (1யோ.1:9)

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

நீங்கள் மேலே உள்ள கேள்விகளுக்கு "ஆம்" என்று பதிலிட்டால், உங்கள் வாழ்வின் அதிமுக்கியமான முடிவை நீங்கள் எடுக்க உங்களை அழைக்கிறேன்.

*விசுவாசத்தின் மூலம் நீங்கள் இயேசுவை உங்கள் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருடைய சிறந்த சமாதானம், வல்லமை, நிலையான அவருடைய அன்பை உங்கள் வாழ்வில் அனுபவிக்க முடியும். எளிதாக உண்மையான இதயத்துடன் கீழே உள்ள ஜெபத்தை திரும்ப கூறுங்கள். (யோ.1:12)*

*"பரலோகத்தில் உள்ள அன்பின் பிதாவே, நான் பாவி என்பதையும் உம் குமாரனை எனக்காக மரிக்க அனுப்பினதையும் நம்புகிறேன். விசுவாசத்தில் இயேசுவை ரட்சகராக கேட்கிறேன் மற்றும் என் அநேக பாவங்களை இயேசுவின் ரத்தம் கழுவவேண்டும் என்பதையும் கேட்கிறேன் (முடிந்தவரை குறிப்பாக கூறுங்கள்). நான் என் பாவ வழியிலிந்து மனந்திரும்ப விரும்புகிறேன் மற்றும் என் வாழ்வின் தேவனாக நீர் இருக்க விரும்புகிறேன், இயேசுவின் நாமத்தில் ஆமென் ஆமென்.*

*நீங்கள் வித்தியாசமாக உணரலாம் அல்லது உணராமல் இருக்கலாம், ஆனால் உங்கள் விசுவாசத்தினால் நீங்கள் தேவனின் மீட்கப்பட்ட பிள்ளை மற்றும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி (அப். :31)! இப்போது செடியின் கொடியாக ஒவ்வொரு நிகழ்விலும் கீழ்ப்படிந்திருங்கள் (யோ.15:1-8) மற்றும் ஒரு நாள் அவர் உங்கள் புதிய வீட்டிற்கு பரலோகத்திற்கு உங்களை எடுத்து செல்வார். (யோ.14:1-3)*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________



## பாடம் 8
## சீஷத்துவப் பரிட்சை

**(1) இந்த வசனம் பரிசுத்த ஆவியின் கிரியையை எதனுடன் ஒப்பிடுகிறது?**

***காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். (யோ.3:8)***

ஒரு மனிதன் தான் குணப்பட்ட காலத்தையும் இடத்தையும் திட்டமாக சொல்ல முடியாமலும், அந்த குணப்படுதலோடு சம்பந்தப்பட்ட பல

சம்பவங்களை வரிசைக் கிரமமாகச் சொல்ல இயலாமலும் இருக்கலாம்; இதனால் அவன் குணப்படவில்லையென்று ரூபகாரப்படுத்துவது அசாத்தியம். “காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது: ஆவியானால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்” யோவான் 3:8 என்று இயேசு நிக்கொதேமுவுக்குச் சொன்னார். காற்றானது கண்ணுக்கு மறைவாயிருந்தாலும் அதின் கிரியையினால் அதுண்டென்று எல்லாரும் கண்டறிந்துகொள்ள லாம்; அவ்வாறே மனுஷனுடைய இருதயத்தில் தேவ ஆவியானவர் நடத்தும் கிரியையும் இருக்கிறது. மறு ஜென்மத்தையுண்டாக்கக்கூடிய அந்தச் சக்தியானது மனுஷக் கண்களுக்கு புலப்படாமல் ஆத்துமாவிலே புதிய ஜீவனைப் பிறப்பிக்கிறது; தேவசாயலாக ஒரு புதிய உயிரைச் சிருஷ்டிக்கிறது.  ஆவியானவருடைய கிரியை அரவமற்றதும் காணக்கூடாததுமாயினும், அதன் பலாபலன்கள் வெளியரங்கமானவை. தேவ ஆவி இருதயத்தைப் புதுப்பிக்கும் பொழுது, ஜீவியமானது அதற்குச் சாட்சி பகரும்.

(2) எப்படி வாழ்வு மாறியது மற்றும் இருதயம் புதிதானது?

***இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்;***

*பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2 கொரி.5:17)*

நம்முடைய இருதயங்களை மாற்றிக் கொள்ளவாவது, நம்மைத் தேவனோடு ஒருமைப்பட்டவர்களாக்கிக் கொள்ளவாவது முடியாதவர்களாயிருக்கிறோமென்றும், நம்மால் ஒன்றும் ஆகாதென்றும், நம்முடைய நற்கிரியைகள் நம்மை ஈடேற்றது என்றும் எண்ணி இவற்றின்மேல் நாம் சாராமலிருக்கையில் தேவ கிருபையானது நமக்குள்ளே குடி கொண்டிருக்கிறதோ இல்லையோயென்பதை நமது ஜீவியம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டிவிடும். நம்முடைய குணாதிசயங்களிலும், ஒழுக்க பழக்கங்களிலும், வேலைகளிலும் மாறுதல் தோன்றும். அவைகள் முற்காலத்தில் இருந்ததற்கும் தற்காலத்தில் இருக்கிறதற்குமுள்ள வித்தியாசம் வெகு தெளிவாகக் காணப்படும். நாம் எப்போதாவது செய்கிற நற்கிரியைகளினாலும் வேளாவேளை நடப்பிக்கிற துர்க்கிரியைகளி னாலுமல்ல, எப்பொழுதும் வழக்கமாக நம்முடையவாயினின்று புறப்படும் வார்த்தைகளும் நாம் செய்கிற கிரியைகளும் போகிற போக்கினாலேயே நம்முடைய குணாதிசயம் வெளியாகிறது.

கிறிஸ்துவினால் உண்டாகிற புதுப்பிக்கும் வல்லமை நம்மில் இல்லாதிருக்கும்பொழுதும் வெளி ஆசாரங்களெல்லாம் சரிவர இருக்கலாம் என்பது மெய்தான், ஒருவனுடைய உள்ளத்தில் அதிகாரப் பிரியமும், மற்றவர்கள் தன்னை மரியாதையுடன் கனப்படுத்தவேண்டுமென்ற ஆசையும் எழும்பும்பொழுது, அவன் ஒருவாறு சீரான

ஜீவியம் நடத்தத் தலைப்படுகிறான். மானமும் மரியாதையுமாயிருக்கவேண்டுமென்கிற ஆவல் நம்மிடத்தில் தீமை தலைகாட்டாதபடி செய்துவிடுகிறது. தன்னயம் நிறைந்த ஒருவன் பரோபகாரமான கிரியைகளையும் செய்யலாம். இது இப்படி இருக்க நாம் யார் பக்கத்தைச் சேர்ந்தவர்களென்று எவ்வாறு அறிந்துகொள்ளலாம்.

நம்முடைய இருதயத்தை ஆளுகிறது யார்? நாம் யாரைப்பற்றி அடிக்கடி நினைக்கிறோம்? யாரைப்பற்றி சம்பாஷிக்கப் பிரியப்படுகிறோம்? யாரை முழு இருதயத்தோடும் நேசிக்கிறோம்? யாருக்காக உழைக்க விரும்புகிறோம்? நாம்கிறிஸ்துவுடையவர்களானால் நம்முடைய எண்ணங்களெள்ளாம் அவரோடிருக்கின்றன. நம்முடைய மனோகரமான நினைவுகள் அவரைப்பற்றியே இருக்கின்றன. நம்மையும் நமக்குள்ள யாவற்றையும் அவருக்குப் பிரதிஷ்டை செய்கிறோம். அவருடைய சாயலை அணிந்து, அவருடைய சுபாவத்தைப்பெற்றுக்கொண்டு, அவருடைய சித்தத்தின் பிரகாரம் நடந்து, எல்லாவற்றிலும் அவரைப் பிரியப்படுத்தவேண்டுமென்று விரும்புகிறோம்.

(3) **நாம் திரும்ப பிறந்தவர்களாக நம் வாழ்வில் எந்த குணாதிசயம் சாட்சி பகர்கிறது?**

***ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு***

*விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலா.5:22-23)*

கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டிகளாகிறவர்கள் எவர்களோ அவர்கள் ஆவியின் கனிகளைக்கொடுக்கிறார்கள்; அவையாவன : -"அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்." அவர்கள் தங்களை முன்னான இச்சைகளுக்கு ஒப்புக்கொடாமல், தேவகுமாரனைப்பற்றும் விசுவாசத்தால், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவருடைய குணங்களைத் தங்கள் ஜீவியத்தில் பிரதிபிம்பிக்கச்செய்து, அவர் பரிசுத்தமாயிருக்கிறதுபோலத் தங்களையும் சுத்திகரித்துக் கொள்ளுவார்கள். ஒருகாலத்தில் சென்மப்பகையாய் வெறுத்தவைகளை இப்பொழுது நேசிக்கிறார்கள்; ஒருகாலத்தில் நேசித்தவைகளை இப்பொழுது வெறுக்கிறார்கள். அகந்தைக்காரரும் சுய அதிகாரப் பிரியருமாயிருந்தவர்கள் சாந்தகுணமுள்ளவர்களாகவும் இருதயத்தில் தாழ்மையுள்ளவர்களாகவும் மாறுகிறார்கள். வீணரும் மேட்டிமைக்காரருமாயிருந்தவர்கள் அடக்கமும் பயபக்தியுள்ளவர்களுமாகத் திரும்புகிறார்கள். மதுபானப் பிரியன் தெளிந்த புத்தியுள்ளவனாகிறான், விபசாரன் சீரடைகிறான். உலகத்தில் வழங்குகிற வீணான பழக்கங் களும் ஆசாரங்களும் ஒழிந்து போகின்றன. 1 பேதுரு 3:3, 4-ல் கண்டிருக்கிறபடி கிறிஸ்தவர்கள் "புறம்பான அலங்கரிப்பை" நாடாமல், "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில்

மறைந்திருக்கிறகுணத்தையே"
தேடுவார்கள்.

**(4) நாம் மீண்டும் பிறந்த பிறகு நம்மால் தீங்கநுபவித்தவர்களுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன?**

***சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். (லூக்.19:8)***

முழு மாறுதல் தோன்றாவிட்டால் உத்தமமான மனந்திரும்புதலாக மாட்டாது. ஒரு பாவியானவன் மறுபடியும் பிரதிக்கினைசெய்து, தான் திருடிக்கொண்டதைத் திரும்பக்கொடுத்து, தன்பாவங்களை அறிக்கைசெய்து, தேவனையும், தன்னைப்போலொத்த மனுஷரையும் நேசிப்பானாயின், அவன் மரணத்தைக்கடந்து ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறதாக நிச்சயங்கொள்ளலாம்.

நாம் பாவமும் பிழைபாடு முள்ளவர்களாகக் கிறிஸ்துவண்டை வந்து மன்னிக்கும் சுபாவமுள்ள அவருடைய கிருபைக்குப் பங்குள்ளவர்களாகும்பொழுது, அன்பானது நம்முடைய இருதயத்தில் உதயமாகிறது, ஒவ்வொரு சுமையும் இலகுவாகிறது, ஏனெனில் கிறிஸ்து நம்மேல் வைக்கிற நுகம் மெதுவாயிருக்கிறது. கடமை இன் பகரமாகிறது. நம்முடைய சௌகரியங்களைப் பிறருக்காக ஒறுப்பது மனோகரமாகிறது.

முற்காலத்தில் இருள் மூடினதாக நமக்குத்தோன்றின பாதையானது நீதியின் சூரியனுடைய கிரணங்களால் இலங்குகிறது.

**(5) கிறிஸ்துவின் கிருபையால் புதிதாக்கப்பட்ட இருதயத்தை நிரப்பும், மாற்றும், ஓடும் அன்பின் மூலம் என்ன?**

***நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து,*** *(1தெச.3:12)*

கிறிஸ்துவினுடைய குணம் எவ்வளவு அழகு வாய்ந்ததென்பது அவருடைய அடியார்களிடத்தில் காணப்படும். தேவனுடைய சித்தத்தின்படி நடப்பதே அவருடைய ஆனந்தமாயிருந்தது. தேவன் பேரில் அன்பும், அவருடைய மகிமைக்காக வைராக்கியமும் நம்முடைய இரட்சகருடைய ஜீவியத்தை ஆண்டுவந்தன. அன்பே அவருடைய கிரியைகளையெல்லாம் அலங்கரித்துச் சிறந்தவையாக்கிற்று. அன்பு தேவனிடத்திலிருந்து வருகிறது. கர்த்தருக்கென்று பிரதிஷ்டையாகாத இருதயத்தில் அன்பானது உதிப்பதுமில்லை, வளருவதுமில்லை. எந்த இருதயத்தில் இயேசு அரசாளுகிறாரோ அந்த இருதயத்தில் மாத்திரம் அந்த அன்பைக் காணலாம். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புக்கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" 1 யோவான் 4:19 என்று கண்டிருக்கிறது. தெவகிருபையால் புதிதான இருதயத்திலே குடிகொண்டிருக்கிற அன்பானது

எல்லாவற்றையுஞ் செய்ய நாடுகிறது. இந்த அன்பானது ஒருவனுடைய ஜீவியத்தை மாற்றுகிறது. அவனுடைய மனோவாஞ்சையை அடக்கி ஆளுகிறது. அவனுடைய ஆசை விருப்பங்களை அடக்குகிறது, பகையை அடக்குகிறது, aneeநேசபாசங்களை மேன்மையுள்ளதாக்குகிறது. ஆத்துமாவிலே இவ்விதமாகப் பரிபாலிக்கப்பட்டு இந்த அன்பானது ஜீவியத்தை சாதுவுள்ளதாகச்செய்து, சுற்றுமற்றுமுள்ள எல்லாரையும் நல்லவர்களாக்கத் தக்கதான வல்லமையையும் தருகிறது.

**(6) நம் விருப்பத்தை தேவனுக்கு தெரிவிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

***நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். (யோ.14:15)***

**(7) கிறிஸ்துவின் வல்லமையால் அவரோடு உறவுகொள்ள ஏன் கீழ்ப்படிதல் முக்கியமானது?**

***அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. (1யோ.2:4)***

தேவனுடைய பிள்ளைகளும் முக்கியமாக இப்பொழுதுதான் அவருடைய கிருபையை நம்பி குணப்பட்டிருக்கிறவர்களும் செய்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய இரண்டு தப்பிதங்கள் உண்டு. இவற்றில் ஒன்று ஏற்கனவே சொன்னோம்; அது யாது என்றால் மனுஷர் தங்கள்

சொந்தக்கிரியைகளை நோக்கிக்கொண்டு, தாங்கள் செய்யக்கூடியதெதுவோ அதையே நம்பி, தங்களைத் தேவனோடு ஒரு மனமாக்கிக்கொள்வதுதான். நியாயப்பிரமாணத்தைக்கைக்கொண்டு தன் சொந்தக் கிரியைகளினால் பரிசுத்தனாவதற்குப் பிரயத்தனப்படுகிற ஒவ்வொருவனும், முடவன் கொம்புத்தேனுக் காசைப்படுகிறதுபோல தன்னாலாகாத காரியத்தை முயற்சிப்பதாகும். மனுஷர் கிறிஸ்துவைத் தள்ளிவிட்டுத் தாங்களே செய்கிற ஒவ்வொரு காரியமும் தன்னயத்தாலும் பாவத்தாலும் கறைபட்டுப்போகிறது. விசுவாசத்தால் நமக்குக் கிடைக்கிற கிறிஸ்துவினுடைய கிருபை ஒன்றே நம்மைப் பரிசுத்தராக்கக் கூடியது.

**(8) நாம் மீண்டும் பிறக்கும்போது கிறிஸ்து நமக்குள் என்ன செய்வதாக வாக்கு கொடுத்துள்ளார்?**

***அந்த நாட்களுக்குப்பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு, (எபி.10:16)***

மேலே சொன்ன தப்பிதத்துக்க மாறானதும் இதைப்போலவே அபாயகரமானதுமான பிழை என்னவென்றால், கிறிஸ்துவை விசுவாசித்தவுடனே தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமில்லை என்றும், விசுவாசத்தால் மாத்திரம் நாம் கிறிஸ்துவினுடைய கிருபைக்குரியவர்களானபடியால் நம்முடைய கிரியைக்கும்

இரக்ஷ்ணியத்துக்கும் சம்பந்தமே இல்லை என்றும் எண்ணுவதாம்.

ஆனால் இவ்விடத்தில் கவனிக்கும்போது கீழ்ப்படிதல் என்பது எனோதானோவென்று செய்யும் புறம்பான கிரியையல்ல, அன்பின் ஊழியமாம். தேவனுடைய கற்பனை அவருடைய சொந்தத் தன்மையின் சொரூபமாயிருக்கிறது; அன்பே உருக்கொண்டு பிறந்ததுக்குச் சரியாகும்; ஆதலால் அது வானத்திலும் பூமியிலும் அவர் நடத்துகிற அரசாட்சிக்கு அஸ்தி பாரமாகிறது. நம்முடைய இருதயங்கள் தேவசாயலாகப் புதிதாகுமானால், தேவநேசமானது ஆத்துமாவில் வேருன்றப்பெற்றால், நம்முடைய ஜீவியத்தில் தெய்வ கட்டளைக்குச் சரியானபடி நடப்பது அசாத்தியமாகுமோ? அன்பானது ஒருவனுடைய இருதயத்தில் வேரூன்றும்பொழுதும் தன்னைச் சிருஷ்டித்த தேவனுடைய சாயலாக அவன் புதுச்சிருஷ்டியாகும் பொழுதும் "நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களிலே வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன்." எபி. 10:16 என்று கண்டிருக்கிற புது உடன்படிக்கை வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. கற்பனை இரு தயத்தில் எழுதப்பட்டிருந்தால், அது ஜீவியத்தைத் திருத்திவிடாதா? கீழ்ப்படிதல், அதாவது அன்பின் ஊழியமும் அடக்கமும், சீஷத்துவத்தின் உண்மையான அடையாளம். "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்" 1 யோ. 5:3 என்றும், "அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன்

பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" 1 யோ. 2:4 என்றும் வேதம் முறையிடுகிறது. விசுவாசம் ஒன்றே நம்மைக் கிறிஸ்துவினுடைய கிருபைக்குப் பங்குள்ளவர்களாக்குகிறது; இந்த விசுவாசமானது கீழ்ப்படிதல் அவசியமன்று என்று சொல்லாமல், ஏற்ற பிரகாரம் கீழ்ப்படியும்படி நமக்குப் பெலனளிக்கிறது.

**(9) நாம் சேவிக்கும் எஜமானின் அடையாளம் என்ன?**

***அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? (மத்.7:16)***

***ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். (மத்.7:20)***

நம்முடைய கீழ்ப்படிதலினாலே இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொள்ளுகிறதில்லை; ஏனெனில் இரட்சிப்பானது தேவனுடைய இலவசமான ஈவாக இருக்கிறது; நாம் அதை விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்கிறோம். ஆனால் கீழ்ப்படிதல் விசுவாசத்தின் பலனாக இருக்கிறது. "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமுமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை" என்று 1 யோ. 3 : 5. 6-ல் சொல்லியிருக்கிறது.சரியோ தப்போ என்று காட்டுகிற மெய்யான கருவியாகிய

உரைகல் இதுதான். நாம் கிறிஸ்துவிலே தரித்திருந்து, தேவ அன்பு நம்மில் குடிகொண்டிருந்தால், Vநம்முடைய உணர்ச்சிகள், சிந்தனைகள், நோக்கங்கள், கிரியைகளாகிய இவையெல்லாம் தேவனுடைய பரிசுத்த பிரமாணத்தின் சட்டங்களில் தெளிவாகக்காட்டியிருக்கிற தேவச்சித்தத்துக்கு இணங்கினவைகளாக இருக்கும். "பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத்தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்." 1 யோ. 3 : 7. சீனாய் மலையில் தேவன் கொடுத்த பத்துக் கற்பனைகள் அவருடைய பரிசுத்த நியாயப் பிரமாணம் என்ன தன்மையுள்ளதென்று தெரிவிக்கிறது; அப்படியே தேவப் பிரமாணமானது நீதி என்ன தன்மையானதென்று வரையறுத்துச்சொல்லுகிறது.

(10) **எந்த இரண்டு காரியங்கள் நம் இருதயத்தை தேவனுக்கு கொடுத்த பிறகு சமமாக இருக்கவேண்டும்?**

***அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். (யாக்.2:17)***

கிறிஸ்து பேரில் வைத்திருக்கிறதாகச் சொல்லப்படுகிற விசுவாசமானது, மனிதர் தேவனுக்குக் கீழ்ப்படிவதவசியமல்லவென்று போதிக்குமானால், அது எடுப்பான குணமே ஒழிய, விசுவாசமல்ல. "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" எபே. 2:8 என்றும், ஆனால், "விசுவாசமும்

கிரியைகளில்லாதிருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும்" யாக் 2:17 என்றும் சொல்லியிருக்கிறது. இயேசுவானவர் தாம் இப்பூலோகத்துக்கு வருகிறதற்கு முன்னே "எந்தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" சங். 40: 8 என்று தன்னைக் குறித்துப் பேசினார். அவர் மீண்டும் பரலோகதிற்குப் போகிறதற்குச் சற்று முன்னே "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறேன்." யோ. 15: 10 என்று சொன்னார். பரிசுத்த வேதம் சொல்லியிருக்கிறதையும் கவனியுங்கள்; "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம் .......... அவருக்குள் நிலைத்திருக்கிறதென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்." " 1 யோ 3: 3-6. "ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்." 1 பேதுரு 2: 21

**(11) நம் விசுவாசம் மற்றும் வாழ்விற்கு யாருடைய எடுத்துக்காட்டை முன்மாதிரியாக வைக்கவேண்டும்?**

***இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். (1 பேது.2:21)***

**(12) நாம் தாகத்தோடு தேடவேண்டியகிறிஸ்து வாக்கு செய்த குணாதிசயம் எது?**

***நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். (மத்.5:6)***

கர்த்தருடைய கற்பனைக்கு முற்றிலுங் கீழ்ப்படிதல், சம்பூரண நீதி ஆகிய இவை இரண்டும் நாம் நித்திய ஜீவனை அடைவதற்கு அவசியமானவைகள். இவைகள் முற்காலத்தில் எப்படியோ, தற்காலத்திலும் அப்படியேயிருக்கிறது, நம்முடைய ஆதித்தாய் தந்தையர் பாவத்தில் விழுமுன்னே ஏதேனில் எப்படி இருந்த்தோ இப்பொழுதும் அப்படியே மாறாமல் இருக்கின்றது."''' பூரண கீழ்ப்படிதல், நீதி ஆகிய இவை இரண்டையும் விட்டு, வேறெந்தக் காரணத்திலாவது தேவன் நித் திய ஜீவனைக் கொடுப்பாரானால், உலகத்தாருடைய இன்பத்துக்குப் பங்கம் நேரிடும். பாவமும், அதின் மூலமாய் வருகிற துக்கமும் நிர்ப்பாக்கியமும் சதா காலமுமாக நிலைத்திருக்கத்தக்கதான காரணங்களாகும்.

**(13) நம் ஒவ்வொருவருக்கும் தேவன் எவ்வித சுதந்திரத்தை கொடுக்கிறார்?**

***இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (2பேது.1:4)***

**(14) கிறிஸ்துவின் ரத்தத்தால் அவருடைய கிருபையின் மூலம் நமக்கு நீதியை கொடுக்கும் இரண்டு-பகுதி வரம் என்ன?**

***அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபே.1:7)***

ஆதாம் பாவம் செய்வதற்கு முந்தி, தேவனுடைய சட்ட்த்துக்குக் கீழ்ப்படிந்து உத்தமனாகத்தக்க வழிவகை அவனுக்கிருந்த்து. ஆனால் உத்தமனாகாமல் தவறிப்போனான், அவனுடைய பாவத்தினிமித்தம் நம்முடைய சுபாவம் கெட்டுப்போயிற்று, நம்மை நாமே நீதிமான்களாக்கிக்கொள்வது அசாத்தியமாயிற்று. நாம் பாவிகளும் அசுத்தருமானதால், பரிசுத்தமான சட்ட்த்திற்கு முற்றிலும் கீழ்ப்படிவது நம்மாலாகாது. நாம் என்னென்ன செய்யவேண்டுமென்று தேவனுடைய நியாயப்பிரமாணம் கேட்கிறதோ அதையெல்லாம் சரியாக நடத்துவதற்கு அவசியமான நீதிமார்க்கம் நம்மிடத்தில் இல்லை. ஆனால் நாம் தப்பித்துக்கொள்வதற்கேற்ற வழியை இயேசு சித்தம் பண்ணி வைத்திருக்கிறார். நமக்கு நேரிடக்கூடிய சோதனைகளும் கஷ்டங்களும் அவர் பூமியில் இருந்த காலத்தில் அவருக்கு இருந்த்து. ஆகிலும் பாவமில்லாதவராக இருந்தார். அவர் நமக்காக மரித்தார், இப்பொழுது நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு நீக்கித் தமிமுடைய நீதியை நமக்குத் தருவதாகச்

சொல்லுகிறார். உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து, அவரை உன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வாயானால், பாவ முள்ளவனாக இம்மட்டும் நீ ஜீவித்துக்கொண்டு வந்த போதிலும், அவர் நிமித்தம் நீதிமானாக எண்ணப்படுவாய். உன்னுடைய தன்மையிருக்கவேண்டிய இடத்தில் கிறிஸ்துவினுடைய தன்மை நிற்கிறது; தேவன் உன்னை ஒருநாளும் பாவஞ் செய்யாதவனைப் போல் அங்கீகரிக்கிறார்.

**(15) கிறிஸ்துவுக்குள் நம் மறுஜென்ம அனுபவத்திற்கு பிறகு, எப்படி நாம் தொடர்ந்து அவருக்கு கீழ்ப்படிந்து அவருக்குள் வளரமுடியும்?**

***கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலா.2:20)***

இதையடுத்த இன்னோர் காரியமுண்டு. அதென்னவெனில் கிறிஸ்து இருதயத்தை மாற்றுகிறார், விசுவாசத்தின் மூலமாக உன் இருதயத்தில் அவர் வசிக்கிறார். விசுவாசத்தினாலும் உன்னுடைய சித்தத்தை அவருடைய சித்தத்துக்கு எப்பொழுதும் விடாத்தொடர்ச்சியாக ஒப்புக்கொடுப்பதினாலும், மேலே சொன்ன கிறிஸ்துவோடு கூடிய ஐக்கியதையும் கொண்டு செலுத்த

வேண்டியவனாயிருக்கிறாய். இவ்வாறு நீ செய்யுங்காலமெல்லாம், அவருடைய பிரியத்தின்படியே நீ விரும்பவும் நடந்துகொள்ளவும் தக்கதாக அவர் உன்னிலே கிரியை செய்கிறார். அப்பொழுது "நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" கலா. 2: 20 என்று நீ சொல்லலாம். அப்படியே இயேசுவும் தமது சீஷரை நோக்கி "பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" மத். 10: 20 என்றும் சொல்லுகிறார். இப்படியாக இயேசு உன்னிலே கிரியை நட்த்துங்காரணத்தால் நீயும் அவரைபோல நடந்து, அவர்செய்த கிரியைகளையே நீயும் செய்கிறவனாவாய். அதாவது, நீதியின் கிரியைகளையும் கீழ்ப்படிதலையும் செய்கிறவனாவாய். ஆகையால் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு நம்மிலே ஒன்றுமில்லை. இறுமாப்புக்கொள்வதற்கும் யாதொரு காரணமுமில்லை. அப்படியானால் நம்முடைய நம்பிக்கை என்ன? கிறிஸ்துவினுடைய நீதி நம்முடைய நீதியாவது ஒன்று; அவருடைய ஆவியானவர் நம்மிட்த்திலும் நமது மூலமாகவும் கிரியை செய்வது மற்றொன்று.

**(16) நம்பிக்கையை விட விசுவாசம் வேறுபட்டது என்பதை இந்த வசனத்தின் எந்த பகுதி காண்பிக்கிறது?**

***தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது***

*நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.(யாக்.2:19)*

விசுவாசத்தைப்பற்றி நாம் பேசும்பொழுது, மனதில் பதித்துக்கொள்ளவேண்டிய வித்தியாசம் ஒன்றுண்டு. விசுவாசத்துக்கு முற்றிலும் வேறான ஒருவித நம்பிக்கை இருக்கிறது. தேவன் உண்டு, அவர் வல்லமையுள்ளவர், அவருடைய வசனம் சத்தியமானவை என்ற காரியங்களை மறுத்துப்பேச சாத்தானாலும் முடியாது, அவனுடைய பரிவாரக் கூட்டத்தாலும் இயலாது. "பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன" யாக். 2: 19 என்று வேதம் விளம்புகின்றது. ஆயினும் இது விசுவாசமல்ல. தேவனுடைய வசனத்தை நம்பி, அவருக்கே சித்தத்தை அடிமைப்படுத்துகிறது எங்கேயோ, இருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்து நேச பாசங்களை அவர் பேரிலே ஊன்றுவது எங்கேயோ, அங்கே விசுவாசம் இருக்கிறது, இந்த விசுவாசமானது அன்பினால் கிரியைசெய்து, ஆத்துமாவைச் சுத்திகரிக்கிறது. இந்த விசுவாசத்தினாலே இருதயமானது தேவனுடைய சாயலாக புதுப்பிக்கப்படாவிட்டால் தேவ சட்ட்த்துக்குக் கீழ்ப்படியவும் கீழடங்கவும் ஆகாது. புது ரூபமடையும்பொழுது "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்" சங். 119:97 என்று சங்கீதக்காரன் சொல்லுகிறதுபோல, பரிசுத்த கற்பனைகளின் பேரில் களிகூறுகிறது. நியாயப்பிரமாணத்தின் நீதியானது நம்மிலே நிறைவேறுகிறது. ஏனெனில் நாம் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறோம். ரோ. 8:1. பார்க்கவும்.

**(17) கிறிஸ்து எவ்வளவாய் நம் குணங்களை தொடர்ந்து பொறுமையாக சரிசெய்வார்?**

***உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். (பிலி.1:5-6)***

கிறிஸ்துவானவர் பாவத்தை மன்னிக்கிறதற்குப் போந்த அன்பு நிறைந்தவர் என்று அறிந்து, மெய்யாகவே தாங்கள் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு விரும்புகிற அநேகர் உண்டு; ஆயினும், தங்கள் நடத்தை இன்னும் சீர்கெட்ட்தாயிருக்கிறதென்றும், தங்கள் ஜீவியமானது குறையுள்ளதென்றும் கண்டறிகிறதோடு, பரிசுத்த ஆவியானவர் தங்கள் இருதயங்களைப் புதுப்பித்திருக்கிறாரோ இல்லையோ என்றும் சந்தேகங்கொள்ளுகிறவர்களாயுமிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து நாம் சொல்வது என்னவென்றால், திடனற்று பின் திரும்பிவிடாதேயுங்கள் என்பதே. நம்முடைய குற்றங்குறைகளினிமித்தம் இயேசுவின் பாத்த்திலே சாங்கோபாங்க மாக விழுந்து அவரை நமஸ்கரித்து மனங்கசந்து கண்ணீர் விடவேண்டியது வரும்; ஆயினும் மனந்தளர்ந்துபோக்க்கூடாது. பகைவன் நம்மேல் வெறி கொண்டபோதிலும், தேவன் நம்மைத்தள்ளிவிடார், கைவிடார். ஏனெனில் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தி லிருந்துகொண்டு நமக்காக விண்ணப்பம் செய்கிறார்.

**(18) நம் குணங்களை சரிசெய்யும் இந்த தொடர் வாழ்வில் நாம் பாவத்தில் விழும்போது, எந்த வசனத்தை கேட்கவேண்டும்?**

***என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். (1யோ.2:1)***

"நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" 1 யோ. 2:1 என்று சீஷனாகிய யோவான் 16:27 என்று கிறிஸ்துபேசின வார்த்தைகளையும் மறந்துபோகாதிரு. உங்களைத் தம்மண்டைசேர்த்துத் தமது தூய்மையும் பரிசுத்தமும் உங்களிடத்தில் பிரகாசிப்பதைப் பார்க்கும்படி விரும்புகிறார். உங்களை அவருக்கு ஒப்புக்கொடுத்தால் உங்களில் நல்ல கிரியையைத்தொடங்கியிருக்கிறவர் இயேசுகிறிஸ்துவினுடைய நாள் பரியந்தம் அந்தக்கிரியையை நடத்துவார். முன்னைவிட ஊக்கமாக ஜெபஞ் செய்யுங்கள்; முழுவதுமாக விசுவாசிப்போம், நம்முடைய சுயபலத்தின்மேல் நம்பிக்கை அற்றுப்போகப்போக, நம்முடையை இரட்சகர் வல்லமையுள்ளவரென்பதை நம்புவோம்; நம்முடைய ஜீவியத்துக்கு சந்தோஷமாயிருக்கிறவரைப் போற்றிப்புகழுவோமாக.

**(19) நாம் மீண்டும் பிறந்த பிறகு, இந்த தொடர் வளர்ச்சியின் வாழ்வில், என்ன உணர்கிறோம்?**

***நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது. (ஏசா.64:6)***

நீ இயேசுவண்டை நெருங்க நெருங்க, எவ்வளவு குற்றத்தையுடையவனென்று உன் கண்களுக்கு நன்றாய்ப் புலப்படும்; ஏனெனில் உன் கண்கள் தெளிவடையும். அப்பொழுது உன் குறைவுகளுக்கும் அவருடைய பூரண பரிசுத்த சுபாவத்துக்கும் எவ்வளவோ பெரிய வித்தியாசம் உண்டென்பதைப் பார்ப்பாய். சாத்தானுடைய மாயங்கள் சக்தியற்றுப்போயின என்பதற்கும், உயிர்ப்பிக்கின்ற தேவ ஆவியின் வல்லமை உன்னை எழுப்புகிறதென்பதற்கும் இதுவே தேவ அத்தாக்ஷி.

தன்னுடைய சொந்தப்பாவத்தை உணராத இருதயத்திலே இயேசுவானவர் பேரிலுள்ள பூரண அன்பு வசிக்கவே முடியாது. கிறிஸ்துவினுடைய கிருபையானது ஒரு ஆத்துமாவை மறுரூப்படுத்தும்பொழுது, அந்த ஆத்துமாவானது அவருடைய திவ்விய சுபாவத்தைப் பார்த்து அதிசயப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய அங்கவீனத்தை நாம் பார்க்கவில்லையானால் இயேசுவினுடைய அழகையும் சிறப்பையும் நாம் இன்னும் பார்க்கவில்லையென்பதற்கு இது ஏற்றதோர் அத்தாக்ஷியாகும்.

நம்மை நாமே எவ்வளவு குறைவாக மதிக்கிறோமோ, நம்முடைய இரட்சகருடைய மட்டற்ற பரிசுத்தத்தையும் அழகையும் அவ்வளவுக்கு அதிகமாக மதிக்கத்தலைப்படுவோம். நாம் பாவிகள் என்று நாம் கண்டு கொள்ளும்பொழுது, மன்னிக்கக் கூடியவரண்டை ஓடுகிறோம். ஆத்துமாவானது தனது பலவீனத்தை அறிந்துணர்ந்து கிறிஸ்துவண்டை சேர யத்தனிக்கும் பொழுது அவர் தம்மை வல்லமையுடனே வெளிப்படுத்துவார். இது அவசியமென்று நமக்குதெரிந்தவுடனே அவரண்டைக்கும் அவருடைய வசனத்தண்டைக்கும் போக நாம் எவ்வளவுக்கதிகமாக துரிதப்படுகிறோமோ அவ்வளவுக்கதிகமாக அவருடைய சுபாவத்தைப்பற்றி மகத்தான அபிப்பிராயங்கொண்டு, அவருடைய சாயலை நம்மிடத்திலே பூரணமாக பிரதிபிம்பிக்கச் செய்வோமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

***கிறிஸ்துவுடைய கிருபையினால் அவருடைய அடிசுவடுகளில் நடந்து அவரை என் வாழ்வில் தேவனாகவும் எஜமானனாகவும் பின்பற்ற தெரிந்தெடுக்கிறேன்.***

***வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை***

***என்னில் அவருடைய ஆவியின் கனிகள் வெளிப்படவும் இதினிமித்தம் நீதியும் பரிசுத்தமும் விளங்க ஜெபிக்கிறேன்.***


***வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை***

______________________________

______________________________

______________________________

______________________________



## பாடம் 9
## கிறிஸ்துவுக்குள் வளர்தல்.

(1) கிறிஸ்துவுக்குள் புதிதாக பிறந்தவர்களாக அவருடன் உறவை

**வளர்த்துக்கொள்ள நமக்குள் இருக்கவேண்டிய விருப்பம் என்ன?**

***சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். (1பேது.2:2)***

இருதயம் மாறும்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம், இந்த மாறுதலுக்கு வேதத்தில் பிறப்பு என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்னும், விதைக்கிறவன் விதைத்த நல்ல விதையானது முளை கிளாம்புதலுக் கிணையானது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதே பிரகாரம், கிறிஸ்துவண்டை மனந்திரும்பினவர்கள் யார் யாரோ அவரெல்லாம் "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல" 1 பேது. 2:3 கிறிஸ்துவுக்குள்ளே மனுஷராகவும் ஸ்திரீகளாகவும் "வளரவேண்டியவர்களாய்" எபே. 4:5 இருக்கிறார்கள். அல்லது வயலிலே விதைக்கப்பட்ட நல்ல விதையைப்போல, அவர்கள் வளர்ந்து நல்ல பலன் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். "அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" ஏசா. 61:3 என்று ஏசாயா சொல்லுகிறான். ஆகையால் சராசரப்பொருள்களிலிருந்து எடுக்கிற திருஷ்டாந்தங் கள், ஆவிக்குரிய ஜீவியத்தின் இரகசியமான சத்தியங்களை நமக்கு ஏற்ற பிரகாரம் விளக்கிக்காட்டவேண்டியவைகளாயிருக்கின்றன.

மனுஷ ஞானமும் சாமர்த்தியமும்கூடி இயற்கைப் பொருள்களில் மிகவும் சிறியதொன்றுக்கு உயிர் கொடுக்க முடியாது. தேவன் தாமே அளித்திருக்கிற ஜீவன் மூலமாக மாத்திரம் செடிகளும் மிருகங்களும் பிழைத்திருக்க முடியும். அப்படியே தேவனிடத்திலிருந்து வருகிற ஜீவன் மூலமாக மாத்திரம் ஆவிக்குரிய ஜீவனானது மனுஷருடைய இருதயத்தில் பிறக்க்க்கூடியதாயிருக்கிறது. ஒரு மனிதன் "மேலிருந்து பிறவாவிட்டால்" யோ. 3:3. கிறிஸ்து வந்து நமக்கு அளித்திருக்கிற ஜீவனுக்குப் பங்காளியாகவே மாட்டான்.

**(2) நம் ஆவிக்குரிய வளர்ச்சியை நாமாகவே ஏற்படுத்தி கொள்ள முடியாதது ஏன்?**

***ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1கொரி.2:14)***

பிராணனுக்கு எப்படியோ அப்படியே வளர்ச்சிக்கும். மொக்கானது புஷ்பமாகவும், புஷ்பம் காயாகவும் செய்வது தேவனே. அவருடைய வல்லமையினால்தான் விதையானது "முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாக்க்" மாற்கு 4:28 கொடுக்கிறது. "அவன் லீலிப்ப்புஸ்பத்தைப்போல மலருவான்" என்றும் "தானிய விளைச்சலைப்போலச் செழித்து, திராட்சைச்செடிகளைப்போலப் படருவார்கள்" ஓசியா 14:5, 7 என்றும் ஓசியா தீர்க்கதரிசி இஸ்ரவேலைப் பற்றிச்

சொல்லுகிறான். "காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்" லூக். 12:27 என்றும் இயேசு நமக்குக் கற்பிக்கிறார். செடிகளும் புஷ்பங்களும் வளருவது தங்கள் சொந்த கவலையினாலுமல்ல, சொந்த முயற்சியினாலுமல்ல, அவற்றின் உயிருக்கு இன்றியமையாததென்று தேவன் தெரிந்து கொடுத்திருக்கிறதைப் பெற்றுக்கொள்வதினால் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு சிறுபிள்ளை தன்னுடைய கவலையினாலாவது, சுயமுயற்சியினாலாவது, தன் வளர்ச்சியோடு ஏதேனும் கூட்டமுடியாது. அப்படியே நீயும் உன்னுடைய கவலையினாலாவது, சுயமுயற்சியினாலாவது, ஆவிக்குரிய வளர்ச்சியடைய முடியாது.

**(3) ஒரு செடி ஆரோக்கியமாய் வளர தேவைப்படும் இரண்டு மூலதனங்கள் என்ன மற்றும் அவை தேவன் நம் ஆவிக்குரிய வளர்ச்சியில் ஈடுபடுவதை பற்றி எவ்வாறு இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன?**

*தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். (சங்.84:11)*

*நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான். (ஓசி.14:5)*

ஒரு செடியானாலும் சரி, ஒரு பிள்ளையானாலும் சரி, அதின் பிராணனுக்கு ஆதாரமான ஆகாயம், சூரியவெப்பம், ஆகாரம் ஆகிய இவற்றைப்பெற்றுக் கொள்வதினாலேயே வளருகிறது. இயற்கையிலே பொருந்தியிருக்கிற இந்த ஈவுகள மிருகராசிக்கும் விருட்சராசிக்கும் எவ்வளவு அவசியமோ, கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கும் அவர் அவ்வளவு அவசியமாயிருக்கிறார். அவர் அவர்களுக்கு “நித்திய வெளிச்சமும்” ஏசா. 60:19, “சூரியனும் கேடகமுமாயிருக்கிறார்”. சங். 84:11. அவர் “இஸ்ரவேலுக்குப் பனியைப்போல இருப்பார் ஓசியா 14:5” “புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போல இறங்குவார்”. சங். 72:6. அவரே ஜீவதண்ணீர், அவரே “வானத்திலிருந்து இறங்கி, உலகத்துக்கு ஜீவனைக்கொடுக்கிற தேவ அப்பம்”. யோ. 6:33.

தேவன் தமது குமாரனை விலைமதிக்கப்பட முடியாத ஈவாக அளித்தபொழுது, பூமண்டலத்தைச்சூழ இருக்கிற ஆகாயம் எவ்வளவு உண்மையானதோ அவ்வளவு நிச்சயமாகப் பிரபஞ்சம் முழுவதையும் கிருபையென்னும் ஆகாயத்தால் சுற்றி வைத்திருக்கிறார். ஜீவனளிக்கிற இந்த ஆகாயத்தை யார் யார் சுவாசிக்கிறார்களோ அவர்களெல்லாரும் பிழைத்து, கிறிஸ்துவுக்குள்ளே மனுஷராகவும் ஸ்திரீகளாகவும் வளருவார்கள். ஒரு மலரானது, தன்னுடைய அழகும் இலக்ஷணமும் பூரணமாகும்படி சூரிய கதிர்கள் தன் மேல் படத்தக்கதாக சூரியன்பக்கம் திரும்புகிறது போல, நம்முடைய சுபாவமானது கிறிஸ்துவின் சாயலாக வளர்ந்தோங்கும்படி பரலோக ஒளி

நம்மேல் பிரகாசிக்கத்தக்கதாக நீதியின் சூரியன் பக்கம் நாம் திரும்பவேண்டும்.

**(4) நாம் கிறிஸ்துவுக்குள் தொடர்ந்து வளர்ந்து நல்ல கனிகளை கொடுப்பது எப்படி?**

***நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோ.15:5)***

"என்னிலே நிலைத்திருங்கள், நான் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனிகொ டுக்கமாட்டாத்துபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள் ...... என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" யோ. 15:4, 5 என்று இயேசு சொன்னபொழுது மேலே சொல்லியதை வற்புறுத்துகிறார். ஒரு கிளையானது வளர்ந்து கனிகொடுக்க வேண்டுமானால் தாய் மரத்தோடு ஒட்டிக்கொண்டிருப்பது எவ்வளவு அவசியமோ, நீயும் பரிசுத்த ஜீவியம் செய்யவேண்டுமானால் கிறிஸ்துபேரில் சார்ந்திருப்பது அவ்வளவு அவசியமாகிறது. அவரைப்பிரித்தால் உனக்கு உயிரில்லை; சோதனையை எதிர்க்கவாவது, கிருபையிலும் பரிசுத்தத்திலும் வளரவாவது உனக்குச் சக்தியில்லை. அவரில் நிலைத்திருந்தால், செழித்தோங்குவாய். உன் ஜீவனை அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுவாயானால், நீ உலர்ந்துபோவதுமில்லை,

பலனற்றுப்போவதுமில்லை. நீர்கால்களின் ஓரமாய் நடப்பட்ட விருட்சத்தைப்போலிருப்பாய்.

**(5) விசுவாசத்தின் நமது மூலதனம் யார் மற்றும் நமது கிறிஸ்தவ அனுபவத்தில் இது எப்படி வளர்கிறது?**

***அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.***
*(எபி.12:2)*

அநேகர் இந்த வேலையின் ஒருபாகத்தைத்தாங்களே செய்யவேண்டுமென்று எண்ணுகிறார்கள். அவர்கள் பாவமன்னிப்புக்கு கிறிஸ்துவை நம்பியிருக்கிறார்கள், ஆனால் தங்கள் சுயமுயற்சியால் சன்மார்க்கமாக உயிர் வாழவேண்டுமென்று எத்தனிக்கிறார்கள். இவ்விதமான ஒவ்வொரு முயற்சியும் தவறிப்போகும், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று இயேசு சொல்லுகிறார். கிருபையில் நாம் வளரும் வளர்ச்சி, நம்முடைய மகிழ்ச்சி, நாம் இதரருக்குப் பிரயோஜனமுள்ளவர்களாயிருத்தல் ஆகிய இவை, நாம் கிறிஸ்துவுடனே ஐக்கியப்பட்டிருந்தால் பெருகி வளரும். நாடோறும், நாழிகைதோறும் அவரோடு அன்னியோன்னிய சம்பந்தமுடையவர்களாகி, அவரிலே தரித்திருக்கிறவர்களானால், நாம் கிருபையில் வளருகிறவர்களாவோம். நம்முடைய விசுவாசத்தைத் தொடங்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. முதலிலும், கடைசியிலும் எப்பொழுதும் கிறிஸ்துவே. நம்முடைய ஓட்டத்தின்

தொடக்கத்திலும் முடிவிலும் மாத்திரமல்ல நம்முடைய வாழ்நாள் முழுவதிலும் அவர் நம்மோடிருக்கவேண்டியது. "கர்த்தரை எப்பொழுதும் எனக்குன் முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை" சங். 16:8 என்று தாவீது சொல்லுகிறான். {SC 120.1}

**(6) நாம் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிவது எப்படி?**

***ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. (கொலோ.2:6-7)***

கிறிஸ்துவில் நிலைத்திருப்பது எப்படி என்று கேட்கிறாயோ? அவரை நீ முதலாவது எவ்விதமாக அடைந்தாயோ அவ்விதமாகவே நிலைத்திருக்கவேண்டியது. "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் நடந்துகொள் ளுங்கள்". கொலோ. 2:6. "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்". எபி. 10:38. நீ முழுவதும் தேவனுக்குச் சொந்தமாய் இருக்கவும், அவருக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்திருக்கவும் வேண்டுமென்று உன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்தாய்; கிறிஸ்துவை உன்னுடைய இரட்சகராக அங்கீகரித்தாய். உன் பாவங்களை நீயே பரிகரித்துக்கொள்ளவுமுடியாது, உன்னுடைய இருதயத்தை மாற்றிக்கொள்ளவுமாட்டாய்; ஆனால்

உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தபோதோ, அவர் கிறிஸ்துவினிமித்தம் இவற்றையெல்லாம் உனக்குச் செய்கிறார் என்று நம்பினாய். விசுவாசத்தினாலே நீ கிறிஸ்துவினுடைமையானாய்; கொடுத்து வாங்குவதினாலே நீ அவர்மேல், விசுவாசத்தால் வளரவேண்டியவனாயிருக்கிறாய். உன்னுடைய ஊழியமாகிய எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து, அவருடைய கற்பனைகளின் பிரகாரம் கீழ்ப்படியும்படி அவருக்கு உன்னையும் கொடுக்க வேண்டியது தான், கீழ்ப்படிகிறதற்கு உனக்கு வல்லமை கொடுக்கத்தக்கதாக நீ எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளவேண்டியது; அதாவது எல்லா ஆசீர்வாதங்களின் நிறைவாகிய கிறிஸ்து உன்னுடைய இருதயத்தில் வாசம்பண்ணவும், அவர் உனக்குப் பலமாகவும், உனக்கு நீதியாகவும், உனக்கு நித்திய சகாயராகவும், இருக்கத்தக்கதாக அவரை எடுத்துக்கொள்ளவேண்டியது உனது கடமை.

**(7) ஒரு நாளின் தொடக்கத்தில் தேவனையும் அவருடைய ஞானத்தையும் தேடுவது மிக முக்கியம், ஏன்?**

***என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். (நீதி.8:17)***

அதிகாலையில் தேவனுக்கென்று உன்னைப் பிரதிஷ்டை செய்; இதே உன்னுடைய முதல் வேலையாயிருப்பதாக. "ஆண்டவரே, என்னை முழுவதும் உம்முடையவனாக அங்கீகரித்துக்கொள்ளும். நான்

செய்யும்படி யோசித்திருக்கிறவை எல்லாவற்றையும் உமது பாதத்திலே வைக்கிறேன். உம்முடைய ஊழியத்தில் இன்று என்னை பிரயோஜனமுள்ளவனாக்கும். என்னிலே தங்கியிரும்; என்னுடைய வேலையெல்லாம் உம்மிலே தொடங்கி நடத்தப்படுவதாக" என்று ஜெபம் செய். இது நாடோறும் நடத்தவேண்டிய காரியம். ஒவ்வொரு காலையிலும் அந்த நாளுக்கென்று உன்னைத் தேவனுக்குப் பிரதிஷ்டை செய். நீ செய்யும்படி உத்தேசித்திருக்கிற காரியங்களை அவருக்கு ஒப்புவி, அப்படியானால் திருவுளச் சித்தத்தின் பிரகாரம் அவற்றை நடத்துகிறதோ இல்லையோ என்று அறிந்துகொள்வாய். இவ்விதமாக தினந்தினம் உன்னுடைய ஜீவியத்தைத் தேவனுடைய கரங்களில் கொடுக்கலாம், உன்னுடைய ஜீவியமானது கிறிஸ்துவினுடைய ஜீவியத்தைப்போல் மென்மேலும் உருவாக்கப்படலாம்.

**(8) நமது இருதயத்தில் சமாதானத்தை நிலைக்க செய்வதன் வழி என்ன?**

***உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார். (ஏசா.26:3-4)***

***நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல்***

*மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2கொரி.3:18)*

கிறிஸ்துவிலே பொருந்திய ஜீவியம் அமரிக்கையான ஜீவியமாயிருக்கும். மிதமிஞ்சின சந்தோஷ முதலியன இராது; சமாதானமான நம்பிக்கை நிலைத்திருக்கும். உன்னுடைய நம்பிக்கை உன்னிடத்திலல்ல, கிறிஸ்துவிலே இருக்கிறது. உன்னுடைய பலவீனம் அவருடைய பலத்தோடும், உன் அறிவீனம் அவருடைய ஞானத்தோடும், உன்னுடைய மெலிவு எக்காலும் நிலைக்கிற அவருடைய பராக்கிரமத்தோடும் இணைக்கப்படுகிறது. அவருடைய அன்பு, அழகு, பூரண தன்மையாகிய இவற்றைப்பற்றி எப்பொழுதும் சிந்தித்துக்கொள். கிறிஸ்து தன்னைத்தான் வெறுத்தது, அவருடைய தாழ்மை, அவருடைய தூய்மை, பரிசுத்தம், விலைமதிக்கமுடியாத அவருடைய அன்பு- ஆகிய இவைகள் ஆத்தும தியானத்திற்குத் தகுந்த பொருள்களாகும். அவரை நேசித்து, அவர் நடந்ததுபோல நீயும் நடந்து, அவர் மேல் முற்றிலும் சாருவதினால், நீ அவருடைய சாயலாக மறுரூபமாவாய்.

**(9) மனிதகுலம் முழுமைக்கும் கிறிஸ்து கொடுத்துள்ள அழைப்பு என்ன?**

***வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்.11:28)***

"என்னில் நிலைத்திருங்கள்" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தைகள் அமைதி, நிலைத்திருத்தல், நம்பிக்கை- என்ற அர்த்தம் கொடுக்கின்றன. "நீங்கள் எல்லாரும் என்னிடத்திலே வாருங்கள்;

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத். 11:28 சங்கீதக்காரனுடைய வார்த்தைகளும் இதே கருத்துடையவர்கள் : "கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு." சங். 37:7. "அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்" ஏசா. 30:15 என்று ஏசாயா நிச்சயங் கூறுகிறான். இந்த அமைதி சோம்பலல்ல, ஏனெனில் நமக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்குத்தத்தம் செய்து நம்து இரட்சகர் நம்மை அழைக்கும்பொழுது, அத்துடனே நாம் கிரியை செய்யவேண்டுமென்றும் கேட்கிறார் "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொள்ளுங்கள் ..... உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்". மத். 11;29. கிறிஸ்துவின்மேல் எந்த ஆத்துமா பூரணமாக அமர்ந்த்திருக்கிறதோ, அந்த ஆத்துமா அவருக்காக வெகு ஊக்கமாகவும் சுறுசுறுப்பாகவும் உழைக்கிறது.

**(10) நாம் கிறிஸ்துவோடு வைத்துள்ள உறவையும் ஐக்கியத்தை திருப்ப சாத்தான் கையாளும் மூன்று வழிகள் என்ன?**

***இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள். (மாற்.4:19)***

தன்னயமானது மனதிலே குடிகொண்டிருக்கும் பொழுது, பலத்துக்கும் ஜீவனுக்கும் மூலாதாரமான கிறிஸ்துவைவிட்டு, மனமானது விலகுகிறது. ஆகையால் இரட்சகரிலிருந்து நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவுடனேகூட ஐக்கிய சம்பந்தம் அடையாதபடித் தடுப்பதே சாத்தானுடைய முக்கியவேலை. உலகத்தின் இன்பங்கள், ஜீவியத்தின் கவலைகள், மனக்கலக்கங்கள், துக்கங்கள்,

இதரருடைய குற்றங்கள், அல்லது உன்னுடைய சொந்தத் தவறுதல்கள், குறைகள் - இவற்றில் ஒன்றின்மேலாகிலும் அல்லது எல்லாவற்றின் மேலாகிலும் உன்னுடைய மனதைத் திருப்பிவிடக் காத்துக்கொண்டிருப்பான். அவனுடைய மாயதந்திரங்களால் மோசம் போகாதிரு. மெய்யாகவே உணர்வுள்ளவர்களும் தேவனுக்காக ஜீவிக்க விரும்புகிறவர்களுமான அநேகர் தங்கள் குற்றங்களையும் தவறுதல்களையுமே அடிக்கடி சிந்திக்கும்படியாகச் செய்து, இவ்விதமாக அவர்களை கிறிஸ்துவிலிருந்து பிரித்துவிடுவதால் ஜெயம் பெறலாம் என்று சாத்தான் எதிர்பார்க்கிறான்.

**(11) நமக்கு நித்தியஜீவன் உண்டு என்ற நம்பிக்கையில் நாம் இருப்பது எப்படி?**

***குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.***
*(1யோ.5:12-13)*

தன்னயத்தை விசேஷமுள்ளதாக நாம் பாவிக்காமலும், நாம் இரட்சிக்கப் படுவோமோ என்று கவலையும் கலக்கமுமில்லாமலுமிருக்கவேண்டும். இதெல்லாம் நம்முடைய பெலனுக்கு ஊற்றானவரிடமிருந்து நமது ஆத்துமாவைத் திருப்பிவிடுகிறது.

உன்னுடைய ஆத்துமாவை தேவனுடைய ஆதரவுக்கு ஒப்புவித்து, அவரையே நம்பு. இயேசுவைக் குறித்துப்பேசு, அவரைப்பற்றி நினை. உன் நினைவானது அவரைப்பற்றியே இருக்க, தன்னயம் மறைந்துபோவதாக சந்தேகத்தை அகற்று; உன்னுடைய மனக்கலக்கம் உன்னைவிட்டு நீங்குவதாக. "ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறாதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" கலா. 2:20 என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதுபோல் நீயும் சொல்லு. தேவனுக்குள் இளைப்பாறு. நீ ஒப்புவித்திருக்கிறதைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளக் கூடியவராயிருக்கிறார். உன்னை அவர் கரங்களில் முழுவதுமாக ஒப்புவித்து விட்டால், உன்னை நேசித்த கிறிஸ்துவின் மூலமாய், ஜெயவீரனுக்கு மேலான கனம் உனக்குக் கிடைக்கச் செய்வார்.

**(12) ஒருமுறை நீதிமானாக்கப்பட்ட பின்பு திரும்பவும் பாவவழிகளில் செல்வதன் விளைவு என்ன?**

***நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான். (எசே.18:24)***

கிறிஸ்து மனுஷ சுபாவத்தைத் தரித்தபொழுது மனுக்குலத்தைத் தம்முடனே அன்பென்னும் கட்டினால் கட்டினார்; இந்த அன்பென்னும் கட்டு எப்படிப் பட்ட்தென்றால் மனுஷன் தானே வேண்டாமென்று வெறுத்தாலொழிய வெறெந்தச் சக்தியினாலாவது அறுந்துபோகக்கூடாத பலமுள்ளது. நாம் இந்தக் கட்டை அறுக்க, அதாவது கிறிஸ்துவினிடத்திலிருந்து நாம் பிரத்தியேகப் படுத்திக்கொள்ள நமது கண்களுக்குப் பகட்டானதைக் காட்டி இழுக்கும்படி சாத்தான் எப்பொழுதும் பிரயாசைப்படுகிறான். ஆகையால் இங்கே அவன் நாம் வேறொரு எஜமானைத் தெரிந்துகொள்ள நம்மை மயக்கிவிடாதபடி நாம் எச்சரிக்கையுடனே விழித்திருந்து ஜெபம் செய்யவேண்டியதவசியம், ஏனெனில் நமதிஷ்டம் போல செய்யும் சிலாக்கியம் நம்க்குண்டு. ஆனால் நாம் கிறிஸ்துபேரிலே கண்ணாயிருப்போமானால் அவர் நம்மைக் காப்பாற்றுவார். இயேசுவை நோக்குவோமாகில் நமக்கு யாதொரு அபாயமுமில்லை. ஒன்றாகிலும் அவர் கரங்களினின்று நம்மைப் பறித்துக் கொள்ளமுடியாது. எப்பொழுதும் நாம் அவரைப்பார்க்கும்பொழுது, “ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்”. 2 கொரி. 3:18.

(13) **நாம் கிறிஸ்துவின் சத்தத்தை கேட்கும்போது அவரை எப்படி கண்டுபிடிப்பது?**

***உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத்***

*தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். (எரே.29:13)*

இப்படியே ஆதியில் சீஷர்கள் தங்களுடைய பிரிய இரட்சகருடைய சாயலை அடைந்தார்கள். அவர்கள் இயேசுவினுடைய வார்த்தைகளைக் கேட்டபொழுது, அவர் தங்களுக்கு இன்றியமையாதவரென்று உணர்ந்த்தார்கள். அவர்கள் அவரைத்தேடிக் கண்ட்டைந்து பின்பற்றினார்கள். வீட்டிலும், சாப்பிடும் மேசையிலும், உள்ளறையிலும் வெளியிலும் அவருடனே இருந்தார்கள். உபாத்தியாயர் ஒருவரிடத்திலே மாணாக்கர்கள் இருக்கிறதுபோல, அவர்கள் அவரோடிருந்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட அமிர்தம் போன்ற சத்திய போதகத்தைத் தின்ந்தோறும் கற்றுக்கொண்டிருந்தார்கள். வேலைக்காரர் தங்கள் எஜமான்களை நோக்குகிறதுபோல, இவர்கள் தங்கள் கடமையை அறிந்துகொள்ளும்பொருட்டு அவரையே நோக்கினார்கள். அந்தச் சீஷர்கள் "நம்மைப்போலப்பாடுள்ள" யாக். 5:17 மனுஷர்தான். அவர்களும் நம்மைப்போலவே பாவத்தோடு போர் புரிய வேண்டியதாயிருந்த்து, பரிசுத்தமாக வாழ்நாள் கழிப்பதற்கு அதே கிருபையும் அவர்களுக்குத் தேவையாயிருந்தது.

(14) **மனுஷகுமாரன் சோதிக்கப்பட்டு பாடுபட்டார் என்று இந்த வசனத்தின் எந்த பகுதி காண்பிக்கிறது?**

***ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். (ரோ.7:19)***

கிறிஸ்துவுக்கு உகந்த சீஷனும், அவருடைய சாயலைத் தனது ஜீவியத்தில் பூரணமாக விளங்கச் செய்தவனுமாகிய யோவானிலும்கூட அந்தச் சிறந்த குணம் இயற்கையாகப் பொருந்தியிருக்கவில்லை. அவன் சுயநலப் பிரியனும் கனத்தின்மேல் ஆசை கொண்டவனுமாயிருந்ததுமன்றித் தனக்கு யாராவது ஒரு கெடுதி செய்தால் உக்கிரமும் பொறாமையும் கொள்ளுகிறவனாயுமிருந்தான். ஆனால் கிறிஸ்துவினுடைய குணாதிசயம் அவனுக்குக் காட்சியான பொழுது, தன்னுடைய சொந்தக் குறைவைக்கொண்டு, மனத்தாழ்வடைந்தான். தேவ குமாரனில் ஒவ்வொரு நாளும் விளங்கின பெலனையும் பொறுமையையும், பராக்கிரமத்தையும் உருக்கத்தையும், அதிகாரத்தையும் சாதுவையும் அவன் கண்டான்; கண்டு தனது ஆத்துமாவிலே வியப்பும் அன்பும் நிறைந்தவனானான். அவனுடைய இருதயமானது தின்ந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாகக் கிறிஸ்துவுக்கு நேரே இழுப்புண்டது, கடைசியாக அவனுடைய ஆண்டவர்மீது அன்பு பெருகவே தன்னயமானது கண் மறைந்து போயிற்று. கிறிஸ்து தன்னைச் சீர்ப்படுத்தும்படியாகத் தன்னுடைய பொறாமையுள்ள சுபாவத்தையும் பேராசையையும் அவருக்கே ஒப்புவித்தான். பரிசுத்த ஆவியானவர் அவனுடைய இருதயத்தைப் புதுப்பித்து உயிர் அளித்தார். கிறிஸ்துவினுடைய அன்பானது அவனுடைய நட்த்தையை மறுரூபப்படுத்திற்று. ஒருவன் இயேசுவோடு ஐக் கியப்படும்பொழுது உண்டாகிற மாறுதல் இது தான். கிறிஸ்து அவனுடைய உள்ளத்தில் நிலைத்திருக்கும் பொழுது அவனுடைய முழுச்சுபாவமும் மாறுகிறது. கிறிஸ்துவினுடைய

தன்மையான அவருடைய அன்பானது, இருதயத்தை இளகச் செய்து, ஆத்துமாவை அடக்கி, தேவனுக்கும் பரலோகத்துக்கும் நேரே நம்முடைய, சிந்தனைகளையும், ஆசை விருப்பங்களையும் எழுப்புகிறது.

(15) **கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது தன்னை பின்பற்றுகிறவர்களுக்கு கொடுத்த ஆறுதலான வார்த்தை என்ன?**

***நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்.28:20)***

கிறிஸ்து பரலோகத்துக்கு எழுந்தருளின பின்னுங்கூட அவர் பிரசன்னம் தங்களுடனே இருப்பதாக சீஷர்கள் அறிந்தார்கள். அவர் அவர்களுடன் இருந்தது மாயையல்ல, அன்பும் ஒளியும் பொருந்தின ஒரு ஆள் போல இருந்தார். இயேசு இரட்சகர் அவர்களோடு நடந்து பேசி ஜெபித்துக்கொண்டு வந்தார்; அவர்களுடைய இருதயங்களுக்கு நம்பிக்கையையும் தேறுதலையும் அளித்தார்; இவ்வாறாகச் சமாதானத்தின் சுவிசேஷம் அவருடைய வாயிலிருக்கும்பொழுதே அந்த இயேசு பரலோகத்துக்கு எழுந்தருளினார்; தூதருடைய கூட்டம் அவரை ஏற்றுக்கொண்டபொழுதும் அவருடைய சத்தத்தின் தொனி அவர்களண்டை மீண்டும் வந்து, “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” மத். 28.:20. மனுஷ ரூபமாக அவர் பரலோகத்துக்கு ஏறினார் அவர்

தங்களுடைய சிநேகிதனாகவும் இரட்சகராகவும் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்னே வீற் றிருப்பதாகவும், அவருடைய உருக்கம் மாறாததாகவும், பாவத்தில் உழலுகிற மனுஷரைப் போன்ற தன்மை பொருந்தியவராகவுமே அவர்கள் அறிந்தார்கள். மகிமை சூழ்ந்த ஆசனங்களின் மத்தியிலிருந்துகொண்டு, கெட்டுப்போன மனுக்குலத்துக்காக மன்றாடும்பொழுது, காயப்பட்ட, அவருடைய கரங்களும், குத்துண்ட விலாப்பக்கமும், காயத்தின் தழும்புள்ள பாதங்களும், இவர் மீட்டுக்கொண்டவர்களின்மேல் எவ்வளவு அன்புள்ளவர் என்பதைத் தெளிவாக விளக்கிற்று. அவர் பரலோகத்துக்குப்போனது தங்களுக்காக ஸ்தலங்களை ஆயத்தப்படுத்த என்றும் அவர் திரும்பி வந்து அவர்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்வார் என்றும் அறிந்திருந்தார்கள்.

**(16) இயேசு தன்னை பின்பற்றுபவர்களின் இருதயத்தில் எப்போதும் இருப்பது எப்படி?**

***நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோ.14:16)***

இயேசு பரலோகத்துக்குப் போனபின்பு அவர்கள் ஒருங்கே கூடினபொழுது பிதாவை நோக்கி இயேசுவின் நாமத்தினாலே பிரார்த்தனை செய்யும்படி விரும்பினார்கள். "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில்

கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" யோ. 16:23, 24 என்ற வாக்கைச் சொல்லிக்கொண்டு பயபக்தியுடனே தலைவணங்கி ஜெபம் செய்தார்கள். "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்து மிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலுமிருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" ரோமர் 8:34 என்ற பலமான நியாயத்தைக்காட்டி, விசுவாசக்கரங்களை உயர்த்தி ஜெபித்தார்கள். "உங்களுக்குள்ளே இருப்பார்." யோ. 14:17 என்று கிறிஸ்து சொல்லியிருந்த தேற்றரவாளனை அவர்கள் பெந்தெகொஸ்தே என்னும் நாளில் பெற்றார்கள். "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" யோ. 16:7 என்றும் கிறிஸ்து சொன்னார். இதுமுதல் ஆவியானவர் மூலமாகக் கிறிஸ்து தமது பிள்ளைகளுடைய இருதயத்தில் எப்பொழுதும் வாசஞ்செய்வார் என்றாயிற்று. அவர் மனுஷனாக அவர்களோடு இருந்ததைப்பார்க்கிலும், இப்பொழுது அவருக்கும் அவர்களுக்குமுள்ள ஐக்கியம் நெருங்கிற்று. அவர்களில் வசிக்கும் கிறிஸ்துவினுடைய ஒளி, அன்பு, வல்லமை ஆகிய இம்மூன்றும் அவர்கள் மூலமாகப் பிரகாசிக்கவே, ஜனங்கள் இவர்களைக்கண்டு "ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று அறிந்துகொண்டார்கள்" அப். 4:13

**(17) கிறிஸ்து தன் சீஷர்களுக்கு ஜெபித்தபோது யாருக்கெல்லாம் ஜெபித்தார்?**

***நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ.17:20)***

ஆதியில் கிறிஸ்து தமது சீஷர்களுக்கு எவ்விதமாயிருந்தாரோ அவ்விதமாகவே இப்பொழுதும் தமது பிள்ளைகளிடத்திலும் இருக்கவிரும்புகிறார்; ஏனெனில் தம்மைச் சுற்றி நின்ற சிறிய சீஷக்கூட்டத்தாரோடு அவர் செய்த கடைசி ஜெபத்தில் "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" யோ 17:20 என்றும் சொன்னார்.
இயேசு நமக்காக ஜெபித்தார்; தாம்பிதாவோடு ஒன்றாயிருக்கிறதுபோல, நாமும் அவரோடு ஒன்றாயிருக்கும்படி கேட்டார். என்ன ஐக்கியம் பாருங்கள்! "குமாரன் வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்" யோ. 5:19 என்றும், "என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்" யோ. 14:10 என்றும் இரட்சகர் தம்மைக்குறித்துப் பேசியிருக்கிறார்.

**(18) நாம் தினமும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிந்து அவரோடு நடந்து, சத்தியத்தை அன்புடன் பகிர்ந்து கொள்வதன் விளைவு என்ன?**

*அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபே.4:15)*

இப்படி கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வசிக்கிறதுண்டானால், "தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படி விருப்பத்தையும் செய்கையையும்" பிலிப். 2:13 நம்மில் நடத்துவார். நாமும் அவரைப்போல கிரியை நடப்பித்து, அதே தன்மையைக் காட்டுவோம். இவ்விதமாக நாம் அவரை நேசித்து, அவரிலே நிலைத்திருக்கிறபடியால் "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருப்போம்" எபே. 4:15.

*நான் கிறிஸ்துவுக்குள் வரும்போது, வளர்ச்சி தொடர்செயலை தொடங்கும்போது, என் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்து கிரியை செய்கிறார் என்று உணர்கிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*கிறிஸ்துவுடன் உள்ள என் உறவில் நான் எதையும் செய்ய வேண்டியதில்லை: கவலைப்படவோ அல்லது வேலை செய்கிறதா என்று, அது ஆவிக்குரிய வளர்ச்சியை ஏற்படுத்தும்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*நான் அவரை தேட என் பகுதியை மற்றும் ஜீவனுக்கேதுவான சூழ்நிலையை தெரிந்தெடுக்கிறேன் அதினால் நான் வளர அவர் எனக்கு உதவிட முடியும்.*

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை



பாடம் 10

**ஊழியமும் ஜீவியமும்**

**(1) இயேசு நம்மை பின்பற்ற கூறும் பரலோக பிரமாணம் என்ன?**

***நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.(யோ.13:34)***

தேவன் சர்வலோகத்திலுள்ள ஜீவனுக்கும், ஒளிக்கும், சந்தோஷத்திற்கும் ஊற்றாயிருக்கிறார். சூரிய கதிர்களினின்று ஒளி வீசுமாப்போலவும், வற்றா ஊற்றிலிருந்து நீரோட்டங்கள் சுரந்தோடுமாப்போலவும் அவரிடத்திலிருந்தே சர்வ ஆசீர்வாதங்களும் நன்மைகளும் சகல சிருஷ்டிகளும் ஓடிவருகின்றன. தேவன் அருளும் ஜீவன் மனிதருடைய இருதயங்களில் எங்கெங்கே

இருந்தபோதிலும், அது மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமும் அன்புமாகப்பொங்கி ஓடக்கூடியது.

தவறி விழுந்த மனுஷரைத் தூக்கி ரட்சிப்பதே நம்முடைய இரட்சகருக்குள்ள சந்தோஷம். இதினிமித்தம், அவர் தமது ஜீவனை ஒரு பொருட்டாக எண்ணாமல் வெட்கத்தைக் களைந்து சிலுவைப்பாட்டைச் சகித்தார். அவ்விதமே தேவதூதர்களும் மற்றவர்களுடைய சந்தோஷத்தின் பொருட்டு வேலை செய்வதையே தங்கள் தொழிலாக்க்கொண்டிக்கிறார்கள். இதுதான் அவர்களுக்குச் சந்தோஷம். நிப்பந்த நிலைமையுள்ளவர்களுக்கும், எல்லா விஷயத் திலும் தங்களுக்குத் தாழ்ந்த அந்தஸ்தும் குணமும் உள்ளவர்களுக்கும் பணிவிடை செய்வது தீட்பான வேலையென்பதாக தன்னய இருதயமுள்ளவர்கள் எண்ணுகிற அந்த வேலையையே பாவமற்ற தேவதூதர்கள் செய்து வருகிறார்கள். கிறிஸ்துவானவர் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்த அன்பின் ஆவி பரலோகத்தை நிறப்புகிற ஆவியாயும், அதின் ஆனந்தத்தின் முழுச்சாரமுமாயிருக்கிறது. கிறிஸ்துவை பின்பற்றுகிற அடியாருக்கு இவ்வித ஆவி அவர்கள் செய்கிற வேலையில் இருக்கும். கிறிஸ்துவின் அன்பு இருதயத்தில் நாட்டப்படும்போது நற்சுகந்தமுள்ள பரிமளம் மறைந்திருப்பதுபோல அதுவும் மறைந்திருக்க முடியாது. அதின் பரிசுத்த சக்தி நாம் ஐக்கியப்படுகிற ஒவ்வொருவராலும் உணர்ந்துகொள்ளப்படும். இருதயத்திலிருக்கிற கிறிஸ்துவின் ஆவியானது எல்லாரையும் இளைப்பாற்றும்படி ஓடுகிறதும். அழிவுக்கேதுவானவர்களை ஜீவ

தண்ணீரைக் குடிக்கும்படி ஆவலுண்டாக்குகிறதுமான வனாந்திர நீர் ஊற்றுக்கொப்பாயிருக்கிறது.

**(2) இயேசு பூமிக்கு வந்தது ஏன்?**

***அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். (மத்.20:28)***

இயேசுவின் பேரிலுள்ள அன்பு மனுஷஜாதியை தூக்கி ஆசீர்வதிப்பதற்காக அவர் உழைத்தபடி உழைக்கவேண்டும் என்கிற ஆசையில் வெளிப்படும். நம்முடைய பரமபிதாவின் பராமரிப்பிலிருக்கிற சகல ஜீவப்பிராணிகளிட்த்திலும் அன்பும் இரக்கமும் பட்சாதாபமாயிருக்கும்படி ஏவும்.

நமது இரட்சாபெருமானின் உலக ஜீவியம் தனக்கே சௌக்கியமும் கவலையற்ற ஜீவியமுமாயிராமல் விழுந்துபோன மனுஷஜாதியை மீட்கவேண்டியே அது ஒரேபிடியாயும், ஊக்கமாயும், சலிப்பில்லா முயற்சியாயும் இருந்த்து.
மாட்டுக்கொட்டிலில் அவர் உதித்த நாள் முதல் கல்வாரியில் அவர் மரித்த நாள் வரைக்கும் தன்னை ஒறுத்தல் என்னும் பாதையிலே நடந்தார்; பிரயாசமான வேலையிலிருந்தும், வேதனை நிறைந்த பிரயாணங்களிலிருந்தும், இளைப்பும் வருத்தமுமான வேலையிலிருந்தும் தப்பித்துக்கொள்ள அவர் வழிதேடவில்லை. “மனுஷ குமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத்

தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத். 20:28) என்றார். இதுவே அவருடைய ஜீவியத்தின் பிரதம நோக்கம் மற்றவையாவும் அதற்கடுத்தவைகளும் துணையுமானவைகள். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதும் அவருடைய வேலையைச் செய்வதுமே அவருக்கு போஜனமும் பானமுமாக விருந்த்து. அவரது வேலையில், தான் என்பதற்கும், தன்னலம் என்பதற்கும் யாதாமோர் பங்கும் பாகமுங் கிடைக்கவில்லை.

**(3) நாம் எப்போது கிறிஸ்துவின் கிருபைக்கு பங்காளர்களாவோம், யோவானை போல, எந்த சாட்சியை கூற பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்துவார்?**

***மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. (யோ.1:29)***

கிறிஸ்துவின் கிருபைக்குப் பங்காளிகளானவர்கள் அவருடைய மரணபுண்ணியத்துக்கு பாத்திரவான்களான மற்றவர்களும் பரமஈவில் பங்கு பெறும் படியாக எந்தவிதமான பலியையும் செலுத்த ஆயத்தமாயிருப்பார்கள் தாங்கள் உலகத்தில் தங்கும்படி அதை முன்னுக்குக் கொண்டுவருவதற்குத் தங்களாலானவைகளையெல்லாம் செய்வார்கள். உண்மையாய்க்குணப்பட்ட ஆத்துமாவின் வளர்ச்சி இத்தன்மையான ஊக்கமுள்ளது. ஒருவன் கிறிஸ்துவண்டை சேர்ந்தவுடனே இயேசுவுக்குள் ஓர் அருமையான நண்பனைக் கண்டடைந்ததாய் மற்றவர்களுக்குத் தெரிவிக்கும்படியான வாஞ்சை அவனுடைய இருதயத்தில் புறப்படுகிறது.

இரட்சிக்கிறதும்
பரிசுத்தப்படுத்துகிறதுமான
திவ்யசத்தியத்தை அவன் இருதயத்தில்
அடைத்துவைக்க முடியாது.
கிறிஸ்துவானவருடைய நீதியின்
வஸ்திரத்தையணிந்து உள்ளான
மனுஷனில் வசிக்கும் அவருடைய
ஆவியின் சந்தோஷத்தினால்
நிரப்பப்பட்டிருப்போமாகில், நாம் அயர்ந்து
சும்மா விருக்கமாளாது. கர்த்தர் நல்லவர்
என்பதை நாம் கண்டு
ருசித்திருப்போமானால் அவரைக் குறித்து
ஏதாவது
அறிக்கையிடவேண்டியதே. பிலிப்பு
இரட்சகரைக் கண்டபோது,
செய்தவண்ணம் நாமும் மற்றவர்களை
அவருடைய திவ்யசமுகத்துக்கு
அழைத்துக்கொண்டுவருவோம். மனிதரை
வசப்படுத்தும் கிறிஸ்துவின்
தன்மையையும் காணப்படாத மறு
உலகத்தின் உண்மையையும் அவர்களுக்கு
விளக்கிக்காட்டும்படி வழிதேடுவோம்.
இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற
வாஞ்சை மிஞ்சியிருக்கும். நம்மைச்
சுற்றிலுமிருக்கிற ஜனங்கள் "உலகத்தின்
பாவங்களைச் சுமந்து தீர்க்கிற
தேவாட்டுக்குட்டியை" (யோ 1 : 29)
நோக்கிப் பார்க்கவேண்டுமென்கிற
ஊக்கமான ஏக்கம் நமக்குள்ளிருக்கும்.

**(4) தன்னலமற்ற செயல்களை மற்றவர்களுக்கு செய்வதன் பலன் என்ன?**

***உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். (நீதி.11:25)***

மற்றவர்களை ஆசிர்வதிக்கும்படி நாம்
எடுத்துக் கொள்ளும் முயற்சி நமக்கே

நன்மைகளையும் ஆசிர்வாதங்ளையும் தருவிக்கும் எத்தனமாகும். இரxaக்ஷண்ணிய முறையில் நாமும் ஒரு பங்கைச் செய்யும்படி கொடுத்த தேவனுடைய நோக்கம் இதுவே. தெய்வீக தன்மையில் பங்கடையும் சிலாக்கியத்தை தேவன் மனுஷருக்கும் ஆசிர்வாதமாக விருக்கும்படி வைத்திருக்கிறார். இதுவே தேவன் மனிதருக்கு அருளக்கூடிய மேலானகனமும், பூரண சந்தோஷமுமாயிருக்கிறது. இவ்வாறு அன்பின் வேலைகளில் பங்காளிகளாகிறவர்களெவர்களோ அவர்களே தங்கள் சிருஷ்டிகருக்குச் சமீபமாய் வந்தவர்கள்.

தேவன் சுவிசேஷ செய்தியையும், அன்புக்குரிய வேலையாகிய எல்லா பணிவிடையையும் பரமதூதர்கள் வசத்தில் ஒப்புவித்திருக்கலாமல்லவா? தம்முடைய திவ்ய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வெவ்வேறு ஒழுங்குகளை செய்திருக்கலாமல்லவா? என்றாலும், தேவன் சுயநலத்தைத் தேடாத ஊழியத்தினின்று உண்டாகிற ஆசிர்வாதத்துக்கும், சந்தோஷத்துக்கும், ஆத்மீக எழுப்புதலுக்கும் நாம் பங்காளிகளாகும்படி, தம்முடைய மட்டற்ற அன்பினாலே தம்மோடும், கிறிஸ்துவோடும், தூதரோடும் உடன் ஊழியராகிறதற்கு நம்மை ஏற்படுத்தியிருக்கிறாரே.

**(5) கிறிஸ்து கொடுத்த தன்னலமற்ற தியாகம் என்ன?**

***நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள்***

*அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே. (2கொரி.8:9)*
கிறிஸ்துவானவருடைய பாடுகளில் நமக்கிருக்கிற அந்நியோந்நியத்தின் மூலமாய்த்தான் அவருடைய அனுதாபத்துக் குரியவர்களாகிறோம் மற்றவர்களுடைய நன்மைக்காகச் செய்யப்படுகிற தற்பலியான ஒவ்வொரு கிரியையும், அதைச் செய்கிறவனுடைய இருதயத்தில் குடிகொண்டிருக்கும் விருப்பத்தை பலப்படுத்துகிறது மாத்திரமல்ல, " ஐசுரியமுள்ள வராயிருக்கும் நமது நிமித்தம் ஏழையாகி, அவருடைய எளிமையின் மூலமாய் நம்மை ஐசுவரியவான்களாக்கின உலக மீட்பரோடு நெருங்கி இருக்கவும் செய்கிறது. ஆகவே, தேவன் நம்மை சிருஷ்டித்த நோக்கம் இவ்வாறு நிறைவேறுகிறதினாலே மாத்திரம் இந்த ஜீவியம் நமக்கு ஆசிர்வாதமாகவிருக்கக்கூடும்.

கிறிஸ்துவின் ஏற்பாட்டின்படி நீங்கள் அவருடைய சீஷர்களாக வேலை செய்யப்போவீர்களானால் அவருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவீர்கள்; நீதியின்மேல் பசிதாகத்தையும், தெய்வீக காரி யங்களில் மேலான அறிவையும் அடைந்து தீர்க்கமான அனுபவத்தின் அவசியத்தையும் உணருவீர்கள்; தேவனிடத்தில் பரிந்து பேசுவீர்கள்; உங்கள் விசுவாசம் பலப்படும்; இரட்சிப்பின் கிணற்றிலிருந்து உங்கள் ஆத்துமா அதிகமாய்க் குடித்துத் திருப்தியாகும். உங்களுக்கு எதிரிடுகிற இடறுகளும் சோதனைகளும் உங்களை வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் ஏவும்,

நீங்கள் கிருபையில் வளர்ந்து, கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் தேறி, தீர்க்கமான அனுபவத்திலும் விருத்தியடைவீர்கள்.

**(6) மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற விருப்பத்தை தருகிறவர் யார்?**

*ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலி.2:13)*

**(7) மற்றவர்க்கு நன்மை செய்யும்படி தன்னலமற்ற சேவை செய்ய அர்பணித்தவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன?**

*பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய். (ஏசா.58:10-11)*

மற்றவர்களுக்கென்று செய்யும் தன்னயமற்ற வேலையின் தன்மை ஆழமும், நிலையுள்ளதும், கிறிஸ்துவின் அன்புக்கொத்தகுணமுமுள்ளது. இவ்வித தன்மையையுடையவைகளுக்கு சமாதானமும் சந்தோஷமும் முண்டாகிறது. அவர்கள் நாட்டங்கள்

மேலானவைகளாயுமிருக்கின்றன. சோம்பலுக்காகிலும் தன்னலத்துக்காகிலும் இடமில்லை. இவ்விதமாய் கிறிஸ்தவகிருபைகளை உபயோகிக்கிறவர்கள் நாளொருவண்ணம் வளர்ந்து, தேவனுக்கென்று உழைக்க சத்துவமுள்ளவர்களாவார்கள். அவர்கள் ஆவிக்குரிய தெளிவான அறிவையும், உறுதியாய் வளரும் விசுவாசத்தையும், ஜெபத்தில் அதிகமான வல்லமையையும் அடைவார்கள். தேவ ஆவியானவர் அவர்களுடைய ஆவியின் பேரில் அசைவாடி தேவ ஏவுதலுக்கு உத்தரவாக ஆத்துமாவின் பரிசுத்த ஐக்கியத்துக்கு அழைக்கிறார். இந்த விதமாய் மற்றவர்களுடைய நன்மைக் காக தங்களை தன்னயமில்லாத முயற்சிக்கு ஒப்புக்கொடுக்கிறவர்கள், மெய்யாகவே தங்கள் சொந்த இரட்சிப்பின் கிரியையை நிறைவேற்றுகிறவர்களாயிருக்கிறார்கள்.

**(8) நம் சிறந்த ஆவிக்குரிய வளர்ச்சியில் பரிசுத்த ஆவியானவரால் கிடைக்கும் இரண்டு செயல்களென்ன?**

***சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். (யாக்.1:25)***

நாம் கொடுக்கக்கூடிய உதவியைப் பெற்றுக்கொள்ள பாத்திரமானவர்களுக்கு சகாயம் புரிவதிலும் அவர்களை வாழ்த்துவதிலும் நம்மாலியன்ற மட்டும் தரித்திருப்பது நலம். கிறிஸ்து நமக்குக் கற்பித்திருக்கிற வேலையை பரோபகார சிந்தையோடே செய்வதே கிருபையில்

வளர்வதாம். தேகாப்பியாசத்தினால் பலம் வருகிறது சுறுசுறுப்பு ஜீவியத்தின் நிலைமையைக்காட்டும். கிருபையின் எத்தனங்கள் மூலமாய்வருகிற ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்காக ஒன்றும் செய்யாமல் கிறிஸ்தவஜீவியம் செய்ய முயலுகிறவர்கள், வேலை ஒன்றும் செய்யாமல் சாப்பிடுகிறவர்கள் போலிருக்கிறார்கள். லௌகீக உலகத்தில் இருக்கிறதுபோலவே ஆவிக்குரிய உலகத்திலும் இது எப்போதும் சீர்கெட்டு இழிவுக்கும் அழிவுக்கும் இடமாகிறது. ஒருவன் தன் அவயவங்களை உபயோகிக்கமாட்டேன் என்று சும்மா வைத்திருப்பானாகில் அவைகளை உபயோகிக்கும் சக்தியை விரைவில் இழந்து போவான். அவ்விதமே தேவன் அருளிய சத்துவங்களை அப்பியாசிக்காத ஒரு கிறிஸ்துவன், கிறிஸ்துவுக்குள் வளராமல் குறுகிப்போவது மாத்திரமல்ல தனக்குள்ளபலத்தையும் நாளடைவில் இழந்துவிடுகிறான்.

**(9) கிறிஸ்து சபைக்கு கொடுத்துள்ள ஊழியம் என்ன?**

***ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்.28:19-20)***

கிறிஸ்து சபையானது மனிதருடைய இரட்சிப்புக்காக தேவன் ஏற்படுத்திய காரியக்காரனுக் கொப்பாயிருக்கிறது. உலகத்தாருக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதே அதின் வேலை. கிறிஸ்தவர்கள் யாவர் மேலும் இக்கடமை சுமருகிறது. ஒவ்வொருவனுக்கும் அருளப்பட்டிருக்கிற வரத்துக்கும் தாலந்துக்கும் வசதிக்குந் தக்கபடி மீட்பருடைய கட்டளையை நிறைவேற்றி முடிக்கவேண்டியதிருக்கிறது. நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் அன்பு நம்மை அவரை அறியாதவர்கள் யாவருக்கும் கடனாளிகள் ஆக்குகிறது. தேவன் வெளிச்சத்தை நமக்கு அருளிச் செய்திருக்கிறார், அது நமக்கு மாத்திரமல்ல; நம்மிடத்திலிருந்து மற்றவர்களுக்குப் பிரதிபிம்பிக்கும்படியாகத்தான்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் விழிப்புள்ளவர்களாயிருப்பார்களாகில், இப்போது ஒரு ஆள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற அஞ்ஞானதேசங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் போயிருப்பார்கள். தாங்களே போய் இந்த வேலையைச் செய்யக்கூடாத யாவரும் அதற்கு தங்கள் பணத்தைக் கொடுப்பதினாலும், தங்கள் அனுதாபத்தைக் காட்டுவதினாலும், அதற்காக ஜெபஞ் செய்வதினாலும் நடந்தேறும்படி முயற்சிப் பார்கள். கிறிஸ்தவ தேசங்களிலும் ஆத்துமாக்கள் ஈடேற்றத்திற்காக இப்போது நடக்கிறதைவிட எவ்வளவோ அதிக ஊக்கமான வேலை நடந்தேறும் என்பதற்கு ஐயமில்லை.

## (10) கிறிஸ்தவர்களாகிய நாம், எங்கே வேலை செய்ய அழைக்கப்பட்டுள்ளோம்?

*சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன். (1கொரி.7:24)*

நாம் கிறிஸ்துவுக்காக வேலை செய்யும்படியாக இருக்குமானால். அஞ்ஞான தேசங்களுக்குப் போக வேண்டியதுமில்லை. நமக்கு அருமையும் பெருமையுமாயிருக்கிற பந்துக்களை விட்டு நீங்கவேண்டியதுமில்லை. இந்த வேலையை நம்முடைய இனத்தாரிடத்திலும், சபையிலும், நாம் சகவாசஞ்செய்கிற தோழரின் மத்தியிலும், தொழிற்சாலையில் உடன் தொழிலாளிகளிடத்திலும் செய்யலாம்.

நமது அருமை இரட்சகருடைய இவ்வுலக ஜீவியத்தின் மிகுதியான பாகம் நாசரேத்திலிருந்த தச்சுப் பட்டறையில் பொறுமையாய் வேலைசெய்வதில்தான் கழிந்தது. வேளாளர்களாலும் வேலையாட்களாலும் அறியப்படாதவருமாயும் மதிக்கப்படாதவருமாயும் அவர்கள் பக்கத்திலேகடந்துபோனபோது ஜீவாதிபதியாகிய அவரை பணிவிடையாட்களாகிய தூதர்கள் புடைசூழ்ந்து போனார்கள். அவர் பிணியாளிகளை குணமாக்கினபோதும், புசல் காற்றால் அடியுண்ட கலிலேயாக் கடலின் அலைகளின்மேல் அவர் நடந்தபோது மிருந்ததுபோலவே, தாழ்வான தம்முடைய தொழிலை செய்து வருங்காலத்திலும், அந்த வேலையை உண்மையோடு நிறைவேற்றி வந்தார்.

அவ்வாறே தாழ்வான ஊழியத்திலும், ஜீவியத்தின் மிக இழிவான நிலைமையிலுங்கூட நாம் இயேசுவோடு உலாவி வேலை நடப்பிக்கலாம்.

"அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்" (1 கொரி. 7 : 24) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஓர் வியாபாரி தன் நேர்மையினாலே தன் ஆண்டவனை மகிமைப்படுத்தத்தக்க விதமாக வியாபார தொழிலை நட்த்தலாம். அவன் கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிறவனாயிருந்தால் செய்யப்படுகிற ஒவ்வொரு வேலையிலும் தன் மார்க்கத்தை காட்டி, கிறிஸ்துவின் ஆவியை யாவருக்கும் வெளிப்படுத்துவான். சிற்பி ஒருவன் கலிலேயாக் குன்றுகளுக்கிடையில் தனியாய் நடந்து வேலைசெய்து கொண்டிருந்த அவருக்கு ஜாக்கிரதையும் உண்மையுமுள்ள பிரதுநிதியாக இருக்கலாம். கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருக்கிற ஒவ்வொருவனும், தன்னுடைய நல்ல வேலையை கவனிக்கிற மற்றவர்கள் தங்கள் சிருஷ்டிகரையும் மீட்பரையும் மகிமைப் படுத்துகிறதற்கு வழியுண்டாகும்படி அவ்வளவு நன்றாய் அதைச் செய்யவேண்டும்.

(11) **நாம் அவர்களை தாழ்மையானவர்களாக கருதினாலும், நமது திறமைகளை கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய இந்த வகையில் பயிற்சி செய்வது அவசியம் ஏன்?**

***என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்***

*கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். (யோ.15:2)*

மேலான வரப்பிரசாதங்களையும் சிலாக்கியங்களையும் தங்களைப் பார்க்கிலும் மற்றவர்கள் உடையவர்களாயிருப்பதினால், கிறிஸ்துவின் ஊழியத்திற்கு தங்கள் கொடைகளைக் கொடுப்பதற்கு அநேகர் சாக்குப்போக்குச்சொல்லுகிறார்கள் விசேஷித்தபிர காரமாய் தாலந்துகளைப் பெற்றவர்கள் மாத்திரம் தங் கள் திறமைகளை தேவசேவைக்கு பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்கிற எண்ணம் பொதுவாய் பரவியிருக்கிறது. இந்த வேலைகளிலாவது பலாபலன்களிலாவது பங்கு பெறும்படி அழைக்கப்படாதவர்களைத் தள்ளி நண்பரான சில வகுப்பாருக்கு மாத்திரம் தாலந்துகள் அருளப்படுகிறதென்பது அநேகருடைய தாற்பரியம். உவமையிலோ அப்படிக்காட்டப்படவில்லை வீட்டெஜமான் தன் வேலைகாரரை அழைத்தபோது அவர்கள் ஒவ்வொருவருக்கும் தன் வேலையைக் கொடுத்தான்.

**(12) தேவனுடைய அன்பு நம் இருதயத்தை நிரப்பும்போது, நாம் வாழ்வின் தாழ்மையான சூழ்நிலைகளை எப்படி அணுகுவோம்?**

***மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே***

*கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, (எபே.6:6-7)*

இச்சீவியத்தின் மிகத்தாழ்வான பணிவிடைகளையும் "கர்த்தருக்கென்றே" (கொலோ. 3 : 23) அன்பு நிறைந்த ஆவியோடு செய்யலாம். தேவனுடைய அன்பு இருதயத்தில் இருந்தால் அது ஜீவியத்தில் வெளியரங்கமாய் காணப்படும் கிறிஸ்துவின் நன்மணம்நம்மைச் சுற்றிலும் வீசி, நம்முடைய செல்வாக்கை உயர்த்தி ஆசிர்வாத முள்ளதாக்கும்.

(13) **தேவனோடு நமக்குள்ள உறவு சரியாக இருந்தால், மற்ற காரியங்களை பற்றி நம் சிந்தனை எப்படியிருக்கும்?**

***நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். (கொலோ.3:23-24)***

நீ தேவனுக்கென்று வேலைசெய்யப் போகுமுன் விசேஷித்த சந்தர்ப்பங்களுக்காக காத்திருக்கவாவது அரிய திறமைகளை அடைய எதிர்ப்பார்க்கவாவது அவசியமில்லை. உன்னைக்குறித்து உலகம் என்ன நினைக்கும் என்கிற எண்ணமும் உனக்குக் கிஞ்சிற்றேனும் வர அவசியமில்லை. உன்னுடைய அன்றாடகஜீவியம் உன் விசுவாசத்துக்குத் தக்கபடி சுத்தமாகவும் யாதார்த்தமாகவும் இருப்பதாக சாட்சி பகருமானாலும், மற்றவர்களுக்கு நன்மை செய்ய விரும்புகிறாய் என்று அவர்கள் உணர்த்தப்படுவார்களானாலும் உன் பிரயாசங்கள் முற்றிலும் அவமாய் போகாது.

**(14) விசுவாசம் மற்றும் பகிர்ந்து கொடுத்தலின் வாழ்விலிருந்து கிடைக்கும் பலனென்ன?**

***பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். (2 கொரி.9:6)***

இயேசுவின் அடியார்களுக்குள் மிகத்தாழ்ந்த நிலையையும் வறிஞருமாயிருக்கிறவர்களுங்கூட மற்றவர்களுக்கு ஆசிர்வாதமாய் ஜீவிக்கக்கூடும். ஏதோ ஓர் முக்கிய நன்மையைச் செய்வதாக அவர்கள் அறியாவிட்டாலும், தங்களுக்குத் தெரியாமலே நடந்தேறுகிற சொற்சக்தியினால் ஆழமும் அகலமுமான ஆசிர்வாதங்களைப் பொழியச் செய்கிறார்கள். தங்கள் பலன்களை அடையும் கடைசி நாள் மட்டும் நன்மையும் ஆசிர்வாதமும் இருக்கலாம். அவர்கள் ஏதோ பெரிய வேலையைச் செய்கிறதாக எண்ணுகிறதுமில்லை, உணருகிறதுமில்லை. தாங்கள் அடையவேண்டிய சித்தியைக் குறித்து ஏக்கங்கொள்ளவும், ஆயாசப்படவும் வேண்டியதில்லை. தெய்வீகமாக அவர்களுக்குக் கிடைத்திருக்கிற வேலையை உண்மையோடு செய்து, அமரிக் கையாய் முன்னேறிச் செல்லவேண்டியது தான்; அவர்கள் ஜீவியம் வீணாகவே கழிந்துபோகாது. அவர்களுடைய ஆத்துமாக்களும் அதிகமதிமாய் கிறிஸ்துவுக்கொப்பாய்வளர்ந்தேறும். இப்படிப்பட்டவர்கள் இச்சீவியத்தில் தேவனோடு சேர்ந்து உழைக்கிற

ஊழியராகிறார்கள். இப்படியாக இவர்கள் இதைவிட மேலான உன்னத ஊழியத்துக்கும் வரப்போகிற ஜீவியத்திலுள்ள மறைக்கப்படாத சந்தோஷத்துக்கும் தகுதியுள்ளவர்களாகிறார்கள். நண்பனே நீயும் இந்த அமைதியும் வல்லமையுமுள்ள கிறிஸ்தவ சேவைக்கு உன்னை ஒப்புக்கொடுப்பாயாக.

*மனிதகுலத்தின் தேவைகளுக்கு ஊழியம் செய்ய பரலோக மகிமையை விட்டுச்சென்ற இயேசுவுக்கு நான் நன்றி கூறுகிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*கிறிஸ்துவின் சுவிசேஷ மாதிரியை நான் பின்பற்ற பரிசுத்த ஆவியானவர் என்னை நடத்திட நான் ஜெபிக்கிறேன்: முதலாவது ஜனங்களோடு இணைந்து நண்பர்களாகுங்கள்; இரண்டாவது அவர்களின் சரீர தேவைகள் மீது இரக்கம் காட்டுங்கள் அதினால் அவர்களின் நம்பிக்கையை பெறுங்கள்; பிறகு அவர்களுக்கு சுவிசேஷத்தின் நற்செய்தியை கூறுங்கள்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*செழிப்பான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் வளர்ச்சி மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதிலேயே வருகிறது என்பதை நான் உணர்கிறேன். என் வாழ்வை நான் தேவனுக்கு அர்ப்பணித்து மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய தேவன் என்னை நடத்தும்படி நான் ஜெபிக்கிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

---

____________________________________________
____________________________________________
____________________________________________
____________________________________________
____________________________________________
____________________________________________
____________________________________________
____________________________________________
____________________________________________
___________



## பாடம் 11
## தேவனை பற்றிய அறிவு

**(1) தேவனையும் அவருடைய ஆச்சர்யமான மகிமையையும் காண்பிக்கும் எப்போதுமுள்ள மூலதனம் எது?**

*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. (சங்.19:1)*

தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தி நம்மைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளத்தேடுகிற வழிவகைகள்

அனேகமுண்டு. இயற்கைப்பொருள்கள் இடைவிடாமல் நமது புலன்களுக்கு அறிவைக் கொடுக்கின்றன. தேவனுடைய சிருஷ்டிகளிலே விளங்குகிற அவருடைய அன்பும் மகிமையும் களங்கமற்ற இருதயத்திலே பதிகின்றன. இயற்க்கை வஸ்துக்கள் மூலமாகத் தேவன் அனுப்புகிற செய்திகளைக் கவனுமுள்ள காதுகேட்டு அறிந்து கொள்ளக்கூடும். பசுமையான கழனிகள், மேகமளாவிய விருக்ஷங்கள், மொக்குகள், புஷ்பங்கள், கடந்து செல்லுகின்ற மேகங்கள், பெய்கின்ற மழை, சப்திக்கின்ற சிற்றாறு, வானமண்டலங்களின் மகத்துவங்களாகிய இவை நமது இருதயங்களோடு பேசுகிறதுபோல பேசி, அவையெல்லாவற்றையும் படைத்தவரோடு நாம் பழகிக்கொள்ளும்படி நன்மை அழைக்கின்றன.

நம்முடைய இரட்சகர் தமதுசிறந்த போதங்களை இயற்கை வஸ்துக்களோடு ஒட்டிப்பேசினார். மரங்கள், பறவைகள், பள்ளத்தாக்கிலுள்ள மலர்கள், குன்றுகள், களங்கள், அழகுவாய்ந்த ஆகாய மண்டலங்களாகிய இவை மாத்திரமல்ல, அன்றாடம் ஜீவியத்தோடு சம்பந்தப்பட்ட சம்பவங்களெல்லாம் சத்தியவார்த்தைகளோடு சேர்த்துப் பேசப்பட்டிருக்கிறபடியால், உழைப்பாளியொருவன் தனது சோலிகளின் மத்தியிலுங்கூட அவருடைய போதங்களை மிகவும் எளிதாக அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

தேவன் நம்முடைய வீடாகிய பூமியை வெகு அழகுள்ளதாகப் படைத்திருக்கிறார்; அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய சிருஷ்டிப்பின்

நலத்தைக்கண்டு, அதின் இயற்க்கையான அழகைப்பார்த்து மகிழ வேண்டுமென்று விரும்புகிறார். அவர் அழகின் மேல் பிரியமுள் ளவர், ஆயினும் வெளியான அலங்காரத்தைப் பார்க்கிலும் இருதயத்தின் உள்ளான அழகையே அதிகமாக விரும்புகிறார். மலர்களின் சௌந்தரியமான இலக்ஷணங்களாகிய தூய்மையையும் கபடமின்மையையும் நாம் பரிபாலிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

**(2) நமது பரபரப்பான மத்தியில், நாம் எவ்வாறு தேவனை கண்டு அவர் பேசுவதை கேட்பது?**

***நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். (சேலா.). (சங்.4:4)***

நாம் கூர்ந்து கவனிப்போமானால் தேவன் சிருஷ்டித்திருக்கிறவையெல்லாம், நாம் கீழ்ப்படிந்து நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று நமக்குப் போதிக்கின்றன. வழியொன்றுமில்லாத ஆகாய வெளியில் யுகம் யுகமாய்த் தங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கிற பாதைகளில் செல்லுகின்ற நட்சத்திரங்கள் தொடங்கிச் சிறிய அணுக்கள் வரையிலுமுள்ள எல்லா இயற்கைப் பொருட்களும் சிருஷ்டிகருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிகின்றன.

**(3) தேவன் தான் உருவாக்கிய அனைத்து சிருஷ்டிகள் மேலும் எப்படி இரக்கத்தை வெளிப்படுத்துகிறார்?**

***ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா?***

***ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.*** *(மத்.10:29-30)*

தேவன் படைத்திருக்கிற ஒவ்வொரு வஸ்துவையும் ஆதரித்து வளர்க்கிறார். எல்லையில்லாத ஆகாய வெளியில் தொங்குகின்ற கணக்கற்ற மண்டலங்களைத் தாங்கிக்கொண்டிருக்கிற தேவன், அச்சமின்றிப் பாடிக்கொண்டலைகிற சிறிய ஊர்க்குருவிக்குங்கூட்த் தேவையானதெல்லாவற்றையும் சவதரித்துக் கொடுக்கிறார். மனுஷர் தினந்தோறும் தங்கள் வேலைகளுக்குப் போகும்பொழுதும், ஜெபம் பண்ணும்பொழுதும், இரவில் படுக்கப்போகும்பொழுதும், அதிகாலையில் எழுந்திக்கும்பொழுதும், பணக்காரன் தனது மாளிகையில் மன்ங்களிக்க உண்ணும் பொழுதும், அல்லது ஏழையொருவன் தனது மக்க ளைக்கூட்டித் தன்னிட்த்திலுள்ள சொற்ப ஆகாரத்தை அவர்களுக்குப் பகிரும்பொழுதும், பரமபிதா இவர்கள் ஒவ்வொருவரையும் உருக்கத்தோடு கவனிக்கிறார். கடவுளுக்குத் தெரியாமல் ஒருவரும் கண்ணீர் சிந்துவதில்லை, அவர் பார்க்காமல் ஒருவரும் நகைப்பதுமில்லை.

**(4) நாம் தேவனை நேசித்து, அவரை விசுவாசித்து நம் வாழ்வை அவருடைய கரங்களில் கொடுக்கும்போது, நமக்குள்ள பாதுகாப்பு என்ன?**

***அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும்***

*நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோ.8:28)*

இதை நாம் பூரணமாக நம்புலோமானால் நமக்கு அடாத கவலைகளெல்லாம் நீங்கிவிடும். நமது ஜீவியத்தில் நாம் எடுத்துக்கொள்ளும் காரியங்கள் தவறிப்போகாமல் கைகூடிவரும்; ஏனெனில், ஒவ்வொரு காரியமும், அது பெரிதானாலும் சரி, சிறிதானாலுஞ்சரி, தேவனுடைய கரங்களில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும்; தேவனுக்கோ பல கவலைகளால் மயக்கமில்லை, அவற்றின் பாரத்தால் அவர் அழுந்திப்போகிறதுமில்லை. அப்ப்டியானால் அனேகர் அறியக்கூடாத ஆத்தும இளைப்பாறுதலை அடையலாம்.

**(5) நாம் கற்பனை செய்வதை காட்டிலும் மேலான மகிமையோடே தான் விடுவித்த பிள்ளைகளுக்கு "எல்லாவற்றையும்" நன்மைக்கேதுவாக தேவன் செய்வது என்ன?**

***சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். (வெளி.21:5)***

உன்னுடைய புலன்கள், கண்ணைக்கவருகின்ற இந்த உலகத்தின் அழகிலே மகிழும்பொழுது, வரப்போகிற மறு உலகத்தைப்பற்றி நினை; அங்கே பாவ மரணங்களின் தோஷம் காணப்படுகிறதில்லை, சாபத்தின் நிழல் இயற்கைப்பொருட்கள்மேல் படுகிறதுமில்லை. இரட்சிக்கப்பட்டவர்களுடைய

இன்பகரமான இருப்பிடத்தை உன் உள்ளத்தில் பாவனை செய்துகொள்; பின்னும் அது நீ பவனை செய்து கொண்டதைக் காட்டிலும் ஆயிரமடங்கு மகத்துவம் பொருந்தியதென்றும் ஞாபகப்படுத்திக்கொள். இயற் கையாக தேவன் அளித்திருக்கிற விதவிதமான வஸ்துக்களில், அவருடைய சிறந்த மகிமையின் ஒரு சிறிய ஒளியைமாத்திரம் நாம் பார்க்கிறோம், "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் காணவுமில்லை காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" 1 கொரி. 2 : 9 என்று எழுதியிருக்கிறது.

கவி பாடுகிறவர்களும் தாபரசங்கம் சாஸ்திரிகளும் இயற்கை விஷயமாகப் பல காரியங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் உலகத்தின் அழகை வெகு கணிசத்தோடு கவனித்து இன்பம் அனுபவிக்கிறவன் கிறிஸ்தவனே; ஏனென்றால் அவன் எது எது தனுடைய பிதாவின் கைவேலை என்று அறிந்து, மலர் செடி மரங்களில் விளங்குகின்ற அவருடைய அன்பைக் காண்கிறேன். குன்று, பல்லத்தாக்கு, நதி, சமுத்திரமாகிய இவைகள் தேவன் மனுஷனுக்குக் காட்டியிருக்கிற அன்பின் தோற்றங்களென்று நோக்கிப் பார்க்காத மனுஷன் அவற்றின் அழகு நலத்தை அறிந்துகொள்ளவுமுடியாது.

**(6) நாம் தேவனுடைய ஆவியோடு ஒன்றும்போது, நாம் தேவனை பற்றி கற்றுக்கொள்ளும் பாடங்கள் என்ன?**

***அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்; பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது. (சங்.33:5)***

தேவன் நமக்காகச் செய்கிற காரியங்கள் மூலமாகவும், இருதயங்களில் கிரியை நடப்பிக்கிற அவருடைய ஆவியின் மூலமாகவும் அவர் நம்மோடு பேசுகிறார். நமக்குநேரிடுகிறசம்பவங்களிலும் நம்மைச் சுற்றிலும் உண்டாகிற மாறுதல்களிலும் அனேக மேன்மை யான படிப்பினைக்கற்றுக்கொள்ளலாம்; ஆனால் அந்தப்படிப்பினைகளை அறிந்துகொள்ளும்படி நாம் ஆயித்தமாயிருக்கவேண்டும். தேவனுடைய படைப்புத் தொழிலை அறிய விரும்பினசங்கீதக்காரன், "பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது" சங். 33 : 5 என்றும், "எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்க்க் கடவன்; ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள்" சங். 107 : 43 என்றும் சொல்லுகிறான்.

**(7) ஆணாதிக்க மனிதர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அனுபவங்களை பற்றி வேதத்தில் பதிவிடப்பட்டுள்ளது ஏன்?**

***தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (ரோ.15:4)***

தேவன் தமது வார்த்தையின் மூலமாகவும் நம்மோடு பேசுகிறார். இதிலே அவருடைய குணாதிசயம் எவ்விதமானதென்றும், அவர்

மனுஷரோடு நடந்து கொள்வது எவ்வாறென்றும், மீட்பின் பெரிய வேலை எப்படிப்பட்டதென்றும் வெகு தெளிவாக்க் காட்டியிருக்கக் காணலாம். இன்னும் இதிலே முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், மற்ற மற்ற பூர்வீக பரிசுத்தவான்களாகிய இவர்களுடைய சரித்திரம் நமக்கு முன்னே விரிக்கப்படுகிறது. அவர்களும் "நம்மைப்போலப் பாடுள்ள மனுஷர்தான்" யாக். 5. 17. நமக்கு நேரிடுகிறதைப்போன்ற தடைகள் அவர்களுக்கு இருந்த போதிலும், அவர்கள் அவற்றை எவ்வாறு மேற்கொண்டார்களென்றும், நன்மைப்போல அவர்களுக்கும் சோதனைகளுண்டானபோதிலும், அவர்கள் எவ்விதமாகத் தைரிய நெஞ்சுடையவர்களாகித் தேவகிருபையால் அவற்றை ஜெயித்தார்கள் என்றும் நாம் பார்க்கிறோம் இதைப் பார்க்கப் பார்க்க, நீதிமான் களாவதற்கு நாம் படுகிற பிரயாசத்தில் தைரியங்கொள்ளுகிறோம். அவர்களுடைய கஷ்டங்கள் மூலமாக்க் கிடைத்த விலையேறப்பெற்ற ஞானத்தையும் அறிவைப் பற்றியும், அவர்களுடைய ஒளி, அன்பு, ஆசிர்வாதங்களைப் பற்றியும், அவர்களுக்கு அருளப் பட்டகிருபையின் பெலத்தால் அவர்கள்செய்த வேலையைப்பற்றியும் நாம் படிக்கும்பொழுது அவர்களைத் தூண்டின அதே ஆவியனவர், பரிசுத்த வைராக்கிய மென்ற தீபத்தை நமது இருதயத்திலே ஏற்றி, குணாதிசயத்தில் அவர்களைப்போல- அதாவது தேவனோடு ஜீவிப்பதில் அவர்களைப்போல இருக்கவேண்டுமென்ற ஆசையை எழுப்புகிறார்.

**(8) வேதத்தை படிக்கும்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள இரண்டு விசேஷித்த ஆசீர்வாதங்கள் என்ன?**

***வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. (யோ.5:39)***

"என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" யோவா. 5 : 39 என்று இயேசு பழைய ஏற்பாட்டு வேதாகமத்தைப் பற்றிப்பேசினார்; அப்படியே புதிய ஏற்பாட்டைப்பற்றியும் இதற்கதிகமான நிச்சியத்தோடு சொல்லலாம். "என்னை" என்ற வார்த்தையில் குறித்த மீட்பர்பேரிலேதான் நித்திய ஜீவனையடைவதற்கு நமக்கு இருக்கிற நம்பிக்கை நிலைத்திருக்கிறது. வேதம் முழுவதும் கிறிஸ்துவைப் பற்றிப் பேசுகிறது. "உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" யோ. 1 : 3 என்று சொல்லியிருக்கிறபடியால், சிருஷ்டிப்பின் முதல் சங்கதி தொடங்கி. "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" வெளி. 22 : 12 என்ற கடைசி வாக்குத்தத்தம்வரை அவருடைய கிரியைகளைப்பற்றி வாசித்து அவரு டைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறோம். நீ இரட்சகருடனே நெருங்கி பழக விரும்பினால் பரிசுத்த வேதாகமத்தைப்படி.

**(9) தேவனுடைய வார்த்தையை படித்து அதை தியானித்து அவரை பற்றி அறிந்து கொள்வது மிக முக்கியமானது ஏன்?**

***ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோ.6:63)***

தேவனுடைய வசனங்களால் உன் இருதயத்தை நிரப்பு. அவைகள் உன்னுடைய கொடுந்தாகத்தைத் தணிக்கிற ஜீவத்தண்ணீராகிறது. அவைகள் வானத்திலிருந்து வந்த ஜீவ அப்பமுமாம். "னீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" யோவா. 6 : 53 என்றும், "னான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது" யோவா. 6 : 63 என்று இயேசு சொல்லியிருக்கிறார். நம்முடைய சரீரங்கள் நாம் புசித்துக்குடிக்கிறவைகளால் வளருகின்றன இயற்கைப் பொருட்களில் எவ்விதமான ஒழுங்கு இருக்கிறதோ, அவ்விதமே ஆவிக்குரிய விஷயத்திலும் இருக்கிறது; நாம் எதைப்பற்றித் தியானிக்கிறோமோ அது ஆத்தும சுகத்தையும் பலத்தையும் கொடுக்கும்.

(10) **பவுலை போல, வேதத்தின் எந்த அற்புதமான கருத்தில் நாம் வாழ்ந்து அதை பகிர்ந்து கொள்ளவேண்டும்?**

***இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். (1 கொரி.2:2)***

மீட்பின் விஷயத்தைப்பற்றித் தூதர்களுங்கூட கவனித்து நோக்க

விரும்புகிறார்கள். நித்தியத்தின் யுகாயுகங்களாக, மீட்கப்பட்டவர்களுடைய சாஸ்திரமும் சங்கீதமும் அந்த விஷயத்தைப்பற்றித் தானிருக்கும். அது இப்பொழுது நாம் கவலையோடு படித்துச் சிந்திப்பதற்கேர்றபொருளல்லவா? இயேசுவினுடைய அலவிறந்த இரக்கம், அன்பு ஆகிய இவற்றைப்பற்றி யும், நமக்காக அவர் செலுத்தின பலியைப்பற்றியும் கவனத்தோடும் வணக்கத்தோடும் சிந்திக்கவேண்டியது நமது அருமையான மீட்பரும் மத்தியஸ்தருமானவருடைய இலட்சணங்களைப்பற்றி நாம் அடிக்கடி பேசவேண்டும். தமது ஜன்ங்களைத் தங்கள் பாவங்களினின்று இரட்சிக்கும்படி வந்தவருடைய வேலையைப்பற்றித் தியானிக்கவேண்டும். பரலோகத்துக்கடுத்த காரியங்கள் நாம் இவ்வாறு தியனிக்கும்பொழுது, நம்முடைய விசுவாசமும் அன்பும் பெலனடைகின்றன; இவற்றோடு நமது ஜெபங்கள் கலந்து வரும்பொழுது, அவைகள் தேவனுக்கு மிகவும் பிரீதியுள்ளவைகளாகும். நமது ஜெபங்கள் கருத்தும் ஊக்கமுமுள்ளவையாகும். இயேசுவின்மீது விடாப்பற்று உண்டாகும்; அவர் மூலமாகத் தேவனண்டை வருகிற எல்லாரையும் கடைசிபரியந்தம் இரட்சிக்க அவருக்கு வல்லமையுண்டு என்ற அறிவானது ஒவ்வொருனாளும் உயிரைடைந்து ஒங்கும்.

**(11) நம் குணங்கள் பெலப்பட எந்த வகை காரியங்களில் நாம் தரித்திருக்க வேதம் அறிவுறுத்துகிறது?**

***கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ,***

*நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். (பிலி.4:8)*

**(12) தேவனுடைய வார்த்தை மற்றும் பரிசுத்தத்தை தியானித்து அவரை பற்றிய அறிவை பெறும்போது, நம் மீதும் நாம் மற்றவருக்கு சாட்சி கூறுவதிலும் உள்ள விளைவு என்ன?**

*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2கொரி.3:18)*
இரட்சகருடைய உத்தமத்தைப்பற்றி நாம் தியானிக்கும்பொழுது, அவருடைய பரிசுத்தத்தின் சாயலாக நாம் முழுவதுமாக மாறி உயிரடையவேண்டுமென்ற ஆசைகொள்வோம். நாம் வழிப்பட்டுத்திகிறவரைப் போல நாம் ஆகவேண்டுமென்று நமது ஆத்துமாவிலே பசிதாகமுண்டாகும். எவ்வளவுக்கதிகமாக நமது எண்ணங்கள் கிறிஸ்து மேலே இருக்கிறதோ, அவ்வளவுக்கதிகமாக நாம் மற்றவர்களிட்த்தில் அவரைப்பற்றிப் பேசி, உலகத்துக்கு அவரை வெளிப்படுதுவோம்.

**(13) வேதாகமம் யாருக்கு ஒளி கொடுத்து ஞானவானாக மாற்றும்?**

*கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது;*

*கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறத. (சங்.19:7)*

வேதமானது அறிவாளிகளுக்காக மாத்திரம் அல்ல, சாதாரண ஜன்ங்களுக்கென்றே எழுதப்பட்டது. இரட்சிப்புக்கவசியமான பெரிய சத்தியங்கள் பட்டப் பகல்வெட்டவெளிச்சமாக வரையப்பட்டிருக்கின்றன. ஆனால், தேளிவாகக் காட்டியிருக்கிற தேவனுடைய சித்தத்தைப்பின்பற்றாமல், தங்கள் சுய புத்தி மார்க்கம் செல்லுகிறவர்களைத் தவிர, வேறொருவராவது தங்கள் வழிதவறிக் கெட்டுப்போகமாட்டார்கள்.

**(14) தேவனுடைய வார்த்தையை தனிப்பட்ட விதத்தில் படிப்பது மிக முக்கியமானது ஏன்?**

***நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2தீமோ.2:15)***

வேதம் கற்பிக்கிறதைப்பற்றிப் பிறிதொருவன் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளாமல், நமக்குள் நாமே தேவ வசனத்தைப் படிக்கவேண்டும். நாமே சிந்தனை செய்து அறிவடைவதற்குப் பதிலாக, மற்றவர்கள் ஆலோசித்துப் பேசுவதை நாம் அங்கிகரிக்கத் தலைப்படுவோமாகில், நம்முடைய ஊக்கங்கள் குன்றி, நமது திறமையெல்லாம் குறைந்துபோகும் சிறந்த மனோதத்துவங்களுக்கேற்ற காரியங்களில் அவற்றைச் செல்லவிடாமல் தடுப்போமானால், அவையும் குறுகிப்போகும், இப்படிக்

குறுகிப்போகுமாயின், தேவ வசனத்தின் ஆழ்ந்த கருத்தை அறிந்துகொள்ளுந்திறமை அந்தத் தத்துவங்களுக்கு இல்லாமலே போகும். வேதவசனங்களையும், ஆவிக்குரிய விஷயங்களையும் ஒன்றோடொன்று ஒத்துப் பார்த்து, இவ்விதமாக வேதாகமத்திலுள்ள பொருட்களின் சம்பந்தத்தைக் கண்டுகொள்ளுவதிலே நமது மனதைச் செலுத்தினால் நமது புத்தி விசாலமாகிறது.

(15) **வேதாகமத்தை எந்த விதத்தில் படிப்பது மிக பயனுள்ளதாக இருக்கும்?**

***நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*** *(சங்.119:11)*

புத்தியைப் பலப்படுத்துவதற்கு, வேதம் படிப் பதைப் பார்க்கிலும் தக்கது வேறேன்றுமில்லை. எண்ணங்களை மேலானதாக்கித் தத்துவங்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பதற்கு, ஆழ்ந்த கருத்துக்கள், சிறந்த சத்தியங்களடங்கிய வேதாகமத்தைப் போன்ற சக்தியுள்ள புஸ்தகம் பிறிதொன்றுமில்லை, மனுஷர் தகுந்த பிரகாரம் தேவ வார்த்தையைப் படிப்பார்களானால் அவர்கள் புத்தி விசாலிக்கும், அவர்களுக்குச் சிறந்த குணமுண்டாகும், காண்பதற்கருமையான உறுதியான நோக்கமுடையவர்களாவார்கள்.

வேதாசமத்தை விரைவாக வாசிப்பதினால் யாதொரு பயனுமில்லை. அவ்வாறு ஒரு மனுஷன் வேத முழுவதும் வாசித்தபோதிலும், அதின் நலத்தைக் காணவாவது, ஆழ்ந்து புதைந்த கருத்தை அறிந்து கொள்ளவாவது முடியாமல்

போகிறான். ஒருவசனத்தின் உட்கருத்து நமது மனதுக்குத் தெளிவாகி, இரட்சணியத்துக்கும் அதற்குமுள்ள சம்பந்தம் பிரத்தியட்சமாகும்வரையிலும் நாம் அந்த ஒரேவசனத்தை படிப்போமானால், அது, குறித்து நோக்கமுமில்லாமல் ஒரு உபதேசமும் அடையாமல் அனேக அதிகாரங்களை வாசிப்பதைப் பார்க்கிலும் மிகவும் பிரயோசனகரமானதாகும். வேதாகமத்தை உன்னிட்த்திலே வைத்துக்கொள். சமயங்கிடைத்தவேளையில் அதைப்படி; வசனங்களை ஞாபகத்தில் பதி. வீதியில் வழி நடக்கும் பொழுதுங்கூட நீ ஒரு பாகத்தை வாசித்து அதைப்பற்றிச் சிந்தனைசெய்து, இவ்வாறாக அதை உன் உள்ளத்தில் பதியச்செய்யலாம்.

**(16) நாம் வேதத்தின் சரியான ஆழமான சத்தியத்தை கற்றுக்கொண்டால், நாம் வேதம் படிப்பதில் எப்படி அணுகவேண்டும்?**

***கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள். (ஏசா.28:10)***

நாம் கருத்தோடு கவனித்து ஜெபசிந்தையோடு படிக்காவிட்டால் நாம் ஞானமடைய முடியாது. வேதத்தின் சிலபாகங்கள் மெய்யாகவே மிகத்தெளிவாயிருக்கிறபடியால், ஒருவராவது தப்பர்த்தம் கொள்ளமுடியாது, ஆனால் பார்த்த உடனே அர்த்தம் விளங்கிக்கொள்ள முடியாத பாகங்களும் இருக்கின்றன. நாம் வேதத்தின் ஒருபாகத்தை மற்றொரு பாகத்தோடு

ஒப்பிட்டும் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட படிப்புக்கு மிகுதியான பலன்கிடைக்கும், சுரங்கம் தோண்டுகிற ஒருவன் பூமியினுள் மறைந்திருக்கிற பொன் தங்கங்கள் படலம் படலமாகப் போகிறதைகணடு கொள்ளுகிறான். அதுபோலவே, மறைக்கப்பட்ட பொக்கிஷத்தைத் தேடுகிறது போல எவன் தேவனுடைய வார்த்தையை விடாமுயற்சியாக ஆராய்கிறானோ அவனுக்குக் கவலையீனமாக வாசிக்கிறவனுடைய கண்ணுக்கு மறைந்துபோகிற அனேக பெரிய சிறந்த சத்தியங்கள் தென்படும். எழுப்புதலான வார்த்தைகளை நாம் நமது இருதயத்திலே வைத்துச் சிந்தனை செய்தால் அவைகள் ஜீவ நீரூற்றிலிருந்து ஒடுகிற நதிகளைப்போலிருக்கும்.

**(17) வேதாகமத்தை படிக்கும் முன்பு, பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலை கேட்பதும் ஜெபிப்பதும் மிக முக்கியமானது ஏன்?**

***என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (ஏரே.33:3)***

ஜெபம் செய்யாமல் வேதத்தை வாசிக்கக்கூடாது. அதின் பக்கங்களைத் திறக்குமுன்னே பரிசுத்த ஆவியானவருடைய வெளிச்சம் கிடைக்கும்படி கேட்கவேண்டும், அப்படியானால் அது நமக்கு அளிக்கப்படும். நத்தான்வேல் இயேசுவண்டை வந்தபொழுது “இதோ கபடற்ற உத்தம் இஸ்ரவேலன்” என்று இரட்சகர் சொன்னார். அதற்கு

நாத்தான்வேல்" நீர் என்னை எப்படி அறிவீர்?" என்றான். இயேசு அவனை நோக்கி, "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக்கண்டேன் என்றார்" யோ. 1: 47, 48. சத்தியமெது என்று நாம் அறிந்துகொள்ளும்படியாக அறிவை நமக்குத் தரும்படி அவரை நாம் தேடினால், இரகசியமான இடங்களில் நாம் ஜெபித்தபோதிலும் அவர் அங்கும் நம்மைப்பார்க்கிறார். தெய்வ ஆதரவை மனத்தாழ்மையோடு தேடுகிறவர்கள் யார் யாரோ அவர்களுடனே ஒளியுள்ள உலகத்திலிருந்து தேவதூதர்களும் வந்து இருப்பார்கள்.

(18) **யாரிடமிருந்து தெய்வீக சத்தியம் வெளிப்பட்டது?**

***சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோ.16:13)***

பரிசுத்த ஆவியானவர் இரட்சகருடைய மேன்மையையும் மகத்துவத்தையும் உயர்த்திக் காட்டுகிறார் கிறிஸ்துவையும், அவருடைய நீதியின் பரிசுத்தத்தையும், அவராலே நமக்குக்கிடைத்திருக்கிற பெரிய இரட்சிப்பையும் உலகத்துக்குக் காட்டுவதே அவருடைய முக்கிய வேலையாகும். "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" யோவா. 16: 14 என்று இயேசு சொல்லுகிறார். சத்திய ஆவியானவர் ஒருவரே தேவனுடைய சத்தியத்தை பிரயோசனமுள்ளதாகப் படித்துக்

கொடுக்கக்கூடிய உபாத்தியாயர். மனுக்குலத்துக்காகத் தமது குமாரன் மரிக்கும்படி அவரைக் கொடுத்து, மனுஷனுக்குப் போதகராகவும் எப்பொழுதும் வழிகாட்டியாகவுமாக இருக்கும்படி தமது ஆவியை நியமித்திருக்கிறபடியால் தேவன் எவ்வளவாக மனுஷரை மதிக்கிறார் என்று பாருங்கள்.

*தேவனுடைய வார்த்தையில் நான் கற்றுக்கொள்தல், பொறுமை, ஆறுதல் மற்றும் நம்பிக்கையை காண்கிறேன். நான் இதை படிக்க அவரிடம் தணியாத தாகத்தை கேட்கிறேன், அதினால் நான் அவருடைய சத்தியத்தை இருதயத்தில் வைத்து அவருக்கு எதிராக பாவம் செய்யாதிருப்பேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*பரிசுத்த ஆவியானவர் என் ஆசிரியராக இருக்கவும் தாழ்மையுள்ள இருதயத்தை எனக்கு கொடுக்கவும் நான் ஜெபிக்கிறேன். நான் ஞானத்திற்காக ஜெபிக்கிறேன் அப்போது ஒவ்வொரு இடத்திலும் சரியாக சத்தியத்தை புரிந்துகொள்ள முடியும்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*என் முழு இருதயம், சிந்தை மற்றும் ஆத்துமாவோடு தேவனை தேடுவது என் நோக்கமாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்தலை புரிந்துகொள்வது என் இருதயத்தின் விருப்பமாயிருக்கிறது. அப்போது நான் ஒளியை பின்பற்றி வேதம் கூறிய நித்தியத்திற்கான பாதையை பின்பற்ற முடியும்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*



பாடம் 12

## ஜெபத்தின் சிலாக்கியம்

**(1) ஜெபத்தின் மூலம் தேவனை சந்திப்பது மிக முக்கியம் ஏன்?**

***அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். (ஏரே.29:12)***

தேவனாகிய பிதாவானவர் உலக இயற்கை, வேத வெளிப்படுத்தல், காருண்ணிய பராமரிப்பு, அவருடைய ஆவியின் சொல் சக்தி ஆகிய இவைகளின் மூலமாய் நம்மிடத்தில் பேசுகிறார். ஆயினும் இவைகள் போதுமானதல்ல. நாம் நாம்முடைய இருதயங்களை அவரிடத்தில் ஊற்றிவிடவேண்டும். ஆவிக்குறிய ஜீவனும் ஊக்கமும் இருதயங்களை அவரிடத்தில் ஊற்றிவிடவேண்டும். ஆவிக்குறிய ஜீவனும் ஊக்கமும் இருக்கத்தக்கதாக, நம்முடைய பரம பிதாவினிடத்தில் நமக்கு நெருங்கிய சகவாசமிருக்கவேண்டும். நம்முடைய மனோதத்துவங்கள் அவருக்கு நேராக இழுக்கப்படலாம். அவரது திவ்ய கிரியைகள், இரக்கங்கள், ஆசீர்வாதங்கள் முதலியவைகளைக் குறித்தும் நாம் சிந்திக்காலாம். என்றாலும் இது முற்றிலும் அவரோடு சம்பாஷிப்பதல்லவே. நாம் தேவனேடு கலந்துறவாடுவதற்கு நம்முடைய அன்றாடக உண்மையான ஜீவியத்தைப்பற்றி ஏதாவது அவருக்குச் சொல்லத்தக்க காரியம் நமக்கிருக்கவேண்டும்.

ஒர் நண்பனுக்கு நம்முடைய இருதயத்தை நாம் திறப்பதுபோல தேவனுக்கும் அதைத் திறந்து காட்டுவதுதான் ஜெபம். நாம் எப்படியிருக்கிறோம் என்று காட்டுவதற்கு அது அவசியமல்ல அவரை ஏற்றுக்கொள்ள

நம்மைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குவதற்கே அவசியமாயிருக்கிறது. ஜெபம் தேவனை கீழே நம்மிடத்தில் கொண்டுவருகிறதில்லை, நம்மையே அவரண்டை மேலே கொண்டுபோகிறது.

**(2) நாம் ஜெபத்தில் இயேசுவிடம் வரும்படி ஏன் அவர் அழைக்கிறார்?**

***அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். (1பேது.5:7)***

இயேசு பெருமான் இப்புவியில் அவதார புருஷனாய் எழுந்தருளிய காலத்தில் ஜெபிக்கவேண்டியதெவ்வாறு என்று தமது தொணடர்களுக்குப்போதித்தருளினார். அவர்கள் அன்றாடக தேவைகளை தேவசமுகத்தில் தெரிவிக்கவும், அவர்கள் கவலைகள் யாவற்றையும் அவர்மேல் சுமத்தவும் ஆக்கியாபித்தார். அவர்களுடைய வேண்டுதல்கள் கேட்யிருக்கிறது.

**(3) கிறிஸ்து பூமியில் வாழ்ந்தபோது, ஜெபத்தில் பிதாவிடம் உள்ள ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக எதை கூறினார்?**

***அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார். (மாற்.1:35)***

இயேசு சுவாமி தாமுங்கூட மானிடர் மத்தியில் சஞ்சாரஞ் செய்தபொழுது அடிக்கடி ஜெபித்து வந்தார். இரட்சகர் தாமே நம்முடைய குறைகளையும் பலவீனங்களையும் ரூபகாரமாய் கண்டுணர்ந்து, நம்முடைய கடமையையும்

பாட்டையும் சகிக்க இடைகட்டினவராய் வருவதற்கு தமது பிதாவிடத்தில் புதுபலத்தையும் சக்தியையும் நாடி அதிலே விண்ணப்பமும் மனுவும் செய்கிறவரானார். எல்லாக் காரியத்திலும் அவர் நமக்கு முன்மாதிரியாயிருக்கிறார். "
எல்லா வகையிலும் நம்மைப்போல சோதிக்கப்பட்ட" அவர் நம்முடைய குறைகளில் நமக்கு ஒர் சகோதரனாயிருக்கிறார்; அவர் பாவமற்றவராயிருந்தபடியால் அவருடைய சுபாவம் தீமைக்கு விலகி நின்றது. பாவம் நிறைந்த உலகத்திலே அவர் ஆத்துமா வேதனையையும் போராட்டத்தையும் சகித்தது. அவரது மனுஷீகத்தன்மை ஜெபத்தை அத்தியந்த அவசியமும் அநுகூலமான சிலாக்கியமுமாகச் செய்தது. தமது பிதாவின் அந்நியோந்நியத்தில் ஆறுதலையும் ஆநந்தத்தையும் ஆரோக்கியத்தையும் சுகித்தார். உலகரட்சகரும் தேவகுமாரனுமானவர் ஜெபம் இன்றியமையாத்தென்றுணருகிறதாயிருந்தால், பலவீனமும் பாவமுமுள்ள சாவுக்குரிய மனுஷர் ஊக்கமும் வைராக்கியமுமுள்ள ஜெபம் அவசியமென்று எவ்வளவு அதிகமாய் உணர்ந்தறிய வேண்டும்.

**(4) நாம் ஜெபத்தில் தேவனிடம் வருவது எப்படி?**

***ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி.4:16)***

பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா தமது ஆசீர்வாதத்தின் நிறைவை

நமக்கருளுவதற்காகக் காத்திருக்கிறார். எல்லையில்லா அன்பின் ஊற்றண்டையில் சென்று அதைத்திருப்தியாய்ப்பருகுவது நமது சிலாக்கியம். நாம் இவ்வளவு சொற்பமாய் ஜெபிப்பது எவ்வளவு ஆச்சரியம்! தேவன் தம்முடைய பிள்ளைகளில் தாழ்ந்தவர்கள் செய்கிற உண்மையான் விண்ணப்பத்தையுங்கேட்க விருப்பமும் ஆயத்தமுமாயிருக்கிறார். ஆனாலும் நமது குறைகளை தேவனுக்குத் தெரிவிக்க மிகவும் வெளிப்படையான பிரியமின்மை நமக்கு இருக்கிறதே. அளவில்லா அன்புள்ள தேவனுடைய இருதயம் மனிதருக்காகப் பரிதபிக்கிறபோதும், அவர்கள் கேட்கவும் நினைக்கவும் கூடியவகைகளுக்குமேலாக அருள ஆயத்தமாயிருக்கிறபோதும், அற்பசொற்பமாயும்சுருக்கமாயும் ஜெபித்து குறைந்த விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறபோதும், சோதனைக்குள்ளாயிருகிற நிர்ப்பாக்கியமும் நிப்பந்தமுமுள்ள நரஜீவிகளைப் பற்றி பரம சேனையின் திரள்கள் என்னதான் நினைப்பார்கள்? தேவதூதர்கள் தேவனுக்கு மன்பாகப் பணிந்து தொழுவதை விரும்புகிறார்கள். அவரண்டை நெருங்கி அவர் சமீபத்திலிருக்க ஆசைப்படுகிறார்கள். தேவனோடு ஐக்கியமாகவிருப்பதே அவர்கள் உன்னத இன்பம் என்று எண்ணுகிறார்கள். தேவன் மாத்திரம் அருளக்கூடிய உதவிக்கு எவ்வளவோ அதிகம் அவசியமுள்ளவர்களாயிருக்கிற இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் அவருடைய ஆவியின் ஒளியின்றியும், அவருடை சமுகத்தின் கூட்டுறவின்றியும் நடக்கிறதற்குத் திருப்தியுள்ளவர்களாயிருக்கிறதைக் காணலாம்.

**(5) சோதனையை மேற்கொள்ள வைக்கும் இரண்டு வழிகள் என்ன?**

***நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். (மத்.26:41)***

ஜெபத்தை அசட்டை செய்கிறவர்களைப் பொல்லாதவனுடைய காரிருள் மூடிக்கொள்ளுகிறது காதுக்குள் ஒதும் சோதனைகளினால் சத்துரு அவர்களைப் பாவஞ்செய்யும்படி வசப்படுத்துகிறான். ஏனென்றால் அவர்கள் ஜெபத்தைப்பற்றிய திவ்ய ஏற்பாட்டில் தேவன் அவர்களுக்குக் கடாட்சித்திருக்கிற சிலாக்கியங்களை உபயோகிக்காமல் போவதினாலேதான். சர்வாதிகாரத்தினாலே அளவிறந்த பொக்கிஷசாலைத் திறப் பதற்கு விசுவாசம் என்னும் கையிலே ஜெபமானது திறவுகோலாயிருக்கும்போது, தேவனுடை குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பவர்கள் ஜெபிப்பதற்குப் பிரியமற்றிருப்பதேன்? இடைவிடாத ஜெபமும், ஜாக்கிரதையான விழிப்பும் நமக்கில்லா தபட்சத்தில், கவலையற்றவர்களாய் வளர்ந்து நேரான பாதையினின்று விலகிப்போகும் அபாயத்திற்குள்ளாவோம். ஊக்கமான வேண்டுதலினாலும் விசுவாசத்தினாலும் சோதனையை எதிர்க்கத்தக்க பலத்தையும் கிருபையையும் நாம் அடையாதபடி கிருபாசனத்துக்குப்போகும் வழியை மறிக்க சத்துருவானவன் இடைவிடாமல் வகை தேடுகிறான்.

**(6) தேவன் நம் ஜெபத்திற்கு பதில் கொடுப்பதற்கு, தாவீதை போல நம் ஆவிக்குரிய நிலை எப்படியிருக்க வேண்டும்?**

***தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. (சங்.63:1)***

தேவன் நம்முடைய ஜெபங்களைக்கேட்டு, உத்தரவு அருளுவார் என்பாதாக நாம் எதிர்பார்க்கக்கூடிய சில நிபந்தனைகளுண்டு, அவருடைய சகாயம் நமக்கு அவசியமென்று உணர்வதே அவைகளில் முதன்மையானது. "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வரண்டநிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்" (ஏசாயா 44: 3) என்று வாக்கிருளியிருக்கிறார். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் தேவன்பேரில் வாஞ்சையுள்ளவர்களாகி, நிரப்பப்படுவார்கள் என்று நிச்சயிக்கலாம். இருதயமானது ஆவியானவருடைய நடத்துதலுக்கு உள்ளமையவேண்டும்; அல்லவென்றால் தேவாசீர்வாகத்தை அது அடையாது.

**(7) நம் ஜெபத்திற்கு பதிலை பெற நாம் எடுக்க வேண்டிய மூன்று படிகள் என்ன?**

***மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். (லூக்.11:9)***

நம்முடைய தீரா அவசியமே ஓர் விவகாரமாயும், நமக்காக மிக

சாதுரியமாயப் பரிந்துபேசுகிறதுமா யுமிருக்கிறது. இக்காரியங்களை ஆண்டவர் நமக்குச் செய்யும்படி அவரைத்தேடிப் போகவேண்டும். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத். 7: 7)என்றும், "தம்முடைய சொன்ந்தக்குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி:" (ரோமா 8: 32) என்றும் சொல்லுகிறார்.

**(8) எதிர்ப்புகள் நம் ஜெபங்களை எப்படி பாதிக்கும்?**

***வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. (நீதி.28:9)***

நாம் நம்முடைய இருதயத்திலே அக்கிரமத்தைப்பேணி வைத்தாலும், நாம் அறிந்த எவ்வித பாவத்தைப் பிடித்துக்கொண்டிருந்தாலும் ஆண்டவர் நமக்குச் செவிகொடார் நருங்குண்டதும் நொறுங்குண்ட்துமான் ஆத்துமாவினுடைய ஜெபம் எப்போதும் அங்கீக்ரிக்கப்படும். நாம் அறிந்த எல்லாத்தப்பிதங்களைம் சீர்ப்படுத்தும்போது தேவன் நம்முடைய விண்ணப்பங்களுக்கு விடையளிக்கிறார் என்று நம்ப இடமுண்டு. நம்முடைய சொந்த புண்ணியம் நம்மை தேவனுடைய தயவுக்குப் பாத்திரராக்கமாட்டாது. இயேசுவின் பாத்திரத்தன்மையே நம்மை ரட்சிக்கிறது: அவருடைய உதிரமே நம்மைச் சுத்திகரிக்கிறது. ஆயினும் ஏற்றுக்கொள்ளுதலின் நிபந்தனைகளுக்கு இணங்கிப்போகும் வேலை நமக்குண்டு.

**(9) நம் ஜெபத்திற்கு பதில்களை பெறுவதில் உள்ள இன்னொரு முக்கியமான காரணி என்ன?**

***ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுகொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். (மாற்.11:24)***

ஜெபம் பெறும் ஜெபத்தின் இன்னோர் குணம் விசுவாசம். “தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்” எபி. 11: 6. “நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக்கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப்பெற்றுக்கொள்ளுவோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்” மாற் 11: 24 என்று இயேசுநாதர் தமது சீஷர்களுக்குச் சொன்னார். நாம் அவரை அவருடைய வார்த்தையினாலே ஏற்றுக்கொள்ளுகிறோமா?

இந்த உறுதிவாக்கு அகல்மும் எல்லையற்றதுமாயிருக்கிறது. வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். நாம் கேட்கிற அதே காரியங்களை நாம் அடையாதபோது, ஆண்டவர் ஜெபத்தைக் கேட்கிறரென்றும், நம்முடைய ஜெபத்திற்கு உத்தரவு அருளுவார் என்றும் விசுசாசிக்கவேண்டியவர்களாயிருக்கிறோ ம். நாம் எத்தனையோ தப்பிதங்களைச் செய்யக்கூடியவர்களாகவும், சொற்ப அறிவுள்ளவர்களாகவுமிருந்து நமக்கு ஆசீர்வாதமில்லாதவைகளைக்

கேட்கிறோம் நம்முடைய பரம பிதாவானவர் நமது மேலான நன்மைகலுக்குச் சாதனமானவைகளை யருளிச்செய்து மிக அன்போடு நமது ஜெபங்களுக்கு உத்தரவருளுகிறார். எல்லாப்பொருள்களையும் உள்ளது உள்ளபடியே பார்க்க்கூடிய தேவனால் அருளப்பட்ட நேத்திரம் நமக்கிருக்குமானால், நாமே அவைகளை விரும்புவோம் நம்முடைய ஜெபங்களுக்கு உத்தரயு அருளப்படவில்லை என்று தோன்றும்போது, நாம் வாக்குத்தத்தத்தின் பேரில் உறுதியாயிருக்கவேண்டும். உத்தரவு அரு ளப்படுகிற காலம் நிச்சயமாய் வருமாதலால் நமக்கு மிக அவசியமான ஆசீர்வாத்த்தைப் பெற்றுக்கொள்ளக்கடவோம். நாம் விரும்புகிற ஒரு காரியம் நமக்கு எவ்விதமாய்க் கிடைக்கவேண்டுமென்று மன்றாடுகிறோமோ அதேவிதமாய்க் கொடுக்கப்பட வேண்டுமென்று உரிமை பாராட்டுவது துணிகரமாகும். தேவன் தப்பித்ஞ் செய்யக்கூடாதபடி ஞானமுள்ள வரும் நேர்மையானவர்களுக்கு எந்த நன்மையையும் அடக்கிவையாதபடி எவ்வளவு நன்மை மிகுந்தவருமாயிருக்கிறார். உங்களுடைய ஜெபங்களுக்கு உடனே விடை அருளப்படாதிருப்பதை நீங்கள் பார்க்கும்படி நேரிட்டாலும் அவரை நம்பப்பயப்பட்வேண்டாம். "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குத் கொடுக்கப்படும்" என்னும் அவருடைய உண்மையான் வாக்குத்தத்தத்தின்பேரில் பற்றுதலாயிருங்கள்.

**(10) நாம் தாழ்மையில் விசுவாசத்தோடு நம் தேவைகளை தேவனுக்கு தெரியப்படுத்தும்போது எந்த வசனத்தை கேட்கவேண்டும்?**

*நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (1யோ.5:14-15)*

நமக்கு விசுவாசமுண்டாவதற்கு முன்னே, நாம் நமது சந்தேகம், பயங்களிடத்தில் ஆலோசனை கேட்கும்படி போனாலும், அல்லது நமக்குத்தெளிவாய் வளங்காத ஒவ்வொரு காரியத்தையும் விடுவிக்கப் பிரயாசப்பட்டாலும் மனக்கல்க்கமும் குழப்பமுமாத்திரம் பெருகி அதிகரிக்கும். தமது சித்தத்தினாலும் வார்த்தையினாலும் ஒவ்வொன்றையும் ஆண்டு வருகிறவரும், சிருஷ்டிப்பிலே யாவற்றையுங் காண்கிறவரும், அளவற்ற ஞானமுள்ளவருமாகிய அவரிடத்தில் நாம் ஒத்தாசையற்றவர்களும் கீழ்ப்பட்டவர் களுமாயிருக்கிறோம் என்றெண்ணி நாம் இருக்கிறபடியே தாழ்மையோடும் விசுவாசத்தோடும் வந்து நம்முடைய குறைகளை தேவனுக்குச்சொல்லி அவரண்டை சேர்வோமானால், நாம் கூப்பிடும் சத்தத்துக்கு அவர் செவிகொடுத்து, நம்முடைய இருதயங்களில் ஒளி வீசும்படி செய்வார். ஊக்கமான ஜெபத்தின் மூலமாகவே முடிவு இல்லாதவருடைய மனதோடு சம்பந்தப்படுகிறவர்களாகிறோம். நம்முடைய மீட்பருடைய முகம் நம்மேல் பரிதாபத்தோடும் அன்போடும் நோக்கும் வேளையில், நமக்கு விசேஷித்த

அத்தாக்ஷியில்லாதிருக்கலாம். ஆகிலும் அது நேராக இருக்கிறது. நாம் பார்க்கக்கூடிய அவருடைய தொடுதலை நாம் உணராதிருக்கலாம். ஆனாலும் அவருடைய கரம் அன்போடும் பரிதபிக்கும் தபையோடும் நம்மேலிருக்கிறது.

**(11) தேவனிடமிருந்து நம் மன்னிப்பு தீர்மானிக்கப்படுவது எப்படி?**

***மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். (மத்.6:14-15)***

நாம் இரக்கத்தையும் ஆசீர்வாத்த்தையும் தேவனிடத்தில் கேடக்கும்படி வருகிறபோது, நம்முடைய சொந்த இருதயங்கள் அன்பும் மன்னிப்பும்முள்ள ஆவி நிறைந்தவைகளாயிருக்கவேண்டும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று மன்னிக்கிறதற்குப் பிரியமற்ற ஆவியும் இளக்காரமும் நம்மில் குடிகொண்டிருக்கும்போது, நாம் எப்படிஜெபிக்கக்கூடும்? நம்முடைய சொந்த ஜெபங்கள் கேட்கப்படவேண்டுமென்று எதிர்பார்ப்போமானால், நாம் மன்னிக்கப்படும்படி எவ்வளவு விரும்பிகிற் றோமோ அவ்வளவு மாதிரியாயும் அளவாயும் மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்கவேண்டும்.

**(12) எப்பொழுதெல்லாம் நம் இருதயம் ஜெப ஆவியில் தேவனோடு இசைந்திருக்கவேண்டும்?**

***இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். (கொலோ.4:2)***

ஜெபத்தில் விடாமுயர்ச்சி யாயிருக்கவேண்டும் என்பது நாம் பெற்றுக்கொள்ளுவதற்கு இருக்கிற ஒரு நிபந்தனையாம். நாம் விசுவாசத்திலும் அநுபவத்திலும் வளர விரும்புவோமானால் எப்போதும் ஜெபஞ் செய்யவேண்டும். “இடைவிடாமல் ஜெபம்பண்ணி ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பதற்கு” (மத். 6 : 12) நாம் “ஜெபத்தில் உறுதியாய்த் த்ரித்திருக்கவேண்டும்” (ரோ. 12 : 12; கொலொ 5 : 2) பேதுரு விசுவாசிகளைத் “தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்” (1 பேதுரு 4 :7) என்று ஏவிவிடுகிறார். பவுல் “எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” பிலி. 4 : 6 என்று கட்டளையிடுகிறார். “நீங்களோ, பிரியமானவர்களே” பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி தேவனுடைய அன்பிலே உங்களைக்காத்துக்கொள்ளுங்கள் (யூதா. 20, 21) என்று யூதாவும் போதிக்கிறார். ஜீவன் தேவனிட்த்திலிருந்து நம்முடைய ஜீவனுக்குள் ஓடிவரத்தக்கதாக இடைவிடாத ஜெபம் தேவனுக்கும் நமது அத்மாவுக்கும் இடையறாத ஐக்கியமாயிருக்கிறது. நம்முடைய ஜீவியத்திலிருந்தோ தூய்மையும்,

பரிசுத்தமும் திரும்பவும் தேவனிட்த்திற்குப் போகிறது.

ஜெபத்திற்கு சுறுசுறுப்பு அத்தியந்த அவசியம். ஒன்றும் உன்னைச் ஜெபஞ்செய்யத் தடுக்கப்படாது. இயேசுவுக்கும் உன் இருதயத்துக்குமுள்ள சம்பந்தம் திறக்கப்பட்டதாயிருக்கும்படி ஏற்ற முயற்சி செய்வாயாக வழக்கமாய் ஜெபம் எங்கே செய்யப்படவேண்டுமோ அங்கே போவதற்கு ஒவ்வொரு சமயத்தையுந் தேடு. தேவனிடத்தில் ஐக்கியமாயும் அந்நியோந்நியமாயும் இருக்கவேண்டுமென்று உண்மையாய் நாடுகிறவர்கள் எவர்களோ அவர்கள் ஜெபக்கூட்டங்களில் முதன்மையாயும் தங்கள் ஊழியத்தை உண்மையாகச் செய்கிறவர்களாயும் தாங்கள் பெறக்கூடிய நன்மைகள் யாவற்றயும் அறுப்பதற்கு வாஞ்சையும் ஊக்கமுமுள்ளவர்களாயும் நிற்பார்கள். பரலோகத்திலிருந்து ஒளியின் கிரணங்களை தாங்கள் அடையக்கூடியவிடங்களிலிருந்துகொண்டு தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சமயத்தையும் ஆதாயப்படுத்திக்கொள்வார்கள்.

*ஜெபத்தில் கிறிஸ்துவின் மூலம் நான் எந்த நேரத்திலும் தேவனை கிட்டி சேரும் அற்புத சிலாக்கியத்தை கொடுத்தமைக்கு நன்றி கூறுகிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*ஜெபத்தில் தேவனோடு உறவாடுவது நமது வாழ்வின் பரலோகத்திற்கு செல்லும் வழி. அவரோடு நிலையான இணைப்பை வைத்துக்கொள்வது மற்றும் ஜெப வரத்தின் மூலம் கீழ்படிதலின் சமாதானத்தை பெறுவதும் என் விருப்பமாயிருக்கிறது.*

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை


அவருடைய பரிபூரண சித்தத்தின்படி அவருடைய நேரத்தில் என் ஜெபங்களை கேட்டு தேவன் பதில் கொடுக்கிறார் என்று நம்பி விசுவாசிக்கிறேன்.

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

ஜெபத்தில் "அவருடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாக" கிட்ட சேர தேவன் கொடுக்கும் அழைப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் அதினால் நான் அவரோடு தினமும் நடக்கும்போது உதவி, கிருபை மற்றும் இரக்கம் கிடைக்க ஏதுவாகும்.

வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை

_____________________________________________
_________



பாடம் 13
**ஜெபத்தின் வல்லமை**

**(1) அந்தரங்க ஜெபத்தின் பலன் என்ன?**

***நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். (மத்.6:6)***

நாம் குடும்பத்தோடு சேர்ந்தும் ஜெபிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கிற தனி ஜெபத்தையும் நாம் கை நெகிழ விடப்படாது; ஏனேன்றால் இதுவே ஆத்மாவுக்கு ஜீவ நிலை. ஜெபம் அலட்சியஞ் செய்யப்ப்டுகையில் ஆத்மா செழிப்பும் காம்பீரமுமாயிருப்பது கூடாமை குடும்ப ஜெபமாவது பகிரங்க ஜெபமாவது போதுமானதல்ல. ஆத்துமாவானது

தனித்தவிட்த்திலே தேவனுடைய கண்ணால் சோதிக்கப்பட திறந்து வைக்கப்பட்டிருக்கட்டும். அந்தறங்க தனி ஜெபமானது ஜெபத்தைக் கேட்கிற தேவனாலே மாத்திரம் கேட்கப்படவேண்டும். அப்படிப்பட்ட விண்ணப்பங்களுள்ள பாரத்தை என்னவென்று அறிய விரும்புகிற எந்தக் காதும் கேட்கலாகாது. அந்தரங்க ஜெபத்தில் ஆத்மாவானது தன்னைச் சூழவிருக்கும் பல காரியாஙகளால் தடைப்படமலும் எந்த விஷயத்தினாலும் கலக்கமடையாமலுமிருக்கிறது. அமைதலாயும் அதிவேகமாயும் தேவனை எட்டுகிறது. இருதயத்தினின்று கிளம்பும் ஜெபத்தைக் கேட்கும்படி திறந்த செவியோடிருக்கிறவரும், அந்தரங்கத்தில் பார்க்கிறவருமாகிய அவரிடத்திலிருந்து வருகிற சக்தியானது இன்பமும் நிலையுள்ளதுமாயிருக்கும். அமைதலும் சுத்தமுமான விசுவாசத்தினால் ஆத்மா தேவனோடு ஐக்கியப்பட்டு, சாத்தானுக்கு விரோதமாய்ச் செய்யவிருக்கும் போருக்காக தன்னை பலப்படுத்திக்கொள்ளவும் ஆயத்தப்படுத்திக்கொள்ளவுந்தக்கதாய் தெய்வ ஒளியின் கிரணங்களைத் தனக்குத் தானே சேர்த்துக்கொள்ளுகிறது. தேவன் தாமே நம்முடைய பலத்தில் கோபுரமாயிருக்கிறார்.

நீ உன் உள்ளறையிலே ஜெபி, நீ உன் அன்றாட வேலைக்குப் போகிறபோதெல்லாம் உன் இருதயம் தேவனுக்கு நேராக உயர்த்தப்படட்டும், இவ்வண்ண மே ஏனோக்குப் தேவனோடு நடந்தான். இந்த இரகசிய தனி ஜெபங்கள் கிருபாசனத்திற்கு முன் அருமையான தூபவர்க்கம்போல கிளம்புகிறது. இப்படி தேவனிடத்தில் தரித்திருக்கும்

ஒருவனுடைய இருதயத்தை சாத்தான் மேற்கொள்ள முடியாது.

**(2) ஜெபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்படி இந்த வசனத்தில் கூறும் அறிவுறுத்தல் என்ன?**

*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். (1தெச.5:17)*

தேவனிடத்தில் விண்ணப்பஞ் செய்வதற்குத்தகாத நேரமாவது இடமாவது இல்லை. ஊக்கமான ஜெப் சிந்தையினால் நமதிருதயம் நிறைந்திருக்கையில் அதை உயர்த்தாதபடி தடுத்து வேறோன்றுமில்லை. வீதியின் ஜன நெருக்கத்திலும், மும்மர வேலையின் மத்தியிலும், நாம் தேவனுக்கு மனுப்பண்ணிக்கொள்ளலாம். நெகேமியா அர்தசஷ்டா ராஜாவின் முன்பாக வேண்டுதல் செய்த்துபோல ஆண்டவருடைய திவ்விய நடத்துதலுக்காக்வும் காப்பாற்றுதலுக்காகவும் கெஞ்சி பஞ்சரிக்கலாம். நாம் எங்கேயிருந்தாலும் தேவனோடு சம்பாஷிக்க்க்கூடிய ஒரு தனி இட்த்தைக் காணலாம். நம்முடைய இருதயத்தின் கதவு எப்போதும் திறந்த்தாகவும் இயேசுவைப் பரலோக விருந்தினராக நமது ஆத்துமாவில் வந்து வசிக்கும்படி வருந்தியழைக்கும் அழைப்பு மேலே அடிக்கடி செல்லத்தக்கதாகவும் நாம் பார்க்கவேண்டும்.

நம்மைச் சுற்றிலும் கறையானதும் துருப்பிடித்ததுமான ஆகாய மிருந்தபோதிலும் நாம் அந்த விஷசுவாசத்தை சுவாசிக்கத் தேவையில்லை; பரலோகத்திலுள்ள சுத்தமான ஆகாயத்திலே வாசஞ்செய்யலாம். ஊக்கமான ஜெபத்தின்

மூலமாய், தேவ சந்நிதானத்தில் இருதயத்தை உயர்த்துவதினால் அவபக்தியான எண்ணங்களும், அசுசியான நினைவுகளும் பிரவேசியாதபடி சுதவை அடைத்துவிடலாம். தேவனுடைய உதவியையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும்படி திறந்த இருதயங்கள் உள்ளவர்களாயிருக்கிறவர்கள் பூமியின் ஆகாயத்தைப் பார்க்கிலும் பரிசுத்தமான ஆகாயத்தில் நடந்து, அடிக்கடி வானவரோடு சம்பாஷணை செய்கிறவர்களாயிருப்பார்கள்

இயேசுவைப் பற்றி மிகத்தெளிவான அறிவும் நித்தியமாயுள்ள உண்மையான சத்தியங்களைப்பற்றிய மதிப்பும் திட்பமான தெளிவுமுள்ளவர்களாய் நாமிருக்கவேண்டும். பரிசுத்த அலங்காரம் தேவனுடைய பிள்ளைகளின் இருதயத்தை நிரப்பவேண்டியதாயிருக்கிறது. இக்காரியம் நிறைவேறும் பொருட்டு பரலோக்காரியங்களைப்பற்றிய தெய்வீக பிரசங்கங்களாகிய வெளிப்படுத்தல்களை நாம் தேடவேண்டும்.

(3) **நாம் கிறிஸ்துவோடு தொடர் ஐக்கியத்தில் இருக்கும்போது அதன் விளைவு என்ன?**

***உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.*** *(ஏசா.26:3)*

தேவன் நமக்குப் பரலோக ஆகாயத்தை சுவாசிக்கத் தரும்படியாக இருதயமானது வெளியேயும் மேலேயும் இழுக்கப்படட்டும், புஷ்பமானது சூரியனுக்கு நேராய்த் திருபுமாப்போல நாம் எதிர்பாராத

ஒவ்வொரு சோதனையிலும் நம்முடைய எண்ணங்கள் இயல்பாகவே தேவனுக்கு நேராய்த் திரும்பும்படி தேவனண்டை அவ்வளவு நெருங்கிச் சேர்வோமாக.

**(4) உடைந்த உள்ளத்தோடு இருப்பவருக்கு தேவன் கிருபையாய் வைத்துள்ள வாக்குத்தத்தம் என்ன?**

***இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். (சங்.147:3)***

உன் குறைகள், சந்தோஷங்கள், துக்கங்கள், கவலைகள், நடுக்கங்கள் யாவற்றையும் தேவனுக்கு முன்னிலையில் வைப்பாயாக. நீ அவரை இளைப்படையச்செய்யவும், பாரமுள்ளவராக்கவுமுடியாது. உன்சிரசின் ரோமங்களை எல்லாம் கணக்கிட்டிருக்கிற அவர் தமது பிள்ளைகளின் அவசியங்களைப் பற்றி கவலையற்றவரல்ல. "கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார்" (யாக். 5: 11) அன்பினால் நிறைந்திருக்கிற அவருடைய உள்ளம் நம்முடைய துக்கங்களினாலும், அவைகளைப்பற்றிச் சொல்லும் நம்முடைய வார்த்தைகளினாலுங்கூட தொடப்படுகிறது. உன் மனதைக் குழப்புகிற ஒவ்வொன்றையும் அவரிடத்தில் கொண்டுபோய் வை, அவர் இப்பிரபஞ்சத்தின் காரியாதிகலையெல்லாம் ஆண்டு உலகங்களைக் கையில் ஏந்தி தாங்கிக்கொண்டிருக்கிறபடியால், அவர் சுமக்கிறதற்கு மிகப்பெரிதானது வேறோன்றுமில்லை. நம்முடைய சமாதானத்துக்கானவைகள் எவைகளோ

அவைகளை மிகச் சிறிதானவைகள் என்று அவர் எண்ணுகிறதுமில்லை. நம்முடைய அநுபோகத்தில் அவர் வாசிக்கக்கூடாதபடி கருகலான ஒரு அதிகாரமுமில்லை. எந்தக் குழப்பத்தையும் சமாதானப்படுத்தி அமர்த்துவது அவருக்கு வருத்தமானதல்ல. அவர் பிள்ளைகளில் கடையானவர்களுக்கும் ஆபத்தெதுவும் நேரிடுவதையும் எந்த வியாகுலமும் ஆத்துமாவை உபாதிப்பதையும் கவனிக்காதபடி எந்த சந்தோஷமும் அவரைத்தடை செயவதில்லை, ஊக்கமான எந்த ஜெபமும் உதட்டை விட்டு நீங்கிப் போவதில்லை. அவைகளை நமது பரமபிதா கவனியாமல் விடுகிறதுமில்லை. அல்லது அவர் உடனே பிரியங்காட்டாமல் இருக்கிறதுமில்லை. "அவர் இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார். அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்" சங். 147 : 3. தேவன் தமது நேசகுமாரனைக் கொடுக்கவும், அவருடைய பாதுகாப்பில் பங்கடையவும், இப்பூமியில் ஒரே ஒரு ஆத்துமா தவிர, வேறொருவனும் இல்லாதிருந்தால், அந்த ஒரு ஆத்துமாவுக்கும் தேவனுக்கும் எவ்வளவு விசேஷித்த நெருங்கின பூரணசம்பந்தம் இருக்குமோ அவ்வளவு சம்பந்தம், தேவனுக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் இருக்கிறது.

**(5) நாம் யாருடைய நாமத்தில் ஜெபிக்க வேண்டும்?**

***நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள்***

*போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோ.15:16)*

"நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள் உங்களுக்காகப்பிதாவை நான் கேட்டுக்கொள்வேனேன்று உங்களுக்குச் சொல்லுவேண்டியதில்லை, ஏனென்றல் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறர்" நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை கேட்டுக் கொள்வதெதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். (யோ. 16: 26, 27; 15: 16) என்று இயேசு சொன்னார். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறதாவது:- ஜெபத்தின் துவக்கத்திலும் முடிவிலும் மாத்திரம் அந்தப்பேரை உச்சரிக்கிறதைப் பார்க்கிலும் இயேசுவின் வாக்குத்தத்தங்களை நம்பி, அவருடைய கிருபையின்பேரில் சார்ந்து, அவருடைய ஊழியத்தைச் செய்கிறபோது கிறிஸ்துவின் ஆவியினாலும் மனதினாலும் ஜெபிப்பதுதான் மேலானது.

**(6) நமது ஜெபம் மற்றும் ஆராதனையில் எந்த வகை நடைமுறை கிறிஸ்தவ செயல்கள் சேர்க்கப்படவேண்டும்?**

*திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. (யாக்.1:27) உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று*

*சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (யாக்.2:16)*

நாம் அவரைத் தொழுகிற ஊழியத்திற்காகவேண்டி உலகத்தைமுழுவதுமாய் விட்டுவிடாவாவது நம்மில் யாராவது சந்நியாசியாகவும் ரிஷியாகவும் ஆகவேண்டும் என்றாவது தேவன் விரும்புகிறதில்லை. கிறிஸ்துவின் ஜீவியம் மலைகளுக்கும் திரள் ஜனங்களுக்கு மூடே சென்றதுபோல நம்முடைய ஜீவியமுமிருக்கவேண்டும். ஜெபஞ் செய்வதைத்தவிர வேறோன்றையுஞ் செய்யாதவன் கடைசியில் ஜெபத்தையும் அடியோடே விட்டு விடுவான்; அல்லது அவனுடைய ஜெபங்கள் கடமைக்காகச் செய்யும் ஜெபமாகிவிடும். மனிதர் கிறிஸ்தவ கடமையை நிறைவேற்றுவதிலிருந்தும் சிலுவை சுமப்பதிலிருந்தும் தூரமாக விலகி இல்லற ஜீவியத்தினின்று தங்களைப் பிரித்துக்கொள்ளும் போதும், தங்களுக்காக ஊக்கத்தோடு ஊழியம் நடப்பித்த எஜமானுக்காக அவர்கள் உற்சாகமாய் கிரியை நடப்பிக்காமல், நிறுத்தி விடுகிறபோதும் ஜெபிக்க வேண்டிய பொருளை முழுவதுமாய் இழந்து, பக்திக்குரிய எழுப்புதலும் அடையாமற் போகிRaaறார்கள். அவர்களுடைய ஜெபங்கள் தன்னயமுள்ளவைகளாகவும் தங்களை யடுத்தவைகளாகவு மாறிவிடுகிறது. வேலை செய்வதற்குப் பலத்துக்காகக் கெஞ்சவும், கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு பிரபலமாக மன்றாடவும் மனுக்குலத்திற்குத் தேவையானவைகளுக்காக வேண்டவும் அவர்களால் முடியாது.

**(7) கிறிஸ்தவ ஐக்கியத்தின் நோக்கம் என்ன?**

***சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். (எபி.10:25)***

தேவனுடைய ஊழியத்தில் ஒருவரோடொருவர் பலப்படுத்தப்படவும் உற்சாகப்படுத்தப்படவும் ஒன்றாய்க்கலந்து உறவாடும் சிலாக்கியத்தை நாம் அசட்டை செய்யும்போது பெரும் நஷ்டத்தையடைகிறவர்களாகிறேம். அவருடையவார்த்தையின் சத்தியங்கள் நம்முடைய மனதில் தங்கள் கருக்கையும் முக்கியத்தையும் இழந்துவிடுகின்றன. நம்முடைய இருதயமானது பரிசுத்தப்படுத்தும் சக்தியினால் எழுப்பப்பட்டு பிரகாசிக்கப்படுவதிலிருந்து விழுந்து போகிறதுண்டு, அப்போது நாம் ஆவியில் குன்றிப்போகிறேம். கிறிஸ்தவர்களாயிருக்கிற நம்முடைய ஐக்கியத்திலுள்ள நம்முடைய அநுதாபக்குறைவினால் ஜெபத்தை அதிகமாய் இழந்து விடுகிறோம் தன் காரியத்தைத் தனக்குத் தானே வைத்துக்கொள்ளுகிறவன் தேவன் அவனுக்கு நியமித்திருக்கிற நிலைமையை நிறைவேற்றாமலே போகிறான். ஜனதார சக்திகளை நாம் தக்கவாறு விருத்தி செய்வோமாகில் ஒருவருக்கொருவருள்ள அனுதாபம் வளரும். மேலும் அது தேவனுடைய சேவையில் பலத்தையும் விருத்தியையும் கொடுக்கிறதுமாயிருக்கிறது.

கிறிஸ்தவர்கள் ஒன்றாய்க்கூடி தேவனுடைய அருமையான அன்பைப்பற்றியும், இரட்சிப்பின் மேலான சத்தியங்களைப்பற்றியும் ஒருவரோடொருவர் சம்பாஷிப்பார்களானால், அவர்களுடைய சொந்த இருதயங்கள் முசிப்பாற்றப்படுவதுமன்றி மற்றவர்களுடைய இருதயங்களும் முசிப்பாற்றப்படும். அவருடைய கிருபையின் புது அநுபவத்தையடைவதினால் நம்முடைய பரமபதாவைப்பற்றி இன்னும் அதிகம் அதிகமாய் அன்றாடம் அறிகிறவர்களாயிருப்போம். அப்போது அவருடைய அன்பைப்பற்றி பேசுவதற்கும் ஆசை கொள்வோம். நாம் இதைச் செய்கிறபோதே நம்முடைய இருதயம் அனல் மூண்டு உற்சாகத்தையும் ஊக்கத்தையுமடையும் நம்மைக் குறித்து கொஞ்சமாய் நினைத்து இயேசுவைக் குறித்து அதிகமாய் ஞாபகங்கொண்டு பேசுவோமானால், அவருடைய சமுகம் அதிகம் அதிகமாய் நம்மோடிருக்கும்.

**(8) சமாதானத்தில் நிலைகொண்டிருக்க நமது நினைவுகளும் விருப்பங்களும் எங்கே மையம் கொண்டிருக்கவேண்டும்?**

***உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார். (ஏசா.26:3-4)***

***பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். (கொலோ.3:2)***

அவர் நம்மேல் கொண்ட கவலையைக் குறித்து நாம் சாட்சி கூறும்போதெல்லாம் தேவனையே ஞாபகங்கொள்ளவேண்டும். அவரைப்பற்றிப் பேசுவதில் மகிழ்ச்சியும் அவருக்குத் துதியும் இருக்கவேண்டும். நாம் உலககாரியங்களில் அதிகப் பற்றுள்ளவர்களாயிருப்பதினால், அவைகளைக் குறித்து அடிக்கடிப்பேசுகிறேம். நம்முடைய சிநேகிதர்களை நேசிக்கிறதினால் அவர்களைப்பற்றி பேசுகிறேம். நம்முடைய சந்தோஷமும் துக்கமும் அவர்களோடு இணைந்திருக்கிறது.

நமது உலகசிநேகிதர்களை நேசிப்பதைப் பார்க்கிலும் தேவனை அதிகமதிகமாய் நேசிப்பதற்கு அளவற்ற ஓர் பெரிய காரணமுண்டு. அவருடைய வல்லமையையும் நன்மையையும்பற்றிப் பேசுவதும், நம்முடைய நினைவுகளிலெல்லாம் அவரை முதலாவது வைத்துக்கொள்வதும் இயற்கையான காரியமாயிருக்கவேண்டும். நமக்கு அவர் அளித்திருக்கிற ஈவுகள் அவரை அடிக்கடி நமக்கு நினைப்பூட்டுகின்றன. நம்மை அன்பின் கட்டினால் கட்டி நம்முடைய பரம உபகாரிக்கு நன்றி செலுத்தும்படி செய்கின்றன். பூமியின் தாழ்விடங்ளுக்கு அதிக சமீபமாய் வசிக்கிறோம். நாம் மேலே பரிசுத்தஸ்தலத்தில் திறந்திருக்கிற வாசலுக்கு நேராய் நம்முடைய கண்களை ஏறெடுப்போமாக. அங்கே கிறிஸ்துவின் முகத்தில் தேவனுடைய மகிமையின் ஜோதி வீசுகிறது. “இயேசுவின் மூலமாய் தேவனிட்த்தில் சேருகிறவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறர்.” எபி, 7:25.

**(9) நமது ஜெபத்தில் இருக்கவேண்டிய முக்கியமான காரணிகள் என்ன?**

*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். (கொலோ.4:2)*

"அவருடைய கிருபையினிமித்தமும் மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும்" சங். 107:8. நாம் அவரை
அதிகமதிகமாய்த் துதிக்கவேண்டும். நம்முடைய தேவபக்திக்குரிய காரியங்கள் முழுவதுமாய் கேட்டுக்கொள்வதிலும் பெற்றுக்கொள்வதிலும் மாத்திரம் அடங்கினவைகளாயிருக்கலாகாது. நாம் பெற்று சுகித்து வருகிற நன்மைகளையன்றி நமக்குள்ள குறைகளைப்பற்றி மாத்திரம் எப்போதும் சிந்தியாதிருப்போமாக. நாம் அதிகமாய் ஜெபிக்கிறதில்லை. நன்றி செலுத்துவதிலுங்கூட அதிகக் குறைவுள்ளவர்களாயிருக்கிறேம். தேவனுடைய கிருபைகளையோ அடிக்கடிப் பெறுகிறவர்களாயிருக்கிறோம். அப்படியிருந்தாலும் எவ்வளவு கொஞ்சமாய் அதற்கு நனிகாட்டுகிறோம். அவர் நமக்குச் செய்திருக்கிறவைகளுக்காக எவ்வளவு கொஞ்சமாய் அவரைத் துதிக்கிறேம்.

(10) **கிறிஸ்துவுக்கு மகிழ்ச்சியோடு தங்கள் வாழ்வை ஒப்புக்கொடுக்கிறவர்களின் இருதயத்திலிருந்து ஓடுவது என்ன?**

***அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியிலே புசித்து, நீங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக. (உபா.12:7)***

பூர்வத்தில் இஸ்ரவேலர் கர்த்தருடைய வேலையைச் செய்வதற்கு ஒன்றாய்க் கூடினபோது, கர்த்தர் அவர்களுக்குக்கட்டளையிட்ட தென்னவென்றால், "உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சன்னிதியிலே புசித்து, நிங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வாதித்ததுமான யாவுக்காகவும், நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக" உபா. 12:7. என்பதே. தேவனுடைய மகிமைக்காகச் செய்யப்படுகிற காரியம் துக்கத்தோடும், மனவருத்தத்தோடுமல்ல, களிப்போடும், துதித்தலின் கீதங்களோடும், நன்றியறிதலோடும் செய்யப்படவேண்டும்.

நம்முடைய தேவன் மன உருக்கமும் இரக்கமு ள்ள பிதா. அவருடைய ஊழியம் சங்கடமும் மனவருத்தமுமாக எண்ணப்படலாகாது. கர்த்தரை வணங்குவதும் அவருடைய சேவையில் பங்கு பெறுவதும் சந்தோஷகரமானதாக விருக்கவேண்டும். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக அவ்வளவு பெரிதான இரட்சிப்பை சம்பாதித்து வைத்திருக்கும்போது, அவர்கள் அவரைக் கடினமானவரும், வேலைவாங்கும் ஆளோட்டியுமாகப் பாவித்து நடப்பதற்கு இடங்கொடார். அவரே அவர்களுடைய உற்ற நண்பன். அவர்கள் அவரைத் தொழுகிறபோது அவர்களை ஆசீர்வதிக்கவும் தேற்றவும், அவர்கள் இருதயத்தை சந்தோஷத்தினாலும் அன்பினாலும் நிரப்பவும் அவர்களோடிருக்கவும் விரும்புகிறார். தம்முடைய பிள்ளைகள் தமது ஊழியத்தில் ஆறுதலடையவும், தமது வேலையில் கஷ்டத்தைவிட அதிக

சந்தோஷத்தையேகாணவும் வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அவரைத்தொழுதுகொள்ளும்படி வருகிறவர்கள், எல்லா விஷயங்களிலும் உண்மையும் நேர்மையுமாய் நடந்துகொள்ளும்படி அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளவும், தங்கள் அன்றாடக ஜீவியத்தை யடுத்த ஊழியங்களிலெல்லாம் சந்தோஷ முள்ளவர்களாயிருக்கவுந்தக்கதாக, அவருடைய அக்கரையையும் அன்பையும் குறித்த மேலான எண்ணங்களை அவர்கள் உடையவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

**(11) நம் நினைவுகள், உரையாடல்கள் மற்றும் ஜெபங்கள் தேவனை துதித்து மகிமைப்படுத்தும்போது வெளிப்படுவது என்ன?**

***ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார். (சங்.50:23)***

நாம் சிலுவையைச் சுற்றிக் கூடி நிற்கவேண்டும்.
சிலுவையில் அறையப்பட்டவரும் கிறிஸ்துவுமாகிய அவரே நமது யோசனைக்கும் சம்பாஷணைக்கும், அகக்களிப்புக்கும் ஆதிகாரணராயிருக்கவேண்டும்.
தேவனிடத்தினின்று நாம் பெற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் நம்முடைய மனதில் பத்திரப்படுத்தவேண்டும். நாம் அவருடைய பெரிதான அன்பை உணர்ந்தறிகிறபோது, நமக்காக சிலுவையில் ஆணி

அடிக்கப்பட்ட அந்த கரத்திலே எல்லாவற்றையும் ஒப்புவித்து விடும்படி விருப்பமுள்ளாவர்களாயிருக்க வேண்டும்.

**(12) தேவனின் நன்மைகளால் நாம் அங்கீகரிக்கப் படும்போது, நம் உதட்டில் எப்போதும் இருக்கவேண்டியது என்ன?**

***அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக.*** *(சங்.107:21-22)*

நம்முடைய ஆத்மாவானது துதியாகிய சிறகுகளினால் பரலோகத்திற்கு சமீபமாயேறும். உன்னதத்திலே தேவன் பாட்டினாலும் வாத்தியத்தினாலும் தொழுது கொள்ளப்படுகிறார். நாம் நம்முடைய நன்றியைக் காட்டும்போது அந்தப் பரம சேனையின் வணக்கத்திற்குச் சமீபிக்கிறவர்களாயிருக்கிறோம். “ஸ்தோத்திரப் பலியிடுகிறவன் தேவனை மகிமைப்படுத்துகிறான்” (சங் 50:23) துதியோடும் கீத சத்தத்தோடும் (ஏசா 51:3) பணிவான சந்தோஷத்தோடும் நாம் நமது சிருஷ்டி கர்த்தாமுன் சேரக்கடவோம்.

***நான் ஒவ்வொரு நாளும் அந்தரங்கத்திழும் வெளியரங்கமாகவும் ஜெபத்தின் மூலம் தேவனோடு தொடர்ந்து இணைந்திருப்பதன் தேவையை உணர்ந்து கொண்டேன்.***

***வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை***

***என் வாழ்வில் நான் ஜெபிக்கும்போது நான் பெற்ற இரக்கம் மற்றும்***

*நன்மைக்காக தேவனுக்கு துதி மற்றும் நன்றிகளை சேர்ப்பதன் முக்கியத்துவத்தை நான் உணர்ந்துகொண்டேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*ஜெபத்தின் ஆசீர்வாதத்தின் மூலம் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக வர கிடைத்த சிலாக்கியத்திற்கும் என் வாழ்விலும் நான் யாருக்கு ஜெபிக்கிறேனோ அவர்களுடைய வாழ்விலும்  அவருடைய வல்லமையை கேட்கவும் நான் நன்றி கூறுகிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*



பாடம் 14

## சந்தேகத்தை நீக்குவது எவ்வாறு

(1) இயேசுவின் தெய்வீகத்தை பற்றி சந்தேகப்பட்டவர்களுக்கு அவரின் பதில் என்னவாக இருந்தது?

*அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள். அவர்களுக்கு அவர்*

*பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. (மத்.12:38-39)*

பலரும், விசேஷமாகக் கிறிஸ்தவ ஜீவியத்தில் பக்குவமாகாதவர்களும் சிற்சில வேளைகளில், சந்தேகங்கள் கொண்டும் வருந்துகிறர்கள். வேதாகமத்தில், அவர்கள் அறிந்துகொள்ள முடியாததும், இதரருக்கு விளக்கிச் சொல்லக் கூடாததுமான பல விஷயங்கள் இருக்கின்றன. சாத்தான் இவற்றைக்கொண்டு வேதமானது தேவனால் அளிக்கப்பட்டதென்று நம்புகிற அவர்களுடைய விசுவாசத்தை அசைத்துவிடும்படி பிரயாசப் படுகிறான். "சரியான வழியை நான் அறிந்துகொள்வதெப்படி? நிச்சயமாகவே வேதமானது தேவனுடைய வார்த்தையானால் இந்தச் சந்தேகங்களையும் மனக்கலக்கங்களையும் நான் விட்டோய்வது எவ்வாறு?" என்று கேட்கிறார்கள்.

தேவன் நம்முடைய விசுவாசத்துக்கு அஸ்திபாரமாகப் போந்த அத்தாட்சி நமக்களித்தாலொழிய அவரை நாம் விசுவாசிக்கும்படி அவர் கேட்கிறதில்லை. தேவன் இருக்கிறார், அவருக்குக் குணங்கள் உண்டு. அவருடைய வார்த்தை சத்தியமானதென்ற விஷயங்கள், நியாயமென்று நமது புத்தியில் படுகிற அத்தாட்சியால் உண்மையென உறுதிப்படுத்தப் படுகின்றன, இந்த அத்தாட்சி ஏராளமாக உண்டு ஆயினும் சந்தேகங்கொள்வதற்கேற்ற காரியங்களையும் தேவன்

நீக்கிவிடுகிறதுமில்லை, நம்முடைய விசுவாசத்தை உத்தேசத்தின் மேலல்ல அத்தாட்சியின் மேலே நாம் ஸ்தாபிக்கவேண்டும். சந்தேகங்கொள்ள இஷ்டப்படுகிறவர்களுக்கு அதற்கேற்ற சமயங்கிடைக்கும்; சத்தியத்தை அறிய விரும்புகிறவர்களுக்கோ அவர்களுடைய விசுவாசத்தை நிலைப்படுத்துவதற்குப் போதுமான அத்தாட்சி கிடைக்கும்.

(2) **மனிதனால் தேவனுடைய வழிகளை புரிந்துகொள்ள முடியாதது ஏன்?**

***என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.***
*(ஏசா.55:8-9)*

அற்பப் புத்தியுள்ளவர்களாகிய நாம் மட்டற்றகடவுளுடைய குணத்தையாவது கிரியைகளையாது சரிவர கிரகித்துக் கொள்வது அசாத்தியம். கூர்மையான புத்தியுள்ளவர்களுக்கும் மிகத் தேர்ந்த் கல்வி மான்களுக்கும்கூட அந்தப் பரிசுத்தர் இரகசியமாக மறைந்தே இருப்பார். "தேவனுடைய அந்தாங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வ வல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது; நீர் அறியக்கூடியது என்ன?" யோபு. 11:7, 8.

"ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு, என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது? அவ ருடைய

நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" ரோமர் 11:33 என்று அப்போஸ்தலனகிய பவுல் கூவிச் சொல்லுகிறார். "மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருந்தாலும், நீதியும் நிபாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்" சங். 97:2. நாம் கிறிஸ்துவினுடைய அளவற்ற அன்பும் கிருபையும் அவருடைய மட்டில்லாத வல்லமையோடு இணைக்கப்பட்டிருக்கிறதை எவ்வளவாக அறிந்து கொள்ளுகிறேமோ அவ்வளவாக அவர் நம்மோடு எவ்விதமாக நடந்துகொள்ளுகிறார் என்றும் அவர் அவ்வாறு நடந்து கொள்வதற்கு இருக்கிற நோக்கங்கள் என்ன என்றும் நாம் கிரகிக்கக்கூடும் அவருடைய நோக்கங்களில் எவ்வளவை அறிவது நமக்கு நலமோ அவ்வளவுதான் அறிந்துகொள்ள முடியும், இதற்குமிஞ்சி, சர்வபராக்கிரமமுள்ள அவருடைய கரத்தையும் அன்பு நிறைந்த அவருடைய இருதயத்தையும் நாம் பூரணமாக நம்பிப்பற்றிக்கொள்ளவேண்டும்.

**(3) நாம் வேதத்தை புரிந்துகொள்வதில் தோற்கும்போது அதன் விளைவுகள் என்ன?**

*எல்லா நிருபங்களிலும் இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை*

*முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, (2பேது.3:16-17)*

தேவனுடைய குணம் எப்படியோ அப்படியே அவர் எழுதின வேதமும், சொற்பப்புத்தியுள்ள மனுஷர் சரிவரக் கிரகித்துக் கொள்ளக்கூடாத இரகசியங்களுடையதாயிருக்கிறது. உலகத்துக்குப் பாவம் வந்த விதம், கிறிஸ்துவினுடைய அவதாரம், அவருடைய உயிர்த்தெழுதல், இன்னும் வேதத்தில் கண்டிருக்கிற காரியங்களும் மனுஷர் தமது புத்தியால் அறிந்து பிறருக்கு விளக்கிச் சொல்ல முடியாத அளவு ஆழ்ந்த இரகசியங்களாயிருக்கின்றன, ஆனல் அவைகள் தெய்வத்தன்மை பொருந்தியதென்பதற்கும் போந்த அத்தாட்சியை தேவன் வேதத்தில் நமக்கு அளித்திருக்கிறார்; அவருடைய இரகசியங்களை விளங்கிக்கொள்ள நமக்குச் சக்தியில்லையானால் அவருடைய வார்த்தையைப் பொய்யென்று சொல்வதற்கு நமக்கு என்ன நியாயமுண்டு? இயற்கை உலகத்திலுங்கூட நாம் அறிந்துகொள்ள இயலாத இரகசியங்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கின்றன. இயற்கைப் பொருட்களுக்குள்ளே ஒரு பிராணி மிகவும் அற்பமாயிருந்தாலும், சாஸ்திரிகளில் பெரிய ஞானிக்குங்கூட அதை விளக்கிச் சொல்வது கடினமாயிருக்கிறது. நமது கண்களுக்குப் புலப்படாத அதிசயங்கள் நம்மைச் சுற்றிலும் நிறைந்திருக்கின்றன. ஆவிக்குறிய உலகத்திலும் அவ்வாறே நாம் கிரகிக்கக்கூடாத அதிசயங்கள் உண்டு என்றால் அது நமக்குப்புதுமையான

காரியமாகுமோ? நமது புத்தியானது பலமற்றதும் விசாலமில்லாததுமாக இருக்கிறபடியால் அவற்றை விளங்கிக் கொள்வது நமக்குக் கஷ்டமாகிறது.

வேதாகமத்தில் "அறிகிறதற்கு அரிதானதும், கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாகப் புரட்டுகிறதுமான காரியங்கள்" 2 பேது, 3:16. இருக்கின்றன என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார். நாஸ்திகர் இந்தக் காரியங்களை எடுத்து, வேதத்தைப் புர ட்டும்படி முயற்சிக்கிறார்கள். இவைகள் வேதத்துக்கு விரோதமாக அல்ல, வேதம் தேவனுடைய ஏவுதலினல் ஆனது என்பதற்குத் தகுந்த அத்தாட்சியாகின்றன. நாம் எளிதாக அறிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள் மாத்திரம் தேவனைப்பற்றி அதிலே வரையப்பட்டிருந்தால், அல்லது நமது அற்பப் புத்தியால் அவருடைய பெருமையையும் மகத்துவத்தையும் கிரகித்துக்கொள்ளக்கூடியதானால், வேதமானது தேவவல்லமையால் ஆனது என்ற தவறில்லாத அத்தாட்சி அதற்க்குப் பொருந்தாது. வேதத்தில் நாம் காண்கிற விஷயங்களின் சிறப்பும் புதைபொருளுமே அது தேவனுடைய வார்த்தையென்று நாம் விசுவாசிக்கும்படி நம்மை ஏவவேண்டியவைகள்.

(4) உலக ஞானம் வேதத்தை புரிந்து கொள்வதில் தோற்பது ஏன்?

*ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால்,*

*அவைகளை அறியவுமாட்டான். (1கொரி.2:14)*

வேதமானது சத்தியங்கள் நமக்குத் திறந்துகாட்டுகிறது. இந்தச் சத்தியங்கள் வெகு எளிதானதும், மனுஷ இருதயத்தின் அவசரம் ஆசைகளுக்கேற்றதுமான தாயிருக்கின்றபடியால் மிகத்தேர்ந்த கல்விமான்களுடைய உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளுகிறதுடன் தாழ்மையுள்ளவர்களும் கல்லாதவர்களும் இரட்சிப்பின் வழியை அறிந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்குப் பெலனளிக்கிறது. ஆயினும் எளிதாகச் சொல்லப்பட்டிருக்கிற இந்தச் சத்தியங்கள், உன்னதமானதும் எங்கும் செல்லக்கூடியதும் மனுஷருடைய புத்திக்கு எட்டாததுமான விஷயங்களைப்பற்றியுள்ளவைகளாதலால், தேவன் அவற்றை விளம்பியிருக்கிறார் என்ற ஒரே காரணத்தால் மாத்திரம் நாம் அவற்றை அங்கிகரித்துக்கொள்ளக்கூடியது. மீட்பின் மார்க்கம் நமக்கு முன்னாலே விரிக்கப்படுகிறது, ஆகையால் ஒவ்வொரு மனுஷனும் தேவன் குறித்த வழியிலே இரட்சிப்படைத்தக்கதாக, தேவனையடைவதற்குப் பாவ மனஸ்தாபப்பட்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பற்குத் தான் என்னென்ன வழிவகைகள் செய்யவேண்டுமென்று கண்டுகொள்ளவான்; ஆயினும் எளிதாக விளங்க்க்கூடிய இந்தச் சத்தியங்களுக்குப் பின்னே, அவருடைய மகிமையை மறைகின்ற திரைபோன்ற இரகசியங்கள் இருக்கின்றன. இந்த இரகசியங்களை ஆராயும்படி எத்தனிக்கிறவனுடைய மதிமை அவைகள் மயக்கி, பயபக்தியோடும் விசுவாசத்தோடும்

சத்தியத்தை உண்மையாகத் தேடுகிறவனை ஏவுகிற தூண்டுகோலாகவுமிருக்கின்றன, ஒருவன் எவ்வளவுக்கு அதிகமாக வேதத்தை ஆராய்கிறானோ அவ்வளவுக்கதிகமாக அது ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையென்று கண்டுகொள்ளுகிறான். தேவன் வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய வார்த்தையின் மகத்துவத்துக்கு முன்னே மனுஷனுடைய புத்தியானது தலைவணங்கித்தாழுகிறது.

வேதாகமத்திலுள்ள சிறந்த சத்தியங்களைச் சரிவர கிரகித்துக்கொள்ள நமக்குச் சக்தியில்லையென்று ஒத்துக்கொள்வது என்ன ஆகுமென்றால் நித்தியத்தைக் கிரகிப்பதற்கு அநித்தியமானது போதாது என்றும் சொற்ப அறிவுள்ள மனுஷன் சர்வஞானமுள்ளவருடைய நோக்கங்களை அறிந்துகொள்ளமாட்டான் என்றும் ஒப்புக்கொள்வதாகும்.

(5) **நம் இதயத்திற்குள் நுழையக்கூடாதபடி எச்சரிக்கப்படுவது எது?**

***சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். (எபி.3:12)***

நாஸ்திகனும் அவிசுவாசியும் தேவவார்த்தையின் இரகசியங்கள் ஆராய அசக்தராயிருக்கிறபடியால், அந்த வார்த்தையைத் தள்ளுகிறார்கள்; வேதத்தை நம்புகிறதாக நடித்தும் பேசுகிற பலர் இந்த விஷயத்தில் தவறுகிறார்கள். "சகோதரரே தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள

பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்” எபி.3:12 என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். வேதத்திலுள்ள போதசங்களைக் கவலையாய்ப்படித்து, நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கும் மட்டுமுள்ள “தேவனுடைய ஆழங்களை” 1 கொரி. 2:10 ஆராய்வது நமது கடமை. “மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்” உபா. 29:29. மனதுக்குரிய ஆராயும் சக்திகளைத் திருப்புவதேசாத்தானுடைய வேலை. வேத சத்தியத்தைச் சிந்தனைசெய்வதோடு கொஞ்சம் அகங்காரம் கலந்துவிடுவதால், மனுஷர் வேதத்தின் ஒவ்வொரு பாகத்தையும் திருப்திகரமாக விளக்கிச் சொல்லமுடியாமற் போனால் தாங்கள் தோல்வியடைந்ததாக மனச்சஞ்சலப்படுகிறார்கள். ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வார்த்தைகளை விளங்கிக்கொள்ளத் தங்களு க்கு முடியாது என்று ஒத்துக்கொள்வது போலமானக் கேடானது அவர்களுக்கு வேறேன்று மில்லை. சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவது சரியென்று தேவன் காணும்வரைக்கும் பொறுமைபாய்க் காத்திருக்க அவர்களுக்குப் பிரியமில்லை. வேதத்தை அறிந்துகொள்வதற்குத் தங்கள் சொந்தஞானம் போதுமென்று நினைத்துக்கொண்டு, நினைத்தபிரகாரம் அறிந்துகொள்ளத்தவறும்பொழுது வேதம் கடவுளால் கொடுக்கப்படவில்லையென்று வற்புறுத்திச் சாதிக்கிறர்கள். வேதத்திலிருந்து வந்த்தாக அநேகர் எண்ணுகிற பலவித அபிப்பிராயங்களும் கொள்கைகளும் ஆதாரமற்றவைகளும் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட சத்தியங்களுக்கு முற்றிலும் விரோத

மானவைகளுமாயிருக்கின்றன. இவைகள் அநேகருடைய மனதில் சந்தேகத்தையும் கலக்கத்தையும் எழுப்புகின்றன. இவ்வாறு சந்தேகமும் கலக்கமும் உண்டாகுவது தேவனுடைய வார்த்தையின் தப்பிதமல்ல, மனுஷன் அதைப் புரட்டுகிறதினால் விளையும் தப்பிதமேயாகும்.

**(6) நாம் எப்போதுமே தேவனை முழுமையாக அறிய முடியாதது ஏன்?**

***மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். (உபா.29:29)***

தேவனையும் அவருடைய கிரியைகளையும் முற்றிலும் அறிந்துகொள்ளும் சக்தி சிருஷ்டிக்கு உண்டென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால், அந்த அறிவு அடைந்தவுடனே, சத்தியத்தைக்கண்டுபிடிக்கும்படி பின்னும் முயற்சிக்கமாட்டார்கள்; அறிவில் தேர்ச்சியிருக்கது; புத்தி வளர்ச்சிகளில் ஏற்றமும் காணப்படாது. தேவன் உன்னதமான வர் என்பதற்கு வழியில்லை; மனுஷனும் கல்வி தேர்ச்சியின் கரைகண்டுவிட்ட்தால் அதற்குமேல் தேர்ச்சியின்றி நின்றுவிடுவான். இவ்வாறில்லாததற்காகத் தேவனுக்குத் தோத்திரம் செய்வோமாக. தேவன்நித்தியர்; "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" கொலோ. 2:3 மனுஷர்

நித்தியகாலமாகப்படித்து ஆராய்ந்தபோதிலும், அவருடைய ஞானம், நன்மை, வல்லமை என்பவற்றின் ஒரு சிறிய அணுவையாவது முற்றிலும் அறிந்துகொண்டார்களென் பதற்கு மார்க்கமில்லை.

**(7) தேவனுடைய ஞானம் எங்கேயிருந்து பெறப்படுகிறது?**

***நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். (1கொரி.2:12)***

தேவனுடைய வார்த்தையின் சத்தியங்கள் தமது ஜனங்களுக்கு இந்த வாழ்க்கை இருக்குங்காலத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகவேண்டும் மென்பது அவருடைய விருப்பம். இந்த அறிவை நாம் அடைவதற்கு ஒரே ஒரு வழியுண்டு. தேவனுடைய வார்த்தையாரால் அளிக்கப்பட்ட்தோ அந்த ஆவியானவருடைய உதவியினாலேயே அந்த வார்த்தையின் கருத்தை அறிந்துகொள்ளும் அறிவை அடையலாம். "அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்கிறபடியால்," 1 கொரி. 2:10,11. இரட்சகர் தமது அடியாருக்கு அளித்த வாக்குத்தத்மும் இதுவே: "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்... அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" யோவான். 16:13,14.

**(8) நாம் படிக்கும்போது பரிசுத்த ஆவி நம்மை நடத்த நாம் அனுமதிக்கும்போது நாம் எதை கண்டுபிடிக்க முடியும்?**

***சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோ.16:13)***

மனுஷன் தனது யூகித்தறியும் சக்தியை அப்பியாசப்படுத்தவேண்டுமென்று தேவன் விரும்புகிறர்; வேதத்தைப் படிக்கும் படிப்பானது மனதுக்கு உறுதியையும் உற்சாகத்தையும் அளிப்பதுபோல வேறெந்தக் கல்வியும் கொடுப்பதில்லை. ஆயினும் யூகத்தையே சிறப்பித்து விடாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனெனில் இந்த யூகமானது மனுஷ பெலவீனமும் தளர்ச்சியும் பொருந்தியது. வேதமானது நமது புத்தியை மந்தப்படுத்தி, அது காரணத்தால் தெளிவான சத்தியங்களைக்கூட நாமே விளங்கிக்கொள்ள அசக்தராயில்லாதிருக்க நாம் விரும்மினால் ஒரு சிறு பிள்ளையின் கபடமின்மையும் பற்றுமுள்ளவர்களாகவும், பரிசுத்த ஆவியின் உதவிக்காக மனறாடிக்கொண்டும் இருக்கவேண்டும். தேவனுக்கு வல்லமையும் ஞானமும் உண்டென்றும், நமக்கோ அவருடைய மகிமையை அறிந்துகொள்ளவும் பெலனில்லையென்றும் நமக்குண்டாகிற உணர்ச்சி நம்மைத் தாழ்மைப்படுத்தவேண்டும்; பரிசுத்த பயங்கரத்துடனே நாம் அவருடைய சந்நிதானத்துக்குச் செல்லுகிறதுபோலவே

அவருடைய வார்த்தையையும் திறக்கவேண்டும். வேதத்தண்டை நாம் வரும்பொழுது நமது யூகமானது அதற்குமேலான அதிகாரியொருவர் உண் டென்று அறிக்கையிடவேண்டும், நமது புத்தியும் சித்தமும் இருக்கிறேன் என்ற பெரியவருக்கு முன்பு தலைவணங்கித் தாழவேண்டும்.

**(9) ஞானத்தின் நமது மூலதனம் யார்?**

***உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக்.1:5).***

தோற்றத்தின்படி கடினமாகவோ கருகலாகவோ உள்ள அனேக காரியங்கள் உண்டு; ஆயினும் அவற்றை அறிந்துகொள்ளவேண்டுமென்று தேடுகிறவர்களுக்குத் தேவன் அவைகளைத் தெளிவாகவும் சுலபமாகவும் செய்வார். ஆனால் பரிசுத்த ஆவியானவருடைய சகாயம் இல்லாவிட்டால் வேதத்தை நாம் புரட்டியோ அல்லது பிழையான கருத்துகொண்டோ தவறிவிட ஏதுவுள்ளவர்களாயிருப்போம். யாதொரு பயனில்லாத்தும் அனேக விஷயங்களில் நிச்சயமாகவே கெடுதி விளைவிப்பதுமான அதிக வேதவாசிப்பு உண்டு. வண்க்கமும் ஜெபமுமில்லாமல் நாம் தேவ்வார்த்தையைத் திறக்கும்பொழுதும், நமது சிந்தனைகளும் நேசபாசங்களும் தேவன்மேலே இராமலும், அவருடையச் சித்தத்துக்கு இணங்காமலுமிருக்கும்பொழுதும்,

நம்முடைய மனமானது சந்தேகத்தால் மந்தமாகி விடுகிறது; அவ்விதமாக வேதத்தைப் படிக்கும்பொழுது நாஸ்திகம் முற்றுகிறது. சத்துருவானவன் நமது எண்ணங்களைத் தன்வசப்படுத்திக்கொண்டு, தப்பறையான தாற்பரியங்களை நமக்கு நினைப்பூட்டுகிறன். மனுஷர் தங்கள் வார்த்தையிலும் நட்த்தையிலும் தேவனோடு ஒத்துவாழும்படி தேடாதிருப்பார்களானால், அவர்கள் எவ்வளவு கற்றிருப்பினும் சரி, வேதத்தை அறிந்துகொள்வதில் தவறும் இயல்புடையுவர்களாயிருக்கிறர்கள். அவர்கள் விவரித்துச்சொல்வதை நம்பி ஏற்றுக்கொள்வது யுக்தமல்ல. பேதங்களைக் காணவிரும்பி வேதம் வாசிப்பவர்களுக்கு ஆவிக்குரிய தேர்ச்சியில்லை யெனறாகும். அவர்களுக்குமாறான பார்வையிருக்கிறதால், உண்மையாகவே தெளிவாயும் சுலபமாயுமுள்ள காரியங்களிலே சந்தேகத்துக்கும் அவிசுவாசத்துக்கும் இடமான அனேக காரணங்கள் அவர்கள் கண்களுக்குத் தென்படும்.

**(10) நாம் தெரிந்த பாவத்தில் தொடர்ந்து நடக்கும்போது இது தேவனோடு உள்ள நம் உறவை எப்படி பாதிக்கும்?**

***உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.(ஏசா.59:2)***

மனுஷர் எவ்வளவாக மறைத்தபோதிலும் அனேக விஷயங்களில்

சந்தேகத்துக்கும் நாஸ்திகத்துக்கு முள்ள முக்கிய காரணம் பாவத்தின்மேலுள்ள பிரியமாம்.
தேவ்வார்த்தையிலடங்கியிருக்கிற போதகங்களும் கட்டுப்பாடுகளும் கருவமுள்ளதும் பாவத்தின்மேல் பிரிமுள்ளதுமான இருதயத்துக்கு ஏற்றதாயிருக்கமாட்டாது. அது கேட்கிறதுதின்படி கீழ்ப்படிய மனமற்றவர்கள அது தேவனாலான தென்பதைப்பற்றிச் சந்தேகங்கொள்ளச் சித்தமாயிருக்கிறர்கள்.
சத்தியத்தண்டைபோய்ச் சேரவேண்டுமானால், சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்ற நேர்மையான ஆசையும், அதற்குக் கீழ்படிவதற்கேற்ற மனவிருப்பமும் நமக்கிருக்கவேண்டும் இந்தக்குணத்தோடு வேதத்தைப் படிக்க வருகிறவர்கள் எல்லாரும் அது தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கு ஏராளமான அத்தாட்சி கண்டுகொள்வார்கள்; அவர்கள் அதின் சத்தியங்களை அறிந்துகொள்வார்கள் அந்த அறிவால் அவர்கள் இரட்சிப்படைவதற்கேற்ற ஞானிகளாவார்கள்.

**(11) நமக்கு புதிய ஒளியை வெளிப்படுத்துவதற்கு முன் தேவனுக்கு தேவைப்படுவது என்ன?**

***அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். (யோ.7:17)***

"அவருடைய சித்தத்தின்படி செய்யமனதுள்ளவனெவனோ அவன்

இந்த உபதேசத்தை அறிந்துகொள்ளுவான்" யோவான் 7:17, என்ற கிறிஸ்து சொல்லியிருக்கிறர். உனக்கு விளங்காத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்டு வீண்வாதம் செய்கிறதற்குப் பதிலாக, உனக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிற அறிவின் பிரகாரம் நடப்பாயானால் இன்னும் அதிக அறிவடைவாய். உன்னுடைய புத்திக்குத் தெளிவாகத் தோன்றுகிற ஒவ்வொரு கடமையையும் கிறிஸ்துவின் கிருபையின் உதவியால் செய்வாயானால், நீ இப்பொழுது சந்தேகிக்கிறவைகளை அறிந்து சரி வரச்செய்யும்படி உனக்கு பலனளிக்கப்படும்.

அறக்கற்றவர்களானாலும் சரி, ஒன்றும் படியாத வர்களானாலும் சரி எல்லாருக்கும் அனுபவ அத்தாட்சியென்ற ஒரு அத்தாட்சி வெகு தெளிவாக உண்டு. தேவன், அவருடைய வார்த்தை நிசமானதென்றும் அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையானதென்றும் நாமே நமது அனுபவத்தில் அறிந்துகொள்ளும்படியாக நம்மை அழைக்கிறர். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்காள்" என்கிறர் சங் 34:8. மற்றவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக நாமே ருசித்தறியவேண்டும். "கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள்" யோவா. 16:24 என்று சொல்லுகிறார். அவர் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார். அவைகள் ஒருக்காலும் தவறிப்போனதில்லை, தவறிப்போவதுமில்லை. நாம் இவேசுவண்டை நெருங்கி அவருடைய அன்பின் பெருக்கிலே சகதோஷிக்கும் பொழுது, நம்முடைய அனுமானமும் அந்தகாரமும் அவருடைய பிரசன்னத்தின்

சோதியால சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துபோகும்.

**(12) இயேசுவுடனான நம் உறவு உருவாகும்போது, நம் சாட்சி எப்படியிருக்கும்?**

***இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (கொலோ.1:13)***

தேவன் "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கித் தமது அன்பின் குமாரனுடைய ராஜயத்திற்கு உட்படுத்தியிருக்கிறர்" நொலோ. 1:13. என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறர். மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கரையேறின ஒவ்வொருவனும் "தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோடக் கூடியவனாயிருக்கிறான்" யோவா 3:33. பின்னும் அவன், "எனக்கு உதவி தேவையாயிருந்தது, அதை இயேசுவிலே கணடுபிடித்தேன். எனக்கு வேண்டியதெல்லாம் கொடுத்தார், என்னுடைய ஆத்துமாவின் பசியை ஆற்றினார். வேதம் இப்பொழுது எனக்கு இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட்தா யிருக்கிறது. இயேசுவை நான் ஏன் விசுவாசிக்கிறேனென்று கேட்கிறயோ? அவர் எனக்கு தெய்வ இரட்சகர். நான் ஏன் வேதத்தை நம்புகிறேன்? அது என் ஆத்துமாவோடு பேசுகிற தேவசத்தம் என்று கண்டுகொண்டேன்" என்று சாட்சி பதரக்கூடும். வேதம சத்தியமென்றும் கிறிஸ்து தேவகுமாரனென்றும் நம்மிலேயே அத்தாட்சி இருக்கலாம். தந்திரமாகப் புனைந்த கட்டுக் கதைகளை

நாம் பின்பற்றுகிறதில்லையென்றும் நமக்குத் தெரியும்.

**(13) நமக்கு கொடுக்கப்பட்ட ஒளியை நாம் பின்பற்றும்போது, நம் ஆவிக்குரிய பயணத்தில் இது கொடுக்கும் விளைவு என்ன?**

***ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். (2பேது.3:17-18)***

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" 2 பேது 3: 18 என்று பேதுரு தமது சகோதரரைத் தூண்டுகிறார். தேவனுடைய ஜனங்கள் கிருபையில் வளரும்பொழுது, அவருடைய வார்த்தைகளைப்பற்றிய தெளிந்த அறிவு அவர்களுக்கு எப்பொழுதும் உண்டாகிக்கொண்டிருக்கும். அதின் பரிசுத்த சத்தியங்களில் புதுப்பிரகாசமும் அழகும் அவர்களுக்குத் தோன்றும். எல்லா யுகங்களிலும் கிறிஸ்து சபையின் சரித்திரத்தைப் பார்த்தால் இது உண்மைதானென்று காணலாம். "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியபிரகாசம்போலிருக்கும்" நீதி. 4: 18

**(14) தேவனுடைய நிரந்தர தன்மையை ஒப்பிடும் நம் எதிர்கால திறமையை இந்த வசனம் எவ்வாறு விளக்குகிறது?**

***இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன். (1கொரி.13:12)***

விசுவாசத்தினாலே இனிவரும் காலத்தை நாம் எதிர் நோக்கலாம்; அதுடன் நமது மனுஷதத்துவங்கள் தேவ தத்துவங்களோடு சேர்ந்து, ஆத்துமாவின் ஒவ்வொரு விதமான சக்தியும் ஒளிக்கு ஊற்றானவரோடு பொருந்தி, இவ்விதமாக் நமது புத்தியானது வளருமென்று தேவன் கொடுத்த வாக்கையும் பற்றிப்பிடிக்கலாம். திருவுளச் செயல்களிலே நமக்கு விளங்காமல் நமது மதியை மயக்கினவைகளெல்லாம் விசிதமாகும்; விளங்கிக்கொள்வதற்கரிதான விஷயங் களை வெகு சுலபமாக விவரிக்கலாம்; நம்முடைய மட்டுப்பட்ட புத்தி எங்கெங்கே குழப்பம் இருக்கவும் தேவ நோக்கங்கள் தொடர்ச்சியற்றதாயிருக்கவும் பார்த்தோ, அங்கேயெல்லாம் பூரண அழகான ஒழுங்கு பொருந்தியிருப்பதைக் காணலாம்; மேலே சொன்னவைகளைப் பார்த்துக் களிகூரலாம். "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்வேன்." 1 கொரி. 13: 12.

பூமியின் வரலாற்றின் கடைசி நாட்களில் அநேகர் தேவனை சந்தேகப்படுவர் என்று நான் உணர்கிறேன். அவர் கொடுத்த சாட்சிகளில் என் விசுவாசத்தை வைக்கிறேன் மற்றும் நான் அவரை நம்புகிறேன்.

வட்டமிடுக: ஆம்  முடிவெடுக்கவில்லை

தேவனுடைய ஞானத்தை எந்த மனிதனாலும் புரிந்துகொள்ள முடியாது என்று அறிவது ஆறுதலாய் உள்ளது. அவர் எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறவர் என்று அறிந்து என் வாழ்வை அவர் கரங்களில் கொடுக்கிறேன்.

வட்டமிடுக: ஆம்  முடிவெடுக்கவில்லை

தேவனை பற்றி வேதம் கூறும் அனைத்தையும் நான் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், அவரின் சிறப்புத்தன்மைக்கு இது அதிக நிரூபணம் என்று உணர்கிறேன். வேதம் அவரால் ஏற்படுத்தப்பட்டது என்று இதினால் அறிய முடிகிறது.

வட்டமிடுக: ஆம்  முடிவெடுக்கவில்லை

தேவனையும் அவரின் வார்த்தையையும் பற்றி என் சிந்தையில் உண்டாகும் எல்லா சந்தேகங்களையும் தள்ளி விடுகிறேன். தேவனை எனக்கு வெளிப்படுத்தின ஒளியை பின்பற்ற நான் தெரிந்தெடுக்கிறேன்.

வட்டமிடுக: ஆம்  முடிவெடுக்கவில்லை



## பாடம் 15
## கர்த்தருக்குள் களிகூருதல்

(1) கிறிஸ்தவர்களாக நாம் கிறிஸ்துவின் நற்கிரியை, இரக்கம் மற்றும் அன்பை யாருக்கு காண்பிக்கவேண்டும்?

*அக்காலத்திலே நீங்கள் சொல்வது: கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்; அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள். கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், அவர் மகத்துவமான கிரியைகளைச் செய்தார்; இது பூமியெங்கும் அறியப்படக்கடவது என்பீர்கள். (ஏசா.12:4-5)*

தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருடைய நன்மையையும் இரக்கத்தையும் காண்பிக்கிற கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்றழைக்கப்படுகிறார்கள். பிதாவின் குணாகுணங்களை இயேசு நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறதுபோல, கிறிஸ்துவின் உருக்கம், இரக்கம், அன்பு

முதலான சுகுணங்களையறியாத உலகத்துக்கு நாமே அவரை வெளிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். "நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்," "என்னை நீர் அனுப்பினதையும் நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல, அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." யோ. 17: 18, 23 என்று இயேசு மன்றாடினார்.

**(2) நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றும்போது நாம் நிறைவேற்றவேண்டிய கடமை என்ன?**

***எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.*** *(2கொரி.3:2-3)*

பவுல் அப்போஸ்தலன் இயேசுவானவருடைய சீஷர்களுக்கு கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள் என்று வெளியரங்கமாயிருக்கிறது," "சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப் பட்டுமிருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே." 2 கொரி. 3: 3,2 என்பதாகச்சொல்லுகிறார். இயேசு தமது ஒவ்வொரு பிள்ளைகள் மூலமாயும்

உலகத்தாருக்கு நிருபம் அனுப்புகிறார். நீங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாயிருந்தால், உங்கள் மூலமாக நீங்கள் வாசம்பண்ணுகிற குடும்பத்துக்காவது கிராமத்துக்காவது, தெருவுக்காவது நிருபமொன்றையனுப்புகிறார். இயேசு உனக்குள்ளே வாசம்பண்ணி தமக்கு அறிமுகமில்லாதவர்களுடைய இருதயத்திலே பேசவிரும்புகிறார். ஒரு வேளை அவர்கள் வேதாகமத்தை வாசிக்கிறதில்லையாக்கும்; அல்லது அவைகளின் தாள்களில் எழுதப்பட்டவைகளின் மூலமாய் அவர் தங்களோடு பேசும் சத்தத்தைக் கேட்கிறதில்லையாக்கும். தேவனுடைய அரிய அன்பை அவருடைய கிரியைகளின் மூலமாகப் பார்க்கிறதுமில்லையாக்கும்; இருக்கட்டும். நீ இயேசுவுக்கு உண்மையான ஸ்தானாபதியாயிருப்பாயானால், உன்னாலே அவர்கள் அவருடைய நன்மைகளைக் குறித்துக் கொஞ்சமாகிலும் அறிந்து கொள்வதற்கு ஏவப்படலாம். அவர்கள் அவரை நேசிக்கவும் அவருக்கு ஊழியஞ்செய்யவும் நீ அவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளலாகும்.

(3) **நாம் கிறிஸ்துவின் ஊழியத்தில் உலகத்திற்கு ஒளியாக இருந்து, நமது வாழ்வில் பிரதிபலிக்க வேண்டிய இரண்டு குணங்கள் என்ன?**
***போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். (1தீமோ.6:6)***

கிறிஸ்தவர்கள் பரத்துக்கேகும் மார்க்கத்திலே நாட்டப்பட்டிருக்கும் தீபஸ்தமபமானவர்கள். கிறிஸ்துவிடத்திலிருந்து தங்கள் மீது வீசும்

ஜோதிப்பிரகாசத்தை உலகத்துக்குப் பிரதிபிம்பிக்க வேண் டியவர்கள் இவர்களே. கிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய சிறந்த ஊழியத்தைப்பற்றியும் சரியான அறிவையும் உணர்வையும் இதர ஜனங்கள் அடையத்தக்கதாக அவர்கள் ஜீவியமும் குணசீலங்களும் அமைந்திருத்தலவசியமே.

கிறிஸ்துவானவருக்காக நாம் பிரதிநிதிகளாய் ஏற்படுவோமாகில், அவருடைய ஊழியம் எப்படி இருந்தோ அப்படியே கவர்ச்சியுள்ளதாய்க் காணும்படி அதை நாமும் ஆக்கிக்கொள்வோம். தங்கள் ஆத்துமாக்களிடத்தில் துக்கத்தையும் துயரத்தையும் சஞ்சலத்தையும் வியாகுலத்தையும், முறுமுறுப்பையும் ஆவலாதியையும் சேர்த்துக்கொள்ளுகிற கிறிஸ்தவர்கள் மற்ற ஜனங்களுக்கு தேவனைப்பற்றிய தப்புரையான அபிப்பிராயத்தையும், பொய்யான கிறிஸ்தவ ஜீவியத்தையும் காட்டுகிறவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் சந்தோஷமாயிருப்பது அவருக்குப் பிரியமில்லாததாக அவர்கள் தங்கள் கிரியைகளினால் பாவிக்கிறார்கள். இவ்விஷயத்தில் அவர்கள் நம்முடைய பரமபிதாவுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகிறார்கள்.

**(4) நம் சிந்தையில் உள்ள எந்த அடிப்படை பிரமாணம், அவிசுவாசம், அவநம்பிக்கை மற்றும் தேவனுக்கு எதிரான சாத்தானின் புரட்டல்களை தடுக்கும்?**

***கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன்***

*பர்வதத்தைப்போல் இருப்பார்கள். (சங்.125:1)*

சாத்தானானவன் தேவனுடைய பிள்ளைகளை அவநம்பிக்கைக்கும், மனச்சோர்புக்குமுள்ளாக்கக் கூடியவனாகிறபோது களிப்படைகிறான். நாம் தேவனை நம்பாமல் அவருடைய பட்சத்தைக் குறித்தும், நம்மை இரட்சிக்கும் அவரது வல்லமையைக் குறித்தும் சந்தேகங்கொள்ளுகிறதைக் கண்டு, மகிழ்ச்சி கொள்ளுகிறவனாயிருக்கிறான். அவர் தம்முடைய நடத்துதல்களினால் நமக்குத் தீங்கு செய்கிறவர் என்று முறையிடுவதைக் கேட்கவிரும்புகிறான். கர்த்தர் மன உருக்கமும் பரிதாபமுமில்லாதவர் என்று சொல்வதே சாத்தானுடைய வேலை அவரைக் குறித்த சத்தியத்தைப் புரட்டிப் பேசுவான். பரமபிதாவைக் குறித்த சத்தியத்தையல்ல, பொய்யை நமதுள்ளத்திலே நிரப்பி, தப்பான தாற்பரியங்களினால் நம்மைப் பிதற்றிவிடுவான். நமதெண்ணங்களை தாறுமாறாக்கிவிடுவான். நாமுங்கூட சாத்தானுடைய அபத்தமான பேச்சை நம்பி, நமதெண்ணங்களை அதின்மேல் நாட்டி அவரை விசுவாசியாமல் அவமதித்து, அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறதுமுண்டல்லவா. நம்முடைய சன்மார்க்க ஜீவியம் நமக்கு மந்திரமாகவும் கேவலமாகவுமிருக்கும்படி சாத்தான் எப்போதும் வகைதேடித்திரிகிறான். அந்த பக்திக்குரிய ஜீவியம் வருத்தமும் பாரமும் கடினமுமாகக் காண்பிக்கும்படி பார்க்கிறான். கிறிஸ்தவன் ஒருவன் தன் ஜீவியத்தை இவ்வித எண்ணத்தினால் கழிக்கிறபோது, தன் அவ நம்பிக்கையினாலேயே சாத்தா னுடைய பொய்யை ஒத்துக்கொள்ளுகிறவனாகிறான்.

**(5) பவுலை போல, வாழ்வின் பாதையில் கடினமான சூழ்நிலைகளை அனுபவிக்கும்போது நம் செயல்கள் எப்படி இருக்கவேண்டும்?**

***அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். (2கொரி.12:9-10)***

ஜீவ வழியில் நடக்கிற அநேகர் தங்கள் தப்பிதங்களையும் விழுதல்களையும் நம்பிக்கைக்கேட்டையும் சிந்தனை செய்துகொண்டு வருவதினால் அவர்கள் இருதயம் வியாகுலத்தினாலும் அதைரியத்தினாலும் நிறைந்துபோகிறது. நான் ஐரோப்பாவில் இருந்தபோது இப்படி செய்துகொண்டிருந்த ஒரு சகோதரி துயரடைந்து தனக்கு ஆறுதலான சில வார்த்தைகளை நான் எழுதும்படி எனக்கு எழுதி கேட்டுக் கொண்டாள். நான் அவள் கடிதத்தை வாசித்த அடுத்த இரவில், நான் ஒரு தோட்ட்த்தில் இருக்கிறதாகவும் அந்தத் தோட்டத்துக்குச் சொந்தக்காரனாகத் தோன்றினவன் அதின் வழியாய் என்னை நடத்திக்கொண்டு போனதாகவும் ஒரு கனாக்கண்டேன். அவன் அந்தத்தோட்ட்த்தில்

பூக்களைச்சேர்த்துக்கொண்டும் அவைகளை முகர்ந்துகொண்டும் போகிறபோது இந்த சகோதரி என் பக்கத்தில் நடந்து நான் நடக்கும் வழியில் இடைஞ்சலாகப் படர்ந்து கிடந்த நெருஞ்சில் முட்களைப் பார்க்கும்படி என்னை எச்சரித்தாள். அங்கே அவள் நின்றுகொண்டு அழுது புலம்பினாள். வழிகாட்டிக்குப் பின்னால் பாதையிலேயே நடந்துபோகாமல் நெருஞ்சில்களிலும் முட்களிலும் நடந்துபோனாள். அவைகள் காலில்தைக்க, ஐயோ! என்று அலறி, "இந்த அழகானதோட்ட்த்தில் இந்த முட்கள் கிடக்கிறது எவ்வளவு பரிதாப மான காரியம்" என்று சொன்னாள். அப்போது அந்த வழிகாட்டி, "காலில்தைக்கும் முட்களை விட்டுவிடு அவைகள் கிடக்கட்டும். ரோஜா, லீலி முதலான புஷ்பங்களைச் சேர்த்துக்கொள்" என்றான்.

**(6) தகுதியில்லாத பாவி மீட்பின் படத்தை பெறும்போது, அவனின் சாட்சி எப்படியிருக்கும்?**

***அக்காலத்திலே நீங்கள் சொல்வது: கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்; அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள்.*** *(ஏசா.12:4)*

உன் அநுபவத்திலே பிரகாசமான காரியங்கள் இருந்த்தில்லையா? தேவாவியானவருக்கு மறுமொழியாக உன் இருதயம் சந்தோஷத்தினால் நிறைந்திருந்தபோது உல்லாசமும் மனமகிழ்ச்சியுமானவேளை உனக்கு இருந்த்தில்லையா? எழுதப்பட்டிருக்கிற உன் ஜீவிய அனுபவ அதிகாரங்களைத்

திறந்து பார்க்கையில் மிகவும் இன்பமான சில பக்கங்ளுள்ள ஏடுகளை நீ காண்பிக்கிறதில்லையா? தேவன் அருளிச் செய்திருக்கிற வாக்குத்தத்தங்கள் எப்பக்கத்திலும் வழியோரமாக வளர்ந்திருக்கிற வாசனையுள்ள மலர்களைப்போலிருக்கின்றன வல்லவா? அவைகளின் அழகும் இன்பமும் உன் இருதயத்தைச் சந்தோஷத்தினால் நிரப்பும்படி இடங்கொடுக்கமாட்டாயா?

நெருஞ்சில்களும் முட்களும் வேதனையையும் விசனத்தையுமே யொழிய வேறொன்றையும் தராது. இவைகளைமாத்திரம் நீ சேர்த்து மற்றவர்களுக்குக் கொடுப்பாயானால் நீ தேவனுடைய நன்மைகளை நீயே துரந்து விடுவது மாத்திரமல்ல, உன்னைச் சுற்றிலுமிருக்கிறவர்கள் ஜீவ வழியில் நடக்காதபடி
தடைசெய்கிறவனாயுமிருப்பாய். கடந்த காலத்தின் ஜீவியத்திலுள்ள அக்கிரமங்கள் நம்பிக்கைக்கேடு முதலான வெறுப்பான எல்லா சிந்தனைகளையும் ஒன்றாய்த் திரட்டி அவைகளை அருவருத்துத் தள்ளுமட்டும் அவைகளைக்குறித்து பேசுவதும் அவைகளுக்காக புலம்புவதும் ஞானமல்ல. நிலைகுலைந்த ஒரு ஆத்துமா அந்தகாரத்தினால் நிறைந்து தேவ ஒளி தனக்குள் பிரகாசிக்காதபடி தன்னை மூடிக்கொள்வதுமாத்திரமல்ல மற்றவர்கள் வழியிலும் இருளை வரவிடுகிறது.

**(7) தேவன் அவருடைய அன்பை நமக்கு ந்த சந்தேகமும் இல்லாமல் நிரூபித்தது எப்படி?**

***தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற***

*எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோ.8:32)*

தேவன் நமக்குக் காண்பித்திருக்கும், தெளிவான வெளிச்சத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம்! நாம் அவைகளை ஓயாமல் பார்க்கும்படியாக, அவருடைய அன்பின் குறைவற்ற நம்பிக்கைகளைத் திரட்டிப்பார்ப்போம். மனிதனைச் சாத்தானின் வல்லமையிலிருந்து, மீட்கும்படியாகத் தேவகுமாரன் தமது பிதாவின் சிங்காசனத்தைவிட்டுத் தமது தெய்வீகத்தில் மனுஷீகத்தை ஏற்றுக்கொண்டதும், அவர்கள் நமக்காக அடைந்த ஜெயத்தினால், மனிதருக்கு வானத்தைத் திறந்து, தேவன் தமது மகிமையினால் நிறைந்திருக்கிற அந்த மேலான ஸ்தலத்தை மனித பார்வைக்கு வெளிப்படுத்தினதும், பாவத்தில் அமிழ்ந்திக்கெட்டிப்போன ஜாதியை அழிவின் குழியிலிருந்து தூக்கியெடுத்து நித்திய தேவனுடைய ஐக்கியத்திற் குக்கொண்டுவந்ததும், நமது இரட்சகரை பற்றும் விசுவாசத்தினால் தேவசோதனையச் சகித்த நம்மைக் கிறிஸ்துவின் நீதியினால் உடுத்தித் தமது சிங்காசனத்தில் உயர்த்தினதும், ஆகிய இவைகளே, நாம் தியானிக்க வேண்டுமென்று தேவன் விரும்பி நமக்குக்காண்பித்திருக்கும் வெளிச்சம்.

**(8) ஆவிக்குரிய காரியங்கள் பற்றி சிந்தையில் சந்தேகம் கொள்வதும் மற்றவர்களுடன் அதை பகிர்ந்து கொள்வதும் கூடாது ஏன்?**

***நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. (ரோ.14:7)***

*இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள். (ரோ.14:13)*

*ஆகிலும் இதைக்குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள். (1கொரி.8:9)*

*இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள். (1கொரி.8:12)*

நாம் தேவனுடைய அன்பைப்பற்றி சந்தேகிக்கிறபோதும் அவருடைய வாக்குத்தத்தங்களின் பேரில் அவநம்பிக்கை கொள்ளுகிறபோதும் நாம் தேவனை கனவீனப்படுத்தி அவருடைய பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். ஒரு தாயைப்பற்றி பிள்ளைகள் அடிக்கடி ஆவலாதி சொல்லிக்கொண்டே யிருப்பார்களானால் அந்தத்தாய் என்ன நினைப்பாள். தான் பிள்ளைகளுடைய நன்மையைக் கோரவில்லை என்றும் தன் ஜீவகாலமெல்லாம் அவர்கள் நன்மைக்காகவும் சௌக்கியத்திற்காகவும் முயற்சிகள் எடுக்கவில்லை என்றும் பிள்ளைகள் நினைக்கிறார்களே என்று துக்க சாகரத்தில் அமிழ்ந்து நசித்துப் போவாள் அல்லவா? அவர்கள் அவளுடைய அன்பைக்குறித்துச் சந்தேகப்படுவார்களானால் அது

அவளுடைய இருதயத்தை உடைத்துவிடுமல்லவா? எந்தப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளால் இப்படி நடத்தப்பட விரும்புவார்கள். நித்திய ஜீவனை நமக்கு அருளும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனைக் கொடுக்கும்படி ஏவப்பட்ட நம்முடைய பரம பிதாவின் அன்பைக்குறித்து அவநம்பிக்கைகொள்வோமானால் அவர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார். “தம்முடைய சொந்தக் குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி” என்று அப்போஸ்தலன் எழுதுகிறார். ஆயினும் எத்தனை பேர் தங்கள் வார்த்தைகளினால் சொல்லாவிட்டாலும் செய்கைகளினாலே “கர்த்தர் இதை எனக்காக அல்ல ஒருவேளை மற்றவர்களுக்காகச் செய்திருக்கலாம்.” ‘தேவன் மற்றவர்களிடத்தில் அன்புள்ளவராயிருக்கிறார். என்னிட்த்தில் அன்புள்ளவரல்ல்’ என்பதாக சொல்லுகிறவர்களாயிருக்கிறார்கள். இ வையும் உன்னுடைய சொந்த ஆத்துமாவுக்குதீமையை விளைவிக்கின்றன. எப்படியென்றால் சந்தேகமான ஒவ்வொரு வார்த்தையினாலும் பிசாசானவனுடைய சோதனைகளை நீயே அழைக்கிறாய் சந்தேகங்கொள்ளும் சிந்தனையை உனக்குள்ளே பலப்படுத்தி, பணிவிடைசெய்யும் தேவதூதனை உன்னிமித்தம் துக்கங்கொள்ளச் செய்கிறாய். சாத் தான் உன்னைச் சோதிக்கும்போது சந்தேகமான வார்த்தையாகிலும் அறிவீனத்தையாகிலும் பேசாதே. உன் மனக்கதவை அவனுடைய ஏவுதலுக்குத் திறந்துவைப்பாயானால்

அதை அவநம்பிக்கையாலும் கலகத்தைமூட்டும் கேள்விகளினாலும் நிறப்பிவிடுவான். உன் மனோ உணர்ச்சியை வெளிப்படையாய்ப் பேசுவாயானால் நீ பேசுகிற ஒவ்வொரு சந்தேகமும் உன்னை எதிர்த்துத் தாக்குவதுமல்லாமல் மற்றவர்கள் ஜீவியத்தில் முளைத்தெழும்பி பலன் கொடுக்கும் வித்தாகிவிடுகிறது. உன் வார்த்தைகளால் உண்டான இக்கேட்டை விலக்குவது பிறகு அசாத்தியமாகிவிடும். சாத்தானுடைய கண்ணியிலிருந்தும் சோதனையின் காலத்திலிருந்தும் உன்னையே தப்புவிக்கவேண்டியதாயிருக்கும். உன் சொல் வாக்கினாலே வசியப்பட்டுப்போன மற்றவர்கள் நீ எடுத்துக்காட்டிய அவிசுவாசத்திலிருந்து தப்பிக்கொள்ள முடியாமலே போய்விடுவார்கள். ஆவிக்குரிய பலத்தையும் ஜீவனையும் கொடுக்கிற அந்த மேலான காரியங்களைக் குறித்துப் பேசிக்கொள்வது எவ்வளவு விசேஷமானது.

**(9) தேவனுடைய ரட்சிப்பை வெளிப்படுத்தும் நமது உரையாடல்கள் எப்படி இருக்கவேண்டும்?**

***ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார். (சங்.50:23)***

உன் பரம எஜமானைக் குறித்து உலகத்துக்குக் கொடுக்கிற சாட்சி என்ன விதமானது என்று அறிய விரும்பி தேவதூதர்கள் உற்றுக்கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உன்னுடைய சம்பாஷணை உனக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிற ஜீவனையுடையவரைக்குறித்ததாகவிருக்கட்டும். நீ ஒரு சிநேகிதன் கைபிடித்து வந்தனஞ் செய்கிறபோது உன் இரு தயத்திலும் உன் உதடுகளிலும் தேவனுக்குத் துதி புறப்படட்டும். இது உன் சிநேகிதன் சிந்தனையை இயேசுவினிடத்தில் இழுத்துக்கொள்ளும்.

**(10) சந்தேகம் மற்றும் சோர்வை பற்றி வேதாகமம் நமக்கு கொடுக்கும் அறிவுரை என்ன?**

***நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், (பிலி.2:14)***

எல்லாருக்கும், உபத்திரவங்களுண்டு, துக்கங்களைச் சகிப்பது கஷ்டம், சோதனைகளுக்கு எதிர்த்து நிற்பது வருத்தம். உன் கஷ்ட நஷ்டங்களை உன்னைப் போல சாவுக்குரியவர்களிடத்திலல்ல எல்லாவற்றையும் ஜெபத்தினாலே தேவனிடத்திற்கே கொண்டு போவாயாக. சந்தேகமான ஒரு வார்த்தையையாவது அதைரியங்கொடுக்க்க்கூடிய ஒரு வசனத்தையாவது சொல்லமாட்டேன் என்று ஒரு தீர்மானஞ்செய்து கொள். நம்பிக்கையுள்ள வார்த்தைகளினாலும் பரிசுத்தமான உற்சாகத்தினாலும் மற்றவர்கள் ஜீவியத்தைப் பிரகாஸிப்பித்து அவர்கள் முயற்சிகளை சிறப்பிக்கும்படி செய்யலாம்.

சோதனையினாலே கடினமாய் நெருக்கப்பட்ட தைரியமுள்ள ஆத்துமாக்கள் அநேகமுண்டு. நான் என்னும் சோதனையிலும் பொல்லாத அதிகாரங்களினால் உண்டான போரிலும் கொஞ்சங்குறைய மூர்ச்சையடைந்த ஆத்துமாக்களுண்டு. இந்த கஷ்டப்போரில் இருக்கிற ஒருவனையாவது நிலைகுலையச் செய்யாதே. தைரியமுள்ள வார்த்தைகளினால் அவனை உற்சாகப்படுத்தி, தன் வழியில் நடக்கும்படி தூண்ட்த்தக்க நம்பிக்கையுள்ள வார்த்தைகளைச்சொல்லு. இவ்விதமாக கிறிஸ்துவின் ஒளி உன்னிடத்திலிருந்து வீசும்படிபார். "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதில்லை" (ரோ. 14: 7) நம்முடைய மனசாட்சி யறியாமலிருக்கிற செல்வாக்கினால் மற்றவர்கள் உற்சாகப்பட்டு பெலனடைந்திருக்கலாம், அல்லது உற்சாகங்குன்றி கிறிஸ்துவிலிருந்தும் சத்தியத்திலிருந்தும் விலகிப் போயிருக்கலாம்.

**(11) நாம் யாருடைய நிறைவில் சந்தோஷமும் ஆனந்தமும் அடைய முடியும்?**

***கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங்.16:8)***

***ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. (சங்.16:11)***

கிறிஸ்துவின் ஜீவியம் குணலட்சணம் இவைகளைப்பற்றி தப்பான அபிப்பிராயமுள்ள அநேகருண்டு. அவர்

அனலும் காந்தியும் இல்லாதவர். பிடிவாதமும், கடினமுமுள்ளவர், சந்தோஷமற்றவர் என்று நினைக்கிறார்கள். அநேகம் பேருடைய மார்க்க அனுபவத்தை இந்த மந்தமான எண்ணங்கள் மூடிக் கொண்டிருக்கின்றன.

இயேசு கண்ணீர் விட்டார் என்று சொல்லியிருக்கிறதேயொழிய சிரித்தார் என்று சொல்லப்படக் காணோம் என்று அடிக்கடி பேசிக்கொள்ளுகிறதுண்டு ஆம் நம்முடைய இரட்சகர் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமான மனிதனாகவேயிருந்தார். ஏனென்றால் எல்லா மனிதருடைய சாபத்தையும் தமது இருதயத்திலே சேரும்படி அதைத் திறந்தார். அவருடைய ஜீவியம் தன்னொடுக்கமும், கவலையும், வருத்தமும் நிறைந்த்தாகவிருந்தாலும் அவருடைய ஆவியோ நொறுக்கப்படவில்லை. அவருடைய முகச்சாயல் துக்கத்தினாலும் விசனத்தினாலும் வேறுபடாமல் சமாதானமுள்ள சாந்தத்தினால் களையாயிருந்த்து. அவருடைய உள்ளம் ஜீவன் ஊறும் ஊற்றாயிருந்தது. அவர் சென்ற விட மெல்லாம் இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டுபோனார்.

நம்முடைய இரட்சகர் பக்தியும் ஊக்கமும் நிறைந்த கர்த்தரேயொழிய துக்கமாவது எரிச்சலாவது உள்ளவரல்ல, அவரைப்போலிருக்க விரும்புகிறவர்களுடைய ஜீவியம் ஊக்கம் நிறைந்த விஷயங்கள் உள்ளதாகவிருக்கும். தங்களுடைய உத்தரவாதத்தை உணர்ந்து ஜீவிக்கிறவர்களுமாயிருப்பார்கள். பெருமை அடங்கிப்போம். கோஷ்டமான கொண்டாட்டமிராது, அடங்காப் பரிகாசமுமிராது. இயேசுவின் மார்க்கமோ ஆற்றைப்போன்ற சமாதானத்தைக்

கொடுக்கும். சந்தோஷத்தினால் உண்டாகும் ஒளியை அணைக்காது, மகிழ்ச்சியை அமர்த்தாது. பிரகாசமான மலர்ந்த முகத்தை மந்தாரஞ் செய்யாது. கிறிஸ்து ஊழியங்கொள்ள வராமல் ஊழியஞ் செய்யவே வந்தார். அவருடைய அன்பு நம்முடைய இருதயத்தில் ஆளுகை செய்யும்போது அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்.

*பிதாவே என் மீட்பிற்காக உம்முடைய குமாரனை ஈவாக கொடுத்து சந்தேகத்தின் நிழலை தாண்டி உம்முடைய அன்பை வெளிப்படுத்தினதற்கு நன்றி, நான் இயேசுக்கு கீழ்ப்படிய தெரிந்தெடுத்து அவர் எனக்கு கொடுக்கும் மகிழ்ச்சி மற்றும் ஆனந்தத்தின் நிறைவை அனுபவிப்பேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*"கிறிஸ்தவன்" என்ற பெயரின் கனத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், மற்றும் அவருக்கு கீழ்ப்படிவதன் மூலம் வரும் சந்தோசம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சியை மற்றவருக்கு பகிர்ந்து கொள்வதை தெரிந்தெடுக்கிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*நான் தேவனை விசுவாசிக்க தெரிந்தெடுக்கிறேன், ஏனெனில் சாத்தானின் பொய்கள் மற்றும் அவநம்பிக்கையிலிருந்து என்னை பாதுகாக்க அவரை நம்புவது மட்டுமே வழி என்று உணர்கிறேன்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

*என்னை சுற்றியுள்ளவர்களை உற்சாகப்படுத்தி மேலே கொண்டுவருவது*

*என் நோக்கம் அதினால் அவர்கள் சோர்விலும் அவநம்பிக்கையிலும் செல்லமாட்டார்கள்.*

*வட்டமிடுக: ஆம் முடிவெடுக்கவில்லை*

_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
____________



பாடம் 16

இப்பொழுதின் மகிழ்ச்சி மற்றும் நித்தியம்

**(1) மற்றவர்கள் நம்மை எதிர்க்கும்போது நாம் என்ன செய்யவேண்டும்?**

***ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபே.4:32)***

***மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை. (நீதி.19:11)***

மற்றவர்கள் செய்த அநியாயத்தையும் பொல்லாங்குகளையும் நம்முடைய மனதிலே பேணிவைப்போமானால் கிறிஸ்து நம்மை நேசித்தாற்போல் அவர்களை நாம் நேசிப்பது கூடாத்தாக்க் காணும். ஆனால் நம்முடைய எண்ணங்கள் கிறிஸ்து நமக்குக் காட்டின அதிசய அன்பின்பேரிலும் இரக்கத்தின்பேரிலும் நிற்குமானால் அதே ஆவி மற்றவர்கள்பேரிலும் பாய்ந் தோடும். ஒருவருடைய குற்றத்தை ஒருவர் பாராமல், ஒருவரோடொருவர் அன்பும் மரியாதையுமுள்ளவர்களாய் நடந்துகொள்ளுவோம். மனத்தாழ்மையையும், சுயபலத்தின்பேரில் நம்பிக்கையையும் வைக்காமல், மற்றவர்களுடைய குற்றங்களை மன்னித்து பொறுத்துக்கொள்ளவேண்உடம். இப்படி செய்யும் போது நம்முடைய சுயநயம் அடியோடே நீங்கி, நாம் பெருமனமும் பரோபகாரமுமுள்ளவர்களாவோம்.

**(2) நாம் சோர்வின் உணர்வு பரவுவதை தடுக்க செய்ய வேண்டுவது என்ன?**

***உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, (நீதி.3:5)***

“கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிலிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்” (சங். 37: 3) என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். “கர்த்தரை நம்பு” ஒவ்வொரு நாளுக்கும் அதினதின் பாரமும் கவலையும், கலக்கமுமுண்டு. நாம் ஒருவரையொருவர் சந்திக்கிறபோது நம்முடைய அல்ல்ல் தொல்லைகளைக் குறித்து எவ்வளவு அதிகமாய்ப் பேசிக்கொள்ளத் தீவிரிக்கிறோம். ஒருவேளை ஒருவன் மன இரக்கமும் அன்புமுள்ள மீட்பர் நமக்கில்லை; நம்முடைய விண்ணப்பங்களைப் பட்சத்தோடு செவிகொடுத்துக் கேட்கிறவருங் கிடையாது; நம்முடைய அவசர காலங்கள் ஒவ்வொன்றிலும் சகாயம் புரியத்தக்க வரும் காணோம்; நாம் எதிர்நோக்காத எத்தனையோ தொந்தரவுகள் வலிய மேல்விழுந்து வருகின்றன; எத்தனையோ திகில்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன என்று துக்கத்தில் மூழ்கி சஞ்சலத்தோடு சொல்ல்லாம்.

**(3) தேவன் எந்த சூழலிலும் நம்மை கைவிடமாட்டார் என்று எந்த வசனத்தின் மூலம் நாமறிய முடியும்?**

***நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. (எபி.13:5)***

சிலர் எப்பொதும் பயமும் நடுக்கமுமுடையவர்களாய் எதிர் நோக்காத உபத்திரவங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒவ்வொருநாளும் அவர்கள் தேவ அன்பினால் சூழப்பட்டிருந்தாலும், ஒவ்வொருநாளும் அவருடைய திவ்ய கிருபாகடாக்ஷங்களை அனுபவிக்கிறவர்களாயிருந்தாலும் இவ்வித ஆசீர்வாதங்களைக் கவனியாமலே போகிறார்கள். பயம் உண்டாகுமென்றெண்ணி அவர்களுடைய மனம் ஏதோ ஒரு வெறுப்பான காரியத்தின்பேரில் நின்றுவிடுகிறது. அல்லது மிகவும் அற்பமான சில தொந்தரவுகள் நன்றி செலுத்தவேண்டிய அநேக காரியங்களைக் காணக்கூடாதபடி அவர்கள் கண்களைக் குருடாக்கிவிடுகின்றன. அவர்கள் தாக்குகிற துன்பங்கள் அவர்களை தேவனண்டை ஒட்டுவதற்குப் பதிலாக, அவர்கள் கலங்கி தியங்கிக்கொண்டிருக்கிறபடியால், அவரைவிட்டு அவர்களைப் பிரித்துவிடுகின்றன.

நாம் இப்படி அவிசுவாசமுடையவர்களாயிருப்பது நல்லதா? நாம் ஏன் நன்றிகேடராயும் அவநம்பிக்கையுடையவர்களாயு மிருக்கவேண்டும். இயேசுவானவர் நம்முடைய நண்பன். பரலோக முழுவதும் நம்முடைய க்ஷேமத்தையே கோருகிறது. நம்முடைய ஒவ்வொரு நாள் ஜீவியத்திலுள்ள மனக்கலக்கமும் தொல்லைகளும் மனதை அலட்டி, முகநாடியை வேறுபடுத்த நாம் இடங்கொடுக்கலாகாது. அப்படிச் செய்வோமானால் எப்போதும் ஏதாவது ஒன்று நம்மை அலட்டி அலைக்கழிக்கும். நம்மை அலட்டி தொந்தரவுபடுத்துகிறவர்களுக்கு

இடங்கொடாமலிருக்கவேண்டும், ஏனெனில் அந்தச்சிந்தனைகள் நம்முடைய சோதனைகளைச் சகிக்க சகாயமாயிராது.

**(4) நாம் தேவனை கணப்படுத்தி விசுவாசிக்கும்போது அவர் நமக்கு என்ன செய்கிறார்?**

***உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதி.3:6)***

நீ உன் உத்தியோகத்தில் மலைக்கலாம்; உன்னுடைய பிற்கால வாழ்வைப்பற்றிய நம்பிக்கை வரவர மந்தமாகலாம்; நஷ்டம் உண்டாகும் என்கிற பயம் வரலாம்; ஆயினும் மனதைரியத்தை விட்டு விடாதே; திடமனதாயிருந்து உன் கவலைகளையெல்லாம் தேவன் பேரில் வைத்துவிட்டு அமைதலாயும் மகிழ்ச்சியாயுமிரு. உன்னுடைய காரியங்களை விவேகத்தோடே நடத்துவதற்கு ஞானத்துக்காக மன்றாடு. இவ்விதமாக நீ உனக்கு வர இருக்கும் நஷ்டத்தையும் ஆபத்தையுந் தடுக்கலாம். நல்ல பலன் கிடைப்பதற்காக உன்னாலாகக் கூடியது எதோ அதைச் செய்யும்படிப்பார். இயேசு தம்முடைய சகாயத்தைக் கொடுப்பதாக வாக்கருளியிருக்கிறார். நம்முடைய முயற்சியில்லாமல் தம்முடைய உதவியைக் கொடுக்கமாட்டார். நம்முடைய சகாயர்மேல் சார்ந்திருந்து உன்னாலானதைச் செய்தபோது பலனைச் சந்தோஷத்தோடே அங்கீகரித்துக் கொள்வாயாக.

**(5) நாம் உபத்திரவத்தில் செல்லும்போது தேவன் நமக்கு கொடுக்கும் உற்சாகம் என்ன?**

***என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். (யோ.16:33)***

தம்முடைய ஜனங்கள் கவலை என்னும் பாரம் சுமந்து தொய்ந்து போகவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. நம்முடைய கர்த்தரோ நம்மை வஞ்சிக்கிறவரல்ல அவர் நம்மைப்பார்த்து. "பயப்படாதிருங்கள்; உங்கள் வழிகளில் அபாயங்கள் இல்லை" என்று சொன்னதில்லை. நமக்குச் சோதனை களும் ஆபத்துகளும் உண்டென்று அவர் அறிந்து நம்மோடே தெளிவாய் நடந்துகொள்ளுகிறார். அவர் தம்முடைய ஜனங்களை பாவமும் தீமையும் நிறைந்த உலகத்திலிருந்து வெளியேறிவிடச் சொல்லாமல், அவர்களுக்கு ஒருக்காலும் தவறாத ஒரு அடைக்கலம் உண்டென்பதையே காட்டுகிறார். அவர் தம்முடைய சீஷர்களுக்காகச் செய்த ஜெபமாவது "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" யோ. 17: 15 "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" யோ 16: 33 என்கிறார்.

**(6) நம் அனுதின தேவைகள் சம்மந்தமாக நாம் கேட்கவேண்டிய வாக்குத்தத்தம் என்ன?**

***முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.*** *(மத்.6:33)*

கிறிஸ்து தம்முடைய மலைப்பிரசங்கத்திலே, தேவன் பேரில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதின் அவசியத்தைப்பற்றி, தம்முடைய சீஷர்களுக்கு உத்தமபோதனை செய்திருக்கிறார். இந்தப் போதனைகள் எக்காலத்திலுமுள்ள அவருடைய பிள்ளைகளுக்கு தேறுதலாயிருக்கும்படி செய்யப்பட்டு, நமக்கும் போதனையும் ஆறுதலுமுள்ளதாயிருக்கும்படி அருளப்பட்டிருக்கிறது. இரட்சகர் தம்மை பின்பற்றினவர்களுக்குக் கவலையின்றி துதியின் கீதங்களைப்பாடி உல்லாசமாய்ப் பறந்துகொண்டிருந்த ஆகாயத்துப்பட்சிகளை கவனிக்கும்படி சொல்லி, "அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, ஆயினும் பரமபிதா அவைகளுக்கு வேண்டியவைகளை அருளுகிறார்" என்றார். இரட்சகர் "அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா" (மத். 6: 26) என்று அவர்களைக் கேட்கிறார். மனிதனுக்கும் மிருகங்களுக்கும் ஆகாரம் அளிக்கிற மகா போஷகர் தம்முடைய கரத்தை விரிவாய்த்திறந்து, தாம் உண்டாக்கின பிராணிகள் யாவற்றிற்கும் வேண்டியவைகளைக் கொடுக்கிறார். ஆகாயத்துப் பறவைகள் அவருடைய பாதுகாவலுக்கு தாழ்ந்தவைகளல்ல. அவர் அவைகளின் வாயிலே

தீனியைப்போடுகிறதில்லை என்றாலும் அவைகளுக்கு வேண்டிய இரையை அகப்படும்படி செய்கிறாரே. அவைகளுக்காக இறைத்திருக்கிற தானியங்களை அவைகள் சேகரிக்கவேண்டும். தங்கள் கூடுகளைக் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களை அவைகள் தயார்செய்யவேண்டும். தங்கள் குஞ்சுகளுக்கும் தாங்களே இரை ஊட்டவேண்டும். உங்கள் பரமபிதா அவைகளைப் பிழைப்பூட்டுகிறபடியால் கீதங்கள் பாடிக்கொண்டே தங்கள் வேலைகளுக்குப் போகின்றன. "அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா" விவேகமும் அறிவுமுள்ளவர்களும் ஆவிக்குரிய ஆராதனை செய்யக்கூடியவர்களுமாகிய நீங்கள் ஆகாயத்துப்பட்சிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களல்லவா? நம்மைச் சிருஷ்டித்து, ஜீவனோடு காப்பாற்றி தம்முடைய சொந்த திவ்ய சாயலின்படி நம்மை உருவாக்கினவரை நாம் நம்பிப் பிடித்துக்கொள்வோமானால் நமக்கு அவசியமானவைகளைத் தராமற்போவாரா?

**(7) கிறிஸ்துவின் அன்பின் கவனிப்பின் நிச்சயத்திற்கு நம்மிடத்தில் அவர் கேட்பது என்ன?**

***உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று,***

*உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? (மத்.6:28-30)*

கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, காட்டுப் புஷ்பங்களைக் கவனியுங்கள் அவைகள் எவ்வளவு செழிப்பாய் வளர்ந்துகிடக்கிறதென்றும், பரமபிதா அவைகளுக்குக் கொடுத்திருக்கிற அழகு எவ்வளவு மேலானது என்றும் பாருங்கள் என்றார். இவைகள் அவர் மனிதனுக்குக் காட்டும் அவருடைய அன்புக்கு அத்தாட்சிகள். " காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறது என்று கவனித்துப் பாருங்கள்', என்றார். சர்வ சாதாரணமான இந்தப் புஷ்பங்களின் அழகும் மகிமையும் சாலொமோன் அணிந்திருந்த உடுப்பின் மகிமையைப்பார்க்கிலும் meeமேலானது. மனிதகைத்தொழில் சாமர்த்தியத்தினால் செய்யப்பட்ட எந்த மகா ஆடம்பரமான ஆடையாபரணமும் தேவனுடைய சிருஷ்டிப்பாகிய புஷ்பங்களின் சுபாவ அழகுக்கு இணையாகமாட்டாது. " அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்து வித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத் 6:30) என்று இயேசு கேட்கிறார். ஒருநாள் இருந்து அழிந்து போகிற சாதாரண புஷ்பத்துக்குப் பரம சித்திரக்காராகிய தேவன் பல வர்ணங்களையும், மென்மையையும் கொடுப்பாரானால் தம்முடைய சாயலின் பிரகாரம்

உண்டாக்கப்பட்டிருக்கிறவர்களைப்பற்றி எவ்வளவு அதிகமான கவலையும் கரிசனையுமுள்ளவராயிருப்பார் ? கிறிஸ்துவானவருடைய இந்தப்போதனை கவலையுள்ள யோசனைக்கும் கலக்கமும் சந்தேகமுமுள்ள அவநம்பிக்கை நிறைந்த இருதயத்துக்கும் கடிந்துகொள்ளுதலாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் சந்தோஷமாயும் சமாதானமாயும் அடக்கமுடையவர்களாயுமிருக்கும்படி விரும்புகிறார். " சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக்கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன் " (யோ 14:27;15:11) என்று இயேசு சொல்லுகிறார்.

**(8) தேவன் நிமித்தம் அன்பில் மற்றவருக்கு உதவி செய்வதில், தியாக ஊழியத்தில் உள்ள 6 நடைமுறை செயல்கள் என்ன, அதில் மகிழ்ச்சி மற்றும் மெய்யன நிறைவை பெறமுடியுமா?**

***அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே***

*சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசா.58:6-7)*

தன்னுடைய நலத்தையே கோரி நாடித்தேடுகிற சந்தோஷம் கடமை என்னும் பாதைக்கு வெளியாயும், ஏற்றக்குறைவாயும், சஞ்சலமுள்ளதாயும், நிலையற்றதாயும் இருக்கிறது. அது பறந்துபோய்விட ஆத்துமா ஒண்டியாய்த் துக்கத்தை அனுபவிக்க நேரிடுகிறது. ஆனால் தேவனுடைய ஊழியத்திலே சந்தோஷமும் திருப்தியுமுண்டு. கிறிஸ்தவன் நிலையற்றபாதையில் நடக்கும்படி விட்டுவிடப்பட்டவனல்ல. அவன் வீணாக துக்கத்தையடைந்து ஏமாற்றும்படி அழைக்கப்பட்டவனுமல்ல. நாம் இந்த ஜீவியத்தில் சந்தோஷங்களையனுபவிக்கக் கூடாவிட்டாலும் வரப் போகிற ஜீவியத்தில் சந்தோஷங்களையனுபவிப்போம் என்கிற நிச்சயத்தோடிருப்போமாக.

(9) **நாம் கிறிஸ்துவோடு உள்ள உறவில் மகிழ்ந்து நற்செய்தியை பகிர்ந்துகொள்ளும்போது, நம்மை தேற்றும் வாக்கு என்ன?**

***நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்.28:20)***

இந்த உலகத்திலுங்கூட கிறிஸ்தவர்கள்

கிறிஸ்துவுடன் அந்நியொந்நியப்படுவதினால் அவர்களுக்குச் சந்தோஷமுண்டு. அவருடைய அன்பின் பிரகாசமும் அவருடைய சமுகத்தினால் உண்டாகும் ஆறுதலும் அவர்களுக்குண்டு. ஜீவியத்தின் ஒவ்வொருபடியும் கிறிஸ்துவண்டை நம்மைச் சேர்க்கிறது. அவருடைய அன்பின் ஆழமான அனுபவத்தையும் கொடுத்து ஆசீர்வாதமும் சமாதானமுமுள்ள வீட்டுக்குச் சமீபமாய் நம்மைக்கொண்டுவருகிறது. ஆதலால் நாம் நம்முடைய நம்பிக்கையை விட்டு விலகாமல், முன் நமக்கிருந்த நிச்சயத்தைப் பார்க்கிலும் திடமான நிச்சயத்தோடுமிருப்போமாக. " இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார்" (1 சாமு.7:12) முடிவுமட்டும் எங்களுக்கு சகாயம் புரிவார்.

**(10) தேவன் கடந்த நாட்களில் கொடுத்த ஆசீர்வாதங்களை நாம் நம் சிந்தையில் புதிதாக வைத்துக்கொள்ளவேண்டியது ஏன்?**

***ஓரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும்போது, கர்த்தர் என்னை நோக்கி: ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக்கடவர்கள் என்று சொல்லிய நாளில், (உபா.4:9)***

நாம் ஞாபக சின்னமான தூண்களை நோக்கிப் பார்ப்போமாக. கேட்டின் மகனுடைய கையிருந்து காப்பாற்றவும் நம்மைத் தேற்றவும் கர்த்தர் செய்தவைகள்

எல்லாவற்றையும் நினைவுகூர்வோமாக. தேவன் நமக்குக் காட்டியிருக்கிற எல்லா இரக்க உருக்கங்களையும் நம்முடைய ஞாபகத்தில் புதிதாக வைத்துக் கொள்வோமாக. நம்முடைய கண்ணீர்களைத் துடைத்திருக்கிறார். நோவுகளைத் தணித்திருக்கிறார். கவலைகளை நீக்கியிருக்கிறார். பயங்களைப் போக்கடித் திருக்கிறார். நம்முடைய குறைகளை நீக்கியிருக்கிறார். ஆசீர்வாதங்களை அளித்திருக்கிறார். இவ்விதமாக நம்முடைய பிரயாணத்துக்கு வேண்டியவைகள் எவைகளோ அவை யாவற்றையும் ஏற்கனவே தந்திருக்கிறாரே. நமக்கு வரப்போகிற சோதனையினாலுண்டாகும் புது வியாகூலங்களை எதிர்நோக்க வேண்டுமேயொழிய வேறல்ல.

**(11) சோதனைகள் மற்றும் குழப்பங்கள் மத்தியில் நாம் கேட்க வேண்டிய வாக்கு என்ன?**

***மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.*** *(1கொரி.10:13)*

மேலும் வரப்போகிறவைகளை எவ்வாறு எதிர்நோக்கிகொண்டிருக்கவேண்டுமோ அவ்வாறே கடந்துபோனவைகளையும் கவனித்து " இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார் " " உன்

நாட்களுக்குத்தக்கதாய் உன்பெலனும் இருக்கும்" (உபா. 33:25) என்று சொல்லவேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பெலனுக்கு மிஞ்சின சோதனைவராது. நம்முடைய வேலையை எங்கே காண்கிறோமோ அங்கேயே அதைச் செய்து, என்ன வந்தாலும் சோதனையைச் சகிக்கத்தக்க பெலன் அருளப்படும் என்று நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(12) **தாங்குவதற்கு கடினமான சூழல் மற்றும் சோதனைகளை நாம் அனுபவித்திருந்தாலும், எதை அறிந்திருந்தால் நாம் மகிழ்ச்சி மற்றும் ஆறுதல் அடையமுடியும்?**

*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோ.8:28)*

(13) **நாம் தேவகிருபையால் மேற்கொள்கிறவர்களாக, கேட்பதற்கு அற்புதமான வார்த்தைகள் எதுவாக இருக்கும்?**

*அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்.25:34)*

வரவர தேவனுடைய பிள்ளைகளுக்குப் பரலோகத்தின் வாசல்கள் திறந்துவைக்கப்பட்டு, மகிமையால் நிறைந்த இராஜனுடைய உதடுகளிருந்து,

"வாருங்கள் என்பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் " (மத். 25:34) என்கிற ஆசீர்வாதம் அவர்கள்காதுகள் கேட்க ஆநந்த கீதமாகப் புறப்படும்.

அப்போது மீட்கப்பட்டவர்களுக்காக இயேசுநாதர் ஆயத்தம்பண்ணியிருக்கிற வீட்டுக்குள் பிரவேசிக்க அவர்கள் அழைக்கப்படுவார்கள். அங்கே அவர்கள் தோழர்களாக உலகத்தின் நிந்தைக்காரராவது, பொய்யராவது, விக்கிரகாராதனைக்காராவது, அசுத்தராவது, அவிசுவாசிகளாவது இருக்கமாட்டார்கள். சாத்தானை மேற்கொண்டவர்களே அவர்களோடிருப்பார்கள். திவ்விய கிருபையினாலே பூரணசற்குணங்கள் அவர்களுக்குண்டாகும். இங்கே அவர்களை வருத்துகிற ஒவ்வொரு பாவகுணமும், ஒவ்வொரு குறைவும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலக்கப்பட்டிருக்கிறது. அவருடைய மகிமைப்பிரகாசமும் மேன்மையும் சூரிய வெளிச்சத்தைப்பார்க்கிலும் மேலாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய குணாகுணங்களின் பரிபூரணமும் நீதியின் அழகும் அவர்கள் மூலமாகப் பிரகாசித்து இந்த வெளிப்படையான மகிமைக்கு மிஞ்சினவைகளாயிருக்கின்றன. அவர்கள் வெள்ளைச் சிங்காசனத்திற்குமுன் குற்றமற்றவர்களாயும் தேவதூதருடைய மகிமைக்கும் சிலாக்கியங்களுக்கும் பங்காளிகளாயுமிருக்கிறார்கள்.

**(14) அநேக நெருங்கிய நன்மை மற்றும் தீமைக்கிடையே நமக்கு நாமாகவே கேட்கவேண்டிய முக்கிய கேள்வி என்ன?**

*மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத்.16:26)*

மனிதனுக்கிருக்கிற மகிமையான சுதந்தரத்தைப் பற்றிக் கவனிக்கையில் "மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்," (மத் 16:26) அவன் மிகவும் ஏழையாக விருக்கலாம், என்றாலும் உலகம் அவனுக்கு ஒருபோதும் கொடுக்கக்கூடாத தனத்தையும் கனத்தையும் உடையவனாகிறான். அவனுடைய ஆத்துமா பாவத்திலிருந்து மீட்கப்பட்டும் கழுவப்பட்டுமிருக்கிறது. அதின் உத்தமமான தத்துவங்கள்யாவும் தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரதிஷ்டையாக்கப் பட்டிருக்கிறதும் மேலான பேறாயிருக்கிறது. மீட்கப்பட்ட ஒரே ஆத்துமாவினிமித்தம் பரலோகத்திலே தேவனுடைய சமூகத்திலும் பரிசுத்த தூதர்கள் முன்னிலையிலும் சந்தோஷமுண்டாகிறது. பரிசுத்த ஜெய கீதங்கள் இந்த மகிழ்ச்சியால் நிறைந்திருக்கின்றன.

*நான் என் ஞானத்தை நம்பினால் அவநம்பிக்கைக்கு உருவாக்கப்பட்டதாக உணர்கிறேன். அவருடைய ராஜ்ஜியத்திற்குள் என்னை வழிநடத்தும் உண்மையான சத்தியத்திற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.*

*வட்டமிடுக :  ஆம் முடிவெடுக்கவில்லை*

*என் சிந்தையில் எப்போதும் கடந்த காலத்தின் ஆசீர்வாதங்களை வைத்திருக்க*

விரும்புகிறேன் அதினால் என் நடப்பு மற்றும் எதிர் காலத்தில் அவருடைய நடத்துதலை சந்தேகப்படமாட்டேன். நான் என் வாழ்க்கை பயணத்தில் வரும் சோதனை மற்றும் குழப்பங்களில் ஆறுதலையும் நடத்துதலையும் பெறுகிறேன்.

வட்டமிடுக : ஆம் முடிவெடுக்கவில்லை

இந்த வேதாகம தொடர் படிப்பில் சேர என்னை அவரண்டை இழுத்து அதின் படிநிலைகளை அறிய வைத்த தேவனுக்கு நான் நன்றி கூறுகிறேன். "நல்லது, என் உண்மையுள்ள ஊழியக்காரனே, உனக்காக நான் உருவாக்கியுள்ள வீட்டிற்குள் பிரவேசி" என்ற இந்த அற்புதமான வார்த்தைகளை கேட்க காத்திருக்கிறேன்.

வட்டமிடுக : ஆம் முடிவெடுக்கவில்லை

படிப்பு கையேடு முடிந்தது.

---

*INFORMATION FOR GOOGLE AD*
*Please leave the black headers and English below so I can see what I am using for the ad. Just add a line below each one for your translation.*

*This Language Name in English and the name as known in your language:*
தமிழ்
______________________________

*STUDY GUIDE NAME:*
**Steps to Christ Bible Study Guide**

*கிறிஸ்தவ வேதாகம படிப்பு*
*கையேட்டிற்கான படிகள்*
*<u>HEADLINES:</u>*
***Download Free PDF's***
***Free Bible Studies***
***Jesus offers you peace***
***Find Peace Within***

*இலவச PDF களை பதிவிறக்கம் செய்யுங்கள்*
*இலவச வேதாகம படிப்புகள்*
*இயேசு சமாதானம் தருகிறார்*
*அதற்குள் சமாதானத்தை காணுதல்*

*<u>LONG HEADLINE:</u>*
***"Come to Me, all you who labor and are heavy laden, and I will give you rest."***

*"வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"*

*<u>DESCRIPTIONS:</u>*
***Find peace even above the storm in a world full of chaos***

*உலகம் முழுவதிலும் உள்ள குழப்பங்களில் புயலுக்கு மேலேயும் சமாதானத்தை கண்டுபிடியுங்கள்.*

*<u>BUSINESS NAME:</u>*
***Revelation Publications***

*வெளிப்படுத்தல் வெளியீடுகள்*